**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு: 9-12-2017 Issued: 9-12-2017

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு
# (பதினைந்தாவது பேரவை)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT
# (FIFTEENTH ASSEMBLY)

புதன்கிழமை, ஜூன் 21, 2017—தொகுதி 25—எண் 2

**Wednesday the 21st June 2017—Volume 25—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

**21–6–2017**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | 687-730 |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) ஆங்கிலத் தொலைக்காட்சியில் வந்த செய்தி தொடர்பாக ஆளுநரிடம் எதிர்க்கட்சிகள் அளித்த மனுமீது எடுக்கப்பட்ட நடவடிக்கை | 731-739 |
| திரு. மு.க. ஸ்டாலின் | 731,734,738 |
| *திரு. துரைமுருகன் | 732-736 |
| திரு. கரி. இராமசாமி | 738-739 |
| (ஆ) சென்னை காசிமேடு பகுதியில் மீன் விற்பனை இடம் மாற்றப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு | 746-749 |
| *திரு. கே.பி.பி. சாமி | 746-747 |
| *மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | 747-749 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| தமிழகத்தில் டெங்கு காய்ச்சலால் ஏற்பட்டுள்ள பாதிப்பு | 739-746 |
| திரு. ஐ.பி. செந்தில்குமார் | 740-741 |
| *திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் | 741-742 |
| மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் | 743-746 |

பக்கங்கள்

**4. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்**— தொடர்ச்சி

| | |
|---|---|
| (அ) கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்<br>(ஆ) கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை<br>(இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை | தொடர்ச்சி<br>749-908 |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 752-759, 763-769, 771-777, 782-785, 814-816, 819-820, 822-827, 841-899, 904-905 |
| திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் | 750-752, 754-755, 760-763, 765-767, 769-771, 774-775, 777-781, 901 |
| திரு. மு.க. ஸ்டாலின் | 756-759 |
| *மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் | 760 |
| *திரு. துரைமுருகன் | 775-776, 781-782 |
| மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் | 777, 840 |





பக்கங்கள்

**4. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்**— தொடர்ச்சி

| | |
|---|---|
| *மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா | 778-779 |
| திரு. C.V. சேகர் | 785-795 |
| டாக்டர் எஸ். முத்தையா | 795-802 |
| திரு. ப. சத்திய நாராயணன் | 802-809 |
| *திரு. பி.என்.பி. இன்பசேகரன் | 810-813, 816-818, 820-825, 827-839, 903 |
| மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் | 832, 839-840 |
| *திரு. எம். தமிமுன் அன்சாரி | 840-841, 902 |
| *திரு. கு. பிச்சாண்டி | 899 |
| *திரு. எஸ்.ஆர். இராஜா | 900-901 |
| திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் | 901-902 |
| திரு. டி. செங்குட்டுவன் | 904 |

**5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 908

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஹேவிளம்பி, ஆனி 7, திருவள்ளுவர் ஆண்டு – 2048

## 2017 ஜூன் 21, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நயனொடு நன்றி புரிந்த பயன்உடையார்
பண்புபா ராட்டும் உலகு."

அறத்தையும், நலத்தையும் பெரிதும் விரும்பிப் பலருக்கும் பயன்படும்படி உயர்ந்த வாழ்க்கையை வாழும் மக்களின் பண்பை உலகத்தார் அனைவரும் பாராட்டி மகிழ்வர்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**51—**

### காட்டுப் பன்றிகளைக் கட்டுப்படுத்துதல்

***4026—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மை விளை பொருட்களைச் சேதப்படுத்தும் காட்டுப் பன்றிகளைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள் வேளாண்மை விளை பொருட்களைச் சேதப்படுத்தும் காட்டுப் பன்றிகளைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள்.

(அ) ஆம்.

(ஆ) விளை நிலங்களில், வேளாண் விளை பொருட்களுக்குச் சேதம் ஏற்படுத்தும் காட்டுப் பன்றிகளைக் கட்டுப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது என்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மேட்டுப்பாளையம் தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியிருக்கிற ஒரு பகுதி. மூன்று புறங்களும் மலைப் பகுதியால் சூழப்பட்டு இருக்கிறது. இது முழுக்க முழுக்க விவசாயத்தைப் பிரதானமாகக் கொண்டு, விவசாயம் செய்து வருகிற மக்கள் வாழ்கிற பகுதியாகும். கடந்த காலங்களிலே, காட்டு யானைகள், வன விலங்குகள் நிலப்பரப்பிலே வருவதைத் தடுக்கிற வகையிலே பல்வேறு நடவடிக்கைகளை, மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்தார்கள். அதிலே குறிப்பாக, எங்கள் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலே நூற்றுக்கும் மேற்பட்ட கிலோ மீட்டர் பரப்பளவிற்கு மின் வேலிகளை அமைத்துத் தந்தும், அதேபோல, யானைகள் வருவதைத் தடுக்கிற வகையிலே அகழிகளை வெட்டியும் நடவடிக்கைகளை எடுத்தார்கள். இதுபோன்ற வறட்சி ஏற்பட்டிருக்கின்ற காலங்களிலே வன விலங்குகள் குடிதண்ணீருக்காக நிலப்பரப்புக்கு வரக்கூடாது என்ற அடிப்படையிலே, அவற்றின் குடிநீர் தாகத்தைத் தீர்க்கின்ற வகையிலே மலைப் பகுதிகளிலே ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து, அங்கே தொட்டிகளைக் கட்டி வன விலங்குகள் தண்ணீர் குடிப்பதற்குண்டான நடவடிக்கைகளைச் செய்தார்கள். அதேபோன்று, வனத் துறையின் மூலமாக ரோந்து செல்வதற்காக குழுக்களை அமைத்தார்கள். இரவு நேரங்களிலே வன விலங்குகள் கீழ்ப்பரப்புக்கு வராமல் தடுக்க பல நடவடிக்கைகளை எடுத்தார்கள். இதுபோன்ற நடவடிக்கைகளை எடுத்து, இந்தப் பிரச்சினை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டில் இருந்தாலுங்கூட. . .





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், துணைக் கேள்வி கேட்பதற்கு நான் வாய்ப்பு தருகிறேன். நீங்கள் கொஞ்சம் சீக்கிரம் கேள்வியை முடியுங்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** இன்றைக்கு வன விலங்குகள், காட்டு யானைகள் போன்றவை விவசாயத்தை ஒட்டியிருக்கிற நிலப்பரப்பிற்கு வருவதோடு மட்டுமல்லாமல், நேரடியாக நகரப் பகுதிகளிலே மக்கள் பெருக்கம் உள்ள இடங்களுக்கு வந்து, அங்கு உயிரிழப்புகள் ஏற்படுகிற நிகழ்வுகள் இன்றைக்கு நடந்தேறி இருக்கின்றன. இது ஒருபுறம் இருக்க, இன்றைக்குக் காட்டுப் பன்றிகளினால் மிகப் பெரிய அளவிலே தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. கடந்த காலங்களிலே காட்டுப் பன்றிகள் வேட்டையாடுகிற வகையிலே, வன உயிரினங்களைச் சாப்பிடுகிற வகையிலே, மிருகங்களைச் சாப்பிடுகிற வகையிலே—ஓநாய், சிறுத்தை, நரி, புலி போன்ற. . .

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், நீங்கள் கேள்வியைக் கேட்க ஆரம்பித்து 5 நிமிடங்களாகிவிட்டன.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** அந்த வன உயிரினங்களெல்லாம் குறைந்து, இன்றைக்குக் காட்டுப் பன்றிகளின் இனப் பெருக்கம் மிகவும் அதிகமாகியிருக்கிறது. குறிப்பாக, ஒரு காட்டுப் பன்றி ஒரு முறை 12 குட்டிகளை ஈன்றெடுக்கிறது. இதனால் வேகமாக காட்டுப் பன்றிகளின் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது. இதனால், காட்டுப் பன்றிகள் கூட்டம் கூட்டமாக விவசாயிகளுடைய நிலப்பரப்புகளில் புகுந்து, விவசாயிகளுக்கு மிகப் பெரிய இழப்பை ஏற்படுத்துகின்றன. ஆகவே, மிகப் பெரிய இழப்பை ஏற்படுத்துகின்ற இத்தகைய காட்டுப் பன்றிகளை வனப் பகுதியிலிருந்து நிலப்பரப்பிற்கு வராமல் தடுப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[2017 ஜூன் 21

வனப் பகுதியிலிருந்து காட்டுப் பன்றிகள் வெளியே வராமல் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கின்ற வகையில், வன உயிரினங்கள் பாதுகாப்புச் சட்டம் 1972, Schedule 3–ல் இருக்கின்ற பன்றி இனத்தை, Schedule 5–ல் இருக்கின்ற காகம், பழம் தின்னும் வௌவால், எலி, சுண்டெலி போன்ற இனங்களோடு சேர்த்து, வன உயிரினங்கள் பாதுகாப்புச் சட்டத்தில் மாற்றம் செய்து நடைமுறைப்படுத்திடவும், பன்றிகள் விவசாய நிலப்பரப்பிற்குள் வருகின்றபோது, அவற்றை விவசாயிகளே சுட்டு விரட்டுகின்ற நிலையை ஏற்படுத்திக் கொடுக்கவும், மத்திய அரசின் வன உயிரினங்கள் பாதுகாப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர், ஒரு நிமிடம் பொறுங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அவைக்கு வந்திருக்கிறீர்கள்; கேள்வி நேரத்தில் ஆர்வமாகத் துணைக் கேள்வி கேட்க வேண்டும் என்று என்னிடத்தில் வாய்ப்பும் கேட்கிறீர்கள். என்னுடைய அறையிலும் வந்து சொல்கிறீர்கள். நானும் முடிந்தவரை புதிய உறுப்பினர்கள் யார், யார் இருக்கின்றார்களோ, அவர்களுக்கெல்லாம் வாய்ப்புக் கொடுத்துக்கொண்டிருக்கிறேன். ஆனால், திரு. ஓ.கே. சின்னராஜ், திரு. உதயசூரியன் போன்ற உறுப்பினர்கள் ஒரு கேள்வியைக் கேட்பதற்கே இவ்வளவு நேரம் எடுத்துக்கொள்கிறார்கள். இப்போது உறுப்பினர் ஒரு கேள்விதான் கேட்டிருக்கிறார்; அதற்கே 7 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னொரு துணைக் கேள்வி கேட்க அவருக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆக, உறுப்பினர்கள் எனக்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்றால், துணைக் கேள்விகள் கேட்க வாய்ப்பு கொடுக்க இயலாது. பிறகு என்னிடம் கோபித்துக்கொள்வதில் அர்த்தம் இல்லை. "சபாநாயகர் எங்களுக்குத் துணைக் கேள்வி கேட்க வாய்ப்பே தரமாட்டேன் என்கிறார்" என்று சொல்வதில் அர்த்தமே இல்லை. கேள்வி நேரத்தில் எல்லோரும் சுருக்கமாகக் கேள்விகளைக் கேட்டால்தான், துணைக் கேள்விகளைக் கேட்க மற்றவர்களுக்கும் நிறைய வாய்ப்புகளை என்னால் கொடுக்க முடியும். எல்லோருக்கும் வாய்ப்புத் தர முடியும். அதை விட்டுவிட்டு, இதுபோன்று நீண்ட நேரம் பேசி, வாய்ப்புக் கேட்டு என்னைத் தொந்தரவு செய்தால், ஒரே ஒரு கேள்விக்குதான் வாய்ப்புக் கொடுக்க முடியும். மாண்புமிகு வனத் துறை அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.



2017 ஜூன் 21]

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஓ.கே. சின்னராஜ் என்ற கேள்வி விமானம் take off ஆகி, land ஆவதற்கு 7 நிமிடங்கள் ஆயிற்று என்று நீங்கள் சொன்னீர்கள். ஆனாலும், அவர் பேசும்போது, மறைந்த இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வன உயிரினங்களைக் காப்பாற்றுவதற்கும், வன விலங்குகளிடமிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கும் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி இந்த அவையில் எடுத்துச் சொன்னார்கள். அதற்காக மாண்புமிகு உறுப்பினருக்கு நான் முதலில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுப் பன்றிகள் கோயம்புத்தூர் மாவட்டத்திலும், ஈரோடு மாவட்டத்திலும் மிக அதிகமாக இருக்கின்றன என்ற செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். 6 மாதங்களுக்கு முன்பாகவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. வேலுமணி அவர்களும், ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் செங்கோட்டையன் அவர்களும் என்னை அந்தப் பகுதிக்கு அழைத்துச் சென்று, வன விலங்குகளால் அங்குள்ள விவசாய விளை நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதையும், பன்றிகள் வந்த இடங்களையும், விலங்குகளால் மற்ற உயிரினங்கள் பாதிக்கப்பட்டுள்ளதையும் எடுத்துச் சொன்னார்கள். நானும் நேரடியாக அந்தச் சேதங்களைப் பார்வையிட்டு, உடனடியாக அதைப்பற்றிய செய்திகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்தேன். அதனடிப்படையில், காட்டுப் பன்றிகளை ஒழிப்பதற்குரிய சூழ்நிலையையும், விவசாயிகளை இதுபோன்ற பாதிப்பிலிருந்து காப்பாற்றுவதற்கான சூழ்நிலையையும் உருவாக்கக்கூடிய திட்டங்களை வரையறுத்திருக்கிறோம்.

*முற்பகல் 10–10*

காட்டுப் பன்றிகள் வனப் பகுதியை ஒட்டியுள்ள விளை நிலங்களில் பயிர்ச் சேதம் மற்றும் இதர சேதாரங்களை ஏற்படுத்துகின்றன. விவசாயிகள் மற்றும் பொது மக்களுக்கு ஏற்படுகின்ற இடையூறுகளைப் பற்றி அறிந்த உயர்ந்த எண்ணம் கொண்ட, உன்னத உள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் இட்ட ஆணையின்படி ஒரு குழு அமைக்கப்பட்டது. வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம் வகைப்படுத்தப்பட்டு, காட்டுப் பன்றிகளால்

ஏற்படும் அழிவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பகுதிவாரியாக காடுகளில் இருக்க வேண்டிய காட்டுப் பன்றிகளை நியதிப்படி, carrying capacity of the forest—காடுகள் குறிப்பிட்ட அளவில் குறிப்பிட்ட விலங்குகளைத் தாங்கும் திறன் அறிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பை நேரடியாகக் கண்டதன்மூலமும், தடயங்களின்மூலமும் காட்டுப் பன்றிகளின் அடர்த்தி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பு 15 வன மண்டலங்களைச் சேர்ந்த 45 கோட்டங்களில், 1283 beat–களில் நடத்தப்பட்டதில், 37.7 சதவிகித கோட்டங்களில் குறைவான எண்ணிக்கையிலும், 28.8 சதவிகித கோட்டங்களில் மத்தியமாகவும், 17.7 சதவிகித கோட்டங்களில் அதிகளவிலும் காட்டுப் பன்றிகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. மேலும் 15.5 சதவிகித கோட்டங்களில் காட்டுப் பன்றி இனங்கள் இல்லை என்றும் தெரிய வருகிறது. எனவே அரசு அனுமதியுடன், மேற்கண்ட வன உயிரினப் பாதுகாப்புச் சட்டப் பிரிவுகளின்படி, மிகுந்த அளவில் காட்டுப் பன்றிகள் இருக்கும் வனக் கோட்டங்களைக் கண்டறிந்து, அதனைக் கட்டுப்படுத்துவது குறித்த கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு இதை எடுத்துச் சென்றுள்ளதோடு, விரைவில் இதற்கான உரிய ஆணைகள் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியினையும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.கே. சின்னராஜ், நீங்கள் சுருக்கமாகக் கேட்பதாக இருந்தால் அனுமதி தருகிறேன். இல்லையென்றால், அடுத்த உறுப்பினரை அழைப்பேன். (குறுக்கீடு) சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த காலங்களிலே வன விலங்குகளால் ஏற்பட்ட உயிர்ச் சேதம், பொருள் சேதத்திற்கு மும்மடங்கு இழப்பீட்டுத் தொகையை உயர்த்திக் கொடுத்தார்கள். அந்த வகையிலே இன்றைக்கு விவசாயம் செய்கிற, குறுகிய கால பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு வழங்குகிற ரூ.30,000 தொகை போதுமானதாக உள்ளது. அதே நேரத்தில் பணப் பயிர்களாக விளங்குகிற வாழை, கரும்பு, மஞ்சள் போன்றவற்றைப் பயிர் செய்வதற்கு அதிகம் செலவாகிறது. குறிப்பாக ஒரு வாழை பயிரிட வேண்டும் என்று சொன்னால், ஒரு வாழைக்கு மூலதனச் செலவு 100 ரூபாய் ஆகிறது. ஒரு ஏக்கருக்கு 1000 வாழை என்று கணக்கிட்டால், ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாய் அளவிற்குச் செலவாகிற இந்தச் சூழ்நிலையில், அறுவடை காலங்களில் இதுபோன்ற நஷ்டம் ஏற்பட்டால், விவசாயிகள் மிகப் பெரிய அளவிற்கு மன உளைச்சலுக்கு ஆளாகின்றார்கள். ஆகவே, அந்த விவசாயிகளுடைய வாழ்வாதாரம் உயர்கின்ற வகையிலே, அந்த பாதிப்பினால் ஏற்படுகின்ற இழப்பீட்டை வேளாண்மைத் துறையின் மூலமாகக் கணக்கெடுத்து, என்ன விலை வருமோ, அதை அந்தப் பணப் பயிர்களுக்கு வழங்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிகழ்வுகளில் பயிர்ச் சேதம் ஏற்பட்டால் எதிர்க்கட்சி ஆளுகின்றபொழுது ஒரு ஏக்கருக்கு 15,000 ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா ஆட்சியில் 25,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலவே, ஓட்டு வீடுகள், கான்கிரீட் வீடுகள் சேதமடைந்தால் எதிர்க்கட்சி ஆளுகின்றபோது 5,000 ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால், அம்மாவின் ஆட்சியில் 95,100 ரூபாய் இப்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, குடிசை வீடுகள் சேதமடைந்தால் எதிர்க்கட்சி ஆண்டபொழுது 500 ரூபாய் கொடுத்தார்கள். இப்பொழுது அதுபோன்ற குடிசை வீடுகள் சேதமடைந்தால் 10,000 ரூபாயை அம்மாவின் ஆட்சியிலே வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

அதைப்போலவே, இதுபோன்ற நிகழ்வுகளில் பயிர்ச் சேதம் ஏற்பட்டால், அவர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு போதவில்லை. எனவே, பணப் பயிர்கள் சேதமடைந்தால், இழப்பீட்டுத் தொகையை அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உங்களுக்குத் தெரியும்; இதுபோன்ற நேர்வில் மனித உயிரிழப்பு அல்லது நிரந்தர ஊனம் ஏற்பட்டால், எதிர்க்கட்சி ஆட்சி செய்தபொழுது 1.50 இலட்சம் ரூபாய் வழங்கினார்கள். ஆனால், புரட்சித் தலைவி

*அம்மாவின் ஆட்சியில், அம்மா அவர்கள் இருந்தபொழுது 3 இலட்சம் ரூபாய் என்று இருந்த இந்த நிவாரணத் தொகையை 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கியிருக்கிறார்கள். அதேபோன்று, பலத்த காயம் ஏற்பட்டால் பாதிக்கப்பட்டவருக்கு எதிர்க்கட்சி ஆளுகின்றபொழுது 30,000 ரூபாய் வழங்கப்பட்டது. இப்பொழுது அம்மாவின் ஆட்சியில் 59,000 ரூபாய் வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராஜ் அவர்கள், தற்பொழுது பணப் பயிர்களுக்கு கூடுதலாக நிவாரணத் தொகை வழங்கவேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். நம்முடைய நிதி நிலைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, எந்த வகையில் இதுபோன்று பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட முடியும் என்பதை இந்த அரசு ஆய்வு செய்யும் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–15*

*மாண்புமிகு அமைச்சர்கள் தம்பி வேலுமணி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் செங்கோட்டையன் அவர்களெல்லாம் தெரிவித்ததன் அடிப்படையில் அங்கு சென்று பார்த்தேன். நிரந்தரமாக அழிவு செயல்களில் ஈடுபடுகின்ற காட்டுப் பன்றிகளைச் சுடுவதற்கு அனுமதி தாருங்கள் என்று அவர்கள் கேட்டார்கள். நம்முடைய தமிழ்நாட்டில் அப்படி விலங்குகளைச் சுடுவதற்கு அனுமதி இல்லாத ஒரு சூழ்நிலை இருந்தது. உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "மற்ற மாநிலங்களில் என்னென்ன வகைகளில் இதற்காகச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது; அதனை அறிந்து துறையின் மூலமாகச் சொல்லுங்கள்" என்று சொன்னார்கள். மரியாதைக்குரிய எங்களுடைய வனத் துறையினுடைய செயலாளர், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அனைவரும் கலந்து பேசி, கேரள மாநில அரசில் காட்டுப் பன்றிகளைச் சுடுவதற்கு என்ன சட்டம் இயற்றியிருக்கிறார்கள் என்று பார்த்தோம். அதைப்போலவே, உத்தரகாண்ட், அதற்கு அருகிலுள்ள மற்ற மாநிலங்களான பீஹார், இமாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் எந்தெந்த வகைகளிலே பன்றிகளைச் சுடுவதற்கு உத்தரவு நடைமுறையில் இருக்கிறது என்பதைப் பார்த்தோம். அந்த அடிப்படையில், உண்மையிலேயே பாதிப்பு இருக்கும்போது, வன அதிகாரிகளைக் கொண்டு பரிட்சார்த்த முறையில் காட்டுப் பன்றிகளைச் சுடுவதற்கு 3 மாதங்களுக்கு அனுமதி வழங்கலாமா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அதன்பிறகு, மூன்று மாதங்களுக்கு அனுமதி கொடுப்பதில் பிரயோஜனம் இல்லை; அதை ஒரு வருடமாக நீடித்து வழங்கலாம் என்று முடிவுசெய்து, உண்மையிலேயே அதுபோன்று பாதிப்பு ஏற்படும்பொழுது, விவசாயிகள் வனத் துறை அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தால், வனத் துறையிலுள்ள* forester *மற்றும் உள்ள பணியாளர்களைக் கொண்டு ஒரு வருடத்திற்கு காட்டுப் பன்றிகளைச் சுடுவதற்குரிய சூழ்நிலைகளை உருவாக்குவோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். எனவே, விரைவில் காட்டுப் பன்றிகளைச் சுடுவதற்குரிய ஆணையை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி இந்த அரசு வழங்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராஜ் அவர்களுக்கு மட்டுமல்லாமல், சபையில் உள்ள அனைவருக்கும் நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**52—**

### மின் பாதை

***154—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நீடாமங்கலம் நகருக்கு மட்டும் நகர்ப்புற மின்சாரம் வழங்கும் முறையில் தனி மின் பாதை அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நீடாமங்கலம் நகருக்கு தனி நகர்ப்புற மின் பாதையினை அமைத்துக் கொடுப்பதைப் பொறுத்தவரை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினுடைய விதிமுறைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில், அங்கு தனி நகர்ப்புற மின் பாதை அமைத்துக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பெருமைவாய்ந்த மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நீடாமங்கலம் பேரூராட்சியில் ஏறத்தாழ 500–க்கும் மேற்பட்ட வர்த்தக நிறுவனங்கள் உள்ளன. 15,000–க்கும் மேற்பட்ட பொது மக்கள் வசித்து வருகிறார்கள். இந்தப் பகுதியில் நீண்ட நாட்களாக ஒரு urban feeder line வேண்டுமென்று மக்கள் கோரி வருகிறார்கள். ஏனென்றால், தொடர்ந்து குறைந்த மின் அழுத்தப் பிரச்சினை அங்கே நிலவி வருகிறது. இதற்கு ஒரே தீர்வு, நிச்சயமாக தனியாக ஒரு Sub–Station அங்கே அமைப்பது மட்டும்தான் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒப்புக்கொள்வார்கள். நேற்று இந்த அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, குறிப்பிட்ட ஒரு இடத்தைத் தேர்வு செய்து தந்தால், நிச்சயமாக ஒரே மாதத்தில் அந்த இடத்தில் Sub–Station அமைத்துத் தரப்படும் என்று உறுதியளித்திருந்தார். ஆனால், எங்கள் தொகுதியில் பழைய நீடாமங்கலம் பகுதியில் ஒரு இடத்தைத் தேர்வு செய்து ஏறத்தாழ 2 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால், இன்னும் அங்கே ஒரு புதிய Sub–Station அமைக்கப்படவில்லை. இன்னும் மின் வாரியத்தில் அப்படியே நிலுவையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். பல காரணங்களினால் அது இழுத்தடிப்பு செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. இந்த Sub–Station திருவாரூர் மாவட்டத்தில் ஒரு முக்கியமான Sub–Station ஆகும். இதற்குப்பிறகு கோட்டூரில் தொடங்கப்பட்ட பணிகளை எல்லாம் முடித்துவிட்டார்கள்; முத்துப்பேட்டையிலும் வேலைகள் விரைவாக நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், நீடாமங்கலத்தை மட்டும் புறக்கணித்து வருகிறார்கள். அது ஏன் என்று தெரியவில்லை. ஆகவே, நிச்சயமாக விரைந்து இந்த வேலைகளை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் ஒரே மாதத்தில் முடித்துத் தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, மற்ற பகுதிகளில் துணை மின் நிலையப் பணிகள் வேகமாக நடைபெறுகின்றன என்று சொல்கின்றார். இடம் கையகப்படுத்தப்பட்டது என்றாலும், அது மின் வாரியத்திற்கு முழுமையாக ஒப்படைக்கப்பட்டதற்குப் பிறகுதான் அந்த வேலைகளைச் செய்ய முடியும். ஏனென்று சொன்னால், அந்த இடம் வேறு துறைக்குச் சொந்தமாக இருக்கின்றபோது, அது அரசின் மூலமாக மின்சார வாரியத்திற்கு மாற்றப்பட வேண்டும். அதற்குப் பின்னால்தான், அந்தப் பணிகளை ஆரம்பிக்க இயலும். அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகர்ப்புற மின்சாரம் வழங்கும் முறையில் தனி மின் பாதை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதற்கு 4 விதமான conditions இருக்கின்றன. மொத்த மின்பளுவில், அதாவது தாழ்வழுத்த தொழிற்சாலை மற்றும் விவசாயப் பளுவில் 50 சதவிகிதத்திற்கு மேல் இருக்க வேண்டும் அல்லது உயர் அழுத்த, தாழ்வழுத்த தொழிற்சாலை–அதாவது, விவசாயத்திற்கு உட்பட–70 சதவிகிதத்திற்கு மேல் இருக்க வேண்டும். 300–க்கும் அதிகமான தாழ்வழுத்த தொழிற்சாலை மின் இணைப்புகள் இருக்க வேண்டும். இல்லையென்றால், நீரேற்று நிலையம், உயர் அழுத்த மருத்துவ மின் நிலையம் இருக்க வேண்டும். அப்படி இருக்கின்றபோதுதான், நகர அமைப்புக்கென்று தனியாக ஒரு மின் பாதை அமைக்க முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அந்த இடத்தை ஏற்கெனவே துறைக்கு register செய்து கொடுத்துவிட்டார்கள். தயவுசெய்து நீங்கள் இதை கவனித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் கூறிய அனைத்து conditions–களையும் நிச்சயமாக நீடாமங்கலம் பேரூராட்சி பூர்த்தி செய்யும்.

[2017 ஜூன் 21

அதேபோல், மன்னார்குடி தொகுதியைப் பொறுத்தவரை, அனைத்துப் பகுதிகளிலுமே பழைய மின் வடங்கள் இருப்பதினால், குறைந்தழுத்த மின் பிரச்சினை இருந்துவருகிறது. ஏற்கெனவே நீங்கள் 'உதய்' திட்டத்தில் கையெழுத்திட்டிருக்கிறீர்கள். தற்போது line loss 15.5% ஆக இருக்கிறது என்று நினைக்கிறேன். 'உதய்' திட்டத்தைப் பொறுத்தவரையில் heavy ஆக இருக்கிற அந்த line loss–ஐ 13 சதவிகிதத்திற்குக் கொண்டுவந்தால்தான், அந்த line loss–ஐக் குறைத்தால் மட்டுமே அரசு, மின்சார வாரியத்திற்கு 20,000 கோடி ரூபாயைக் கொடுக்க முடியும் என்ற விதி அதில் இருக்கிறது. 80 சதவிகிதத்திற்கும் மேலான line–களில் எல்லாமே 3.5, 2.5 conductors இருக்கின்றன. அவற்றையெல்லாம் இப்போது நீங்கள் 4.09 conductors–ஆக மாற்றப் போகிறீர்கள் என்று சொல்கிறார்கள். ஆக, நீங்கள் இந்தப் பணியை எப்படியிருந்தாலும் செய்தாக வேண்டும். அப்படி இந்தப் பணியைச் செய்யும்போது, ஏற்கெனவே இருக்கின்ற pole–கள் 4.9 conductors–க்கு நிச்சயமாகத் தாங்காது என்று நினைக்கிறேன். எனவே, நிச்சயமாக நடுநடுவில் ஒரு pole–ம் தேவைப்படுகிறது. இந்தப் பணிகளையெல்லாம் செய்ய வேண்டுமென்றால், நிச்சயமாக உங்களுக்கு நிறைய line man, helpers மற்றும் உதவியாளர்கள் தேவைப்படுவார்கள். திருவாரூர் மாவட்டத்தில் மட்டும் 32 சதவிகிதம் அளவிற்கு வேலையாட்கள் குறைவாக இருக்கிறார்கள். இதை ஏன் இன்னும் நீங்கள் நிரப்பவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. கடைசியாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில்தான் இந்த line man மற்றும் helpers பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்பட்டன. எனவே, விரைந்து புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, இந்தப் பணியிடங்களை நிரப்பினால், I.T.I. படித்த இளைஞர்களுக்கு பெரிய உதவியாக இருக்கும். ஒரு மாவட்டத்தில் குறைந்தபட்சம் 300 பேர் எடுக்கலாம். தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 10,000 பேரை நீங்கள் எடுக்கலாம். ஆனால், நீங்கள் ஒரு வருடத்தில் 300 பேரைத்தான் எடுக்கிறீர்கள் என்று தெரிகிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையையும் நீங்கள் நிச்சயமாகத் தீர்த்துத் தந்து, விரைந்து இந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கி, line man மற்றும் helpers பணியிடங்களை நிரப்பிட வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையையும் இங்கே வைத்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.



2017 ஜூன் 21]

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நேற்றைக்கு முன்தினம் விவாதம் நடைபெற்றபோது அவையில் இல்லை என்று நினைக்கின்றேன். புதிதாக 6,000 பணியாளர்களை பணிக்கு எடுப்போம் என்று நாங்கள் சொல்லியிருக்கின்றோம். இப்பொழுது 800 பேர்கள் எடுக்கப்பட்டிருக்கிறார்கள். இனி வரவிருக்கின்ற காலத்தில் 1,875 பேரை எடுப்போம் என்று சொல்லியிருக்கின்றோம். ஆக, எங்கெங்கு தேவைகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் உடனடியாக பணியாளர்களைத் தேர்வு செய்து, படிப்படியாக அந்தப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசினுடைய எண்ணம். அதை விரைந்து முடிப்போம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இப்போது நீடாமங்கலம் பேரூராட்சிக்கு 110/கே.வி. கோவில்வண்ணி துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் கொடுக்கப்படுகின்றது. அதேபோல, 33 கே.வி. புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடம் எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி முடிந்தவுடன், அந்தப் பணியை விரைந்து முடித்து, அங்கு தேவையிருப்பின், நகர மின் பாதையும் அமைத்துக் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கின்றது. நேற்றையதினம் ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் பேசுகின்றபோதுகூட நான் சொன்னேன். தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இந்த 4 மாவட்டங்களில் மின் அழுத்தம் குறைவாக இருக்கின்றது. அதற்குப் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டும். இப்போது நாகப்பட்டினம் மாவட்டம், மணல்மேடு பகுதியில் 400 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான இடத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேர்வு செய்து தருவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதுபோன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்ற மக்கள் பிரதிநிதிகள், அதற்கான இடங்களைத் தேர்வு செய்து கொடுத்தால்தான், துணை மின் நிலையங்கள் அதிகமாக ஏற்படுத்த முடியும்; அப்பொழுதுதான், மின் அழுத்தம் குறையும். இதுபோன்ற நகர மின் பாதையாக இருந்தாலும் சரி; கிராமங்களில் விவசாயத்திற்குக் கொடுக்கிற மின் பாதையாக இருந்தாலும் சரி, அப்பொழுதுதான் மின்சாரத்தைத் தொய்வில்லாமல் கொடுப்பதற்கு வாய்ப்பிருக்கும். அதை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கின்றது. எனவே, மக்கள் பிரதிநிதிகள் அந்தந்தப் பகுதிகளிலே

[2017 ஜுன் 21

இருக்கின்ற இடங்களைத் தேர்வு செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 19–6–2017 அன்று இரவு பெய்த மழையின் காரணமாக கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்டு இருக்கக்கூடிய திரு. காமராஜ், (வயது 21) என்பவர், முருகன் நகர் 4–வது தெரு வழியாக நடந்து சென்ற நேரத்தில், அங்கிருந்த மாநகராட்சி மின் கம்பத்தின் அருகிலே தோண்டப்பட்டிருந்த பள்ளத்திலே ஏற்பட்ட மின் கசிவினால் தாக்கப்பட்டு, சம்பவ இடத்திலேயே இறந்து போயிருக்கிறார். அதுமட்டுமல்ல; ராஜீவ் நகர், வேகவதி தெருவிலே, மின்கம்பத்திலே மின் கசிவு ஏற்பட்டு, அந்தக் கம்பத்தை ஒட்டிச் சென்ற மாடு ஒன்று மின்சாரம் தாக்கி இறந்துபோயிருக்கிறது. தொடர்ந்து வானிலை மையம் அறிவுறுத்திக்கொண்டிருக்கிறது. இந்த நிலையிலே, பழுது பார்க்கக்கூடிய பணிகளை, பராமரிப்புப் பணிகளை உடனுக்குடன் நிறைவேற்றினால்தான் விலை மதிப்பற்ற உயிர்கள் காப்பாற்றப்படும்; வாயில்லா ஜீவன்களுக்கு அது பாதுகாப்பாக இருந்திட முடியும். ஏற்கெனவே இதே அவையிலே, அமைச்சரிடத்திலே ஒரு கேள்வியை நான் கேட்டு, அதற்கான பதிலையும் நான் பெற்றிருக்கிறேன்.

முற்பகல் 10–25

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையிலே, ஏற்கெனவே இந்த ஆண்டிலேயே திருமதி சந்திரா, (வயது 55) என்பவர், மின் ஒயர் அறுந்து மேலே விழுந்ததில் மரணமடைந்திருக்கிறார். அதேபோல் 29–4–2017 அன்று கலைச்செல்வி (வயது 20) என்பவரும் உயர் மின்னழுத்தத்தால் தாக்கப்பட்டு, உயிரிழந்திருக்கிறார். தொடர்ந்து இதுபோன்ற விபத்துகள், குறிப்பாக கொளத்தூர் தொகுதியிலே ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. எனவே, விலைமதிப்பற்ற மனித உயிர்களைக் காப்பாற்றுவதற்கு முழுவீச்சிலே அரசு ஈடுபட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.



2017 ஜுன் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட சம்பவம் நேற்றைக்கு முன்தினம் இரவு நடைபெற்றது. அந்த விபத்து மின்சார வாரியத்தினுடைய மின் கம்பியால் ஏற்படவில்லை. கார்ப்பரேஷன் பகுதியில் இருக்கின்ற மின் கம்பத்திற்குச் செல்கின்ற மின் கம்பி வெளியே இருந்த காரணத்தினாலும், அங்கு தண்ணீர் தேங்கியிருந்த காரணத்தினாலும், 22 வயது மதிக்கத்தக்க அந்த நபர் தண்ணீரிலே கால் வைத்தபோது, மின் விபத்து ஏற்பட்டு உயிரிழந்திருக்கிறார். எப்படியிருந்தாலும் அரசாங்கம் அதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்கின்றேன்.

அதுபோல, கலைச்செல்வி என்பவரைப் பொறுத்தவரையில்—அந்தப் பகுதிகளில் உள்ள வீடுகளின் மேலே உயர் மின்னழுத்த மின் கம்பி செல்கின்றது—இவரது வீட்டின் மேலேயும் உயர் மின்னழுத்த மின் கம்பி செல்கின்றது. அந்த வீட்டின் ஒரு பகுதியில் மட்டும், மாடி வீடு கட்டியிருக்கிறார்கள். அந்த மாடி வீட்டில் அவர் துணியை உலர்த்திக் கொண்டிருந்தபோது, துணி கீழே விழுந்துவிட்டது. அந்தத் துணியை எடுப்பதற்கு அவர் கீழே செல்கின்றபோது—கிட்டத்தட்ட ஒரு மீட்டர் இடைவெளி இருந்தாலே, உயர் மின்னழுத்த கம்பியிலிருந்து electric shock தாக்கும் என்பது அவருக்குத் தெரியாத காரணத்தினால், அவர் மின் கம்பியைத் தொடுவதற்கு முன்பாகவே–electric shock–ஏற்பட்டு அவர் இறந்துவிட்டார்.

அதுபோல, சந்திரா என்ற பெண்ணும் ஏற்கெனவே மின் விபத்து ஏற்பட்டு இறந்திருக்கிறார். அது மின்சார வாரியத்தினுடைய தவறு. அதற்காக இழப்பீடு கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட கடந்த முறை அதுகுறித்துப் பேசும்போது, இன்னும் அதிகமாக இழப்பீடு வழங்கவேண்டுமென்றும், அதுகுறித்து ஒரு வழக்கும் நீதிமன்றத்திலே போட்டிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். அந்த வழக்கில் நீதிமன்றம் என்ன தீர்ப்பு வழங்குகிறதோ, அதனை ஏற்றுக்கொள்கிறோம் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். இப்போது மழைக்காலம். நாங்கள் ஏற்கெனவே கார்ப்பரேஷன் அதிகாரிகள், நெடுஞ்சாலைத் துறை மற்றும் மின் துறை அதிகாரிகளை அழைத்து

ஒரு கூட்டம் நடத்தியிருக்கிறோம். வருங்காலத்தில் இதுபோன்ற கூட்டங்களை நடத்தி விபத்துகளைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதிலே மின் வாரியத்திற்குத் தெரியாமல், கார்ப்பரேஷன் ஆகட்டும் அல்லது மற்ற துறைகளாகட்டும், அவர்கள் சாலைகளில் பள்ளம் தோண்டுகிறபோது, மின் கம்பிகளை மேலேயே போட்டுவிட்டுச் சென்று விடுகிறார்கள். அது எங்களுக்குத் தெரிவதில்லை. அதுபோன்று இருப்பது எங்களுக்குத் தெரிகின்றபோது, உடனடியாக நடவடிக்கை எடுத்துவிடுகின்றோம். வருங்காலத்தில் அதுபோன்ற தவறுகள் நடக்காத அளவிற்கு நான் பார்த்துக்கொள்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அந்த விபத்து கார்ப்பரேஷன் பகுதியில் நடந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**53—**

## மீன் வளர்ப்புப் பண்ணை

***16593—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, இலால்பேட்டையிலுள்ள மீன் வளர்ப்புப் பண்ணையை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், இலால்பேட்டையில் 3.14 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள அரசு





மீன் பண்ணையில் இதுவரை 8.20 இலட்சம் மீன் குஞ்சு விரலிகள் வளர்த்தெடுக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மீன் பண்ணையில் மேலும் விரிவாக்கம் மேற்கொள்ள ஏதுவாக இரண்டு ஹெக்டேர் பரப்பில் மீன் வளர்ப்புக் குளங்கள் ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “வந்தாய் சென்றாய் என்றால் உந்தன் வாழ்வு சிறக்காது—நீயும் வந்தாய் தொண்டால் சிறந்தாய் என்றால்—இந்த வையம் மறக்காது” என்று சொன்னான் எங்கள் மண்ணின் கவிஞன் புலவர் புங்கனேரியான். அந்த வரிகளுக்கு இலக்கணமாக வாழ்ந்து, மக்கள் உள்ளங்களை வென்று இன்றைக்கும் மக்கள் இல்லங்களிலும், உள்ளங்களிலும் இதய தெய்வமாகக் குடியிருக்கின்ற ஒப்பற்ற தலைவியான (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புகழினைப் போற்றி வணங்குகின்றேன். பொன்மனத் தலைவியினுடைய பொற்கால ஆட்சியினுடைய மாட்சி குறையாமல் மனிதநேயத்தோடு மக்களாட்சி நடத்துகின்ற மாட்சிமை நிறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் அன்போடு வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, இலால்பேட்டை பேரூராட்சியில் அமையப்பெற்றிருக்கிற மீன் வளர்ப்புப் பண்ணையைப் புனரமைத்து சிறப்பான நடவடிக்கையை மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, தொகுதி மக்களுடைய சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பெருகிவருகிற உணவு வகைகளில் மீன், மிகச் சிறப்பான உணவாக விளங்குகின்றது. இந்தச் சூழ்நிலையில், கிராமப் பகுதிகளில் வசிக்கக்கூடிய தமிழ் மக்கள் பெரிதும் விரும்பி உண்ணுகின்ற உணவாக இருக்கின்ற ஜிலேபி, விரால் மீன்களை வளர்க்கக்கூடிய சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதையும், கிராமங்களில் அவற்றை வளர்ப்பதற்கான நடவடிக்கையை மீன் வளத் துறை எடுக்குமா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2017 ஜூன் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் அமைந்திருக்கின்ற மீன் பண்ணை 1966 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மிகப் பழமைவாய்ந்த ஒரு மீன் பண்ணையாகும். எனவே, அதனை நவீனப்படுத்துவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் அளவில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதனை நிறைவேற்றும் சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் விரால், ஜிலேபி போன்ற— கிஃப்ட் திலேப்பியா என்ற மீன் வகையினைத்தான் ஜிலேபி என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்—மீன்கள் அதிகமான அளவிற்கு வளர்க்கப்படவேண்டும். அந்த மீன்கள் புரதம் அதிகம் உள்ள மீன்கள் என்பதால், அது மக்களுக்கு மிகவும் பயன்படும் என்கின்ற அந்தக் கருத்தைச் சொன்னார்கள். உண்மையிலேயே ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார். அரசு அதை ஏற்று, செயல்படுத்தும் என்கின்ற செய்தியை இந்தத் தருணத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

விரால் மீனைப் பொறுத்தவரையில், மிகவும் சுவை மிகுந்த ஒரு மீன். விரால் மீன் குழம்பு என்றாலே, கிட்டத்தட்ட 10 தெரு தள்ளி சமைத்துக் கொண்டிருக்கும்போதே, இங்கு வாசனை வரும். அந்த அளவுக்கு விரால் மீன் மிகுந்த சுவையுடையது. ஆனால், அது இயற்கையாகவே குளங்கள், ஆறுகள் மற்றும் நீர்நிலைகளில் வளரக்கூடிய ஒன்றாகும். ஆனால், அதைச் செயற்கையாக வளர்ப்பதற்கு எவ்வளவோ முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் முடியவில்லை. ஏனென்று சொன்னால், விரால் மீனைப் பொறுத்தவரையில், ஆங்கிலத்தில் murrel என்று சொல்வார்கள். விரால் மீன் பொதுவாகவே cannibalic in nature. அதாவது, தன்னினத்தை தானே சாப்பிடக்கூடிய ஒருவகை மீன். அது குஞ்சுகளை ஈன்றுகின்றபோதே, அதனுடைய குஞ்சுகளை அதுவே



2017 ஜூன் 21]

சாப்பிடுகின்ற பழக்கம் ஏற்பட்டுவிடும். எனவே, ஒரு புதிய technology–ஐக் கொண்டு, அது குஞ்சுகளை ஈன்றுகின்ற தருவாயில், உடனடியாகத் தாய் விரால் மீனைப் பிரித்து, வேறு இடத்திற்கு அனுப்பிவிட்டால், இந்தக் குஞ்சுகளெல்லாம் தப்பிக்கின்ற ஒரு நிலைமை நிச்சயமாக உருவாகும். எனவே, அதுபோன்ற ஒரு நவீன தொழில்நுட்பத்தைக்கொண்டு, விரால் மீன்களை முழுமையான அளவிற்கு வளர்ப்பதன்மூலம் நல்ல ஒரு புரதத்தை மக்களுக்கு நிச்சயமாக அளிக்க முடியும். மீன் சாப்பிட்டால் cancer வராது, கண் பார்வை நன்றாக இருக்கும், ஆரோக்கியமாக இருக்க முடியும். (சிரிப்பு) (குறுக்கீடு)

(உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு ஏதோ சொன்னார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் அதிகமாக மீன் சாப்பிடுவதால்தான், கண்ணாடி போட்டுக் கொண்டிருக்கின்றார். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் என்னுடைய தலையில் ஏன் முடி கொட்டிவிட்டது என்று கேட்கிறார்கள். (சிரிப்பு) Genetic என்பது வேறு, நடைமுறை என்பது வேறு; என்னுடைய அப்பாவுக்கு வழுக்கை இருந்ததால், எனக்கும் வழுக்கை தலையாகிவிட்டது. (சிரிப்பு) அது genetic; அது hereditary. அது Deoxyribo Nucleic Acid (DNA) என்று சொல்லக்கூடிய குரோமோசோம் காரணமாகத்தான் ஏற்படுகின்றது. Zoology, Physics படித்திருந்தால் கண்டிப்பாகத் தெரிந்திருக்கும். (குறுக்கீடு) டாக்டருக்குத் தெரியும்; அவர்கூட சிரிக்கின்றார். உலகத்திலேயே இன்றைக்கு வழுக்கை தலையாக இருப்பதுதான் famous. (சிரிப்பு) அதனால் பொதுவாக genetic–படிதான் வழுக்கை வருகின்றது; மீன் சாப்பிடுவதால் வருவதில்லை. நீங்கள் coastal side பார்த்தீர்களென்றால், cancer report ஆகி இருக்காது. என்னைப் பார்த்து, “நீங்கள் ஏன் கண்ணாடி போட்டுக்கொண்டிருக்கிறீர்கள்?” என்று உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் கேட்டார்கள். இப்போது எனக்கு 60 வயது ஆகின்றது. ஆனால், நான் 55 வயதில்தான் கண்ணாடி போட்டுக் கொள்ள ஆரம்பித்தேன். (சிரிப்பு) அதுவும், படிப்பதற்காக மட்டும்தான் glass போடுகிறேன். மற்றபடி glass போட வேண்டிய அவசியம் ஏற்படாது.

மீன் carotene, protein, selenium என்ற இந்த மூன்று புரதங்களும் நிறைந்த ஒரு நல்ல உணவாகும். எனவேதான், மக்களுக்குப் புரதம் அதிகமாக கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில், ஆய்வுக் கூட்டம் நடைபெற்றபோதுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு கருத்துகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்தக் கருத்துகளையெல்லாம் ஏற்று, துறை செயல்படும்.

குறிப்பாக, கிராமப்புறத்தில், GIFT Tilapia என்று சொல்லக்கூடிய மீன் வகை மிகவும் வேகமாக வளரக்கூடியது. 3 மாதங்களிலே அதை அறுவடை செய்யலாம். அது 3 மாதங்களில் வளரக்கூடிய மீன் வகையாகும். ஒரு ஹெக்டேருக்கு கிட்டத்தட்ட 3 இலட்சம் ரூபாய்தான் செலவு ஆகும். ஆனால், 3 மாதங்களிலே 3½ இலட்சம் ரூபாய் இலாபம் கிடைக்கக்கூடிய, நல்ல வருவாயை ஈட்டக்கூடிய தொழிலாக அது உள்ளது. தமிழ்நாட்டிலே மட்டும் உள்நாட்டு நீர்வள ஆதாரம் என்ற வகையில் ஏறக்குறைய, 3 இலட்சத்து 83 ஆயிரம் ஹெக்டேர் அளவுக்கு மீன் வளர்ப்புக்குரிய இடங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, இதையெல்லாம் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நம்முடைய இளைஞர்கள் பயன்படுத்திக் கொண்டு கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும். மீன் வளப் பல்கலைக்கழகம் மற்றும் மீன் வளத் துறையை அணுகினால், நிச்சயமாக அவர்களுக்கு வேண்டிய அளவுக்கு technology, project details, bank tie up, subsidy இவை அனைத்தும் கொடுக்கப்பட்டு, கிராமப் பொருளாதாரம் மேம்படவும், அவர்கள் சுயமாகத் தொழில் செய்வதற்கு ஏற்றவகையிலேயும் எல்லாவித உதவிகளும் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்கள் மற்றும் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற வகையில், நகர்ப்புறங்களில் இன்றைக்கு அம்மா உணவகம், அம்மா மருந்தகம் என்று இருப்பதைப்போல, அம்மா மீன் மொத்த விற்பனை அங்காடி என்று நகரங்களிலும், அம்மா சில்லறை விற்பனை அங்காடி என்று கிராமங்களிலும் அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மேலும், இன்றைக்கு ராக்கெட் மீன்கள் கிராமத்தில் அனைத்துக் குளங்களிலும் இருக்கின்றன. இந்த மீன்களை மக்கள் பயன்படுத்த மறுக்கின்றார்கள். எனவே, இந்த மீன் வகைகளை அழிப்பதற்கு அரசு முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Tamil Nadu Fisheries Development Corporation மூலமாக www.meenkal.com என்ற website–ல் online மூலமாக book செய்து, மீன்களை வாங்கிக்கொள்ளலாம். அதேபோன்று சென்னை தவிர மற்ற இடங்களில் எங்கெங்கெல்லாம் தேவைப்படுகின்றதோ, அதுகுறித்த விவரத்தினை அரசுக்கு அனுப்பினால், நிச்சயமாக அந்த இடத்தில் TNFDC Stall உருவாக்கப்பட்டு, மீன்கள் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு, பொது மக்களுக்கு தாராளமாக மீன்கள் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு மீன் பெயர் சொன்னீர்களே; என்ன அது? (குறுக்கீடுகள்) Zoological terms–ல் அது என்ன species என்று தெரியவில்லை. இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்த கருத்தை ஏற்று, வேறு ஒரு சந்தர்ப்பத்தில் அதற்கு பதிலளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**54—**

## நேரடி நெல் கொள்முதல் நிலையம்

***3395— திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, தேவனாஞ்சேரியில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

கும்பகோணம் தொகுதி, தேவனாஞ்சேரி கிராமத்தில் 35 இலட்சம் ரூபாய் செலவில் நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உத்தரவிட்டு, புல எண் 77/2–ல் 28.4 சென்ட் பரப்பளவு கொண்ட அரசு புறம்போக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த இடத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்டுவதற்கு பணிகள் துவங்கப்பட உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதியில் அம்மாசத்திரம், அத்தியூர், தாராசுரம், தேவனாஞ்சேரி, ஏரகரம், கடிச்சம்பாடி, கீழப்பழையார், கொற்கை, கொத்தங்குடி, மாங்குடி, பம்பப்படையூர், புளியஞ்சேரி, சாக்கோட்டை, செருகுடி, சுந்தரபெருமாள்கோவில், சுவாமிமலை, திப்பிராஜபுரம், திருநாகேஸ்வரம், திருப்புறம்பியம், சோழன்மாளிகை ஆகிய இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவருகின்றன. தற்போது தேவனாஞ்சேரி ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்டுவதற்கு நில எடுப்புப் பணிகளை விரைவுபடுத்தி, கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேர்வுசெய்யப்பட்டுள்ள இடம் விவசாயிகளுக்கு வசதியான இடமாகவும், வாகனங்கள் செல்வதற்கு வசதியானதாகவும், பொது மக்களுக்கு இடையூறு இல்லாத வகையிலும் இருப்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலத்தநல்லூர், திருநல்லூர், இணைபிரியா வட்டம், தேவனாஞ்சேரி, மணல்மேடு பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் சுமார் 119 ஹெக்டேர் நன்செய் நிலத்தில் உற்பத்தி செய்யும்



நெல்லை, இந்த நெல் கொள்முதல் நிலையத்தில்தான் விற்பனை செய்ய வேண்டிய நிலை உள்ளது. தேவனாஞ்சேரியில் இடத்தைத் தேர்வு செய்து, விரைவில் கட்டடம் கட்டித் தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அப்பகுதி மக்களின் சார்பில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டு, விரைவில் மேலே குறிப்பிட்ட அத்தனை இடங்களிலும் நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் 384 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு, அதிலே அவை இயங்கிவருகின்றன. அதில் கடந்த 6 ஆண்டுகளில் மட்டும் 41 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் 139 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கட்டடங்களைக் கட்டிக் கொடுத்தது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதனைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், தற்பொழுது 23 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 23 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டும் பணி நடைபெற்றுவருகிறது. கடந்த 16 ஆம் தேதிகூட உணவுத் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியுடன், நடப்பு நிதியாண்டில் 10 கோடி ரூபாய் செலவில் 25 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

கும்பகோணம் தொகுதியைப் பொறுத்தவரை, கொத்தங்குடி, சோழன்மாளிகை, உக்கரை, கரிச்சம்பாடி, மஞ்சமல்லி ஆகிய இடங்களில் தலா 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், கோவிளச்சேரி, ஏனநல்லூர், திருநரையூர், அகரத்தூர், திருப்பரம்பியம், கே. சாத்தனூர், ஏரசுரம், நாகராசம்பேட்டை ஆகிய இடங்களில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இஞ்சிக்கொல்லையில் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நெல் கொள்முதல் நிலையம் கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, விவசாயிகள் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் போன்ற மக்கள் பிரதிநிதிகள் எந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் வேண்டுமென்று கேட்கிறார்களோ, அந்த இடத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, உடனடியாகக் கட்டித் தருவதற்கான ஏற்பாட்டைச் செய்யும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தொகுதியில் உள்ள 18 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பம்பப்படையூர் ஊராட்சியில் இருக்கிற நெல் கொள்முதல் நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கும் சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் பிறந்து வாழும் ஊரான சாக்கோட்டையில் பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்த நேரடி நெல் கொள்முதல் நிலையம் தற்போது இடநெருக்கடியால் கிருஷ்ணாபுரத்தில் நன்செய் நிலத்தில் இயங்கி வருகிறது. சிவபுரம் மலையப்பநல்லூர், மருதாநல்லூர், சாக்கோட்டை கிருஷ்ணாபுரம், கருவளர்சேரி ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகள் பயன்பெறும்வகையில், கிருஷ்ணாபுரம் கிராமத்தில் நத்தம் புறம்போக்கு வகைப்பாட்டில் RS. No.73–ல், சுமார் 3½ ஏக்கர் பரப்பளவில் இடம் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கும்பகோணம் தொகுதியில், கிருஷ்ணாபுரம் உள்ளிட்ட 16 நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



இதே மாமன்றத்தில் கடந்த 25–9–2015 அன்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருப்புறம்பியம், சோழன்மாளிகை ஆகிய ஊர்களுக்கு நெல் கொள்முதல் நிலையம் கட்டித் தருவேன் என்று சொன்னார்கள். அங்கே அந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. திருப்புறம்பியம் பகுதியில் பாதி வேலை நடந்து முடிந்திருக்கிறது. சோழன்மாளிகை என்ற இடத்தில் நெல் கொள்முதல் நிலைய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. ஆனால், கட்டடம் கட்டி முடிக்கப்பட்டும், இன்னும் திறப்பு விழா நடைபெறவில்லை. அங்கு மாற்றுப் பாதை சாலை போடவேண்டும் என்ற காரணத்தினால், அந்தக் கட்டடத்தை இடிக்கவேண்டுமென்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. அன்பழகன், நீங்களும் மற்ற உறுப்பினர்களின் பாணியில் விரிவாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். சீக்கிரம் கேள்வி கேட்டு முடியுங்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 43 இலட்சம் ரூபாயில் கட்டி முடிக்கப்பட்ட கட்டடம். எனவே, அந்தக் கட்டடத்தை இடிக்காமல், வேறு வழியில் அந்த மாற்று பாதையை ஏற்பாடு செய்து, அங்கு சாலையைப் போடுவதற்கான பணிகளைச் செய்யவேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்கள் பகுதியில் உள்ள நிறைய ஊர்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடங்கள் கட்டித்தர வேண்டுமென்ற கோரிக்கையைத் தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, பெரும்பாலும் விவசாயிகளின் நலன் கருதி நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில், பம்பப்படையூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் வேண்டுமென்று கேட்டார்கள். 30 சென்ட் புறம்போக்கு நிலம் அரசு வகைப்பாடுகளில் எந்த இடங்களில் கட்டடம் கட்ட முடியுமோ, அந்தமாதிரியான வகைப்பாடு உள்ள நிலத்தை உறுப்பினர் அவர்கள் அடையாளம்

காண்பித்தாலோ அல்லது விவசாயிகளே நேரடியாக முன்வந்து ஒரு இடத்தைக் காட்டி, அந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்ட அனுமதி அளிக்கிறேன் என்று அவர்களே கடிதம் கொடுத்தாலோ, அந்த இடத்தில் உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதியாகக் கட்டிக் கொடுக்கும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கட்டி முடிக்கப்பட்ட ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் இடிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோடிட்டுக் காட்டினார்கள். அது இன்னும் எங்களின் கவனத்திற்கு வரவில்லை. அதுபோன்ற ஒரு நிலை வராது. அப்படிப்பட்ட நிலை வந்தால், அதற்கு மாற்று நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**55—**

**கூட்டுறவுச் சங்கம்**

***12775—திரு. கே.வி. சேகரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியில் பட்டு மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதியில் பட்டு மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு போளூர் சட்டமன்ற



உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதியில் புதிய பட்டு மற்றும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்திட கோரிக்கை ஏதும் இதுநாள் வரை பெறப்படவில்லை. புதிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க முதன்மை அமைப்பாளரிடமிருந்து பிரேரணை ஏதும் வந்தால், பெறப்பட்டால், 1983 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகளுக்குட்பட்டு, புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

*முற்பகல் 10–45*

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைர விழா நாயகன், எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு கழக செயல் தலைவர் அண்ணன் அவர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) திருவண்ணாமலை சட்டப் பேரவை உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். போளூர் தொகுதியில், போளூர், குன்றத்தூர், மண்டகுளத்தூர், மாம்பட்டு, எழுவாம்பாடி, புதுப்பாளையம், பால்வார்த்துவென்றான், கீழ்ப்பட்டு, வடமாதிமங்கலம் போன்ற ஊராட்சிகளில் சுமார் 1,500 பட்டு நெசவுத் தறிகள் இயங்கி வருகின்றன. மேலும், இங்கே சுமார் 500 கைத்தறிகளும் இயங்கி வருகின்றன. போளூர் தொகுதியில் வாழும் பட்டு மற்றும் நெசவுத் தொழில் செய்யும் குடும்பங்களின் வாழ்வாதாரம் உயர்வதற்காக போளூரில் பட்டு மற்றும் கைத்தறி கூட்டுறவுச் சங்கம் அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து இதுவரை துறைக்கு எந்தப் பிரேரணையும் வரவில்லை. கோரிக்கை வருமாயின், கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூரில் நல்ல முறையில் இயங்கி வந்த பட்டு மற்றும் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கமானது 1987 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டு உள்ளது. பட்டு மற்றும் நெசவுத் தொழில் செய்து வருபவர்கள் மூலப்பொருட்களைக் கொள்முதல் செய்வதற்காக ஆரணி, காஞ்சிபுரம் போன்ற நகரங்களுக்குச் சென்று தனியாரிடமிருந்து பெற்று வருகின்றனர். தனியாரிடம் கொள்முதல் செய்வதால், நெசவாளர்களுக்கு ஊதியம் மிகவும் குறைவாகக் கிடைக்கிறது. ஆகவே, போளூரில் பட்டு மற்றும் கைத்தறி கூட்டுறவுச் சங்கம் அமைத்தால், இப்பகுதியில் பட்டு மற்றும் நெசவுத் தொழில் செய்து வருபவர்களுக்குத் தேவையான மூலப்பொருட்களை அரசு கூட்டுறவுச் சங்கத்தில் பெற்று, உற்பத்தி செய்து, அதே கூட்டுறவுச் சங்கத்தில் வழங்கி, அவர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள முடியும். மேலும் புதிய கூட்டுறவுச் சங்கம் அமைந்தால், அதில் பணிபுரிய 10–க்கும் மேற்பட்டவர்களுக்கு அரசுப் பணியும் கிடைக்கும். வரும் காலக்கட்டத்தில் பட்டுத் தொழிலும், நெசவுத் தொழிலும் நசுங்காமல் இருப்பதற்கும், அந்தக் குடும்பத்தினரின் வாழ்வாதாரம் உயர்வதற்கும் போளூரில் பட்டு உற்பத்தியாளர் மற்றும் கைத்தறி நெசவு கூட்டுறவுச் சங்கம் அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அரசைக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் 28 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதில் 3 சங்கங்கள் புதியவை. ஒரு சங்கம் செயல் இழந்திருக்கிறது. மீதி





இருக்கிற 24 சங்கங்களும் 100 சதவிகிதம் இலாபத்தில் இயங்குகிற சங்கங்களாக திருவண்ணாமலையில் இயங்கி வருகின்றன என்பது ஒரு மகிழ்ச்சியான செய்தி. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்படும், ஏற்கப்படும் என்று இரண்டு முறையும் தெரிவித்துவிட்டேன். மூன்றாவது முறையும் கோரிக்கை வைத்திருக்கின்றார். இப்போதும் அந்தக் கோரிக்கை ஏற்கப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**56—**

## வேளாண்மைக் கல்லூரி

***4251—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவக்க கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

**திருமதி மு. சந்திரபிரபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இருந்தாலும், மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்; இவர்போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்" என்ற உயர்ந்த எண்ணத்தோடும், (மேசையைத் தட்டும் ஒலி) உயர்ந்த

சிந்தனையோடும் வாழ்ந்தவர்கள் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும். 'மக்களால் நான்; மக்களுக்காகவே நான்' என்று தவ வாழ்வு வாழ்ந்து, "மக்கள் நலனே, தன் நலன்" என்று தமிழக மக்களின் வளர்ச்சிக்காக எண்ணற்ற நலத் திட்டங்களை வழங்கி, இந்த மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள் மனதைவிட்டு நீங்காமல் வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா என்னும் தெய்வத்தை முதற்கண் வணங்குகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் விட்டுச்சென்ற மக்கள் நலப் பணிகளையும், நலத் திட்டங்களையும் தொடர்ந்து மக்களுக்குச் செயல்படுத்தி நல்லாட்சி புரிந்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன்.

*முற்பகல் 10–50*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம் விவசாயம் நிறைந்த மாவட்டமாகும். குறிப்பாக, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, விவசாயத்தை மட்டுமே தொழிலாகச் செய்யும் மக்கள் நிறைந்த பகுதியாகும். வேளாண்மைக் கல்லூரிக்குச் சென்று படிக்க வேண்டுமென்றால், மதுரை அல்லது திருநெல்வேலிக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஒரு வேளாண்மைக் கல்லூரியை அமைத்து உதவிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஒரு வேளாண்மைக் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்றால், குறைந்தது 50 கோடி ரூபாய் நிதியும், 110 ஏக்கர் விவசாய நிலமும் ஒரு பட்டப் படிப்பிற்குத் தேவைப்படுகிறது. அதிகப்படியான ஒவ்வொரு பட்டப் படிப்பிற்கும் கூடுதலாக 50 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. மேலும், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதிக்கு அருகில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் உறுப்புக் கல்லூரிகளான வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மதுரை, தூத்துக்குடி





மாவட்டம், கிள்ளிகுளம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும், பல தனியார் இணைப்புக் கல்லூரிகளும், ஸ்ரீவில்லிபுத்தூருக்கு மிக அருகிலுள்ள வாசுதேவநல்லூரில் எஸ்.தங்கப்பழம் என்ற வேளாண்மைக் கல்லூரியும் மற்றும் தனியார் கல்லூரி ஒன்றும் அங்கே இயங்கி வருகின்றன. ஆகவே, அருகில் இருக்கின்ற அந்தக் கல்லூரிகளை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

**திருமதி மு. சந்திரபிரபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்றைக்கும் விவசாய மக்களின்மீது அக்கறை கொண்டுள்ள அரசு. ஆகவே, கல்லூரி மாணவர்கள் படிப்பதற்கு ஏதுவாக, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஒரு வேளாண்மை தொழில்நுட்பக் கல்லூரி அல்லது தோட்டக்கலைக் கல்லூரியையாவது அமைத்து உதவிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014–2015 ஆம் ஆண்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் புதியதாக 3 வேளாண்மைக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. விவசாயத்திற்கு மட்டுமல்ல; கல்வியையும், விவசாயத்தையும் தன்னுடைய இரு கண்களாகப் பாதுகாத்து, இன்றைக்குத் தமிழகத்தையே வாழ வைத்துக்கொண்டிருப்பவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் மிக்க பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான், ஒரே ஆண்டில் 3 அரசு வேளாண்மைக் கல்லூரிகள் நிறுவப்பட்டன. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் தஞ்சை மாவட்டம், ஈச்சங்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், வாழவச்சனூரில் 3 வேளாண்மைக் கல்லூரிகளை நிறுவினார்கள்.

[2017 ஜூன் 21

அதேபோல, உறுப்புக் கல்லூரிகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டு, அவை இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, தேவையான அளவிற்கு இன்றைக்கு வேளாண்மைக் கல்லூரிகள் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி புரிந்துவரும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களின் கனிவாக பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும். அவசியமிருப்பின், வாய்ப்பிருந்தால், உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்து கொடுப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**57—**

### வருவாய் வட்டம்

***7283—திரு. அ. மருதமுத்து:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், தலைவாசல் கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு வருவாய் வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ல் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களான பரப்பளவு, மக்கள்தொகை மற்றும் வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை பூர்த்தியாகாததால், தலைவாசல் கிராமத்தை மையமாகக் கொண்டு, புதிய வருவாய் வட்டம் உருவாக்க சாத்தியகூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2017 ஜூன் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.

**திரு. அ. மருதமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற தாரக மந்திரத்தைக் கொண்டு தவ வாழ்வு வாழ்ந்து, மக்களுக்காக வாழ்ந்து மறைந்த, ஏழையெளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், மாண்புமிகு அம்மா அவர்கள் மண்ணைவிட்டு மறைந்திருந்தாலும், மக்களின் மனதில் நீக்கமற வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். எங்கள் அரசியல் வழிகாட்டி, எங்கள் குல சாமி மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–55*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவாசல் ஊராட்சி என்பது ஊராட்சி ஒன்றியமாகும். தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்திலே 35 வருவாய்க் கிராமங்களும், ஒரு பேரூராட்சியும் உள்ளன. இவற்றில் 9 ஊராட்சிகளும், ஒரு பேரூராட்சியும் கெங்கவல்லி வட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. 26 பேரூராட்சிகள் ஆத்தூர் வட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. கெங்கவல்லி தொகுதி, மலையை சார்ந்த பகுதியாகும். ஊனத்தூர் என்ற கிராமம் ஆத்தூரிலிருந்து 40 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அதற்கு அப்பால் மலைப் பகுதியில் சில குக்கிராமங்கள் உள்ளன. அதைப்போல, மணிவிழுந்தான் மலைப் பகுதியிலும் சில குக்கிராமங்கள் உள்ளன. இது ஏழை விவசாய மக்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதியாகும். இன்னும் சொல்லப்போனால், தொகுதி சீரமைப்பிற்கு முன்பு தலைவாசல், சட்டமன்றத் தொகுதியாகத்தான் இருந்தது. தலைவாசலில்தான் சட்டமன்ற உறுப்பினர் கட்டடமும் உள்ளது. எனவே, தலைவாசல் ஊராட்சியை மையமாக வைத்து வருவாய் வட்டம் உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின் சேவையை மேம்படுத்தவும்; மக்களுக்கு விரைவான சேவையை அளிக்கவும்; வருவாய்த் துறையினை மக்கள் எளிதில் அணுகவும்; முன்மாதிரியான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்து வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். பொது மக்கள் வருவாய்த் துறையை எளிதில் அணுகிடும் வகையில், மக்கள் தொகை, வருவாய்க் கிராமங்கள் மற்றும் நிலப்பரப்பின் அடிப்படையில் வட்டங்கள் மற்றும் வருவாய்க் கோட்டங்கள் பிரிக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையிலே, கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைத்தால், பரப்பளவில் 250 சதுர கிலோ மீட்டருக்கு அதிகமாக இருக்கும். ஆனால், மக்கள் தொகை 62,125 நபர்கள் மட்டுமே இருப்பார்கள். தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வீரகனூர் குறுவட்டம், கெங்கவல்லி வட்டத்தில் வருவதால், அதிலிருந்து கிராமங்களைப் பிரித்தால் கெங்கவல்லி வட்டம் 23 கிராமங்களுடன் வட்டத்திற்கான தகுதி இழப்பிற்குட்படும். தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள காட்டுக்கோட்டை குறுவட்டம், ஆத்தூர் வட்டத்தில் வருவதால், அதிலிருந்து கிராமங்களைப் பிரித்தால், ஆத்தூர் வட்டம் 29 கிராமங்களுடன் வட்டத்திற்கான தகுதி இழப்பிற்குட்படும். எனவே, குறைந்தளவு 30 வருவாய் கிராமங்கள் அமையாததாலும், ஒரு இலட்சம் மக்கள் தொகைக்குக் குறைவாக இருப்பதினாலும், அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி, தலைவாசலை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.*

**திரு. அ. மருதமுத்து:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லியில் மொத்தம் 2,20,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். அதில் தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் இருக்கிறார்கள்; 26 ஊராட்சிகள் உள்ளன. காட்டுக்கோட்டை, மணிவிழுந்தான் மற்றும் சிறுவாச்சூர் ஆகிய 3 ஊராட்சிகளும், 2 வருவாய்க் கிராமங்களும் உள்ளடங்கிய ஊராட்சி ஒன்றியமாகும். இரண்டு கிராம நிருவாக அதிகாரிகள் பணிபுரிந்து வருகிறார்கள். அந்தப் பகுதியில் வருவாய் வட்டம் அமைப்பதற்குப் போதுமான இடவசதியும் உள்ளது. அங்கு, இரண்டு சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கி வட்டம் இருப்பது, அந்தப் பகுதி மக்களுக்கு சிரமமாக உள்ளது. அந்தச் சிரமத்தைப் போக்கும் வகையில் பொது மக்களின் நலன் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டுசென்று, அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு அமருகிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதிய வருவாய் வட்டம் அமைக்க வேண்டுமென்ற மக்கள் நலன் சார்ந்த ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மக்கள் நலன் சார்ந்த அரசுதான் வருவாய்த் துறை வரலாற்றிலே இதுவரை காணாத வகையிலே, ஏறத்தாழ 70 புதிய வட்டங்களை உருவாக்கித் தந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்து நியாயமான கருத்துதான். வருவாய்த் துறையின் வரையறைகள் எல்லாம் சமபாங்கான சமதளப் பகுதியிலே இருக்கக்கூடிய நிலங்களுக்கான வரையறைகள். ஆனால், மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே மலைப் பகுதியும் சேர்ந்து வருவதால், அதனுடைய ஆட்சி எல்லைகளை நிர்ணயம் செய்ய, இயற்கை எல்லைகளாக அமையும் ஆறுகள், குன்றுகள் மற்றும் காடுகள் ஆகியவற்றை முக்கிய காரணிகளாக வைக்கவேண்டும். தற்போது அந்த வரையறைகள் பூர்த்தியாகவில்லை என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் வைத்திருக்கிற கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் சார்ந்திருக்கும் மாவட்டமாக இருக்கிறது. தமிழகத்திற்கு இன்றைக்குப் புதிய, புதிய திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியிலே வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு*

முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு இது கொண்டு செல்லப்பட்டு, அவர் சார்ந்திருக்கக்கூடிய மாவட்ட மக்களுடைய நலன் சார்ந்த கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**58—**

### அடிப்படை வசதிகள்

***13275—திருமதி கு. உமா மகேஸ்வரி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதி, எட்டயபுரத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

*முற்பகல் 11—00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விளாத்திகுளம் தொகுதி, எட்டயபுரத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியினை மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திருமதி உமா மகேஸ்வரி அவர்கள் வினவியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டயபுரம் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 19 பேரூராட்சிகளில் ஒன்றாகும். இது தூத்துக்குடியிலிருந்து மதுரைக்குச் செல்லும் தேசிய நெடுஞ்





சாலையில், 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மகாகவி பாரதியார் பிறந்த ஊரான எட்டயபுரத்தில் பாரதியாரின் மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளது. இஸ்லாமியர் நூலான சீறாப்புராணம் இயற்றிய உமறுப்புலவரின் நினைவு இடமும் எட்டயபுரத்தில் அமைந்துள்ளது. எட்டயபுரத்தில் உள்ள பாரதியார் நினைவிடம் மற்றும் உமறுப்புலவரின் நினைவிடம் ஆகியவற்றிற்கு திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்ட உள்ளூர் பொது மக்கள் வார இறுதி நாட்களில் சென்று வருகின்றனர். வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவதில்லை. இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், கூடுதல் அடிப்படை வசதிகள் தேவைப்படும்பட்சத்தில், அதற்கான கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டு, சுற்றுலா ஆணையரின் பரிந்துரைக்குப்பின், சுற்றுலாத் துறையின் நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி அவர்கள்.

**திருமதி கு. உமா மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்காகவே வாழ்ந்து, அமைதி, வளம், வளர்ச்சி என்ற பாதையில் தமிழகத்தைக் கொண்டு சென்ற, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி, இதய தெய்வம் அம்மா அவர்களின் வழியில் மக்கள் நல ஆட்சியைச் சிறப்புடன் முன்னெடுத்து செல்லும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். விளாத்திகுளம் தொகுதி, எட்டயபுரத்தில் மகாகவி பாரதியார், சீறாப்புராணம் இயற்றிய உமறுப்புலவர், இசை மேதை முத்துசாமி தீட்சிதர் போன்ற பெரியோர்களின் மணிமண்டபங்களை, நினைவிடங்களை, சுற்றுலாத் தலங்களைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, மேம்படுத்திட அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

[2017 ஜூன் 21

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் சகோதரி திருமதி உமா மகேஸ்வரி அவர்கள் எட்டயபுரத்தில் உள்ள மகாகவி பாரதியார், உமறுப்புலவர், முத்துசாமி தீட்சிதர் ஆகியோரின் நினைவிடங்களைப் போற்றும் வகையில் தோரண நுழைவு வாயில் (Arch) அமைத்துத் தர வேண்டும் என்று கோரியுள்ளார்கள். அதற்கான கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து பெறப்பட்டு, சுற்றுலாத் துறை ஆணையரின் பரிந்துரைக்குப்பின் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதியாண்டில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி அவர்கள்.

**திருமதி கு. உமா மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. பாரதியார், உமறுப்புலவர் மற்றும் முத்துசாமி தீட்சிதர் ஆகியோர்களின் பெயர்களில் மூன்று தோரண வாயில்கள் அமைக்க ஆவன செய்யப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் (குறுக்கீடு) நீங்கள் எவ்வளவு நேரம் கேட்டாலும் வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) நேரம் இருக்கும்போது வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள்.

*வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**59—**

## தொழிற்பயிற்சி நிலையம்

***1752—திரு. பி. முருகன்:**

*மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2017 ஜூன் 21]

*(அ) வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகன் அவர்கள்.

**திரு. பி. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமைவாய்ந்த இந்த மாமன்றத்தில் நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த சட்டமன்ற வைரவிழா நாயகர், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எங்கள் செயல் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் தளபதியார் அவர்களுக்கும், எனது தொகுதி மக்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதியில் வேப்பனஹள்ளி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். இப்பகுதியில் அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் 15—க்கு மேற்பட்டவை உள்ளன. இப்பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் சுமார் 6,000 மாணவ, மாணவிகள் வருடந்தோறும் படித்து தேர்ச்சிபெற்று வருகின்றார்கள். தேர்ச்சிபெறும் மாணவர்கள் தொழிற்பயிற்சி பெறுவதற்காக, சுமார் 65 கி.மீ. தூரம் உள்ள ஓசூர் தொழிற்பயிற்சி நிலையத்திற்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. மேலும் மேற்படிப்பிற்கு 30 கி.மீ. தூரத்திலுள்ள கிருஷ்ணகிரிக்கு செல்ல வேண்டும். இப்பகுதியில் உள்ள ஏழை விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளர்களுடைய பிள்ளைகள், குறிப்பாக பெண் பிள்ளைகள் இவ்வளவு தூரம் சென்று படித்துவர சிரமப்படுகிறார்கள்.

[2017 ஜூன் 21

அதனால், மாணவ, மாணவிகள் தங்களது படிப்பைத் தொடர முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, மாணவர்களின் நலன் கருதி, வேப்பனஹள்ளியில் ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தினை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பனஹள்ளி அமைந்துள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஓசூரில் ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் 780 இருக்கைகளுடன் இயங்கி வருகிறது. இதில் 593 இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டு, 187 இடங்கள் காலியாக உள்ளன. மேலும், ஓசூரிலுள்ள இந்த அரசு தொழிற்பயிற்சி நிலையம், வேப்பனஹள்ளியிலிருந்து 30 கி.மீ. தொலைவில்தான் அமைந்துள்ளது. இதற்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, கிருஷ்ணகிரியில் உள்ள அந்த தொழிற்பயிற்சி நிலையம் 60 கி.மீ. தொலைவில் இருக்கின்றது என்று கூறினார்கள். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 5 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள், பர்கூர், ஓசூர், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மற்றும் கொன்னேரிப்பள்ளி ஆகிய இடங்களில், 839 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் 348 இடங்கள் காலியாக உள்ளன. எனவே, வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், கடந்த 5 ஆண்டு தி.மு.க—வின் ஆட்சியில், 4 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்தான் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், அம்மா அவர்களின் ஆறு ஆண்டு ஆட்சிக் காலத்தில் 23 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.



2017 ஜூன் 21]

**திரு. பி. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பனஹள்ளியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தர இயலாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலை, என் தொகுதி மக்களின் நலன் கருதி, மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி, சூலகிரி ஒன்றியத்தில், 100–க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. குறிப்பாக இத்தொழிற்சாலைகளில் பணிபுரியும் வேலையாட்கள் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் உள்ள உள்ளூர் மக்களுக்கும், உள்ளூரிலேயே படித்த இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பைத் தருவதற்கு இத்தொழில் நிறுவனங்கள் மறுத்து வருகின்றன. இத்தொழிற்சாலைகளுக்கு ஊராட்சி மூலமாகத்தான், சாலை வசதிகள், மின்சார வசதி மற்றும் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இத்தொழில் நிறுவனங்கள் என்ன காரணத்தினாலோ, உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதற்கு முன்வரவில்லை. நானும் அந்தத் தொழில் நிறுவனங்களுக்கு நேரடியாகச் சென்று ‘உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைத் தாருங்கள்’ என்று கேட்டபொழுதுகூட, அவர்கள் அந்தக் கோரிக்கையைத் தட்டிக் கழித்து விடுகிறார்கள். ஆகவே, இப்பிரச்சினையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு, உள்ளூர் மக்களுக்கும், படித்த இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பைப் பெற்றுத் தர முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்க மறுபரிசீலனை செய்யக் கோரியுள்ளார். அவசியம் ஏற்படுமாயின், புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்குவதற்கு முன், அந்தப் பகுதியிலுள்ள மாணவர்களுக்கிடையே உள்ள வரவேற்பு மற்றும் அங்குள்ள தொழில் நிறுவனங்களில் ஏற்படும் வேலைவாய்ப்புகள் ஆகியவற்றை ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, அவர்களது

[2017 ஜூன் 21

கோரிக்கை அம்மா அவர்களின் அரசால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேலைவாய்ப்பைப்பற்றிப் பேசினார்கள். அவ்வாறு பேசும்பொழுது, வேறு மாநிலங்களிலிருந்து வருபவர்கள் பணிக்கு அமர்த்தப்படுகிறார்கள் என்று கூறினார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் உள்ளூரில் இருக்கின்ற மக்களுக்குத்தான் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுகின்றது. அதற்குப்பிறகுதான், வெளி மாநிலங்களிலிருந்து வரும் மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**60—**

## பேருந்து வசதி

***6562—திரு. ஏ. இரத்தினசபாபதி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் நகரத்திலிருந்து ஒக்கூர் வழியாக ஏம்பல் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் நகரத்திலிருந்து ஒக்கூர் வழியாக ஏம்பல் வரை ஒரு பேருந்து நாளொன்றுக்கு ஒன்பது நடைகள் இயக்கப்படுகின்றன. இந்த இயக்க நடைகளின் சராசரி பயணிகளின் அடர்வு 51 சதவீதம் ஆகும். எனவே, தற்பொழுது உள்ள பேருந்து வசதிகளே போதுமானதாக



2017 ஜூன் 21]

உள்ளது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார்" என்ற பாடலுக்கு இலக்கணம் வகுத்து, வங்கக் கடல் ஓரம் துயில் கொண்டிருக்கின்ற தங்கத் தலைவியின் நினைவாலயம் நோக்கித் தொழுது, எனது கோரிக்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மற்றொரு கோரிக்கையையும் உங்களிடம் எடுத்துரைக்கின்றேன். பெரிய பேருந்துகள் செல்ல முடியாத சின்ன, சின்ன குக்கிராமங்களுக்கு பேருந்து வசதிகளை ஏற்படுத்திடும் வகையில், ஒவ்வொரு தொகுதியிலும் குறைந்தது ஐந்து சிற்றுந்துகளையாவது, ஆங்காங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் வழிகாட்டுதலோடு வழித்தடங்களை அமைத்து விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி நகர்ப்புறங்களில் சிற்றுந்துகள் உலா வருகின்றனவோ, அதேபோன்று கிராமப்புறங்களிலும் அந்தப் பசுமையான இலைகளோடு பவனி வந்தால், கிராமத்து மக்கள் மகிழ்ச்சியடைவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னையில் இருக்கக்கூடிய குறுகிய பகுதிகளுக்கெல்லாம் பேருந்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்திலே கொண்டுவந்த திட்டத்தினால், தற்போது சென்னையில் 200 சிறிய பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும், 100 சிறிய பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆணையிட்டிருக்கின்றது. ஆக

மொத்தம் சென்னையில் மட்டும் 100 சிறிய பேருந்துகளை இயக்குவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையான, அனைத்துப் பகுதிகளிலும் சிறிய பேருந்துகளை இயக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும் என்று சொன்ன மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டையில், மாநிலத்திலேயே மிகப் பெரிய ஒரு மருத்துவக் கல்லூரியை எங்களுக்கு வழங்கிய, பொன்மனத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில், இந்தச் சபையில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைக்கொண்டு வந்து சேர்த்த எங்களுடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மாபெரும் மருத்துவக் கல்லூரியை தங்களுடைய திருக்கரத்தால் தொடங்கி வைக்க வருகை தந்த, செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் சிம்மாசனத்தில் நிரந்தர முதல்வராக வீற்றிருக்கின்ற, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களது இதயம் நிறைந்த மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுக்கும் எனது நன்றியைக் காணிக்கையாக்கி அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]







## 2. தகவல் கோரல்

### (அ) ஆங்கிலத் தொலைக்காட்சியில் வந்த செய்தி தொடர்பாக ஆளுநரிடம் எதிர்க்கட்சிகள் அளித்த மனுமீது எடுக்கப்பட்ட நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

*முற்பகல் 11–15*

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்பிக்கை வாக்கெடுப்பு நேரத்தில் நடைபெற்ற பிரச்சினைகள் குறித்து ஒரு தனியார் தொலைக்காட்சி செய்தி வெளியிட்டது. அதுகுறித்து எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உள்ளிட்ட கட்சிகளைச் சார்ந்த நாங்கள் மேதகு ஆளுநர் அவர்களைச் சந்தித்து ஒரு மனு தந்தோம். அந்த மனு இன்றைக்கு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. பத்திரிகைச் செய்திக் குறிப்பு அதைத் தெளிவாக விளக்கி இருக்கிறது. எனவே, நான் அதுகுறித்து விளக்கமாக எடுத்துச் சொல்ல விரும்பவில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 273—ல், “பேரவைக்கு ஆளுநரிடமிருந்து வரும் செய்திகள் உரையின் மூலமாகவோ அல்லது பேரவைத் தலைவருக்கு எழுத்து மூலமாக அனுப்பப்பெறும் செய்தியாகவோ கிடைக்கப்பெறும்” எனக் கூறப்பட்டுள்ளது. மேலும், விதி 274—ல், “அரசமைப்புச் சட்டத்தின் 175—வது பிரிவின் உட்பிரிவு (2)—ன்கீழ், ஆளுநரிடமிருந்து பேரவைக்கான ஒரு செய்தி, பேரவைத் தலைவருக்குவரின், பேரவைத் தலைவர் அச்செய்தியை பேரவையில் படித்துக் காட்ட வேண்டும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 167—ல், ஆளுநருக்கு அளிக்கப்பட வேண்டிய தகவல்கள் குறித்து முதலமைச்சரின் கடமைகள் என்ன என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது எங்களுடைய மனுவினை தலைமைச் செயலாளருக்கு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அனுப்பி, அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார். எனவே, அதுகுறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களோ அல்லது முதலமைச்சர் அவர்களோ, இந்தப் பேரவையில் விளக்கிட வேண்டுமென்று கேட்டு, நான் இந்த அவையினுடைய கவனத்திற்கு அதைக் கொண்டுவர விரும்புகிறேன்.

[2017 ஜூன் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதற்கு, நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். பேரவைத் தலைவருக்கு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கையொப்பமிட்டு ஏதாவது தாக்கீது அனுப்பி வைத்தால், "பேரவைக்கு ஓர் அறிவிப்பு" என்று சொல்லி, நான் அறிவிக்க வேண்டுமென்றுதான் விதி 273 சொல்கிறது. அரசினர் சட்டமுன்வடிவுகள் மற்றும் மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளுதல் போன்ற இனங்கள்தான் இந்த விதி 273–ன்கீழ் வருமேயொழிய, மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய தனிச் செயலாளர் எனக்கு அனுப்பி இருக்கிற கடிதம் குறித்து நான் இந்தப் பேரவைக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. (குறுக்கீடு) எனக்கு ஒரு கடிதத்தை அனுப்பி வைத்திருக்கிறார்கள். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய செயலாளர் அவர்கள் அதை அனுப்பியிருக்கிறார்கள் என்றால், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் சொல்லித்தான் அதை அனுப்பியிருப்பார். இதில் இரண்டாவது மிகவும் clear–ஆக இருக்கிறது. "The CD and memorandum had been sent to the Hon'ble Speaker as well as our Chief Secretary". கடைசியாக என்ன எழுதியிருக்கிறார்கள் என்று கேட்டால், "for appropriate action". We want to know what kind of appropriate action has been taken by our Chief Secretary as well as the Hon'ble Speaker. You should furnish a memorandum in this House for our consideration.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. House–க்கு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய தனிச் செயலாளர்மூலம் எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது.

**திரு. துரைமுருகன்:** அதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதை இல்லையென்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. நேற்றுதான் அந்தக் கடிதம் வந்திருக்கிறது.



2017 ஜூன் 21]

**திரு. துரைமுருகன்:** நீங்கள் அதற்கு time எடுத்துக்கொள்ளுங்கள் Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இந்த அவைக்கு அந்த report–ஐ சொல்ல வேண்டியதில்லை. நான் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்குத்தான் சொல்ல வேண்டும்.

**திரு. துரைமுருகன்:** அதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நான் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைப்பேன்.

**திரு. துரைமுருகன்:** ஒரே ஒரு கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். அதாவது, what kind of appropriate action has been taken by the Chief Secretary? Chief Secretary என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது இந்த அவைக்குத் தெரிந்தாக வேண்டும். ஏனென்றால், இந்தச் செய்தி பத்திரிகையில் வந்துவிட்டது. அதேமாதிரி நீங்கள் எடுத்த நடவடிக்கை குறித்தும் சொல்லியாக வேண்டும். "அதை நான் சொல்ல மாட்டேன்" என்று சொன்னால், இது ஒன்றும் நம் வீட்டு இரகசியம் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது இரகசியம் இல்லை.

**THIRU. DURAIMURUGAN:** Once it has been published in the newspaper as well as sent to the Hon'ble Speaker, it is a public document. இது table–க்கும் வந்தாகிவிட்டது. It is a House property today.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அனுப்பிய கடிதம் என்னுடைய ஆய்விலே இருக்கிறது. தலைமைச் செயலாளருக்கு அனுப்பியதையும், என்னுடைய ஆய்வுக்கு தலைமைச் செயலாளர் அனுப்பி வைத்திருக்கிறார். (குறுக்கீடு) அதைச் சொல்ல வேண்டியதில்லை. (குறுக்கீடு) கண்டிப்பாக அதைச் சொல்ல வேண்டியதில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு ஆளுநர் அவர்கள் என்னிடம்தான் அதுகுறித்துக் கேட்டிருக்கிறாரேயொழிய, நான் இந்த அவைக்கு அதைச் சொல்ல வேண்டுமென்று அதில் சொல்லவில்லை. (குறுக்கீடு) அது strictly confidential. நான் அதை ஆய்வு செய்து, அதன்மீதான நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு உரிய விவரத்தை அனுப்பி வைப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வளவுதான்.

[2017 ஜூன் 21

**திரு. துரைமுருகன்:** விதியில் அவைக்குச் சொல்ல வேண்டுமென்று இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள், சட்டமுன்வடிவுகள் போன்றவற்றை இந்த அவையிலே எடுத்துக் கொள்வதற்கு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அனுப்பியிருக்கிற தாக்கீதுகள் குறித்துத்தான் நான் "பேரவைக்கு ஓர் அறிவிப்பு" என்று சொல்லி அறிவிப்பது முறை; அதுதான் வழக்கமாக இருக்கிறது. அவர் strictly confidential ஆக எழுதி அனுப்புகிற கடிதங்களை எல்லாம் நான் அவைக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை. மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு நான் உரிய விவரங்களை உரிய நேரத்தில் தெரிவிப்பேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

முற்பகல் 11–20

**திரு. மு.க. ஸ்டாலின்:** நீங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், சட்டமன்றப் பேரவை விதிகள் என்ற புத்தகத்தில், அத்தியாயம்–21–ல், "ஆளுநர் பேரவை இடையே செய்தித் தொடர்பு" என்ற தலைப்பின்கீழ் உள்ள விதி 273–ல், "பேரவைக்கு ஆளுநரிடம் இருந்து வரும் செய்திகள் உரையின் மூலமாகவோ அல்லது பேரவைத் தலைவருக்கு எழுத்து மூலமாக அனுப்பப்பெறும் செய்தியாகவோ கிடைக்கப்பெறும்" எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும், விதி 274–ல், "அரசமைப்புச் சட்டத்தின் 175–வது பிரிவின் உட்பிரிவு (2)–ன்கீழ், ஆளுநரிடம் இருந்து பேரவைக்கான ஒரு செய்தி, பேரவைத் தலைவருக்குவரின், பேரவைத் தலைவர் அச்செய்தியை பேரவையில் படித்துக் காட்ட வேண்டும். மேலும், அச்செய்தியில் கண்டுள்ளவற்றை நிறைவேற்றும்முகத்தான் அதில் குறிப்பிடப்பெற்றுள்ள பொருள்களின் ஆய்வுக்காகப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து அவசியமான பணிமுறைகள் கொடுத்தல் வேண்டும். அவ்வாறு இந்தப் பணிமுறைகளைக் கொடுக்கும்போது பேரவைத் தலைவருக்கு, அவசியமான அளவுக்கு விதிகளைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கவோ அல்லது விதிகளில் இருந்து மாறுபடவோ அதிகாரம் உண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது." அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், "பேரவைத் தலைவருக்கு வரும் செய்தியைப் பேரவையில் படித்துக்காட்ட வேண்டும்" என்றும் விதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அந்த விதியின்கீழ்தான்,



2017 ஜூன் 21] [திரு. மு.க.ஸ்டாலின்]

பேரவைத் தலைவரிடம் செய்தியைப் படித்துக்காட்ட வேண்டும் என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், அந்த விதி எதற்குப் பொருந்தும் என்று சொன்னால், மானியக் கோரிக்கைகளை எடுத்துக்கொள்வதற்கும், சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்வதற்கும், Money Bill–ஐ approval செய்வதற்கும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இசைவு அளிப்பார்கள். மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இசைவு அளித்த பிறகுதான், மேற்காணும் அலுவல்களை இந்தப் பேரவையில் எடுத்துக்கொள்வோம். அவற்றை நான் பேரவைக்கு அறிவிப்பது குறித்துதான் இந்த விதி சொல்கின்றதேதவிர, எனக்கு வரும் கடிதங்களைக் குறித்தெல்லாம் அல்ல. அதற்குத்தான் இந்த விதி பொருந்தும் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குக் நான் மீண்டும், மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் confuse செய்யாதீர்கள்; உட்காருங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மிகவும் confuse செய்கிறார். (குறுக்கீடு) இல்லை, argument–தான். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மிகவும் விவரமானவர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவர் எப்படியாவது ஏதாவது ஒரு வார்த்தையை என்னிடமிருந்து வாங்கிவிடலாம் என்று என்னிடம் விவாதம் செய்கின்றார். (குறுக்கீடு) உண்மையைச் சொல்கின்றேன். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய நோக்கம் எனக்குப் புரிகிறது. நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு நான் உரிய விளக்கங்களை அளித்துவிட்டேன். இந்த விளக்கம் போதுமானது என்று நினைக்கிறேன். இதற்குமேல் இதுகுறித்து விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) விளக்கம்தான் சொல்லிவிட்டேனே! (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் இதற்கு பதவுரை, பொழிப்புரை எழுதக்கூடாது. "தலைமைச் செயலாளர் அவர்கள் எனக்கு report அனுப்பிவிட்டார்கள்" என்று சொல்கிறீர்கள். அது என்ன report என்பது பற்றியாவது நீங்கள் சொல்ல வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவற்றையெல்லாம் நான் சொல்லக் கூடாது.

[2017 ஜூன் 21

**திரு. துரைமுருகன்:** ஏன் சொல்லக் கூடாது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்குத்தான் சொல்ல வேண்டும்.

**THIRU. DURAIMURUGAN:** We are entitled to ask about it. (குறுக்கீடுகள்) தலைமைச் செயலாளர் என்ன report அனுப்பியிருக்கிறார்கள்? The House is supreme. We are entitled to know everything that is going on in this House. (குறுக்கீடுகள்) The House is supreme. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதாவது, அரசமைப்புச் சட்டம் 175, பிரிவு 2–ல், "The Governor may send messages to the House or Houses of the Legislature of the State, whether with respect to a Bill then pending in the Legislature or otherwise, and a House to which any message is so sent shall with all convenient despatch consider any matter required by the message to be taken into consideration." (குறுக்கீடு) இதுபோன்ற நிகழ்வுகளில் வரும் report–ஐ எல்லாம் நான் அவையில் வைக்க முடியாது. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் இதுபோன்று raise செய்வதெல்லாம் முறையல்ல. மாண்புமிகு ஆளுநர் அவர்கள், அந்தக் கடிதத்தில், சட்டமுன்வடிவுகள் சம்பந்தமாகவோ, மசோதாக்கள் சம்பந்தமாகவோ, மானியக் கோரிக்கைகள் சம்பந்தமாகவே mention செய்திருந்தால், அதை இந்த அவைக்குச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை. நான் சொல்வேன். ஆனால், எனக்கு எழுதியிருக்கிற கடிதங்களையெல்லாம் நான் சொல்ல வேண்டியது இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு ஆளுநர் அவர்கள், நடவடிக்கை எடுக்கச் சொல்லி எனக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள், அவ்வளவுதான். அவற்றையெல்லாம் நான் இந்த அவைக்குச் சொல்ல வேண்டியது இல்லை; கட்டாயம் சொல்ல வேண்டியது இல்லை. (குறுக்கீடு)

*முற்பகல் 11–25*

திரு. துரைமுருகன், நீங்கள் எதையாவது ஒரு விதியை எடுத்து வைத்துக்கொண்டு பேசுவதிலே அர்த்தம் இல்லை. தெளிவாக Constitution–படி, எனக்கு ஏற்கெனவே வகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்ற விதிகளின்படி அவையை நடத்துகிறேன். (குறுக்கீடுகள்) Any message இல்லை அது. நடவடிக்கை எடுக்கச் சொல்லி அனுப்பியிருக்கிறார்; "தகுந்த நடவடிக்கை எடுங்கள்" என்று சொல்லியிருக்கிறார். அது message அல்ல. (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள்; திரும்பத் திரும்பச் சொல்கிறேன். கவர்னர் எனக்குத்தான் direction கொடுத்திருக்கிறாரேயொழிய, அவைக்கு அதுகுறித்து சொல்லச்சொல்லி எனக்கு direction கொடுக்கவே இல்லை. (குறுக்கீடுகள்) சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. (குறுக்கீடுகள்) நான் தெளிவாகச் சொல்கிறேன்; கவர்னர் எனக்குத்தான் direction கொடுத்து இருக்கிறார். (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுத்து, கவர்னருக்குச் சொல்வேன். கவர்னரிடம் இருந்து வேறு ஏதாவது தகவல்கள் இந்தப் பேரவைக்குச் சொல்லவேண்டுமென்று வந்தால், நிச்சயம் சொல்வேன். (குறுக்கீடுகள்) தகுந்த நடவடிக்கை எடுக்கச் சொல்லித்தான் என்னைக் கேட்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) உங்களுடைய விருப்பத்திற்குத் தகுந்தாற்போல நான் சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்) அந்தமாதிரி எனக்கு கவர்னரிடமிருந்து direction வரவில்லை. வந்தால் நான் கண்டிப்பாகச் சொல்லியிருப்பேன். அதுபோன்று எதுவும் வரவில்லை. (குறுக்கீடுகள்) இந்த விதி Bill சம்பந்தப்பட்டது. இந்த விதி, மசோதாக்கள் சம்பந்தப்பட்டது. (குறுக்கீடுகள்) நீங்கள் நிறைய படித்துவிட்டு வந்திருக்கிறீர்கள். நீங்கள் எதையாவது எடுத்து வைத்துக்கொண்டு பேசாதீர்கள். காலையிலே நீங்களும் எதிர்க்கட்சித் தலைவரும் பேசும்போதே ஏதோ வில்லங்கமாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என்று என்னால் உணர முடிந்தது. அதனால் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அதெல்லாம் செய்ய முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வேறு விஷயத்திற்குப் போகலாம். அடுத்த அஜெண்டாவிற்குப் போகலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கவர்னர் அனுப்பியது எல்லாம் open document கிடையாது. நீங்கள் கொடுத்த மனுவை என்னிடம் அனுப்பி, தக்க நடவடிக்கை எடுக்கச் சொல்லிக் கேட்டிருக்கிறார். உரிய நடவடிக்கையை எடுத்து நான் கவர்னருக்குத் தெரிவிப்பேன்; நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஒரு பெட்டிஷனை கவர்னரிடம் கொண்டுபோய்க் கொடுத்திருக்கிறீர்கள். கவர்னருக்குக் கொடுப்பதற்கு முன்பாக அதை Press–க்கும் கொடுத்திருக்கிறீர்கள். Press–ல் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. நீங்கள் கொடுத்த மனுவை எனக்கு அனுப்பி, தகுந்த நடவடிக்கை எடுக்கச் சொல்லித்தான் கவர்னர் எனக்கு direction கொடுத்திருக்கிறார்; அவ்வளவுதான். அதையெல்லாம் அவையில் விவாதிக்க முடியாது; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள், மேதகு ஆளுநர் அவர்கள், strictly confidential–ஆக எனக்கு எழுதி அனுப்பியிருக்கின்ற கடிதத்தையெல்லாம் இந்த

[பேரவைத் தலைவர்] [2017 ஜூன் 21

அவைக்கு நான் direct–ஆக சொல்ல வேண்டுமென்ற கட்டாயம் இல்லை; சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. நீங்கள் இந்த மாதிரியெல்லாம் என்னை வற்புறுத்தாதீர்கள். (குறுக்கீடுகள்) நான் கவர்னருக்குத்தான் சொல்ல வேண்டும். கவர்னர் என்னைக் கேட்டிருக்கிறார். கவர்னருக்கு நான் சொல்வேன். கவர்னர் அதற்குப்பிறகு, “பேரவைக்குச் சொல்லுங்கள்” என்று சொன்னால் நான் சொல்வேன். இப்பொழுதெல்லாம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்குத் தெரிவிக்கச்சொல்லி அவர் சொல்லவில்லை. நீங்களாகச் சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள். வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் இல்லை. வேறு சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேறு ஏதாவது சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் விவாதிக்க வேண்டுமென்று உங்களைக் கேட்கவில்லை. அது எங்களுக்குத் தெரியும். மரபின்படி, சட்டமன்ற விதியின்படிதான் நாங்கள் உங்களிடத்திலே கேட்கிறோம். எனவே இந்த அவையிலே நீங்கள் அதை எடுத்துச் சொல்ல வேண்டும். அவையிலே இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு அதுகுறித்து தெளிவுபடுத்த வேண்டும். ஆக, அந்த உணர்வோடுதான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறோம். ஆனால் அந்த விதியைக்கூட நீங்கள் பின்பற்றவில்லை என்று சொன்னால், நாங்கள் அதைக் கண்டித்து வெளிநடப்பு செய்கின்றோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.)

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் அந்தப் புத்தகத்தை வைத்து படித்துக் கொண்டிருக்கும்போதே, ஏதோ வில்லங்கம் இருக்கிறது என்று எனக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, உங்களுக்கு என்ன கஷ்டம்? உங்களுக்கு என்ன பிரச்சினை? உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு ஆளுநர் அவர்களைச்



2017 ஜூன் 21] [திரு. கரி. இராமசாமி]

சந்தித்து நாங்கள் ஒரு மனுவினைக் கொடுத்தோம். அந்த மனு குறித்து தங்களுக்குத் தகவல் வந்திருப்பதை நீங்கள் ஒப்புக்கொண்டு இருக்கிறீர்கள். அதன்மீது மாண்புமிகு ஆளுநர் அவர்கள் நடவடிக்கை எடுக்கச் சொன்னதாகவும் சொல்கிறீர்கள். “அதன்மீது நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்? என்ன தகவல் வந்திருக்கிறது?” என்று கேட்டதற்கு நீங்கள் அனுமதி மறுக்கிறீர்கள். அதனால் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆளுநரிடமிருந்து கடிதம் வந்துள்ளது என்பதை நான் மறுக்கவில்லை. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதுகுறித்துக் கேட்டார்; “கடிதம் வந்திருக்கிறது; அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது.” என்று சொல்லிவிட்டேன். மாண்புமிகு கவர்னர் அனுப்பியுள்ள கடிதத்தில் உள்ள முழு விவரங்களையும் நான் இந்த அவைக்குச் சொல்ல முடியாது. அதுபோன்ற direction–ஐ கவர்னர் எனக்குக் கொடுக்கவில்லை. எனவே, நீங்கள் அமைதியாக உட்காருங்கள்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.)

(இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவையிலிருந்து வெளியேறினார்.)

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### தமிழகத்தில் டெங்கு காய்ச்சலால் ஏற்பட்டுள்ள பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. தமிழகத்தின் சில பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு உள்ளதாக வந்துள்ள செய்தி குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அர. சக்கரபாணி, திரு. இ. பெரியசாமி, திரு. ஐ.பி. செந்தில்குமார், திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், திரு. எ. ராமர், டாக்டர் (திருமதி) பூங்கோதை, டாக்டர் ஆர்.டி. அரசு, டாக்டர் இரா. மாசிலாமணி, திரு. துரை. கி. சரவணன், திரு. பி. மூர்த்தி, திரு. சௌ. தங்கப்பாண்டியன், திரு. எஸ். ஆஸ்டின், திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், திரு. இராஜேந்திரன், திரு. டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி எண் 55–ன்கீழ் அறிவிப்பு

கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஓர் உறுப்பினர் கொண்டுவரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

**திரு. ஐ.பி. செந்தில்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 22–2–2017 முதல் 13–5–2017 வரை என்னுடைய பழனி சட்டமன்றத் தொகுதியிலும், அருகிலுள்ள ஒட்டன்சத்திரம் மற்றும் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிகளிலும் கிட்டத்தட்ட 14 பேருக்கும் மேற்பட்டோர் பன்றிக் காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்து இருக்கிறார்கள். குறிப்பாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், சுமதி என்கிற பெண் பன்றிக் காய்ச்சலாலும், முஹம்மது ஹனீஃபா, அனன்யா அன்பரசி, ஹர்ஷா, பிருந்தா, அனிதா, ஐயப்பன் என்கிற ஜீவா, கனிமொழி, மணிமேகலை; அதேபோல் தொப்பம்பட்டி ஒன்றியத்தில் கார்த்திகா, கோகுல்நாத் ஆகியோர் டெங்கு காய்ச்சலாலும் உயிரிழந்து இருக்கிறார்கள். குறிப்பாக, இந்தக் காய்ச்சல் அருகிலுள்ள கேரள மாநிலத்திலிருந்து இங்கே பரவியிருப்பதாக ஒரு தகவல் இருக்கிறது. எனவே, கேரள மாநிலத்தையொட்டி இருக்கக்கூடிய கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள சோதனைச் சாவடிகளில் நமது சுகாதாரத் துறை வாயிலாக ஒரு சிறப்புப் பிரிவினை நிறுவி, கேரளாவிலிருந்து நம்முடைய மாநிலத்திற்குள் வரக்கூடியவர்களை பரிசோதித்து, பிறகு இங்கே வருவதற்கு அனுமதிக்கும் சூழ்நிலையை உருவாக்கினால், இந்த நோய் பரவுவதைத் தடுக்கலாம் என்பது எங்களுடைய கருத்து.

அதேபோன்று, நம்முடைய மாநிலத்தில், எங்களுடைய பகுதியைப் பொறுத்தளவில், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் சார்பில், ஒவ்வொரு வட்டாரத்திலும், வட்டார வளர்ச்சி அலுவலர் தலைமையில் மண்டலங்களாகப் பிரித்து, குழுக்களை அமைத்து, அங்கிருக்கக்கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், கீழ்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டிகள் (syntex) ஆகியவற்றைத் தூய்மைப்படுத்தி, சுகாதாரமான குடிநீர் வழங்க வேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதேபோல் அங்கிருக்கக்கூடிய கழிவுநீர் ஓடைகளை அனுதினமும் பார்வையிட்டு, சுத்திகரிக்க வேண்டும். இந்த ஆண்டுகூட



காலியாகவுள்ள நிறைய பணியிடங்களை நிரப்ப இருப்பதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருப்பது நல்ல செய்திதான். அதை முழுமையாக செயல்படுத்தும்வகையில், ஒவ்வொரு ஊராட்சிகளிலும் தேவைக்கேற்ப பணியாளர்களை நியமித்திட வேண்டும். இதுபோன்ற பணிகளை நீங்கள் தொடர்வீர்களேயானால், இந்த நோய் பரவுவதைத் தடுப்பதற்கு ஒரு நல்ல சூழ்நிலை உருவாகும் என்பதனை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*முற்பகல் 11–35*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, பாதிக்கப்பட்ட இந்தக் குடும்பத்தினர் அனைவரும் மிகவும் ஏழ்மை நிலையில் இருக்கக்கூடியவர்கள். எனவே, இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு 5 இலட்சம் ரூபாய் நிதியுதவியினை வழங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. ஜெயராமகிருஷ்ணன், என்ன? உங்கள் கட்சி உறுப்பினர்தான் விளக்கமாகச் சொல்லிவிட்டாரே. நீங்கள் அரசின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு உட்காருங்கள். ஒருவருக்குத்தான் வாய்ப்புத் தர வேண்டும். நீங்கள் மிகவும் வற்புறுத்துவதால், வாய்ப்புக் கொடுக்கிறேன். இனிமேல் இப்படிக் கேட்காதீர்கள்; சொல்லுங்கள்.

***திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த பிப்ரவரி மாதம், பழனி சட்டமன்றத் தொகுதியில் தொடங்கிய டெங்கு காய்ச்சல், இப்பொழுது கடந்த இரண்டு மாதங்களாக மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சங்கராமநல்லூர் பேரூராட்சி, ருத்திராபாளையத்தில் தொடங்கி, அதைத் தொடர்ந்து கடத்தூர் ஊராட்சி, இப்பொழுது கடந்த ஒரு வார காலமாக உடுமலை ஊராட்சி ஒன்றியம், கல்லாபுரம் பகுதியில் வாழ்கின்ற மக்கள் டெங்கு காய்ச்சலால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டு, மிகவும் அச்சத்தோடு இருக்கின்றார்கள். இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நான் சொல்கின்ற பகுதி

[திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்] [2017 ஜூன் 21

அமராவதி ஆற்றுப்படுகையை ஒட்டியுள்ள பகுதி. தொடர்ந்து அந்த ஆற்றுப்படுகையில் உள்ள கிராமங்கள் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்படுவதால், ருத்திராபாளையம் பகுதியில் கடந்த மாதம், பழனி தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேல்சிகிச்சைக்காக கோயம்புத்தூர் செல்கின்ற வழியில் சுவாதி, தகப்பனார் பெயர் கருப்புசாமி, 9 வயதுள்ள ஒரு பெண் குழந்தையும், அதேபோல கடந்த 18–6–2017 ஞாயிற்றுக்கிழமை கல்லாபுரத்தைச் சார்ந்த அஸ்விகா, தகப்பனார் பெயர் காதர் அலி, 6 வயதுள்ள அந்தக் குழந்தையும் இறந்துள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராமகிருஷ்ணன், உரையை முடியுங்கள்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** இவர்கள் அனைவருமே அந்த டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டார்கள் என்பதை அந்த மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஆகவே, பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்களுக்கு 5 இலட்சம் ரூபாய் நிதியை அரசின் மூலமாகத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அந்தச் செய்தி அறிந்து நான் கல்லாபுரம் ஊராட்சிக்குச் சென்றபோது, அங்கே இருக்கின்ற சாக்கடைகள் பராமரிக்கப்படாமல் மிகவும் அச்சுறுத்தலாக இருந்தன. ஆகவே, உள்ளாட்சித் துறையின் மூலமாக அந்தச் சாக்கடைகளை உடனடியாகத் தூர்வார வேண்டும். அதேபோல, ஒரு விழிப்புணர்வை அந்த உள்ளாட்சித் துறையினுடைய பணியாளர்கள்மூலம் செய்யவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராமகிருஷ்ணன், உட்காருங்கள். உரையை முடியுங்கள்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** ஏனென்று சொன்னால், அந்தக் கிராமங்களில் அந்தப் பகுதிக்கு மீறிய வகையில் சாக்கடைகள் இருக்கின்றன. அதில் குளிர்பான பாட்டில்கள் மற்றும் பாலித்தீன் பைகள் உள்ளே இருப்பதால், கொசுக்கள் பரவுவதற்கான சூழ்நிலை அதிகமாக இருக்கின்றது. அதேபோல, நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக சாலையோரங்களில் கட்டப்படுகின்ற சாக்கடைகளை பராமரிப்பதற்கு ஏற்றவகையில், கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2017 ஜூன் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராமகிருஷ்ணன், போதும், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி அவர்கள் காலையிலே, "நான் இதே பொருள் குறித்து அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்" என்று சொன்னார். பிறகு, நான் அதனுடைய விவரத்தை எடுத்துப் பார்த்தேன். அவர் 20 ஆம் தேதி அன்று, பேரவை விதி 55–ன்கீழ் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார். அதில், "திடீரென்று மர்மக் காய்ச்சல் பரவுவதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து" விவாதிக்க வேண்டும் என்றுதான் கேட்டிருக்கிறார். இப்போது நாம் விவாதத்திற்கு எடுத்திருப்பது டெங்கு காய்ச்சல் குறித்து; அவர் கேட்டிருக்கிறது மர்மக் காய்ச்சல் குறித்து. அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது; பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன் (குறுக்கீடு) உட்காருங்கள். எங்களுடைய அலுவலகத்தில் தவறு ஒன்றும் நடக்காது; சரியாகத்தான் இருக்கும். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். (குறுக்கீடு) நான் சொல்கிறேன்; உட்காருங்கள். (குறுக்கீடு) அது வேறு; இது வேறு; உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்கும் சேர்த்தே பதில் சொல்லிவிடுகிறேன். பொதுவாகவே, பருவகால கட்டங்களிலே வருகின்ற Typhoid, Malaria, Leptospirosis, Dengue, Swine Flu போன்ற அனைத்துவிதமான தொற்று நோய்களையும் கட்டுப்படுத்துகின்றவகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறது.

அந்த அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்த தொடர் நடவடிக்கைகள், தொடர் கண்காணிப்பின் காரணமாகத்தான், அன்றாடம் Fever Surveillance Report–ஐப் பார்த்து, பணிகள் மேற்கொள்வதால்தான், இன்றைக்கு there is no dengue out–break. பொதுவாகவே, இதுபோன்ற காலகட்டங்களில் பெரிய out–break இருக்கும்; எல்லாப் பகுதிகளிலும் காய்ச்சல் வரும் நிகழ்வுகள் பரவலாக இருக்கும். ஆனால், இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, dengue out–break இல்லாமல், sporadic cases போன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

குறிப்பிட்டதைப்போல, அங்கொன்றும், இங்கொன்றுமாக இத்தகைய நோய்கள் உள்ளன.

குறிப்பாக, தூத்துக்குடி, திருப்பூர் பகுதி, hot spot என்று சொல்லக்கூடிய சங்கரன்கோவிலில் இருக்கக்கூடிய புளியங்குடி, கடையநல்லூர் பகுதிகள்; உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற பழனி, உடுமலைப்பேட்டை போன்ற இடங்களில் sporadic cases, காய்ச்சல் நிகழ்வுகள் குறித்த தகவல் வந்தது. அந்தத் தகவலின் அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைந்து செயலாற்றி, திருப்பூர் பகுதிக்குத் தனியாகவும், பழனி பகுதிக்குத் தனியாகவும் கூடுதல் இயக்குநர்களை அனுப்பி வைத்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்ளாட்சித் துறை சம்பந்தமாகவும் சில கருத்துக்களைத் தெரிவித்தார். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் மிகுந்த ஒத்துழைப்பு அளித்தார். அனைத்துத் துறைகளும் இணைந்து, multi dimension–ல் அனைத்துப் பணிகளையும் உள்ளடக்கி, வேகமாகப் பணியாற்றியதன் காரணமாகத்தான், அந்தப் பகுதிகளில் தற்போது நிலைமை முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரை இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவிற்கு ELISA Centres கிடையாது. தமிழகத்தில்தான் 90 ELISA Centres ஏற்படுத்தப்பட்டுள்ளன. அங்கு 24 மணி நேரத்திற்குள்ளாகவே, அது என்ன காய்ச்சல் என்பதை முழுமையாகக் கண்டுபிடித்துவிடுவார்கள். மரியாதைக்குரிய செங்கம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்கூட மர்மக் காய்ச்சல் என்று சொன்னார்கள். இப்போது மர்மக் காய்ச்சல் என்கின்ற அந்த வார்த்தைக்கே இடமில்லை. காய்ச்சல் வந்த உடனேயே அரசு மருத்துவமனைக்குச் சென்றால், உடனடியாக diagnose செய்து, அது என்ன காய்ச்சல் என்பதை 24 மணி நேரத்திற்குள்ளாக கண்டுபிடிக்கக்கூடிய அளவிற்கு அனைத்து வசதிகளும் உள்ளன. அதனால்தான், தடுப்பு நடவடிக்கைகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தேவையான அறிவுரைகள் வழங்குதல், உள்ளாட்சித் துறையின் மூலமாக கூடுதலாக மஸ்தூர் பணியாளர்கள் நியமனம் போன்ற பணிகளைச் செய்தாலும்கூட, இன்னொருபுறம் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில் குறும்படங்கள் எடுத்தல், பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து விழிப்புணர்வுப் பேரணிகள் நடத்துதல் போன்ற பணிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வேகமாகச் செய்து வருகிறது.





இன்னும் ஒரே ஒரு தகவலை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். தமிழ்நாடு முழுவதற்குமென State level–ல் ஒரு Control Room அமைத்து, DPH–பொது சுகாதார இயக்குநர் தலைமையில் 1,226 மருத்துவமனைகளிலுள்ள Laboratory–களிலிருந்து தினமும் Fever Surveillance Report வாங்கி, ஏதாவது positive case வருகிறதா என்று கண்காணிக்கப்படுகிறது.

ஒரே ஒரு கூடுதல் தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கேரளாவில் இதுபோன்ற காய்ச்சல் இருப்பதாகச் சொன்னார்கள். Indian Union Ministry அறிவித்த புள்ளிவிவரங்களின்படி, கேரள மாநிலத்தில் இந்த ஆண்டு அதிகமான டெங்கு காய்ச்சல் இருக்கிறது என்பது உண்மை. கேரள மாநிலம் தமிழ்நாட்டின் பக்கத்து மாநிலமாக இருப்பதால், அதற்கு அருகில் இருக்கக்கூடிய தேனி மாவட்டம், உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய பழனி போன்ற பகுதிகளில் இந்த நோய் மிகப் பெரிய சவாலாக இருக்கிறது. எனினும், பக்கத்து மாநிலங்களில் இந்நோய் அதிகமாக இருந்தாலும், entry point–ல் அமைக்கப்பட்டுள்ள check post–களில் முழுமையாக screening test போன்ற பரிசோதனைகள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த மாமன்றத்தின் மூலமாக பொது மக்களுக்கு விடுக்கும் ஓர் அன்பான வேண்டுகோள் என்னவென்றால், காய்ச்சல் வந்தவுடன், தயவுசெய்து நீங்கள் தாமதப்படுத்த வேண்டாம்; தள்ளியும் போட வேண்டாம். உடனடியாக அரசு மருத்துவமனைக்குச் சென்று, உரிய சிகிச்சையை WHO Protocol மூலமாகப் பெறுகின்றபோது, நிலைமையை முழுவதுமாகக் கட்டுக்குள் வைக்க முடியும்; உயிர்ச்சேதம் ஏற்படாதவண்ணம் நிச்சயமாக நம்மால் முழுமையாக நிலைநிறுத்த முடியும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அரசு தொடர் நடவடிக்கையையும், கண்காணிப்பு நடவடிக்கையையும் எடுத்து வருகிறது. எனவே, பதட்டம் அடையத்

தேவையில்லை என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மூன்று உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) சென்னை காசிமேடு பகுதியில் மீன் விற்பனை இடம் மாற்றப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, என்னவென்று சொல்லுங்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டும். நான் தகவல் கோரல் என்ற முறையில்தான் உங்களைப் பேச அழைத்திருக்கிறேன். ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

***திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் பிடித் தடைக் காலம் 45 நாட்களிலிருந்து 60 நாட்களாக நீட்டிக்கப்பட்ட நிலையில், தடைக் காலம் முடிந்து, கடந்த ஜூன் மாதம் 15 ஆம் தேதியிலிருந்து தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றுகொண்டிருக்கின்றார்கள். இதில் குறிப்பாக, சென்னை மாநகரில் இருக்கக்கூடிய காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் மீன் பிடித்து வருகின்ற மீனவர்கள், தாங்கள் பிடித்து வந்த மீன்களை ஏற்கெனவே விற்பனை செய்து வந்த இடத்தில், இப்பொழுது விற்பனை செய்யக் கூடாது என்றும், புதிய இடத்தில்தான் விற்பனை செய்ய வேண்டும் என்றும் மீன் வளத் துறை அதிகாரிகள் அறிவுறுத்துகின்றனர். இந்தச் சூழ்நிலையில், மீனவத் தொழிலாளர்கள், மீனவர்கள், மீன் விற்பனை செய்கின்ற பெண்கள் உட்பட அனைவரையும் பழைய இடத்திலேயே மீன் விற்பனை செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதோடு, பழைய இடத்திலேயே இன்னும் சிலர் மீன்களை விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இதுபோன்று இரண்டு இடங்களிலும் பிரித்து மீன்களை விற்பனை செய்கின்ற காரணத்தினால், மீன்களுக்கு உரிய விலை கிடைக்காமல் மீனவர்கள் மிகுந்த வேதனைக்குள்ளாகியிருக்கின்றார்கள்.

*முற்பகல் 11–45*

அவையில் உள்ள அனைவருக்கும் தெரியும். ஏற்கெனவே, ஜனவரி 28 ஆம் தேதி, நம்முடைய காமராஜர் துறைமுகத்திலிருந்து





வெளியே சென்ற கப்பலும், உள்ளே வந்த கப்பலும் மோதிக் கொண்டதில், கடலிலே கச்சா எண்ணெய் கலந்து, 3 மாத காலமாகத் தொடர்ந்து மீனவர்கள் வாழ்வுரிமையை இழந்து, வாடிக் கொண்டிருக்கின்ற வேளையிலே, இந்த மீன்பிடித் தடைக் காலமும் 45 நாட்களிலிருந்து 60 நாட்களாக நீட்டித்த நிலையில், மீன் விற்பனை செய்வதிலே இருக்கக்கூடிய பிரச்சினைகளை சுமுகமான முறையிலே தீர்த்து வைத்திட, துறையினுடைய அமைச்சரும், துறையினுடைய அதிகாரிகளும் உடனடியாக இதில் தலையிட்டு, பேசித் தீர்த்து ஒரு நல்ல முடிவை எட்டி, மீனவர்களுடைய வாழ்க்கைக்கு வழி வகுத்திட வேண்டுமென்று உங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள் இன்று காலையில்தான் தங்களிடத்திலே இதுகுறித்த கவன ஈர்ப்பு அறிவிப்பினைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்களுக்கு, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எந்த அளவிற்குக் கரிசனம் காட்டியிருக்கிறார் என்பதை உணர்ந்து. . . (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நீங்களும் அதே அளவுக்குக் கரிசனமாக அவருக்குப் பதில் சொல்லுங்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் திரு. சாமி அவர்கள்மீது மிகுந்த அன்பு வைத்திருக்கின்றார்கள். எனவே, அதற்கேற்ற வகையிலே பேரவையின் நடவடிக்கைகள் இருக்கும் என்ற அந்த நம்பிக்கையோடு நான் பதிலளிக்க விரும்புகிறேன். இந்த விவகாரம் உயர் நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தினாலே, நான் அந்த நீதிமன்ற விஷயத்திற்குள் போக விரும்பவில்லை. இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு பதில் அளிக்கின்ற வகையில் ஒரு சில விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய மீன்பிடித் துறைமுகத்தை பொறுத்தவரையில், ஆசியாவிலேயே

[திரு. டி. ஜெயக்குமார்] [2017 ஜூன் 21

ஒரு பெரிய மீன்பிடித் துறைமுகமாக, நவீன மீன்பிடித் துறைமுகமாக உருவாக்க வேண்டும்; அப்படி இருக்கவேண்டும் என்ற முனைப்போடுதான், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 100 கோடி ரூபாய் அளவிற்கு இந்தத் துறைமுகத்திற்கு நிதியை ஒதுக்கீடு செய்ய உத்தரவிட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதிலே 12 கோடி ரூபாய் அளவிற்கான ஏலக் கூடம், அதாவது Auction Hall, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது. அப்படி திறந்து வைக்கப்பட்ட அந்த ஏலக் கூடத்தில் இப்போது மீன்களை விற்பதுதான் நியாயம். ஏனென்று சொன்னால், தற்போது மீன் விற்கின்ற இடத்தில் எந்தவித வசதியும் இல்லை. இந்தச் சூழ்நிலையில், புதிய இடத்தில் cold storage, CCTV camera, விளக்கு வசதி உட்பட எல்லா வசதிகளும் உள்ளன. இப்போது இருக்கின்ற ஏலம் விடும் கூடத்தைவிட, புதிதாகக் கட்டப்பட்டு இருக்கின்ற Auction Hall 2½ மடங்கு அளவிற்கு விஸ்தீரணமான இடம். பழைய இடத்திலிருந்து சுமார் 50 மீட்டர் தொலைவில்தான் இருக்கிறது. ஏதோ புதிய மீன் விற்பனைக் கூடம் பழைய இடத்திலிருந்து 1 கி.மீ., 2 கி.மீ., தள்ளி அமைக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால், அதிலே ஒரு நியாயம் இருக்கிறது. இப்போதிருக்கின்ற இடத்திலிருந்து 50 மீட்டர் அளவிற்கு, எல்லா வசதிகளுடன் இருக்கிறது. 2½ மடங்கு கூடுதலான இடம், cold storage வசதி, CCTV camera, பாதுகாப்பு வசதி என எல்லா வசதிகளும் இருக்கின்றன. எந்தவித அச்சமும் இல்லை. எனவே அங்கே மீன் விற்பதற்கு ஏன் இந்தத் தயக்கம் என்பதே தெரியவில்லை. சிலரின் சுயநலத்திற்காக நிச்சயம் அரசு பணியாது. பழைய மீன் விற்பனை இடத்தினை European Economic Community–ஐ (EEC) சார்ந்தவர்களெல்லாம் வந்து பார்த்துவிட்டு, மிகவும் வருத்தப்பட்டுச் சென்றார்கள். ஒரு மீன்பிடித் துறைமுகம் என்பது நல்லதொரு சுகாதாரமான சூழ்நிலையில் இருக்க வேண்டும். அப்போதுதான் உங்கள் மீன்களையெல்லாம் நாங்கள் வாங்குவோம் என்று அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். எனவே, மீனவர்களால் பிடிக்கப்படுகின்ற மீன்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. விலை கிடைப்பதோடு மட்டுமல்ல; மீனவர்களுடைய வாழ்வாதாரம் மேம்பாடு அடைய வேண்டும் என்ற அந்த இரண்டு எண்ணத்தோடுதான், இந்த



2017 ஜூன் 21] [திரு. டி. ஜெயக்குமார்]

இலட்சியத்தோடுதான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே யாருக்கும் எந்தவித பாதிப்பும் நிச்சயமாக வராது என்கிற அந்தக் கருத்தைத் தெரிவித்து, நம்முடைய பத்திரிகைத் துறையைச் சார்ந்த நண்பர்களைக்கூட நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது Auction Hall இருக்கிற அந்த இடத்தை நீங்கள்கூட போய்ப் பாருங்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் திறந்து வைத்திருக்கின்ற அந்த Auction Hall–ல் எந்த அளவிற்கு, CCTV camera, cold storage போன்ற வசதிகள் இருக்கின்றன என்பதைப் பாருங்கள். அதேபோன்று, தற்போது ஏலம் விடுகின்ற இடத்தையும் பாருங்கள்; ஒப்பிட்டுப் பாருங்கள். அதன்பிறகு நீங்கள் நல்ல கருத்தைக் கூறுங்கள். அதற்கு ஏற்றவகையில் அரசு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமி, அவ்வளவுதான்; நீங்கள் உட்காருங்கள்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

**(இ கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை**

} தொடர்ச்சி

– – – –

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017–2018 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 20–6–2017 அன்று மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதத்தின் தொடர்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

[2017 ஜூன் 21

முற்பகல் 11—50

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்ததற்காக முதலிலே உங்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய வைர விழா நாயகன், எங்களுக்கெல்லாம் தகப்பனாக இருக்கின்ற மரியாதைக்குரிய எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களை முதலிலே வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவையில் ஜனநாயக மாண்புகளைக் கட்டிக் காப்பாற்றுவதற்காகப் போராடிக் கொண்டிருக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்காலத்திலே தமிழகத்தையும், எங்களையும் வழி நடத்தவிருக்கின்ற மரியாதைக்குரிய எங்களுடைய அருமை அண்ணன் தளபதி அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1977 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து எனக்கு வாக்களித்தும், எட்டாவது முறையாக என்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அனுப்பிய சாத்தூர், அருப்புக்கோட்டை தொகுதி மக்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, எனது வெற்றிக்காக தேர்தல் நேரத்தில் பணியாற்றிய எங்களுடைய கழக நண்பர்களுக்கும், தோழமைக் கட்சிகளான காங்கிரஸ் மற்றும் ஏனைய கட்சிகளைச் சார்ந்த சகோதர சகோதரிகளுக்கும் என்னுடைய வணக்கத்தினை முதலிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை என்பது மிக முக்கியமான துறை. எப்படி நாடாளுமன்றம் இருக்கிறதோ, எப்படி சட்டமன்றம் இருக்கிறதோ, அதேபோல ஊராட்சி மன்றங்களும் முக்கியமானவை. ஓர் அரசாங்கம் செயல்படுகிறதா, இல்லையா என்பதை எப்படிப் பார்க்க முடியும்? ஊராட்சிகளின் செயல்பாடுகளை வைத்துத்தான் அரசாங்கம் செயல்பட்டதாகவே தெரியும். சாதாரணமாக பெரிய அணைகளைக் கட்டலாம்; பெரிய பாலங்களைக் கட்டலாம்.



2017 ஜூன் 21] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

அதைக் கட்டுகின்ற இடத்தினைப் பார்க்கின்ற நேரத்தில் மட்டும்தான், அது பிறருடைய கண்களுக்குத் தெரியும். ஆனால், இந்த ஊராட்சி நிருவாகம் என்பது, அன்றாடம் நம்முடன் சேர்ந்த நிருவாகம். காலையிலே குப்பைகளை அள்ளுவதிலிருந்து, வாறுகால் தள்ளுவதிலிருந்து, தெரு விளக்குகள் போடுவதிலிருந்து, இவ்வாறு அன்றாடம் நம்முடைய எல்லாப் பிரச்சினைகளுக்கும், இன்றைக்கு நம்முடன் இணைந்து இருக்கின்ற ஒரு துறை, இந்த ஊராட்சித் துறை ஆகும். ஆகவே, இந்த ஊராட்சித் துறையை இப்போது பார்த்தால், கடந்த சுமார் 9 மாத காலமாக எந்தவிதமான செயல்பாடுகளும் இல்லாமல் இருக்கின்றன. அரசாங்கம் செயல்படுகிறது என்று சொன்னால்கூட, அங்கே வேலை செய்வதற்கு ஆள் வேண்டும். உங்களுக்குத் தெரியாதது அல்ல. நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்; இங்கேயிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும். தற்போது ஊராட்சி ஒன்றியங்களிலே B.D.O. இருக்கிறார்; Commissioner இருக்கிறார். நகராட்சியிலே Commissioner இருக்கிறார்; ஆனால், முன்பெல்லாம் பார்த்தால், ஊராட்சி ஒன்றியங்களிலே 5,000 ஓட்டுகளுக்கான கவுன்சிலர்கள் இருப்பார்கள்; 50,000 ஓட்டுகளுக்கான மாவட்ட கவுன்சிலர்கள் இருப்பார்கள்; கிராம ஊராட்சிகளிலே ஊராட்சித் தலைவர்கள் இருப்பார்கள்; Ward Members இருப்பார்கள். அந்தந்தப் பகுதிகளிலே அடிகுழாய் repair என்றாலும், தெரு விளக்குகள் பழுது என்றாலும் சரி, வாறுகால் தள்ளுகின்ற வேலையாக இருந்தாலும் சரி, அவர்கள்அந்தந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே, நகராட்சி அலுவலகத்திலே போய் சொல்லி, அந்த வேலைகளையெல்லாம் செய்து கொடுத்தார்கள். ஆனால், இப்போது அவர்களெல்லாம் இல்லாத காரணத்தினால், அந்த வேலைகள் எல்லாம் முடங்கிக் கிடக்கின்றன.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த வேலைகளெல்லாம் நடக்கின்றன என்று சொல்லலாம். ஆனால், நாங்கள் அன்றாடம் கிராமங்களுக்கு நல்லவை, கெட்டவைகளுக்கு செல்கின்ற நேரத்தில், “எங்கள் தெருவிலே வாறுகால் தள்ளவில்லை; எங்கள் தெருவிலே குப்பைகள் அள்ளவில்லை; எங்கள் தெருவிலே தெரு விளக்குகள் எரியவில்லை.” என்று பொது மக்கள் அன்றாடம் எங்களிடம் மாத்திரமல்ல; மாண்புமிகு அமைச்சர்கள் செல்கின்றபோதும் அந்தப் பிரச்சினைகள் குறித்துப் புகார் சொல்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர்கள் செல்கின்றபோதும், உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் செல்கின்றபோதும், இந்தப்

பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு என்ன? தேர்தல் நடந்தால் மட்டும்தான் தீர்வு கிடைக்கும். தேர்தல் நடத்துவதற்கு வழியிருக்கிறதா என்று சொன்னால், கடந்த 9 மாத காலமாக தேர்தல் நடத்துவதற்கு வழியில்லை. நீங்கள், நீதிமன்றம் சொல்வதையும் கேட்கவில்லை. நீதிமன்றத்திற்குச் சென்று வாய்தா வாங்கிக் கொண்டேயிருக்கிறீர்கள். உங்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தை நான் படித்துப் பார்த்தேன். ஊரக வளர்ச்சித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்த்தால், மிகவும் நன்றாக இருக்கிறது. அதிலே 12 ஆம் பக்கத்தில், மகாத்மா காந்தியடிகள் ஊராட்சி நிருவாகம் எப்படி இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதாக சில வாக்கியங்களை நீங்கள் quote பண்ணிக் காட்டியிருக்கிறீர்கள். 12 மற்றும் 13 ஆம் பக்கங்களில், சோழர் காலத்திலேயே ஊராட்சிகளில் இந்தத் தேர்தல் முறை எப்படி இருந்தது என்பதையும் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இன்னொன்றையும் சொல்லியிருக்கிறீர்கள்; சோழர் காலத்திலே இரகசிய வாக்கெடுப்பு இருந்தது என்று அதையும் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், சொல்லிய எதையுமே நீங்கள் செய்யவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ** இங்கே சோழர் கால ராஜா—நம்ம ராஜா சொன்னதையும் நீங்கள் செய்யமாட்டேன் என்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் புரட்சித் தலைவர் காலத்திலும், அம்மா அவர்களின் காலத்திலும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். என்னுடைய தந்தையுடன் எல்லாம் அரசியல் செய்துள்ளார். எனவே, நன்றாக விவரம் தெரிந்த அவர், ** அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





முற்பகல் 11–55

**மாண்புமிகு திரு. எஸ். பி. வேலுமணி:** அதுபற்றி உள்ளே செல்லாமல் நான் மேலோட்டமாகச் சொல்கிறேன். நேற்றையதினமே அதுபற்றி நிறைய விவாதித்தாகிவிட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, உள்ளாட்சித் தேர்தலை குறித்த காலத்தில் நடத்தி முடிக்க வேண்டுமென்ற நோக்கத்தில், குறுகிய காலத்தில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீடுகூட 50 சதவிகிதமாக அம்மா அவர்களால் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை அடிப்படையில் ஆதி திராவிடர், பழங்குடியின பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், தேர்தலைத் தாமதப்படுத்தும் நோக்கில், வார்டுகள் வரையறை செய்யப்பட வேண்டும் என்பது போன்ற பல்வேறு காரணங்களைத் தெரிவித்து, ஜுலை 2016–ல் தி.மு.க.–தான் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. அவ்வழக்கை 21–9–2016 அன்று தள்ளுபடி செய்த உயர் நீதிமன்றம், உள்ளாட்சித் தேர்தலை உரிய காலத்தில் நடத்தி முடிக்க அனுமதி அளித்தது. இதை எதிர்த்து தி.மு.க.–வினுடைய அமைப்புச் செயலர் திரு. ஆர்.எஸ். பாரதி அவர்கள்தான் வழக்கு தொடர்ந்தார் என்பது உறுப்பினருக்குத் தெரியும். ஆக, இதை எதிர்த்து தி.மு.க. உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. மேல்முறையீட்டு வழக்கு 12–7–2017 அன்று விசாரணைக்கு வரவுள்ளது. 24–10–2016 அன்று உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் பதவிக் காலம் நிறைவடையும் நிலையில், அதற்கு முன்பாகவே தேர்தலை நடத்தி முடிக்கும் வகையில் மாநிலத் தேர்தல் ஆணையம் 26–9–2016 அன்று தேர்தல் அறிவிக்கையை வெளியிட்டது. மாநிலத் தேர்தல் ஆணையம் என்பது ஒரு independent body. அது உங்களுக்குத் தெரியும். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்திருக்கிறார். ஆகவே, தேர்தலைத் தாமதப்படுத்த வேண்டுமென்கிற ஒரே நோக்கில் தி.மு.க. மீண்டும் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, இம்முறை பழங்குடியினருக்குப் போதிய அளவில் இட ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று (குறுக்கீடுகள்) நான் முடித்ததற்குப்பிறகு பேசுங்கள். இட ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்ற காரணம் கூறப்பட்டது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பேசி முடிக்கட்டும். உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** முந்தைய தேர்தலைக் காட்டிலும், 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை அடிப்படையில் பழங்குடியினருக்கு அதிகமான பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், முதல்முறையாக மாவட்ட ஊராட்சித் தலைவர் பதவி நீலகிரி மாவட்டத்திலுள்ள பழங்குடியினத்தவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற அரசு தரப்பு வாதங்களை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம், இது தொடர்பாக வெளியிடப்பட்ட அரசாணையை உறுதி செய்தது. ஆனால், தேர்தல் அறிவிக்கை முறையாகச் செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டு, 4—10—2016 அன்று தேர்தல் அறிவிக்கையை உயர் நீதிமன்றம் இரத்து செய்தது. இந்த உத்தரவை எதிர்த்து மாநிலத் தேர்தல் ஆணையம் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கு, தற்போது உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அவ்வழக்கு 14—7—2017 அன்று விசாரணைக்கு வரவுள்ளது. இதைத் தவிர, உள்ளாட்சித் தேர்தல் குறித்த பொது நல வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. எனவே, உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், அத்தீர்ப்புகளின் அடிப்படையிலே தேர்தல் நடத்தப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களையே குறை சொல்லாமல் நீங்கள் வேகமாகத் தேர்தலை நடத்துங்கள். உங்களுக்குத்தான் நல்ல பெயர் வரும். தேர்தலை நடத்தினால் யாருக்கு நல்ல பெயர் வரும்? இந்த ஆட்சியின் கீழே உள்ளாட்சி அமைப்புகள் இயங்கினால், அப்போது இந்த ஆட்சி இயங்குகிறது என்று ஒப்புக்கொள்வோம். நாங்கள் இப்போது இந்த ஆட்சி இயங்கவில்லை என்று நாங்கள் சொன்னால், நீங்கள் எங்களோடு சண்டைக்கு வந்துவிடுவீர்கள். "ஆட்சி இயங்குகிறதே; இயங்கவில்லை என்று ஏன் நீங்கள் சொல்கிறீர்கள்?" என்று எங்களிடம் சண்டைக்கு வந்துவிடுவீர்கள். ஆட்சி இயங்க வேண்டுமென்று சொன்னால், கீழே இருக்கிற நிருவாகம் இயங்கினால் மட்டும்தான் ஆட்சி இயங்கும்.

அதேபோன்று, உங்கள்மேல் உள்ள நல்ல அபிப்பிராயத்தின் காரணமாக இன்னொன்றைச் சொல்கிறோம். சென்ற வருடம்



பார்த்தீர்களென்றால், 33 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை உங்கள் அம்மா கொண்டு வந்ததாக நீங்கள் சொன்னீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய அம்மாதான். (சிரிப்பு)

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** சரி; ஆனால் அதை நிறைவேற்றியது யார்? கலைஞர்தான் நிறைவேற்றினார். அதேபோன்று, இப்போது 50 சதவிகிதத்தை யார் நிறைவேற்றப் போகிறார்கள் என்றால், அனேகமாக நீங்கள் இப்படியே தேர்தலை தள்ளிக் கொண்டே போனால், நாங்கள் வந்துதான் அந்த 50 சதவிகிதத்தை நிறைவேற்ற வேண்டியிருக்கும். அதை, நீங்கள் நிறைவேற்றுவது மாதிரி தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நல்ல பெயரையெல்லாம் எங்களுக்கு நீங்களே தேடிக் கொடுக்கிறீர்கள். 33 சதவிகிதத்தையும் நீங்களே நிறைவேற்றுங்கள்; 50 சதவிகிதத்தையும் நீங்களே நிறைவேற்றுங்கள். நல்ல பெயரையெல்லாம் நீங்களே வாங்குங்கள் என்று. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், அடுப்பூதும் பெண்கள், அடுப்படியில் மட்டும் இருக்கக்கூடாது என்பதற்காக, இன்றைக்குச் சமுதாயத்தில் சமமாக வர வேண்டுமென்பதற்காக மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்தார். இதை நேற்றைக்கு மீன் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். நேற்று அந்த argument வந்தது. அதற்குப் பின்னர் ஆட்சி மாற்றத்தின் காரணமாக நீங்கள் அதைச் செயல்படுத்தினீர்கள். ஆகவே, அதைக் கொண்டு வந்தது, அதற்கு அடித்தளம் அமைத்தது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அதற்குப் பின்னால் 50 சதவிகிதம் என்று இன்றைக்குப் பெண்களுக்கு சரிசமமாக இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்ததும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அதனால், எங்கேயும் இல்லாத ஒரு வரலாற்றுச் சாதனையாக 50 சதவிகிதம் இடஒதுக்கீட்டைக் கொண்டு வந்தார்கள். அதையும் முடிவு செய்து, தேர்தலுக்கான தேதியைக்கூட நாங்கள் அறிவித்துவிட்டோம். அதனடிப்படையில்

தேர்தலை நடத்துவதற்குத் தயார் என்றுகூட நாங்கள் அறிவித்துவிட்டோம். எந்தச் சூழ்நிலையில் தேர்தல் நின்றது என்பது அண்ணன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, என்றைக்கும் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அதுமட்டுமல்ல; மகளிர் சுய உதவிக் குழுக்கள் போன்ற எண்ணற்ற திட்டங்களை மகளிருக்காக அதிகமாகக் கொண்டு வந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றிலிருந்து விவாதம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்றைக்கும் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதையே திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். 33 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்தது நீங்கள். அதை நிறைவேற்றியது நாங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல்தான் இப்போது 50 சதவிகிதம், அதைத்தான் எங்களுடைய உறுப்பினர் பேசுகிறபோது சொன்னார். இதையும் நீங்கள்தான் கொண்டு வந்தீர்கள். நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், அதை நிறைவேற்றப் போகின்றவர்கள் நாங்களாகத்தான் இருப்போம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அடிப்படையிலேதான் அவர் சொன்னாரே தவிர, வேறு எந்த உள் நோக்கத்தோடும் சொல்லவில்லை. அதுமட்டுமல்ல; தேர்தலை நிறுத்தியது தி.மு.க.தான், தி.மு.க.தான் என்று தொடர்ந்து அதையே சொல்லிக் கொண்டிருக்கிறார். எவ்வளவு முறை தேர்தல் ஆணையத்தின் மூலமாக வாய்தா வாங்கியிருக்கிறார்கள்? ஆக, தேர்தல் ஆணையம் வாய்தா வாங்குகிறது என்று சொன்னால், அது அரசினுடைய ஒப்புதல் இல்லாமல், அரசோடு கலந்து பேசாமல் நிச்சயமாக அதைச் செய்வதற்கு வாய்ப்பில்லை. காரணம், ஜாதி அடிப்படையிலே, அந்த rotation அடிப்படையிலே, அந்தத் தொகுதிப் பங்கீடு வருகிறபோது அதையெல்லாம் சரி செய்ய வேண்டிய பொறுப்பு உள்ளாட்சித் துறைக்கு இருக்கிறது. ஆகவே, தேர்தல் ஆணையம் அதற்காகத்தான் தொடர்ந்து ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்திற்குச் சென்று வாய்தா வாங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே, இதை முறைப்படுத்தி நடத்திடவேண்டுமென்றுதான் நாங்கள் சொல்கிறோம். நாளைக்கே இந்தத் தேர்தலை நடத்துங்கள். அதைச் சந்திப்பதற்கு தி.மு.க. என்றைக்கும் தயாராக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)



நண்பகல் 12–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்போதே, தேர்தலை நடத்த நாங்கள் தயாராக இருந்தோம். தி.மு.க. சார்பில்தான் நீதிமன்றத்திற்குச் சென்றார்களென்று பொது மக்களுக்கே தெரியும். அதையொன்றும் மூடிமறைக்க முடியாது. தி.மு.க.–வினுடைய அமைப்புச் செயலாளர் திரு. ஆர்.எஸ். பாரதி அவர்கள்தான் உயர் நீதிமன்றத்திற்கும் சென்றிருக்கிறார்; இது முடிந்தபிறகு, உச்ச நீதிமன்றத்திற்கும் சென்றிருக்கிறார். பழங்குடியினருக்கு வழங்கக்கூடிய இடஒதுக்கீடுகூட கூடுதலாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நீதிமன்றமே ஒப்புக்கொண்டுள்ளது. அதுமட்டுமல்ல; மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, தேர்தலைச் சந்திக்க அன்றைக்கும் தயாராக இருந்தது; இன்றைக்கும் தயாராக இருக்கிறது. தேர்தல் ஆணையம் என்பது ஒரு independent body. அவர்கள் எங்களிடத்தில் சில suggestion–களைக் கேட்பார்கள். ஆனால், முடிவை தேர்தல் ஆணையம்தான் தனியாக எடுக்கும் என்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கே தெரியும். ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தேர்தலை எப்பொழுது வேண்டுமானாலும் நடத்தத் தயாராக இருக்கிறது. கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், நாங்கள்தான் 100 சதவிகிதம் வெற்றியும் பெறுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தை நீட்டித்துக்கொண்டிருக்க நான் விரும்பவில்லை. நேரம் இல்லை; அதற்கு நீங்கள் தயவுகூர்ந்து அனுமதி கொடுக்கவேண்டுமென்று கேட்டு, ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அதாவது, 'தேர்தலை நடத்த நாங்கள் தயாராக இருந்தோம். நீங்கள்தான் தடுத்தீர்கள், தடுத்தீர்கள்' என்று தொடர்ந்து இதே கருத்தைத்தான் அரசு

சொல்லிக்கொண்டிருக்கிறது. ஒரு திரைப்படத்தில் வரும் வாழைப்பழக் கதைபோல்தான் இது இருக்கிறது. தேர்தலை நடத்துவதற்கு நாங்கள் தடை ஏற்படுத்தவில்லை. முறையாக நடத்திடவேண்டுமென்றுதான் திரும்பத் திரும்பச் சொல்கிறோம். அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்துகொண்டு, அதற்குரிய விளக்கத்தைத் தந்தால், நன்றாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்கிறேன். தேர்தலை முறையாகத்தான் நடத்துகிறோம். அதுமட்டுமல்ல; தற்போது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, இதற்கு முன்பு, சட்டமன்றத் தேர்தலின்போதுகூட குழு அமைக்கப்பட்டு, மறுசீரமைப்புப் பணிகளைச் செய்தார்கள். அப்பொழுது எண்ணிக்கையெல்லாம் மாறவில்லை. 1996 ஆம் ஆண்டில் அவர்கள் என்ன நடைமுறையைப் பின்பற்றினார்கள்? 2006 ஆம் ஆண்டில் அவர்கள் எந்த நடைமுறையைப் பின்பற்றினார்கள்? அதே நடைமுறைதான் தொடர்ந்து உள்ளாட்சித் துறையில் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆகவே, பழங்குடியினருக்கு நாம் கூடுதலாகத்தான் இட ஒதுக்கீடு கொடுத்திருக்கிறோம். இதில் ஒன்றும் பிரச்சினையில்லை. அந்த நேரத்தில் நீங்கள் ஒத்துழைப்பு கொடுத்திருந்தால், தேர்தல் நடந்திருக்கும். இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புகளில் நிறைய பேர் பதவிக்கு வந்திருப்பார்கள். தமிழ்நாட்டில் காலியாக இருக்கக்கூடிய 12 மேயர்கள், 124 நகராட்சித் தலைவர்கள், 385 சேர்மன்கள், 12,524 ஊராட்சித் தலைவர்கள், 528 பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்துப் பதவிகளுக்கும் மக்கள் பிரதிநிதிகள் வந்திருப்பார்கள். அன்றைக்கு, நீதிமன்றத்திற்குப் போனது யார்? அவர்கள்தான் சென்றார்கள். அனைத்தும் சரியாக இருக்கிறது என்று நீதிமன்றமே சொல்லிவிட்டதே. ஆகவே, இதுகுறித்து திரும்பத் திரும்ப நீங்கள் கேட்டால், அதே பதிலைத்தான் நான் சொல்ல முடியும். எனவே, இந்த விவாதம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கும். ஆகவே, மாண்புமிகு மூத்த உறுப்பினர், அடுத்த சப்ஜெட்டுக்குப் போகவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், உள்ளாட்சித் தேர்தல் குறித்து, நிறைய விவாதித்தாகிவிட்டது.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையமே நீதிமன்றத்திற்குச் சென்று இந்தப் பிரச்சினை வாதத்திற்கு வந்த நேரத்திலே, "அரசு தயாராக இல்லை" என்று affidavit–ஐத் தாக்கல் செய்திருக்கிறது. அதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு என்ன விளக்கம் சொல்கிறார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையம், ஒரு independent body. அதாவது, அந்த நேரத்தில், ஆரம்பத்தில், நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்குவதற்கு முன்பாக நாங்கள் தேர்தலை நடத்தத் தயாராக இருந்தோம். அதற்குப்பிறகு, பள்ளிகள் திறக்கின்ற காலம், தேர்வு நடக்கின்ற காலம் வந்துவிட்டது. அதுபோன்ற சூழ்நிலை வந்த காரணங்களினால்தானேயொழிய, வேறு காரணங்களால் அல்ல. ஆரம்பத்தில் தேர்தலை அறிவித்து, எப்போது தேர்தல், வாக்கு எண்ணிக்கை உள்ளிட்ட அனைத்துக்கும் நாங்கள் தயாராக இருந்தோம். எல்லாமே சரியாக இருந்த அந்த நேரத்தில், அரசியல் காரணத்திற்காக தடை வாங்கிவிட்டு, இன்றைக்கு வேறுமாதிரியான சூழ்நிலையில் பேசுகிறார்கள். இதைப் பொறுத்தளவில், என்றைக்கும் ஒரே நிலையில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, நீங்கள் உட்காருங்கள். உள்ளாட்சித் தேர்தலைப் பற்றிப் பேசியது போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், நீங்கள் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். உள்ளாட்சித் தேர்தல் குறித்த விவாதம் போதும். (குறுக்கீடு) உள்ளாட்சித் தேர்தல் குறித்த விவாதம் போதும். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இங்கே பேசுகின்றபோது, "33 சதவிகித இட ஒதுக்கீட்டினை நாங்கள்தான் நிறைவேற்றினோம். 50 சதவிகித இட ஒதுக்கீட்டினையும் நாங்கள்தான் நிறைவேற்றுவோம்" என்று கூறினார்கள். கனவு காண்பது எல்லோருக்கும் பொதுவான ஒன்று. ஆனால், 50 சதவிகித இட ஒதுக்கீடு சட்டத்தை இயற்றியது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். வருகின்ற தேர்தலில் பெண்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீட்டினைச் செய்யப்போவதும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும் மாண்புமிகு எடப்பாடியார் தலைமையில் இருக்கும் அரசுதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், உள்ளாட்சித் தேர்தல் பற்றி நிறைய விவாதித்துவிட்டோம். அதுபோதும்; அடுத்த சப்ஜெக்ட்டுக்குச் செல்லுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அதைத்தான் நாங்கள் சொல்கிறோம். உங்கள்மீது இருக்கிற பாசத்தில்தான் "நீங்கள் தேர்தல் நடத்துங்கள்; தேர்தலை நடத்தி நல்ல பெயரை வாங்கிக்கொள்ளுங்கள்" என்று சொல்கிறேன். விரைவில் பஞ்சாயத்துகளுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள் பேசும்பொழுது, 'உங்க அம்மா' என்று சொன்னார். 'நம்ம அம்மா' என்று அவருக்குச் சொல்கிறேன். அவர்களுடைய அன்புக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.



பிற்பகல் 12–05

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இன்னொரு கருத்தை நான் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன். இப்போது பெரும்பாலான பஞ்சாயத்துகள் பெரிய, பெரிய பஞ்சாயத்துகளாக இருக்கின்றன. எங்களுடைய யூனியனில் 15,000 மக்கள்தொகையைக் கொண்டு ஒரு பஞ்சாயத்து இருக்கின்றது. அதேபோல், வார்டுகளை எடுத்துக்கொண்டால், 7,000, 8,000 என்ற அளவிற்கு மக்கள்தொகை இருக்கின்றது. பஞ்சாயத்து தேர்தலை நடத்துவதற்கு முன்பாக இவற்றையெல்லாம் bifurcation செய்தால், அந்தப் பணியை முடித்துவிடலாம். தேர்தல் நடைபெற்றபிறகு, தீர்மானம் போட்டு தரச் சொன்னால் மக்கள் பிரதிநிதிகள் அதை தரமாட்டார்கள். அதிகாரிகள் இருக்கின்றபோதே, எந்தெந்த பெரிய பஞ்சாயத்துகளைப் பிரிக்க வேண்டுமென்று நினைக்கின்றீர்களோ, அதைப் பிரித்துவிடுங்கள். Election நடத்தும்போது, 8,000, 9,000 ஓட்டுக்கள் இருக்கின்ற இடங்களில், கவுன்சிலராக நிற்பதற்கு candidates யாரைக் கூப்பிட்டாலும், செலவழிக்க முடியாது என்ற காரணத்தால் வரமாட்டேன் என்கிறார்கள். ஆகையால், இதுபோன்ற பஞ்சாயத்துகளைப் பிரிப்பதற்கான ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே பஞ்சாயத்துகளைப் பிரிப்பதற்கான பணிகளை வேகமாக முடித்து, வேகமாக election–ஐ நடத்தினால், ஒவ்வொரு பகுதியிலும் மக்கள் பிரதிநிதிகள் அதிகமாக வருவார்கள்; அந்தந்தப் பகுதிகளில் வேலைகளும் முழுமையாக, நிறைவாக நடக்கும்.

இன்னொன்று; இப்போது பார்த்தீர்களென்றால், அடிப்பம்பு போட்டதாக அவரே கணக்கு எழுதிக்கொள்கிறார். முன்பெல்லாம் president இருப்பார். நம்முடைய யூனியனில் control பண்ணுவோம்; அவர்களைக் கூப்பிட்டுப் பேசுவோம். இப்போதெல்லாம் clerk–ஐ தொலைபேசியிலே தொடர்புகொண்டாலும், தொலைபேசியிலேகூட பேச மறுக்கின்றார்கள். ஆகவே, இதுபோன்ற நிலைமைகளையெல்லாம் மாற்றிட வேண்டும். பெரிய ஊராட்சிகளைப் பிரிக்க வேண்டும்; அல்லது பெரிய ஊராட்சிகளாக இருப்பவற்றையெல்லாம் பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துங்கள். இதையெல்லாம் குறுகிய காலத்திற்குள், 10, 15 நாட்களுக்குள் செய்துவிடலாம். அனைத்து list–களையும் சரியாக வைத்திருக்கின்றார்கள். தேர்தல் நடத்துவதற்கு வேண்டிய ஆயத்தப்

பணிகளை நீங்கள் செய்வதற்கு முன்பாக இந்த வேலைகளை நீங்கள் செய்தால், மிகவும் சரியாக இருக்கும்.

'தொலைநோக்குத் திட்டம் *2023*' என்று அறிவித்து இருக்கிறார்கள். அதிலே *10* நகரங்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், அந்த *10* நகரங்கள் எவையெவை என்பது குறித்தோ, அதற்கு எப்படி நிதி ஒதுக்கீடு செய்யப் போகின்றோம் என்பது குறித்தெல்லாம் நீங்கள் அதிலே குறிப்பிடவில்லை. அதாவது, 'தொலைநோக்குத் திட்டம் *2023*' என்று இருக்கின்றதேயொழிய, அந்த *10* நகரங்களின் விவரங்களும், அவற்றிற்கு எப்படி நிதி ஒதுக்கீடு செய்யப் போகின்றோம் என்ற விவரங்களும் அதிலே இல்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். எல்லா நகரங்களும் வளர்ச்சியடைய வேண்டுமென்பதுதான், ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சியில் உள்ள அனைவருடைய விருப்பமாகும். உங்களுடைய பகுதி, எங்களுடைய பகுதி என்று அதிலே பார்க்கக்கூடாது. அனைத்துப் பகுதிகளும் வளரக்கூடிய அளவிற்கு அந்தத் திட்டத்தை நீங்கள் செயல்படுத்த வேண்டும்.

அதேபோல, குடிநீர்த் திட்டங்கள்; இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை எங்களுடைய தளபதி அவர்கள்தான் ஆரம்பித்து வைத்தார்கள். தளபதியும், தலைவரும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். அவர்கள்தான் திறந்தும் வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை எவ்வளவு வேகமாகக் கொண்டுவர முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டு எங்கள் தளபதிதான். எனவே, அதுபோன்று கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையெல்லாம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கொண்டு வந்து விரைவாகச் செயல்படுத்திட வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எங்களுடைய ஊரைச் சார்ந்த அமைச்சருக்கே தெரியும். தாமிரபரணியிலிருந்து *1,600* கிராமங்களுக்கு குடிநீர் வழங்கிடும் திட்டத்திற்கு தளபதி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். தற்போது இருநூற்று சொச்சம் கிராமங்கள் அமைச்சருடைய தொகுதியிலேயும், என்னுடைய தொகுதியிலேயும் சேர்ந்தே இருக்கின்றன. இந்தக் கிராமங்களுக்கு நீண்ட நாட்களாக அந்தப் பணி நிலுவையில் இருக்கின்றது. அந்த வேலை நின்றுவிட்டது. அமைச்சர் அவர்களும், நாங்களும் அந்தப் பணிகள் விரைவாக நடைபெற நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். ஏறத்தாழ *7, 8* வருடங்களாக அந்தப் பணிகள் அப்படியே இருக்கின்றன.



இப்படி வேலைகள் முடங்கிப் போய்க் கிடக்கின்றன. இந்தப் பணிகளையெல்லாம் துரிதமாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு உதாரணம் எங்களுடைய தளபதிதான். சரியாக திட்டமிட்டு, கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியதோடு, அதைத் திறந்தும் வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப்பற்றி நன்றாகத் தெரியும். இதற்கு முன்பாகவும் அதுசம்பந்தமாக நான் பேசியிருக்கிறேன். விருதுநகர் மாவட்டத்தில் உள்ள விருதுநகர், அருப்புக்கோட்டை, காரியாப்பட்டி, நரிக்குடி மற்றும் திருச்சுழி ஒன்றியங்களைச் சேர்ந்த *637* ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். அதேபோல, இன்னொரு கூட்டுக் குடிநீர்த் திட்டமும் இருக்கின்றது. விருதுநகர் மாவட்டத்தைச் சார்ந்த சாத்தூர், வெம்பக்கோட்டை, சிவகாசி, விருதுநகர், வத்திராயிருப்பு, திருவில்லிபுத்தூர் மற்றும் அருப்புக்கோட்டை போன்ற *7* ஊராட்சி ஒன்றியங்களும், *755* ஊரகக் குடியிருப்புகளுக்கான பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டமாகும். இந்த இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் தி.மு.க. ஆட்சியில்தான் அறிவிக்கப்பட்டன. அதற்கு நான் விளக்கம் சொல்கிறேன்; கேட்டுக்கொள்ளுங்கள்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் *8* பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு எந்தவித நிதி ஆதாரத்தையும் இறுதி செய்யாமல், அறிவிப்பினை வெளியிட்டார்கள். அதில் *190* கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணியும் ஒன்றாகும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், *2011* ஆம் ஆண்டு தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற பின்னர், தி.மு.க. ஆட்சியில் அறிவித்த *8* கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கும் *3,276* கோடியே *62* இலட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கீடு செய்து, திட்டப் பணிகளைத் துவக்கத் தேவையான நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் எடுத்ததன் காரணமாக, இந்தத் திட்டப் பணிகள் *2015* ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால்

29–5–2015 அன்று பொது மக்கள் பயன்பெறுகின்ற வகையில் திறந்து வைக்கப்பட்டன. இந்தத் திட்டத்தின்மூலம் ஊரகப் பகுதிகளில் குடியிருக்கும் மக்களுக்கு நாளொன்றுக்கு 12.21 மில்லியன் லிட்டர் அளவுக்குக் குடிநீர் வழங்கப்படுகின்றது. மேலும், அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த அருப்புக்கோட்டை பகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 119 குடியிருப்புகளுக்கு நாளொன்றுக்கு 9.98 மில்லியன் லிட்டர் அளவுக்குக் குடிநீர் வழங்கப்படுகிறது.

பிற்பகல் 12–10

அதேபோல, இன்னொரு கூட்டுக் குடிநீர் திட்டம். விருதுநகர் மாவட்டத்திலுள்ள சாத்தூர், வெம்பக்கோட்டை, சிவகாசி, விருதுநகர், வத்திராயிருப்பு, திருவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை ஆகிய 7 ஊரட்சிகளுக்குச் சேர்த்து 755 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நீங்கள் அறிவித்த 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் இதுவும் ஒன்று. இது 234 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணியாகும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011–ல் ஆட்சிக்கு வந்தபிறகு, 3,276 கோடியே 62 இலட்சம் ரூபாயை கருணை உள்ளத்தோடு ஒதுக்கீடு செய்ததையடுத்து, தாமிரபரணி ஆற்றில் சீவலப்பேரியைத் தலைமையிடமாகக் கொண்டு 234 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகள் துவங்க தேவையான நடவடிக்கைகள் எடுத்ததன் விளைவாக, 29–12–2011 ஆம் நாளன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டப் பணிகளை விரைவாக முடித்து மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால், ஒப்பந்தம் எடுத்த நிறுவனம் வேகமாக அந்தப் பணிகளைச் செய்யாமல் அப்படியே விட்டுவிட்டார்கள். இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, அந்த ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு, மறு ஒப்பந்தம் கோரப்பட்டது. இதை எதிர்த்து அந்த ஒப்பந்த நிறுவனம் நீதிமன்றத்திற்குச் சென்று தடை ஆணை பெற்ற காரணத்தினால், உடனடியாகப் பணியைத் துவக்க இயலாத நிலை ஏற்பட்டது. எனினும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த துரித நடவடிக்கையின் காரணமாக, நீதிமன்றத் தடை ஆணை இரத்து செய்யப்பட்டு, புதிய ஒப்பந்த நிறுவனம் மூலமாக 24–2–2016 முதல் பணிகள் துவங்கப்பட்டு, விரைவாகப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நாளது தேதிவரை 63 விழுக்காடு



பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் மீதமுள்ள பணிகள் வரும் டிசம்பர் மாத இறுதிக்குள் முடிக்கப்பட்டு, பொது மக்களுடைய பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும். இத்திட்டம் பயன்பாட்டிற்கு வரும்போது, 7 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 6,51,000 மக்களுக்கு நாளொன்றுக்கு 22.87 மில்லியன் லிட்டர் அளவுக்கு குடிநீர் வழங்கப்படும். ஆகவே, அந்த 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கும் 3,276 கோடியே 62 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கியது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் திட்டம் அறிவித்ததோடு சரி என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதில் சின்ன திருத்தம். 29–10–2010–லேயே அந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி, பணம் ஒதுக்கி வேலையை ஆரம்பித்துவிட்டோம். 2010 ஆம் ஆண்டு, 10–வது மாதமே தளபதி வந்து பணியை ஆரம்பித்துவிட்டார்கள். இப்போது அந்தப் பணியை வேகமாக முடிக்கத்தான் சொல்கிறோம். எங்கள் பகுதி வறட்சியான பகுதி; குடிக்கத் தண்ணீர் இல்லை. உங்களுடைய கோயம்புத்தூர், திருப்பூர் மாவட்டங்கள்போல் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தத் திட்டத்தை முழுமையாக அறிவிப்போடு விட்டுவிட்டீர்கள். அது தேர்தல் நேரத்தில் அவசரமாக அறிவிக்கப்பட்ட திட்டம். இதற்கு முழுமையாக அடிக்கல் நாட்டினீர்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் சார்ந்திருக்கிற வேலூர் மாவட்டத்திலேயே ஒரு திட்டம் இருக்கிறது. அதற்கும் அடிக்கல் நாட்டினார்கள். வேலூர், மேலூர் போன்ற எல்லா இடங்களிலும் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினீர்கள். 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அதில்

வருகின்றன. அப்போது ஒப்பந்ததாரரே இறுதி செய்யப்படவில்லை; ஒப்பந்ததாரர் யார் என்று தெரியாமலேயே எப்படிப் பணியைத் துவக்கமுடியும்? மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் அதற்காக நிதியும் ஒதுக்கப்பட்டது; டெண்டரும் கோரப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாப் பகுதிகளிலும் மழை இல்லாத காரணத்தினால், ஆறுகளில் தண்ணீர் இல்லை. கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்குத்தான் முன்னுரிமை கொடுக்கிறோம். சென்னையைப் பொறுத்தவரையில், தளபதி அவர்கள் இருக்கும்போதுதான் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை ஆரம்பித்தார்கள். அதேபோன்று, முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களும் கடந்த முறை கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டங்களை அறிவித்தார்கள். திட்டத்தை அறிவித்து, நெம்மேலியில் ஆரம்பித்தீர்கள். அந்தத் திட்டத்திற்கு 28–8–2016–ல் ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டமும் நிலுவையில் இருக்கிறது. பேரூர் திட்டமும் நிலுவையில் இருக்கிறது. அதேபோல், இராமநாதபுரம் மாவட்டத்தில் குதிரைமொழி; தூத்துக்குடி மாவட்டத்தில் ஆலந்தலை ஆகிய 4 இடங்களிலும் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டங்களை உங்கள் ஆட்சியில்தான் அறிவித்திருக்கிறீர்கள். ஆனால், அந்த வேலைகளை இன்னும் ஆரம்பிக்கவில்லை. எங்கள் பகுதியில் ஆறு மற்றும் கிணறுகளில் தண்ணீர் இல்லை. 500, 600 அடி ஆழ்துளைக் கிணறு அமைத்தாலும், அங்கு போர்வெல்லில் தண்ணீர் இல்லை. ஆகவே, கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டங்களையெல்லாம் கொஞ்சம் விரைவுபடுத்தவேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தில் குதிரைமொழி, தூத்துக்குடி மாவட்டத்தில் ஆலந்தலை ஆகிய இடங்களிலெல்லாம் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டால், தென் மாவட்டங்களில் கடற்கரையை ஒட்டி இருக்கும் கிராமங்களுக்கு தண்ணீர் கிடைக்க வாய்ப்பு வரும்.

அடுத்து, LED light அமைக்கும் பணிகளை எடுத்துக்கொண்டால், நாம் மொத்தமாக package ஆக contract போடுகிறோம். DRDA பணிகளில் tender அனைத்தும் package tender ஆக வருகின்றன.



Package tender ஆக வருவதால்தான் குழப்பம் வருகிறது. அவரவர்கள் சௌகரியத்துக்குச் சென்று, மல்லுக்கட்டி நிற்கிறார்கள். அதைப் பிரித்து வழங்கினால் வேலைகள் நடக்கும். LED lights–க்கான tender–லும் பிரச்சினை இருக்கிறது; DRDA Tender–களிலும் பிரச்சினை இருக்கிறது. வேறு எதுவும் காரணம் கிடையாது; Package–தான் பிரச்சினை. எனவே, Package tender–ஐ எல்லாம் பிரித்துக் கொடுத்தால், சின்னச்சின்ன ஒப்பந்ததாரர்களும் வேலை எடுத்து செய்வதற்கு வாய்ப்பு கிடைக்கும். இப்போது மொத்தமாக 3, 4 பேர்தான் ஒப்பந்தம் எடுத்து பணிகளைச் செய்கிறார்கள்; மீதமுள்ளவர்கள் இதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு போடுகிறார்கள். இதுபோன்ற பிரச்சினைகள் இல்லாமலிருக்க வேண்டுமென்றால், வேலைகளைப் பிரித்துக் கொடுக்கவேண்டும். அப்போது எல்லோருக்கும் வேலை கிடைக்கும். அவர்களும் அமைதியாக இருப்பார்கள். இல்லையெனில், LED lights அமைக்கின்ற பணிகள், DRDA பணிகளையெல்லாம் செய்யவிடமாட்டர்கள். இப்போது, நெடுஞ்சாலைத் துறையிலும் அப்படித்தான் ஆகிவிட்டது. ஒப்பந்தப் பணிகளெல்லாம் package–ஆக வந்துவிட்டது. அவ்வாறு இல்லாமல், அனைவரும் வேலையை எடுத்துச் செய்யட்டும்; சின்னச்சின்ன ஒப்பந்ததாரர்களையும் உயர்த்திட வேண்டும். பெரிய ஒப்பந்ததாரர்களுக்கே ஒப்பந்தங்களை வழங்கிடாமல், சிறிய ஒப்பந்ததாரர்களுக்கும் உதவுகின்ற வகையில் அவர்களுக்குப் பணிகளை வழங்கிட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–15

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நேர்வுகளில், சில வேலைகளைத்தான் சின்னச்சின்ன ஒப்பந்ததாரர்கள் செய்வார்கள். பல வேலைகளை பெரிய, பெரிய ஒப்பந்ததாரர்கள் செய்வார்கள். பெரிய பெரிய கம்பெனிகளுக்கு இந்தப் பணிகளைக் கொடுத்தால், அந்தப் பணிகளில் தரம் இருக்கும்; warranty, guarantee என்று 7 வருடம் கொடுப்பார்கள். அந்தமாதிரியான ஒரு சூழ்நிலை இருக்கிறது. சில அவசியமான பணிகளை சிறிய ஒப்பந்ததாரர்களுக்கும் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கும். ஆகவே, சில பணிகளைப்

பெரிய, பெரிய கம்பெனிகளுக்குக் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதால், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதேபோல, நம்முடைய சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். மீஞ்சூரில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு 2004 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, 100 மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறது. அதற்குப் பின்னர், உங்கள் ஆட்சிக் காலத்தில், நெம்மேலியில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தினை ஆரம்பித்து, அதில் 28 சதவிகிதம் பணிகளைத்தான் முடித்திருந்தீர்கள். மீதமுள்ள 72 சதவிகிதப் பணிகள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் முடிக்கப்பட்டு, 100 மில்லியன் லிட்டர் தண்ணீர் சென்னைக்கு வருகிறது.

அதற்குப் பிறகு, விதி 110–ன்கீழ், சென்னைக்கு 400 MLD, 150 MLD குடிநீர் வழங்கும் இரண்டு திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் திட்டங்களுக்கு பெரிய அளவில் நிதியாதாரம் தேவைப்படுகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை மூன்று முறை சந்தித்தபோதுகூட, அந்தத் திட்டத்திற்கு நிதி வழங்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தினார்கள். அந்த நிதியை KfW fund மூலமும், ஜெர்மன் வங்கி மூலமாகவும், ஜப்பான் கூட்டுறவு முகமைமூலம் (JICA) 400 MLD குடிநீர் வழங்கும் அந்த இரண்டு திட்டங்களுக்கும் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது. இன்றைக்குப் பார்த்தால் 150 MLD வழங்கும் திட்டம், ஒப்பந்தம் கோரப்படும் நிலையில் இருக்கிறது.

அதேபோல, நம்முடைய முதலமைச்சர் அண்ணன் அவர்கள் டில்லி சென்றபோது, நானும் உடன் சென்றேன். அப்போதுகூட, மாண்புமிகு மத்திய அமைச்சர் உயர்திரு வெங்கைய்ய நாயுடு அவர்களைச் சந்தித்தபோது, அந்த 400 MLD குடிநீர் வழங்கும் திட்டத்திற்கும் நிதி பெறுவதற்கு வலியுறுத்தியிருக்கிறோம். அடுத்து JICA fund–ல் அதை ready செய்து தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் கண்டிப்பாகப் பெறுவதற்கு தொடர் முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. ஒரு திட்டத்திற்கு 1,500



கோடி ரூபாய்; மற்றொரு திட்டத்திற்கு கிட்டத்தட்ட 5,000 கோடி ரூபாய் நிதி தேவைப்படுகிறது. நிதியின் அளவு அதிகம். அந்த நிதியைப் பெற்றுத்தான் அந்தத் திட்டங்களைச் செயல்படுத்தமுடியும். எனவே, இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்த தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கூடிய விரைவில் அந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கேகே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று இந்த சீர்மிகு நகரங்கள். அந்தத் திட்டங்களெல்லாம் அறிவிப்போடு இருக்கின்றன. நீங்கள் அந்த வேலைகளை விரைவாக ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தில் 10 நகரங்களை எடுத்திருக்கிறீர்கள். அந்த 10 நகரங்களுக்கான நிதியை ஒதுக்கினால்தான் அந்த வேலைகள் நடைபெறும்.

அடுத்ததாக, தற்போது புதியதாக, overhead tank கட்டுவதற்கு TWAD Board–ல் provision இல்லையென்று சொல்கிறார்கள். முன்பெல்லாம், overhead tank–ஐ TWAD Board–தான் கட்டும். 1977 ஆம் ஆண்டில் கட்டிய overhead tank எல்லாம் இன்றைக்குப் பழுதடைந்து இருக்கின்றன. TWAD Board–ல் அதுகுறித்து கேட்டால், எங்களுக்கு அதற்கான provision இல்லையென்று சொல்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனில் ‘தாய்’ திட்டத்தில்தான் நாம் வாங்க வேண்டியிருக்கிறது. ‘தாய்’ திட்டத்தில் ஒன்று அல்லது இரண்டு overhead tank–தான் கட்டமுடியும். நிறைய overhead tank கட்ட முடியவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தெந்த overhead tank மோசமாக இருக்கிறதோ—ஒரு குறிப்பிட்ட year–ஐ fix பண்ணுங்கள். 1977, 1980, 1985 என்று year fix செய்து, அதைக் கட்டிக் கொடுக்க வேண்டும். 1977–1980 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட overhead tank–களைப் பார்த்தால், 5,000 லிட்டர், 10,000 லிட்டர் டேங்குகளாக இருக்கும். இப்போதுதான் 30,000 மற்றும் 50,000 என்ற அளவில் கட்டுகிறோம். இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, குறிப்பிட்ட வருடங்கள் ஆன மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை புதியதாகக் கட்டுங்கள். இந்த வருடம் முதல் இந்த வருடம் வரை உள்ள டேங்குகளை நாங்கள் புதிதாகக் கட்டித் தருகிறோம் என்று சொல்லுங்கள்.

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [2017 ஜூன் 21

அடுத்து, PMGSY work. (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். PMGSY திட்டத்தில் பணிகளையெல்லாம் வருடத்தின் முதலிலேயே எடுங்கள். வருட கடைசியில் அந்தப் பணிகளை எடுக்கிறார்கள். மேலும், இந்தத் திட்டத்தில் எடுக்கும் பணிகள் குறித்து தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரின் கவனத்திற்கும் வருவதில்லை. சட்டமன்ற உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வராமல், PMGSY திட்டத்தில் பணிகளை எடுக்கிறார்கள். உதாரணத்திற்கு 10 சாலைகள் இருந்தால், அதில் எந்த சாலை அவசியம் என்பது தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருக்குத்தான் தெரியும். PMGSY திட்டத்தில் எந்தப் பணியை எடுக்கலாம்; எந்தப் பணி வேண்டாம் என்று சொல்லக்கூடிய அந்த வாய்ப்பு சட்டமன்ற உறுப்பினருக்குத்தான் இருக்க வேண்டும்.

அடுத்து, வறட்சி நிவாரணப் பணிகள். ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் இந்தப் பணியை இன்னும் கொஞ்சம் விரைவுபடுத்த வேண்டும். நகராட்சிகளுக்கு கொஞ்சம் அதிகமான நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அருப்புக்கோட்டை, விருதுநகர், சிவகாசி போன்ற நகராட்சிகளில் பணிகளுக்குப் போதுமான அளவிற்கு நிதியில்லை. எனவே, எல்லா ஊர்களுக்கும் போதுமான நிதி ஒதுக்கப்பட வேண்டும். அதேபோன்று, ஊராட்சிகளுக்கும், Collector–களிடம் தெரிவித்து, பொது நிதியிலிருந்து வறட்சிக்கு வேண்டிய நிதியைக் கொடுக்கவேண்டும்.

அடுத்து அம்மா உணவகங்கள். எகிப்து நாட்டிலிருந்து வந்தவர்கள் இந்தத் திட்டத்தைப் பார்த்து பாராட்டியதாகச் சொல்கிறீர்கள். அந்த அம்மா உணவகத்திற்கு யார் செலவு செய்கிறார்கள்? அந்தந்த முனிசிபாலிட்டியும், மாநகராட்சியும்தான். ஏற்கெனவே அங்கு பணிபுரிபவர்களுக்கு சம்பளம் போட முடியாத நிலையில் அவை இருக்கின்றன. அங்கே பணியாற்றும் துப்புரவுப் பணியாளர் பூராவும் ஒன்றாம் தேதி முதல் பத்தாம் தேதி வரை பார்த்தீர்கள் என்றால், sweeper–களுக்கு சம்பளம் போடவில்லை என்று அங்கு ஒரே பஞ்சாயத்து நடைபெறும். அவர்களை சமாதானம் செய்வதற்கே எங்களுக்கு நேரம் சரியாக இருக்கிறது. எனவே, அம்மா உணவகங்களை நீங்கள் நடத்துங்கள்; அதை வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லை. யாரோ சாப்பிடுகிறார்கள்; அந்தப் புண்ணியத்தை நீங்கள் செய்யுங்கள்;



2017 ஜூன் 21] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், அதற்குப் பணம் எங்கிருந்து வரவேண்டும். அரசாங்கத்திடமிருந்து வரவேண்டும். எப்படி எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தபோது Government–லிருந்து நிதியைக் கொடுத்தாரோ, அதுபோன்று நீங்களும் அம்மா உணவகங்களுக்கு அரசு நிதியைக் கொடுங்கள். அப்படியில்லாமல் நகராட்சி, கார்ப்பரேஷன் நிதியிலிருந்து கொடுத்தால், எப்படி? ஏற்கெனவே நகராட்சிகள், கார்ப்பரேஷன் எல்லாம் deficit–ல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று அம்மா குடிநீர். இதுவெல்லாம் தேவையா? தேவையென்று கருதினால் அரசாங்கத்திலிருந்து நிதியைச் செலவழியுங்கள். நகராட்சியினுடைய நிதியைத் தொடாதீர்கள்; நகராட்சியில் பணம் இல்லை. சம்பளம் கொடுக்க முடியவில்லை. அங்கு வரியை உயர்த்த முடியவில்லை. எல்லாப் பிரச்சினைகளும் மொத்தமாக இருப்பதால், அம்மா உணவகங்களுக்கு அரசாங்கத்திலிருந்து பணம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, ** என்ற வார்த்தையைக் குறிப்பிட்டார். அந்த வார்த்தை "துப்புரவுப் பணியாளர்" என்று மாற்றிக்கொள்ளப்படுகிறது.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ** என்று குறிப்பிட்ட அந்த வார்த்தையை துப்புரவுப் பணியாளர் என்று மாற்றிக்கொள்ளலாம்.

பிற்பகல் 12–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிய ** என்ற வார்த்தை மாற்றப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா உணவகங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அம்மா உணவகம் என்பது ஓர் அற்புதமான திட்டமாகும். சமூகப் பொருளாதார நிபுணர்களால், அனைத்து மாநிலங்களாலும் இன்றைக்குப்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பாராட்டப்படக்கூடிய ஒரு திட்டம். அந்தத் திட்டத்தைப் பின்பற்றி, ஆந்திரா போன்ற மாநிலங்களில் ஆரம்பித்திருக்கின்றார்கள். மற்ற மாநிலங்களிலும் ஆரம்பிப்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஓர் அற்புதமான திட்டம். அம்மா உணவகங்களைப் பொறுத்தவரையில், சென்னையில் மொத்தம் 407; நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் 247; ஊரகப் பகுதிகளில் 4 உணவகங்கள் என ஆக மொத்தம் 658 அம்மா உணவகங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. உள்ளாட்சி அமைப்புகளின் நிதியைக்கொண்டு செயல்படுத்தப்படுவதாக உறுப்பினர் சொல்லியிருக்கிறார். உள்ளாட்சியிலே இருக்கக்கூடிய நிதியினைக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. கடந்த 10 நாட்களுக்கு முன்புகூட ஒரு கூட்டம் கூட்டப்பட்டு, இந்தத் திட்டத்திற்காக அரசாங்கத்திடமிருந்து மானியம் வேண்டும் என்று மாண்புமிகு முதல்வரிடம் கேட்கப்பட்டது. அரசு தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர் மற்றும் எங்களது துறைச் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில், இந்தத் திட்டத்திற்கு மானியம் வழங்குவது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்குத் தேவையான அரிசியை Civil Supplies–லிருந்து கொடுக்கின்றார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கின்றது. இந்தத் திட்டம் ஓர் அற்புதமான திட்டம் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். இதுவரையில் அம்மா உணவகத்தில் ஒரு இட்லி ஒரு ரூபாய் வீதம் மொத்தம் 41 கோடியே 67 இலட்சம் இட்லிகளும், 15 கோடியே 25 இலட்சம் ரூபாய் அளவிற்கு பலவகை சாதங்களும் மற்றும் 19 இலட்சத்து 56 ஆயிரம் சப்பாத்திகளும் விற்பனையாகி இருக்கின்றன. இவை ஏழையெளிய மக்களுக்கான மலிவு விலையிலான உணவகங்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த இந்தத் திட்டத்தை உலகமே பாராட்டிக் கொண்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தை அம்மா அவர்கள் கொண்டு வந்தது உண்மையிலே பெருமை அளிக்கக்கூடியது.

அதேபோன்று, Smart City திட்டத்தைப் பொறுத்தவரையில் அரசு வேகமாகச் செயல்பட்டு வருகின்றது. முதலில் Smart City திட்டத்தில் நகரங்களைக் குறைவாகத்தான் தேர்வு செய்தார்கள். பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் பேசிய பிறகு 12 Smart Cities–ஐ தேர்வு செய்தார்கள். AMRUT திட்டத்தில் பார்த்தீர்களென்றால், சென்னை,



மதுரை, கோவை உட்பட 25 நகரங்களை எடுத்திருக்கின்றார்கள். இந்தத் திட்டத்தில் 33 சதவிகித நிதியைத்தான் கொடுக்கின்றார்கள். மீதி 67 சதவிகிதத்தை நாம் போடுகின்றோம். Smart City திட்டத்தில் 50 சதவிகிதம் மத்திய அரசும், மீதமுள்ள 50 சதவிகிதத்தை மாநில அரசும் கொடுக்கின்றது. இந்த மாதிரியான திட்டங்கள் அனைத்தும் விரைவாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதேபோன்று, கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை tie–up செய்து, மத்திய, மாநில நிதியிலிருந்து செயல்படுத்தி வருகின்றோம்.

அதேபோல், PMGSY திட்டத்தின்கீழ் வரும் சாலைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, கூடுதலாக Central Fund வாங்கி அந்தச் சாலைகளை போடுகின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. 2009–க்கு பிறகு உங்கள் ஆட்சிக் காலத்தில் அந்த நிதியை நீங்கள் வாங்கவில்லை. அதன்பிறகு 2011–ல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னால் 2012–2013–ல், 4 வருடங்கள் இடைவேளைக்குப் பின்னால் அந்த நிதியைத் திரும்ப வாங்கி பணியைத் தொடர்ந்து செய்திருக்கின்றோம். கடந்த 10 தினங்களுக்கு முன்பு, மாண்புமிகு முதலமைச்சரின் ஆணைக்கிணங்க, மத்திய அமைச்சர் அவர்களை நான் சந்தித்தேன். அப்போது 2 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு— கிட்டத்தட்ட 3,000 கோடி ரூபாய் நிதியை எடுத்துக்கொள்ளலாம் என்று கூறினார்கள். நம்முடைய பொறியாளர்கள் பல திட்டப் பணிகளைப் பார்க்கின்றார்கள். இப்போதுள்ள வேலைகளைச் செய்வதற்குத்தான் சரியாக இருக்கின்றது. அதனால் வெளியிலிருந்து Private Agency மூலமாக பொறியாளர்களை நியமித்து, எங்கெங்கு சாலைகள் அவசியமோ, அங்கெல்லாம் அந்தச் சாலைகள் எல்லாவற்றையும் எடுக்கச் சொல்லியிருக்கின்றோம். இதற்கு முன்பு பார்த்தீர்களென்றால், 1 இலட்சத்து 5 ஆயிரம் கி.மீ. சாலைகள் இருந்தன. இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், கடந்த 6 வருடங்களில் கிட்டத்தட்ட 45 ஆயிரம் கி.மீ. ஊரகச் சாலைகள் புதியதாக சேர்ந்துள்ளன. இதுபோன்று இந்தியாவிலே வேறு எங்கும் கிடையாது. இந்தியாவிலேயே இது ஒரு சரித்திரம். எனவே, அந்தச் சாலைகளையெல்லாம் எடுத்து

செய்யவிருக்கிறோம். நாங்கள் சென்று பார்த்த அடுத்த நாளே அரசாணை வெளியிட்டு, கிட்டத்தட்ட 1,400 கோடி ரூபாய்க்கு சாலைப் பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் கடிதம் அனுப்பியிருக்கின்றார்கள். இப்படி தொடர்ந்து மத்திய அரசாங்கத்தின் PMGSY திட்டத்தின்கீழ் மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசு சிறப்பான முறையில் நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், நேரமாகிவிட்டது. உங்கள் உரையைச் சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன், நீங்கள் உட்காருங்கள். திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். நன்றாகத்தான் பேசிக்கொண்டிருக்கின்றார், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நல்ல விஷயங்களைத்தான் பேசிக்கொண்டிருக்கின்றேன். நெடுஞ்சாலைத் துறையின்கீழ் வரும் சாலைகளையெல்லாம் நீங்கள் மதுக் கடைகளுக்காக நகராட்சியின்கீழ் கொண்டு வருகின்றீர்கள். ஏற்கெனவே இருக்கின்ற நகராட்சிச் சாலைகளையே maintain செய்யமுடியாமல் இருக்கின்றோம். ஆனால், இப்போது அனைத்துச் சாலைகளையும் நீங்கள் நகராட்சியிலே கொண்டுபோய் சேர்க்கின்றீர்கள். அது எந்தவிதத்தில் நியாயமாக இருக்கும்? நீங்கள் சாராயக் கடைகளை நடத்த வேண்டும் என்பது வேறு; அரசாங்கத்திற்கு வருமானம் வேண்டும் என்பதற்காக நீங்கள் செய்கின்றீர்கள், அதெல்லாம் வேறு சமாச்சாரம். (குறுக்கீடு) அது உங்களுடைய நிருவாகத்திற்குத்தான் சிரமம். Municipality–க்கு பணம் வேண்டுமல்லவா? அந்தமாதிரி ஒரு நிலைமை இருக்கிறது. இரண்டாவது, . . .

பிற்பகல் 12–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாராயக் கடை என்ற வார்த்தையை ஏற்றுக்கொள்ள முடியாது. அதாவது, பல திட்டங்கள். . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதற்குப் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** Municipality பராமரிப்புப் பணிகளை take over செய்ய முடியாது. Municipality பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. எங்களுக்கும், Highways–க்கும் இருக்கக்கூடிய திட்டங்களை, பல அடிப்படை வசதிகளை செய்வதற்காகத்தான் அந்த இடமாற்றமே தவிர, வேறொன்றும் கிடையாது. ஆகவே, இன்றைக்கு அவர்கள்தான் முழுமையாக அதை maintain செய்கிறார்கள். எங்கள் துறையின்மூலம் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் வருகின்றன; E.B.–யில் cable பதிக்கும் பணிகளைச் செய்து வருகிறோம். அடிப்படை வசதிகளுக்காகத்தான் செய்து வருகிறோம், வேறொன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், உரையை முடியுங்கள். இன்னும் 4 பேர் பேச வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்ற வேண்டும்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** உரையை முடித்துவிடுகிறேன். M.L.A. நிதியிலிருந்து sintex போடுவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் drought–க்குப் பணம் கொடுத்தார் என்றால், sintex போடுவதற்கு permission இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் Highways road–ஐப் பற்றியும் Municipality road–ஐப் பற்றியும் சொன்னார். அடுத்ததாக, அதை யார் maintain செய்வார்கள் என்றால், நெடுஞ்சாலைத் துறையினர்தான் maintain செய்வார்கள் என்று சொல்கிறீர்கள். அது எப்படி? சும்மா இருப்பதை தூக்கி நீங்கள் வைத்துக்கொண்டு, அவர்கள் அதை maintain செய்வார்கள் என்று சொன்னால் எப்படி? அவர்களிடமே அது இருந்தால் என்ன? அதனால்தான் சாராயக் கடை காரணமா என்று கேட்கிறார். (குறுக்கீடு) அதைத்தானே நீங்கள் சொல்ல வருகிறீர்கள். ஒன்று highways road–ஐ Municipality எடுத்துக்கொண்டால், அந்த

Municipality–ஐ அந்தச் சாலைகளை maintain செய்யச் சொல்லுங்கள். ஆனால், அதைத் தூக்கி நாங்கள் வைத்துக்கொள்வோம், **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மூத்த உறுப்பினர். அவர் எழுந்து எப்பொழுதும் இந்த மாதிரிதான் பேசுவார். (குறுக்கீடு) அதாவது, உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில், எங்களுடைய திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத்தான் எங்களுக்கு நிதி சரியாக இருக்கிறது. Highways Road–ஐ எடுக்கும்போது அதைப் பராமரிப்பதற்கு எங்களிடம் நிதி கிடையாது. அந்த அடிப்படையிலே, ஒருங்கிணைந்து, அவர்களுடைய fund மூலமாக அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்; அதைத்தான் நான் சொன்னேன். அவர்களுடைய funds–மூலம் joint ஆக செய்ய முடியும். ஆனால், அந்தச் சாலைகளை எங்களது துறையில் எடுத்துச் செய்வதற்கு எங்களுக்கு நிதி கிடையாது. அதைத்தான் நான் சொல்ல வந்தேன்.

மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் பேசும்போது, நிறைய சப்ஜெக்ட் பற்றிச் சொன்னார்கள். அனைத்து குடிநீர்த் திட்டப் பணிகளுக்கும் போதுமான அளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. Sintex tank, pipe line, bore well போடுதல், bore well flush செய்தல் போன்ற அனைத்துப் பணிகளுக்காகவும் 1,077.10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக மட்டும்தான் அந்தத் தொகை முழுமையாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல; M.L.A. fund, M.P. fund எல்லாவற்றையும் அதற்காகப் பயன்படுத்தச் சொல்லியிருக்கிறோம். எந்தப் பகுதியிலாவது குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக நிதி ஒதுக்கப்படவில்லை என்று சொன்னால், உடனடியாக செய்து தரப்படும்.

அதுமட்டுமல்ல; உள்ளாட்சித் துறையில் இருக்கக்கூடிய பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர்த் திட்டத்திற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கச்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சொல்லியிருக்கிறோம். 142 வருடங்களாக இல்லாத கடுமையான வறட்சி தற்போது நிலவுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, இருக்கின்ற சூழ்நிலையில் இவ்வளவு பெரிய பிரச்சினையை எப்படி எதிர்கொள்ளவேண்டும் என்று யோசித்து, குடிநீர்த் திட்டப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலே இந்த அரசு சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. ஆகவே, ஏதாவது ஓரிடத்திலே அப்படிப்பட்ட நிலைமை இருந்தால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல, குடிநீர்த் திட்டப் பணிகளைப் பற்றிச் சொன்னார்கள். அதேபோன்று, maintenance குறித்தும் சொல்லியிருக்கிறீர்கள். அதுவும் நல்ல கருத்து. அதையும் செய்யச் சொல்லியிருக்கிறோம். அப்படி எங்காவது விடுபட்டால், அதற்கு ஒரு திட்டம் போட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனி கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ** என்று சொன்ன வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், உரையை முடியுங்கள். நேரமில்லை.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** உரையை முடித்துவிடுகிறேன். எல்லோருக்காகவும்தான் நான் பேசுகிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நேரமாகிவிட்டது, உரையை முடியுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இன்றைக்கே சொல்லி, union–க்கு வருகிற drought fund–ல் சின்டெக்ஸ் தொட்டிகளை வைக்க permission கொடுக்கச் சொல்லுங்கள். அடுத்து, M.L.A. fund–லிருந்து மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் வழங்குவதற்கு நமக்கு provision இருக்கிறது. ஆனால், அந்த provision–ல் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், நாம் சொல்கிற நபருக்குக் கொடுக்கமாட்டார்களாம். ஏற்கெனவே அவர்கள் வைத்துள்ள list–ல் உள்ளவர்களுக்குத்தான் கொடுப்பார்களாம். நாம் கொடுக்கிற list–ன்படி கொடுப்பதில்லை. எனவே, M.L.A.–க்கள் யாருக்கு சிபாரிசு செய்கிறோமோ, அவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும். அதுதான் நியாயம். அதுதான் நமக்குள்ள அதிகாரம். அதை எப்படி நாம் விட்டுக்கொடுக்க முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 12–30*

***மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின்கீழ் ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டு, அதன்மூலம் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையின்கீழ் தேர்வு செய்யப்படுகின்ற பயனாளிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. இந்த நிலையில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்கின்ற நபர்கள், தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்படும்போது, அவர்களுக்கு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அதிகாரிகளிடம் இதுகுறித்துக் கேட்டோம். அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், “நீங்கள் பரிந்துரை செய்யும் நபர்களுக்குக் கொடுக்க இயலாது; நாங்கள் தேர்வு செய்து வைத்துள்ள பட்டியலிலிருந்து நீங்கள் பயனாளிகளைத் தேர்வு செய்யுங்கள்” என்று சொல்கிறார்கள்.



இப்படிப்பட்ட நிலையில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து எதற்காக 5 இலட்சம் ரூபாயை இதற்காக நாம் கொடுக்க வேண்டும்? அதற்கு அரசாங்கமே நேரடியாக நிதி ஒதுக்கீடு செய்யலாமே? நாங்கள் அந்த 5 இலட்சம் ரூபாயை வேறு ஏதாவது பணிகளுக்குக் கொடுத்து விடுவோம் அல்லவா? அந்த நிதியை எதற்காக சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நீங்கள் எடுக்க வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் ஆகியோரை உடனடியாக அணுகி, இந்தக் குறிப்பிட்ட பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். Union Office அல்லது Municipality Office–ல் எங்களுக்கென்று தனியாக அலுவலகம் இல்லாத காரணத்தினால், அங்கு சென்றால் நாங்கள் peon மாதிரி வாசலில்தான் நிற்கிறோம். இதற்கு முன்பு, அங்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று தனியாக ஒரு அறை ஒதுக்கப்பட்டிருந்தது. எனவே, அதை ஒதுக்கித்தர உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது, Chairman இல்லாத காரணத்தினால், அவர்களுக்கான அறை உபயோகம் இல்லாமல்தான் இருக்கிறது. அதை நாங்கள் உபயோகப்படுத்திக் கொள்கிறோம். அதேபோன்று, சட்டமன்ற உறுப்பினர்கள் பயன்பாட்டிற்காக இதற்கு முன்னர் அங்கு jeep கொடுப்பார்கள். இப்போது எங்களுக்கு அந்த jeep தேவையில்லை. நாங்களெல்லாம் car வைத்திருக்கின்றோம். எனவே, நகராட்சி மற்றும் ஊராட்சிகளில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று அறை ஒன்றை ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதை அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் ஏற்றுகொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, 1977 மற்றும் 1980 ஆண்டுகளிலிருந்தே IAY scheme–ல் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். அந்த வீடுகள் அனைத்தும் பழுதடைந்து விட்டன. இப்போது அந்த வீடுகளிலுள்ள பழுதுகளை நீக்குவதற்கும், maintain செய்வதற்கும் ஒரு list தயார் செய்துள்ளீர்கள். அந்த list–ல் உள்ளவர்களுக்கு உரிய நிதி கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வேலைகளை எல்லாம் நீங்கள் செய்து கொடுத்தால், முதலில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத்தான் மக்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும்.

அருப்புக்கோட்டை மற்றும் விருதுநகர் நகராட்சிப் பகுதிகளில் குடிதண்ணீர் பிரச்சினை மிகவும் மோசமாக உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்றைக்குப் பேசும்போது, தாமிரபரணி மற்றும் இன்னொரு திட்டத்தை தருவதாகவும், அதை ஆய்வு செய்வதாகவும் தெரிவித்தீர்கள். அருப்புக்கோட்டை மற்றும் விருதுநகர் பகுதிகளில் குடிதண்ணீர் பிரச்சினை படுமோசமாக இருக்கிறது. அதன் காரணமாக, அந்தப் பகுதிகளுக்கு எந்தவிதமான நிகழ்ச்சிகளுக்கும் செல்ல முடிவதில்லை. அப்படியே சென்றாலும், அந்தப் பகுதியிலுள்ள பெண்கள், வாகனத்தைச் சூழ்ந்து கொண்டு தண்ணீர் பிரச்சினையைப்பற்றி கூறுகிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் தொகுதியான சிவகாசி மற்றும் திருத்தங்கலுக்கு தாமிரபரணி திட்டம் செயல்படுத்தப்பட்டுவிட்டது. அவரிடம் கேட்காதீர்கள்; அந்தத் திட்டம் வந்துவிட்டது என்று சொல்வார். எங்களது அருப்புக்கோட்டை மற்றும் விருதுநகர் பகுதிகளுக்கு இன்னும் தாமிரபரணி திட்டம் செயல்பாட்டிற்கு வரவில்லை. எல்லா திட்டங்களும் எங்கள் ஆட்சியில் கொடுக்கப்பட்டதுதான். அண்ணன் தளபதி அவர்கள்தான் சிவகாசி மற்றும் திருத்தங்கலுக்கு ஏற்கெனவே தாமிரபரணி திட்டத்தை கொடுத்தார்கள். இப்போது, புது திட்டம் ஒன்றை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, நீங்கள் கொடுத்த திட்டத்தை நான் இல்லையென்று சொல்லவில்லை. நாங்கள் முதலில் ஒரு திட்டத்தைக் கொடுத்தோம். நீங்கள் ஒரு திட்டத்தை இப்போது கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். அருப்புக்கோட்டை மற்றும் விருதுநகர் பகுதிகளுக்கென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, தாமிரபரணி தண்ணீரைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அருப்புக்கோட்டையில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டங்களையெல்லாம் செய்து கொடுத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நல்ல பெயர் கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த வேலைகளையெல்லாம் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் தொடர்பாக ஊர்களில் வேறு மாதிரி பேசுகிறார்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் வேண்டாம். (குறுக்கீடுகள்) அதுமாதிரியெல்லாம் ஒன்றும் இல்லை. நீங்கள் ஏன் அதுமாதிரியெல்லாம் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அப்படியெல்லாம் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. (குறுக்கீடுகள்) வேண்டாம்; அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் வேறு பொருள் குறித்துப் பேசுங்கள். (குறுக்கீடு) அதை நீக்கிவிட்டேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நான் வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருக்கு தொகுதி அலுவலகம் இல்லையென்று பல்லாவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார். அதை கட்டிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையிலே இவ்வளவு நேரம் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், வேலூர் பற்றியா, சரி கேளுங்கள்.

பிற்பகல் 12–35

*__திரு. துரைமுருகன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். Smart City என்று ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதில், வேலூரையும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சேர்த்திருக்கிறீர்கள். அங்கு ஒரு Commissioner–தான் இருக்கிறார்; வேறு யாரும் கிடையாது. அதில் என்னென்ன திட்டங்களைச் சேர்ப்பது, எப்படி செயல்படுத்துவது என்பது பற்றியெல்லாம் அவர்தான் முடிவு செய்கிறார். நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட M.L.A.–க்கள் இருக்கிறோம். வேலூர் சட்டமன்ற உறுப்பினர் இருக்கிறார். வேலூர் மாநகராட்சியில் 16, 17 வார்டுகள் உள்ளன; காட்பாடி உள்ளது. அடுத்து, சட்டமன்ற உறுப்பினர் திரு. நந்தகுமார் இருக்கிறார்; ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் இருக்கிறார்; இதுபோன்று நாங்கள் 4 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறோம். ஆனால், எங்கள் யாரையும் அவர் கூப்பிட்டு, இத்திட்டத்தில் என்ன செய்யலாம்; எப்படிச் செய்யலாம் என்று எதுவுமே கேட்பது கிடையாது. அவர்களாகவே ஏதோ ஒன்றைச் செய்துகொள்கிறார்கள். இரண்டாவதாக, தண்ணீர்ப் பிரச்சினையில்கூட, எந்தெந்த கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று கலந்தாலோசிப்பதில்லை. தற்போது ரூ.190 கோடியில் டெண்டர் விட்டார்கள் என்று பேசிக்கொள்கிறார்கள். ஆனால், அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால், development–ஐப் பொறுத்தவரையில், அந்தந்தத் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து, உட்கார வைத்து, Smart City திட்டத்தில் உங்கள் தொகுதியில் என்ன செய்ய வேண்டும் என்று கேட்க வேண்டாமா? இதுவரையிலும் எதையும் கேட்கவில்லை. எங்களை மட்டும் அல்ல; அந்த மாநகராட்சிப் பகுதியில் இருக்கின்ற அனைத்துக் கட்சியினரையும் அழைத்து, கருத்துகளைக் கேட்க வேண்டும் என்கின்ற உத்தரவினை நீங்கள் கண்டிப்பாக பிறப்பிக்க முடியுமா என்று நேரடியாக அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சில கருத்துகளைக் கூறினார்கள். Smart City திட்டம் என்பது மத்திய அரசினுடைய திட்டம். மாநில அரசின் share அதில் இருந்தாலும்கூட, இதற்கு முன்பே மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடந்து முடிந்துவிட்டது. கடந்த முறையே அம்மா அவர்களின் அரசு இருக்கும்போது



கருத்துக் கேட்புக் கூட்டம் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. அதற்குப் பிறகு, மத்திய அரசினுடைய norms–படிதான் அதைச் செய்கிறோம். இத்திட்டத்தில் 2020 வரை, ஒவ்வொரு வருடமும் பணிகளைச் செய்யவிருக்கிறோம். முதலில் சாலைப் பணிகளை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதன்பிறகு, குடிநீர்த் திட்டம், பாதாளச் சாக்கடைத் திட்டம், பூங்காக்களை அமைத்தல் என்று அவர்கள் norms–ஐக் கொடுத்திருக்கிறார்கள். அதன்படிதான் திட்டம் செயல்படுத்தப்படும். கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தி, மக்களிடத்தில் கருத்துகளைக் கேட்டிருக்கிறார்கள். அதுபோல் சென்ற முறையே சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலும் பொதுவாகக் கேட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், மாவட்ட அலுவலகங்களில் நடக்கக்கூடிய கூட்டங்களுக்குச் சென்று, நீங்கள் அடிக்கடி தொகுதி சார்ந்த பிரச்சினைகள் குறித்துப் பேசக்கூடியவர் என்று எப்பொழுதும் தகவல் வருகின்றது. Smart City திட்டத்தைப் பொறுத்தவரையில், கருத்து கேட்புக் கூட்டம் நடத்தி, பொது மக்கள் மட்டுமல்ல; Association என்று எல்லாத் தரப்பினரிடமும் கருத்துகளைக் கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அது அனைத்தும் Internet–ல் வந்துவிடுகிறது; அதனைத் தெரியப்படுத்தச் சொல்லலாம். எனவே, இந்த norms முழுவதும் மத்திய அரசாங்கத்தினுடையது. இந்தியா முழுவதும் ஒரே norms போடுகிறார்கள். அதன்படிதான் திட்டத்தை எடுத்துக்கொள்கிறோம். (குறுக்கீடு) கருத்துகளையெல்லாம் முதலிலேயே கேட்டார்கள் என்றுதான் சொல்கிறேன். (குறுக்கீடு)

அதேபோல், I.A.Y. திட்டத்தினைப் பற்றி அண்ணன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். இதற்குமுன்பு சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் பேசும்போது சொன்னோம். தற்போது P.M.A.Y. என்று புதியதாக வீடு கட்டும் திட்டம் வந்துள்ளது. அதிலேகூட சில norms எல்லாம் இருந்தன. அதுகுறித்துப் பேசுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி டெல்லி சென்றேன். இதில் அனைத்து வீடுகளையும் சேர்க்க முடியாத சூழ்நிலை இருந்தது. நம்முடைய தமிழகத்தினைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, I.A.Y. திட்டம் இருக்கும்போது, வீடுகளையெல்லாம் முடித்துவிடுவோம். அதாவது, மத்திய அரசின் திட்டமான, “இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்” என்று அவர்களது பெயர் இருந்தாலும்கூட, வீடுகளைக் கட்டி முடித்துவிடுவோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

ஆட்சியில்கூட கடைசியாக பங்கீடு விகிதம் 60:40 என்றுதான் இருந்தது. அப்படியிருந்தும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ரூ.50,000/– கூடுதல் நிதியாக வழங்கியது. மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.72,000/–, மாநில அரசின் பங்குத் தொகை ரூ.98,000/–. மத்திய அரசைவிட நாம் அதிகமாக நிதியைக் கொடுக்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்கள் இதற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ததன் காரணமாக, மற்ற மாநிலங்களைக்காட்டிலும் தற்போது அனைத்து வீடுகளையும் நாம் வேகமாக கட்டி முடித்து, மற்ற மாநிலங்களில் முடிக்காமல் உள்ள வீடுகளுக்கான நிதியைக்கூட நாம் வாங்கி இங்கே செய்து முடித்திருக்கிறோம். P.M.A.Y. திட்டத்தில்கூட ஒருசில norms–களை மாற்றிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களைச் சந்தித்ததன் விளைவாக, அனைத்து வீடுகளையும் எடுத்துச் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயந்தி பத்மநாபன் அவர்கள் கேட்கும்போதுகூட இதுகுறித்துச் சொல்லியிருக்கிறேன். ஒரு வீட்டினை ஒருவர் பெயரில் கொடுத்துவிட்டால், அவர்களது குடும்பத்தினைச் சேர்ந்த மற்றொருவருக்கு பக்கத்தில் இடமிருந்தால் இத்திட்டத்தில் வீடு கட்டிக்கொள்ளலாம் அல்லது முழுமையாக பழுதடைந்திருந்தால், அந்த வீட்டினை முழுமையாக இடித்துவிட்டு, கட்டும்போது மாத்திரம் டாக்குமெண்டினை வேறு பெயரில் மாற்றி, அந்த வீட்டினை புதிதாகக் கட்டிக்கொள்ளலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுபோல், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். ராஜா அவர்கள் நேற்றையதினம் பேசும்போது, ஆந்திரா முதல்வர் அவர்களின் 1100 என்ற தொலைபேசி எண்ணின் சேவை குறித்துச் சொன்னார்கள். இதுகுறித்து நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் சாதாரண மக்கள் தங்களது குறைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 19–1–2016–ல் அம்மா அழைப்பு மையம் என்ற திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இதன்மூலம் பொது மக்கள் தங்களது குறைகளை 1100 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாகத் தெரிவித்து, அது பதிவு செய்யப்பட்டு, உடனுக்குடன் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு, தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மற்ற மாநிலங்களில் ஒருசில துறைகளில் மட்டுமே



அழைப்பு மையங்கள் வைத்துள்ளனர். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கி, பொது மக்களின் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண 24 மணி நேரமும் செயல்படும் அம்மா அழைப்பு மையங்களை நிறுவினார்கள். தமிழகத்தில் அம்மா அழைப்பு மையங்களின் செயல்பாட்டினை வியந்து பாராட்டிய ஆந்திர மாநில முதலமைச்சர் மாண்புமிகு சந்திரபாபு நாயுடு அவர்களால், தமிழகத்தில் செயல்படும் அம்மா அழைப்பு மையங்கள் போலவே, ஆந்திர மாநிலத்தில் தற்போது செயல்படுத்தப்படுகிறது. இங்கு வந்து இதனைப் பார்த்துவிட்டுச் சென்றபிறகுதான், அவர்கள் அங்கு இத்திட்டத்தினைச் செயல்படுத்தியுள்ளார்கள். கடந்த ஆண்டில் மட்டும் பொது மக்களால் 14 இலட்சம் அழைப்புகள் அம்மா அழைப்பு மையத்தில் பதிவு செய்யப்பட்டன. அவற்றில் 97 சதவிகிதம் மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. இதுகுறித்து நான் நேற்றே இந்த அவையில் பேசலாம் என்றிருந்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் "நாளை பேசுங்கள்" என்று சொன்னதால், இன்று பேசுகிறேன். அதுபோல், நகராட்சிக்குக் கட்டடம் கேட்டீர்கள். அதுகுறித்து, விரைவாக ஆய்வு செய்யப்பட்டு, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.

**திரு. C.V. சேகர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையில், சிங்கம்போல் வீற்றிருந்த எங்களின் திராவிடத் தாய் இன்று இல்லை. அம்மா இல்லாத இந்த அவை, மூலவர் இல்லாத திருக்கோயிலைபோல் உள்ளது. காலம் அளித்த கருணைப் பெட்டகத்தை, அந்தக் காலன் களவாடிச் சென்றுவிட்டானே" என்ற கவலையோடும், வேதனையோடும்தான் நாங்கள் எங்கள் கடமையைச் செய்து வருகிறோம். 'வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோல்' இங்கு சிலர், "அரசியலில் வெற்றிடம் விழுந்துவிட்டது, ஆட்சியாளர்கள் அனாதையாகிவிட்டார்கள், கட்சியிலே விரிசல் விழுந்துவிட்டது, இன்றோ, நாளையோ கவிழ்ந்து விடும்; இல்லை, கவிழ்த்து விடலாம்" என்று இன்று

புதியதாய் முளைத்த ஜனநாயகக் காவலர்கள் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள்.

கனவு காணட்டும்; அது அவர்களின் உரிமை. மறைந்த ஜனாதிபதி ஐயா அப்துல் கலாம் அவர்கள்கூட "கனவு காணுங்கள்" என்றுதான் சொல்லியிருக்கிறார். அவர் காணச் சொன்னது நல்ல கனவு. ஆனால் இவர்கள் காண்பதோ கெட்ட கனவு; (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் பகல் கனவு; நிச்சயம் இவர்கள் கனவு ஒருபோதும் பலிக்காது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியின் கோரிக்கைகள் ஒரு சிலவற்றை தங்கள் வாயிலாக அரசுக்கு வைக்கின்றேன். ஏனைய கோரிக்கைகளை சட்டமன்றப் பதிவேட்டில் பதிவேற்றம் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நெல் சாகுபடியை நம்பியிருக்கின்ற பட்டுக்கோட்டை தொகுதி மக்கள் கடுமையான வறட்சியின் காரணமாக, விவசாயம் பொய்த்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தென்னை விவசாயத்தைப் பெரிதும் நம்பி வாழும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் வகையில், தேங்காயை அரசே கொள்முதல் செய்து, அதை தேங்காய் எண்ணெய்யாக உற்பத்தி செய்து கூட்டுறவு அங்காடிகளில் அரசே விற்பனை செய்யும்போது, தென்னையை நம்பி வாழும் விவசாயிகளின் வாழ்வாதாரம் பெரிதும் பாதுகாக்கப்படும். இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால், தென்னை விவசாயிகளின் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

விண்ணப்பித்து நிலுவையில் உள்ள விவசாய மின்னிணைப்புகளை காவேரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு உடனடியாக வழங்கினால், இப்பகுதி மக்கள் பெரிதும் பயன் பெறுவார்கள். கடலில் கலக்கும் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தும்விதமாக, நசுவினி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து, இறைத்தல் திட்டம்மூலம் மண்ணங்காடு சி.எம்.பி. வாய்க்காலின்மூலம் தண்ணீர் சென்றால், 15–க்கும் மேற்பட்ட கிராமங்கள் பாசன வசதி பெறும். அந்த வகையில் இத்திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை ஒன்றியம், மகாராஜ சமுத்திரம் ஆற்றில் நம்பிவயல் கிராமம் அருகில் தடுப்பணை அமைத்து, 20–க்கும்



மேற்பட்ட கிராம விவசாயிகள் பயன்பெறும் வகையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பட்டுக்கோட்டை தொகுதியில் மகளிர் கலை அறிவியல் கல்லூரி அமைக்கப்பட வேண்டும். பட்டுக்கோட்டை வட்டம், தமிழ்நாட்டில் உள்ள பெரிய வட்டங்களில் ஒன்றாகும். அதை பட்டுக்கோட்டை கிழக்கு, பட்டுக்கோட்டை மேற்கு என இரு வட்டங்களாகப் பிரித்து, பட்டுக்கோட்டை நகரமே இரண்டு வட்டங்களின் தலைமையிடமாக இருக்கும்படி செய்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை நகருக்கு பாதாளச் சாக்கடை வசதி செய்துதர வேண்டும். பட்டுக்கோட்டை நகருக்கு புதிய பஸ் நிலையம் அமைத்துத்தர வேண்டும். பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள அனைத்துப் பணியிடங்களும் நிரப்பப்பட வேண்டும். குறிப்பாக, மயக்க மருந்து நிபுணர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். ஏனென்றால், மன்னார்குடி மாவட்ட மருத்துவமனையைவிட பெரிய மருத்துவமனை பட்டுக்கோட்டை மருத்துவமனை. இங்கு மயக்க மருந்து நிபுணர்கள் பற்றாக்குறையால், அறுவை சிகிச்சை செய்ய வேண்டி இங்கு வருகின்ற நோயாளிகள் எல்லோரையும் தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட வேண்டிய அவல நிலை உள்ளது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து தனிக் கவனம் எடுத்து இங்கு மயக்க மருந்து நிபுணர்களை நியமித்திட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன். பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையின் கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு செய்யப்பட்டு, Trauma Care Centre நிறுவப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன். மேலும், மதுக்கூர் நகரில் பஸ் நிலையம் விஸ்தரிப்பு செய்யப்படவேண்டும். மௌலானா தோப்பில் உள்ள ஏழை மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அமைத்துதர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12–45*

பட்டுக்கோட்டை நகரில் உள்ள தாலுகா மற்றும் நகர காவல் நிலையங்களுக்கு போதுமான காவலர்கள் நியமனம் செய்யப்படவேண்டும். குறிப்பாக, பட்டுக்கோட்டை நகரின் சாலை நெரிசலைக் கட்டுப்படுத்தி, போக்குவரத்தை சரி செய்ய

போதுமான போக்குவரத்துக் காவலர்கள் (Traffic Police) நியமனம் செய்யப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இது மிகவும் அவசியமான ஒன்றாகும். பட்டுக்கோட்டை நகரில் இயங்கிவரும் கூட்டுறவு I.T.I–க்கு சுற்றுச்சுவர் கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிராம்பட்டினம் பேரூராட்சியிலுள்ள அனைத்து சாலைகளும் சீரமைக்கப்பட வேண்டும். அதிராம்பட்டினம் கரையூர் தெருவில் சமீபத்தில் ஏற்பட்ட தீ விபத்தில், 60–க்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் தங்கள் வீடுகள் மற்றும் உடைமைகளை இழந்து நிர்கதியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசே அடுக்குமாடிக் குடியிருப்புகளைத் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏரிப்புக்கறை கிராமத்தில் ஏழை மீனவக் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித்தர வேண்டும்.

பட்டுக்கோட்டை வட்டம், சூரப்பள்ளம் கிராமத்தில் 50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அமைத்துத் தர வேண்டும். பட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள பாசன வாய்க்கால்கள் மற்றும் ஏரிகளில் உள்ள பழுதடைந்துள்ள அனைத்து மதகுகளையும் சரிசெய்து, நீர் நிலைகளை உயர்த்தித் தர வேண்டும். பட்டுக்கோட்டை வட்டம், மதுக்கூர் அருகே பட்டுக்கோட்டை–மன்னார்குடி சாலையில் நசுவினி ஆற்றின் குறுக்கே உள்ள பழுதடைந்த பாலத்திற்கு பதில் புதிய பாலம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சித் துறை மற்றும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இலட்சிய திட்டங்களை நிறைவேற்றி வரும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை என்ற துறைகளுக்கான மானியக் கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்து, அதன்மீது இரண்டாவது நாளாக நடைபெறும் இவ்விவாதத்தில் ஒரு சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

*ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை:* தமிழ்நாட்டில் குக்கிராமங்களை மேம்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள



15,524 ஊராட்சிகளில் உள்ள 79,394 குக்கிராமங்களுக்கும் சமமான நிலையில் நிதியினைப் பகிர்ந்தளிக்கும் வகையில், 2011–2012–ல் தாய் திட்டம் தொடங்கப்பட்டு, சுமார் 3,680 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்கீழ் நடைபெற்ற பணிகள் 2,31,769 ஆகும். இதில் குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், சுடுகாடு மற்றும் இடுகாடு அமைத்தல் மற்றும் அதற்கான சாலைகள், அங்கன்வாடி மையம், பொது விநியோகக் கடை, சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடம், கதிர் அடிக்கும் களம், விளையாட்டு மைதானம் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டன.

*ஊரகக் குடியிருப்பு–சூரிய சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம்:* இத்திட்டம் 2011–2012–ல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி தங்கத் தாரகை அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 2016 ஆம் ஆண்டு வரை ஐந்து ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகை 5,940 கோடி ரூபாய். கட்டப்பட்டுள்ள பசுமை வீடுகளின் எண்ணிக்கை மூன்று இலட்சம். நாட்டிலேயே வேறு எங்கும் 300 சதுர அடி கொண்ட வீடுகள் வழங்கப்படவில்லை. மேலும், இத்திட்டம் 2016–2017 ஆம் ஆண்டு முதல் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு, ஆண்டொன்றிற்கு 20,000 வீடுகள் வீதம் ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அம்மா அவர்களின் கனவை சுமந்து இந்த அரசு நடைபோடுவது பாராட்டுக்குரியது. ‘அனைவருக்கும் இல்லம்’ என்ற அம்மா அவர்களின் இலட்சிய கனவு நிறைவேறி வருகிறது. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், இதுவரை 767 கோடியே 15 இலட்சம் ரூபாய்க்கான பணிகள் நடந்துள்ளன. இத்திட்டத்தின்கீழ் முன் இருந்ததுபோல் ஆண்டொன்றுக்கு 100 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–50

*தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்:* தமிழ்நாட்டில் முதலில் 6 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டமானது, தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் விஸ்தரிக்கப்பட்டது. ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் அடிப்படை வளத்தை உருவாக்குதல்; சமூகப் பங்களிப்பை உறுதி செய்ய

திறம்பட செயலாற்றுதல்; ஊராட்சி முறையை வலுப்படுத்துதல்; இத்திட்டம் தேசத்திலேயே சிறப்பாக தமிழ்நாட்டில்தான் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் ஒரு கோடியே 17 இலட்சம் பேர் வேலை அட்டை பெற்று பயனடைந்து வருகின்றனர். குறிப்பாக, பெண்களின் பங்களிப்பு இதில் 86 சதவீதம் இருந்து வருகிறது. இந்த நிதியாண்டில் ஊரகப் பகுதிகளில் 100 கோடி செலவில் 500 அம்மா பூங்காக்களையும், அதைப்போல, 500 அம்மா உடற்பயிற்சி மையங்களையும் அமைக்க ரூ.50 கோடி ஒதுக்கியிருப்பது பாராட்டுக்குரியது.

நகர்ப்புற வளர்ச்சித் துறை: 50 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மாநகராட்சியை மிகப் பெரிய நகரமாக வளர்ச்சியடையச் செய்தல்; 10 நகரங்களை 1 இலட்சம் கோடி ரூபாய் செலவில் உலகத்தரம் வாய்ந்த நகரங்களாக உருவாக்குவது; ஏனைய நகரங்களை நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 50 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் செயல்படுத்துதல்; நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த கடந்த ஆண்டுகளில் 2,662 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இரண்டாயிரத்து 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மத்திய, மாநில அரசுகளின் பங்கீட்டில் 9 குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 90 பூங்காக்கள் அமைத்தல் போன்ற பணிகள் செயல்படுத்தப்பட இருப்பது வரவேற்கத்தக்கது. இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிவித்த முன்னோடித் திட்டமான மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் விளைவாக, நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு, திறன் இரண்டாயிரத்து 700 மில்லியன் கன அடியாக உயர்ந்துள்ளது. இந்தத் திட்டத்தை மத்திய அரசும், பல்வேறு மாநிலங்களும் பாராட்டியதை இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். சீர்மிகு நகரங்களான மதுரை, வேலூர், சேலம் மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சிகளின் தேவைகளைச் செயலாக்க மத்திய, மாநில அரசின் பங்களிப்பாக 879 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டது அந்நகரங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நிற்கும்.

"தமிழகமே எனது குடும்பம்; தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள்; தமிழக மக்களின் நலனே என் நலன்" என்றும், "மக்களால் நான்; மக்களுக்காக நான்" என்ற இலட்சிய வழிநின்று, அல்லும் பகலும் அயராது பாடுபட்டு, மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் குடிகொண்டுள்ள எங்கள் மாதரசி அம்மா அவர்கள், கடந்த 5 ஆண்டுகளில் இந்தத் துறைகளின்மூலம்



மக்களுக்கு ஏராளமான திட்டங்களைத் தீட்டி நன்மைகளைச் செய்துள்ளார்கள். ஏழையெளிய மக்களின் பசிப்பிணி தீர்க்க அம்மா உணவகம் கொண்டு வந்தார். கிராமப்புற ஏழைத் தாய்மார்களின் துயர் துடைக்க, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகளை வழங்கியவர் எங்கள் அம்மா. மாணவச் செல்வங்கள் மகிழத்தக்க வகையில் விலையில்லா மடிக்கணினி வழங்கி அவர்கள் வாழ்வில் அறிவு விளக்கேற்றி வைத்தவர் எங்கள் அம்மா. உழைத்து, களைத்து வீடு திரும்பும் தாய்மார்களின் கஷ்டங்களைக் குறைப்பதற்காக விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி வழங்கியவர் இதய தெய்வம் அம்மா. அம்மா குடிநீர், அம்மா உணவகம், அம்மா பரிசுப் பெட்டகம், அம்மா உப்பு, அம்மா சிமெண்ட், அம்மா மருந்தகம் இப்படி அம்மா பெயரிலான அற்புதத் திட்டங்கள் எல்லாம் அந்த இதய தெய்வத்தை காலமெல்லாம் எங்களுக்கு நினைவுறுத்தும். உலக நாடுகள் போற்றும் திட்டங்களான தொட்டில் குழந்தைத் திட்டம், அயல்நாட்டினரும் பாராட்டிய அனைத்து மகளிர் காவல் நிலைய திட்டம், பெண்களுக்குப் பெருமை சேர்க்கவும், ஆண்களுக்கு நிகர் சரிசமமாக பெண்களை உயர் நிலைக்குக் கொண்டுவர முடிவெடுக்கும் அதிகாரமிக்க தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் போன்ற உயர் பதவிகளில் பெண்களை நியமித்த துணிச்சலான போக்கு, இவையனைத்தும் எங்கள் அம்மாவின் ஆளுமைத்திறனைப் பறைசாற்றும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பலருக்கும் பலவிதமான இலட்சியங்கள் இருக்கலாம். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இருந்த ஒரே இலட்சியம் என்ன என்பதை அவரே சொல்கிறார். "ஒரு காலக்கட்டத்தில் தமிழக மக்களுக்கு யாரும் எந்த ஒரு உதவியும் இலவசமாக தர வேண்டிய அவசியம் இருக்கக்கூடாது. தமிழக மக்கள் யாரிடத்திலும் கைநீட்டிப் பெறுகின்ற நிலை இருக்கக் கூடாது. அந்நிலையை என் வாழ்நாளில் நான் காண வேண்டும் என்ற ஆசை எனக்கு இருக்கிறது. அதுதான் என்னுடைய இலட்சியம். அதுமட்டுமல்ல; இந்த மாநிலம் தொழில் முதலீடு, பொருளாதார வளர்ச்சி, சமூகநீதி, மிக முக்கியமாக நம் மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றிலும் முதலிடம் பெறுவதே என் இலட்சியம்" என்றார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 12–55

## தொகுதிக் கோரிக்கைகள்

பட்டுக்கோட்டை நகராட்சி, புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும். பட்டுக்கோட்டை நகராட்சி, 25–வது வார்டில் சமுதாயக் கூடம் அமைத்துத் தர வேண்டும்.

பட்டுக்கோட்டை நகராட்சி, மதுக்கூர் மெயின் ரோடு–சுண்ணாம்புக்காரத் தெரு மாட்டுச்சந்தை, மேலத்தெரு மெயின் சாலை–வெட்டிக்காடு, பாளையம் ஆற்றுக்கரை சாலை–முதல்சேரி அதிராம்பட்டினம் ரோடு, பெருமாள் கோயில் தெரு–வெட்டிக்காடு கீழ் ஆற்றங்கரை சாலை ஆகிய இடங்களில் தார்ச் சாலைகள் அமைத்துத் தர வேண்டும்.

பட்டுக்கோட்டை ஒன்றியம், முதல்சேரி ஊராட்சி–பழைய முதல்சேரி ஆற்றங்கரை சாலை; சேண்டாக்கோட்டை மாளியக்காடு இணைப்புச் சாலை, சூரப்பள்ளம்–ஆலடிக்குமுளை இணைப்புச் சாலை, திட்டக்குடி–சூரங்காடு காளியம்மன் கோவில் சாலை, கோட்டாகுடி சிவன் கோவில் சாலை, வெண்டாக்கோட்டை மாதா கோயில் சாலை, ஏனாதி செல்லியம்மன் கோவில் சாலை, செண்டாங்காடு–தளிக்கோட்டை இணைப்புச் சாலை, பழஞ்சூர் ஆறுவேலிகொல்லை பள்ளிக்கூட சாலை, செம்பாளூர்–எட்டுபுளிக்காடு காளியம்மன் கோவில் சாலை, செங்கப்படுத்தான்காடு–சுந்தரநாயகிபுரம் தட்டாங்கன்னிகரை சாலை, சாந்தங்காடு கோனார் தெரு மயான சாலை, தாமரங்கோட்டை வடக்கு ஊராட்சி செந்தவேளான் தெரு திருவாசல் சாலை, தம்பிக்கோட்டை மேலக்காடு–ஒதியடிக்காடு இணைப்புச் சாலை, துவரங்குறிச்சி தெற்கு மாரியம்மன் கோவில் தெற்கு வேலிச் சாலை, பள்ளிகொண்டான் மயான சாலை, மகிழங்கோட்டை பொதுப் பணித் துறை வாய்க்கால் மேலக்கரை மண்சாலை ஆகிய சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றி அமைக்க வேண்டும்.

பட்டுக்கோட்டை தஞ்சாவூர் சாலையிலிருந்து அறந்தாங்கி சாலை சேதுபாவாசத்திரம் ரோடு, அதிராம்பட்டினம் சாலை, முத்துப்பேட்டை சாலை வரை புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டும்.



சூரப்பள்ளம் ஊராட்சி, 1–வது வார்டு, கீழத்தெரு; துவரங்குறிச்சி வடக்கு நடுத் தெரு, பள்ளிகொண்டான் ஆதி திராவிடர் தெரு ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்துத் தர வேண்டும்.

பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்தித் தர வேண்டும். தம்பிக்கோட்டை, வடகாடு ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தித் தர வேண்டும். தாமரங்கோட்டை அரசு மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையில் (30 படுக்கை) போதிய மருத்துவர்கள் நியமிக்க வேண்டும்; சுற்றுச்சுவர் கட்டித்தர வேண்டும்.

தாமரங்கோட்டை வடக்கு, பகுதி நேர கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டும். பொன்னவராயன்கோட்டை கூட்டுறவு தொழில் பயிற்சி மையத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்துத் தர வேண்டும்.

பட்டுக்கோட்டை ஒன்றியம், பரக்கலக்கோட்டை சிரமேல்குடி சாலை, துவரங்குறிச்சி–தம்பிக்கோட்டை மறவக்காடு சாலை, பரக்கலக்கோட்டை பொதுவுடையார்கோவில் ஆர்ச் சாலை–மறவக்காடு, ஏனாதி பாலம்–வேப்பங்காடு கிளாமங்கலம் சாலை, அதிராம்பட்டினம் மன்னார்குடி சாலை, செண்டாங்காடு–ஆத்திக்கோட்டை சாலை, தம்பிக்கோட்டை E.C.R. சாலைகளை அகலப்படுத்தித் தர வேண்டும்.

பட்டுக்கோட்டை ஒன்றியம் மழவேனிற்காடு ஊராட்சி, மிலாரிக்காடு தேத்தடி குளம்; கார்காவயல் ஊராட்சி, கோட்டாகுடி சிவன்கோவில் குளம்; பள்ளிகொண்டான் ஊராட்சி, பிள்ளையார் குளம் ஆகியவற்றில் படித்துறைகள் அமைக்க வேண்டும். பரக்கலக்கோட்டை, ஸ்ரீபொது ஆவுடையார் கோயிலில் உட்கட்டமைப்பு வசதிகள் செய்து, மேம்பாட்டுப் பணிகள் செய்ய வேண்டும்.

அதிராம்பட்டினம் பேரூராட்சி, மெயின் ரோடு இந்தியன் வங்கி–நரசிங்கபுரம் இணைப்புச் சாலை (அண்ணா தெரு வழி); மேலத்தெரு, நூல் நிலையம்–பள்ளிவாசல்; நடுத்தெரு–கீழத்தெரு (மரைக்கா பள்ளிவாசல் வழி); சேர்மன்வாடி–இ.சி.ஆர் (ஆஸ்பத்திரி தெரு); சேர்மன்வாடி–எம்.பி.லைன், E.C.R.–பாரதியார் தெரு ஆறுமுக கிட்டங்கி (சிவன் கோவில் வழி); பட்டுக்கோட்டை

சாலை—துப்புரவுப் பணியாளர் குடியிருப்பு ஆகிய இடங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

மதுக்கூர் பேரூராட்சி, பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த வேண்டும்; குடிசை மாற்று வாரியம்மூலம் மௌலானா தோப்பில் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்ட வேண்டும்; பேருந்து நிலையம் விரிவாக்கம் செய்ய வேண்டும்; துணை மின் நிலையம் அமைக்க வேண்டும்; நெடுஞ்சாலைத் துறைக்கு பயணியர் விடுதிக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டும்; பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு கட்டடம் கட்ட வேண்டும்; நூலகக் கட்டடம் கட்ட வேண்டும்.

மதுக்கூர் ஒன்றியம், சிரமேல்குடி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்; விக்கிரமம் அரசு நடுநிலைப் பள்ளிக்கு புதிய வகுப்பறை கட்டித் தர வேண்டும்; ஆலத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு புதிய ஆய்வகக் கட்டடம் கட்டித் தர வேண்டும்; மதுக்கூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மேற்கூரையுடன்கூடிய கழிப்பிட வசதி செய்தல் வேண்டும்; ஆலத்தூர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் சுற்றுச்சுவர் மற்றும் விழா அரங்கம் அமைத்தல் வேண்டும். கல்யாண ஓடை மற்றும் அத்திவெட்டி கால்நடை மருத்துவமனைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டும்.

மதுக்கூர் ஒன்றியம், ஆலத்தூர் மேலத்தெரு, பெரியகோட்டை ஊராட்சி மன்றம் அருகில், சிரமேல்குடி தேரோடும் வீதி, பழவேரிக்காடு, மன்னாங்காடு ஜெ.ஜெ. நகர், விக்ரமம் அரசு நடுநிலைப் பள்ளி, ஆலத்தூர் பெண்கள் பள்ளி வளாகம் ஆகிய இடங்களில் ஆழ்குழாய் கிணறுடன்கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டித் தர வேண்டும்.

மதுக்கூர் ஒன்றியம், பட்டுக்கோட்டை—மதுக்கூர் சாலையில் படப்பைக்காடு பாட்டுவனாச்சி பாலம் அகலப்படுத்த வேண்டும். தாமரங்கோட்டை—விக்ரமம் சாலையில் பாட்டுவனாச்சி தரைமட்டப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக அமைத்துத் தர வேண்டும்.

மதுக்கூர் ஒன்றியம், ஆலத்தூர் ஆதி திராவிடர் மயான கொட்டகை அமைக்க வேண்டும். அத்திவெட்டு பூசாரிக்காடு மயான கொட்டகை அமைக்க வேண்டும்.



மதுக்கூர் ஒன்றியம், அத்திவெட்டி மறவக்காடு—இளங்காடு சாலை; மூத்தாகுறிச்சி—சிலம்பவேளாங்காடு, காசாங்காடு சாலை; ஆலத்தூர்—ஆலம்பள்ளம் சாலை; ஆலத்தூர்—ஒட்டப்பத்தை இணைப்புச் சாலை; அத்திவெட்டி வீரையன்குளம்—கோவில்காடு இளங்காடு இணைப்புச் சாலை; கல்யாண ஓடை—பத்தாங்காடு இணைப்புச் சாலை; மதுக்கூர் வடக்கு, ஆதி திராவிடர் காளியம்மன் கோவில் சாலை; அத்திவெட்டி தபால் நிலையம்—ஆர்ச் சாலை, சிரமேல்குடி கோட்டகம் சாலை, வேப்பங்குளம்—அய்யனார்கோவில் மண் சாலை; அத்திவெட்டி தெற்கு தெரு, திரு.வி.க. சாலை; மோகூர்—சிராங்குடி இணைப்புச் சாலை; பெரியகோட்டை—வடுகன்குத்தகை—பெரியகோட்டை வெட்டிக்காடு சாலை ஆகிய சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்ற வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாலுமி இல்லாத கப்பல் இது, எப்போது இந்தக் கப்பல் திசைமாறிப் போகும், இதை குறுக்கே புகுந்து கவிழ்த்து விடலாம் என்று எண்ணுகிறார்கள் சிலர். இது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவுகளை, இலட்சியங்களை, கொள்கைகளை, கோட்பாடுகளை சுமந்து செல்லும் கப்பல் என்பது அவர்களுக்குத் தெரியாது. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட நாங்கள் எல்லோருமே மாலுமிகள்தான்; எதற்கும் அஞ்சா போர்ப்படை வீரர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் கப்பலின் கேப்டனாக அருமை அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் இருக்கிறார். இந்த ஆட்சிக் கப்பல் ஒருபோதும் திசை மாறாது; (மேசையைத் தட்டும் ஒலி) இதை கடலில் வீசி எறியப்பட்ட கட்டுமரங்களின் துண்டுகளும், ஓட்டைப் படகுகளும் ஒருபோதும் மோதி கவிழ்த்துவிட முடியாது என்பதனை ஆணித்தரமாகப் பதிவு செய்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எஸ். முத்தையா அவர்கள்.

**டாக்டர் எஸ். முத்தையா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையில், மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர்

அவர்களுக்கும் என் பணிவான நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வற்றாத கடலும், முற்றாத அலையும், கண்ணீர் உப்பும் உங்கள் கால்களை நனைக்க, வங்கக் கடல்தான் வசதி என்று அசதியாய் உறங்கும் தாயே! எங்கள் கண்கள் எங்களுக்குச் சொந்தம்; எங்கள் கண்ணீரும் எங்களுக்குச் சொந்தம்; எங்கள் உயிர் மட்டும் உங்களுக்குச் சொந்தம்; ஆயுள் முழுக்க அழுகிறோம் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்காக எரிந்த மெழுகுவர்த்தியே! நாங்கள் உங்களுக்காக உதிர்த்த கண்ணீர், முக்கடல் நிரம்பி நான்காம் கடல் ஆனதை நாடறியும் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) போதி மரம் இந்தியாவில் புத்தனை தந்தது; அதுவே, இலங்கையில் புயலைத் தந்தது; எங்களுக்குப் புத்தனாகவும், எதிரிகளுக்கு புயலாகவும் வாழ்ந்த தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) சட்டை கரையாகவும், வேஷ்டி குறியாகவும் வாழும் மனிதர்களில், எங்களுக்கு கண்மாய் கரையாக வாழ்ந்த தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா நீங்கள், எங்களை தீட்டியதால், துருப்பிடிக்காமல் மட்டுமல்ல; கூர்மையாகவும் கூடி நிற்கிறோம் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) மரமாக, மலராக, விதைக்கவா நாங்கள் புதைத்தோம் உங்களை; எங்களுக்குக் கிடைத்த அரிய புதையலையே, மீண்டும் புதைத்துவிட்டோம் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) தீர்ப்பு தீர்வாகாது தாயே! அது வாதங்களின் வெற்றி; விடைகள் மரணமடையும்; வினாக்கள் வாழும்; வேள்வியாக வாழ்ந்து, வினாவாக மறைந்த தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) மிதக்கும் படகுகளுக்கு கடலின் ஆழம் தெரியாது; உச்சிக் கிளைகளுக்கு உள்ளிருக்கும் வேர் தெரியாது; கோபுரக் கலசத்திற்கு அஸ்திவாரத்தின் ஆழம் தெரியாது; எங்களுக்கு உரம் கொடுத்து, வரம் கொடுத்து, உயிர் கொடுத்து, உயர்வு கொடுத்த தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) கல்லறை நோக்கி உங்கள் கால்களை வணங்குகிறேன்.

கண்ணுக்கும், இமைக்கும் பார்வையே சின்னமாய்! பல்லவிக்கும், சரணத்திற்கும் பாடலே சின்னமாய்! (மேசையைத் தட்டும் ஒலி) மலருக்கும், மகரந்தத்திற்கும் பழங்களே சின்னமாய்! மும்தாஜுக்கும், ஷாஜகானுக்கும் தாஜ்மகால் சின்னமாய்! சேகுவேரா, பிடல் காஸ்ட்ரோவுக்கு கியூபாவே சின்னமாய்! கண்ணகிக்கும், கோவலனுக்கும் சிலம்பே சின்னமாய்! உண்மைக்கும், உழைப்பிற்கும் வெற்றியே சின்னமாய்! அம்மாவுக்கும், அ.தி.மு.க.– விற்கும் சின்னம்மாவே சின்னமாய்! வணங்குகிறேன்.



"உயர்ந்தவன் என்ன, தாழ்ந்தவன் என்ன,
உடல் மட்டுமே கருப்பு–அவன்
உதிரம் என்றும் சிவப்பு"

என்று வெள்ளை உள்ளத்தோடு பாடிய தலைவர் M.G.R. மூன்றெழுத்து; (மேசையைத் தட்டும் ஒலி) 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து மறைந்த புரட்சித் தலைவி 'அம்மா' மூன்றெழுத்து; (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மூன்றெழுத்துக்களில் எங்கள் மூச்சிருக்கும், அவர்கள் முடிந்த பின்னாலும் 'T.T.V.' என்ற பேச்சிருக்கும்; வணங்குகிறேன். பலபடி, உயர்படி, எப்படி, இப்படி, முதல்வர் அண்ணன் எடப்பாடி, உரக்க வாழ்த்தும் உலகம் சொல்லும் முதல்வரை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–00*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, "எங்களுடைய செயல் மற்றும் திட்டங்கள் அனைத்தும் மக்களுக்காகத்தான். எங்களுக்கென்று எந்த சுயநலமும் இல்லை; பொது நலம் மற்றும் மக்கள் நலம் மட்டும்தான்" என்பது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னதும்; செய்ததும். 2016 ஆம் ஆண்டு மக்கள் தொகையில் சுமார் 54.5 சதவிகிதமும், 2030 ஆம் ஆண்டு 60 சதவிகிதமும் நகர்களில் வசிக்கவேண்டிய நிலை ஏற்பட்டு, நகரின் பரப்பைவிட மக்கள் தொகை கூடும் என்று கணிக்கப்படுகிறது விஞ்ஞானம்.

தமிழ்நாட்டில் 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள், 528 பேரூராட்சிகள் உள்ளன. இவற்றிற்குக் குடிநீர் வழங்குதல், சாலைகள், கட்டடங்கள், மழைநீர் வடிகால் வசதி, திடக்கழிவு மேலாண்மை, சுற்றுப்புறச் சுகாதாரம், பேருந்து நிலையம், வர்த்தகக் கூடம் அமைத்தல் போன்ற வளர்ச்சித் திட்டங்களை நகர்ப்புற உள்ளாட்சி மூலமாக அம்மா அரசு செவ்வனே செய்து வருகிறது என்பது ஊரறிந்த உண்மை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தொலைநோக்குத் திட்டம் 2023–ன்படி, 50,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையை மிகப்பெரிய நகரமாக வளர்ச்சியடையச் செய்தலும், 10 நகரங்களை ரூபாய் ஒரு இலட்சம் கோடி செலவில் உலகத்தரம் வாய்ந்த நகரங்களாக உருவாக்குவதும், மற்ற நகரங்களில் ரூபாய்

50,000 கோடி செலவில் வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குதலும் மாண்புமிகு அம்மா அரசின் தொலைநோக்குத் திட்டங்களின் மைல் கல்லாகும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உலக வங்கி, ஜெர்மன் மேம்பாட்டு வங்கி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஆசிய வளர்ச்சி வங்கி முதலிய பன்னாட்டு நிறுவனங்கள்மூலம் நிதி பெறப்பட்டு, நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சிகளில் உள்கட்டமைப்புத் திட்டங்களை அம்மா அரசு செவ்வனே செயல்படுத்தி வருகிறது. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்காக, கடந்த ஆண்டுகளில் சுமார் ரூபாய் 2,662.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 6,510 பணிகளில் 6,069 பணிகளை முடித்துள்ளது அம்மாவின் அரசு.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, குடிநீருக்காக நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 3–ன்கீழ், ரூபாய் 661.65 கோடியும், நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுமைத் திட்டத்தின்கீழ் ரூபாய் 1,169.87 கோடியும், நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 740.47 கோடியும் செலவிடப்பட்டு, குடிநீர் விநியோகம் 1,869.55 மில்லியன் லிட்டராக அதிகரிக்கப்பட்டு, நாளொன்றுக்கு, நபர் ஒன்றுக்கு, 112 லிட்டர் வழங்கி வருகிறது புரட்சித் தலைவி அம்மாவின் அரசு.

தமிழ்நாட்டில் 36.47 இலட்சம் கட்டடங்களிலும், 744 குளங்களிலும் மழைநீர் சேமிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டு வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன. கடந்த 140 ஆண்டுகளில் இல்லாத வறட்சியால், மிகவும் மோசமான நிலைமையை சமாளிக்கும் பொருட்டு, மாநிலப் பேரிடர் நிவாரண நிதியாக ரூபாய் 100.62 கோடியில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு. ரூபாய் 11,271 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் பல்வேறு நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை செவ்வனே செயல்படுத்தி வருகிறது புரட்சித் தலைவி அம்மாவின் அரசு. மொத்தம் 23,349.93 கி.மீ. சாலைகள் தார்ச் சாலைகளாகவும், சிமெண்ட் சாலைகளாகவும், கப்பி, கற்கள் மற்றும் பேவர் பிளாக் சாலைகளாகவும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தெரு விளக்குகள் அனைத்தும் LED விளக்குகளாகவும், ரூபாய் 2,316.02 கோடியில்



நகர்ப்புற ஏழைகளுக்கு வீடுகட்டும் திட்டத்தினை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது புரட்சித் தலைவி அம்மாவின் அரசு.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ‘இந்தியாவின் அடிப்படை அலகு கிராமம். ஒரு சிறந்த மாதிரி கிராமத்தை ஒருவர் உருவாக்கினால், உலகிற்கே ஒரு மாதிரி அமைப்பினை உருவாக்கிக் கொடுக்கிறார் என்று பொருள்’ என்பது மகாத்மா காந்தியின் கூற்று. ஊரகப் பகுதியிலுள்ள ஏழையெளிய மக்களின் நலனுக்காக அடுத்த 5 ஆண்டுகளில், ஆண்டுக்கு 20,000 வீடுகள் வீதம் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டித்தர திட்டமிட்டுள்ளது புரட்சித் தலைவி அம்மாவின் அரசு.

மொத்தம் 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்களில் ஆண்டிற்கு ரூபாய் 750 கோடி வீதம் தாய்–1 மற்றும் தாய்–2 திட்டத்தின்கீழ் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தி வருகிறது புரட்சித் தலைவி அம்மாவின் அரசு. ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் அம்மா பூங்காக்களும், ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் அம்மா உடற்பயிற்சிக் கூடமும் அமைத்து, கிராம மக்களின் வளத்திலும், உடல் நலத்திலும் அக்கறை காட்டி வருகிறது புரட்சித் தலைவி அம்மாவின் அரசு. ஊரக உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நபார்டு சாலைகள் முறையே ரூபாய் 1,500.61 கோடி மதிப்பீட்டில் சுமார் 1,48,772 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்திட திட்டமிட்டுள்ளது புரட்சித் தலைவி அம்மாவின் அரசு.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு புதுவாழ்வு திட்டங்களின்மூலம் சுமார் 9.8 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயனடையும் வகையில், 1,871.85 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து செயல்பட்டு வருகிறது புரட்சித் தலைவி அம்மாவின் அரசு. வறுமை ஒழிப்பு, சாலைகள் மற்றும் பள்ளிக் கல்வி மேம்பாடு போன்ற திட்டங்களால் ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, தமிழகத்தை நாட்டிலேயே மிகச்சிறந்த முதன்மை மாநிலமாக உருவாக்கிட புரட்சித் தலைவி அம்மாவின் அரசு முனைப்புடன் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1–05

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பரமக்குடி தொகுதியின் கோரிக்கைகளை அவைமுன் சமர்ப்பிக்கின்றேன்.

பரமக்குடி நகர் மத்தியில், செயல்படாமல் மூடிக்கிடக்கும் பழைய அரசு பெண்கள் மருத்துவமனை இருக்கும் இடத்தில் புதிதாக ஓர் அவசர சிகிச்சைப் பிரிவு மருத்துவமனை கட்டடம் கட்டித்தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்டம்தோறும் மருத்துவக் கல்லூரி என்ற மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் கொள்கையின்படி, இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் அரசு மருத்துவக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்றும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். பரமக்குடி தாலுகா மருத்துவமனையில் காலியாகவுள்ள மருத்துவர் பணியிடங்களை உடனே நிரப்பிடவும், அம்மருத்துவமனைக்கு CT scan, Ultrasonogram, Digital X–Ray போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தரும்படியும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் மக்கள் நிறைந்த எமனேஸ்வரம் பகுதியில் தனியாக ஓர் அரசு பொது மருத்துவமனை அமைத்துத் தரவும், நெசவாளர் பெருமக்கள் தொழிலுக்கு உதவியாக ஒரு அல்லுகூடம் அமைத்துத் தரும்படியும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். வைகை கரையின் இரு மருங்கிலுமுள்ள சர்வீஸ் சாலையில் ஒன்றான எமனேஸ்வரம் பகுதி சாலையை, மஞ்சள்பட்டினம் வரை நீட்டிப்பு செய்தும், சாலையின் இரு மருங்கிலும் கழிவுநீர் வடிகால் அமைத்துத் தரும்படியும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடி வைகையாற்றின் குறுக்கே காட்டுப்பரமக்குடியையும் மஞ்சள்பட்டினத்தையும் இணைக்கும் ஒரு மேம்பாலமும், உரப்புளி கிராமத்தையும் ஜீவா நகரையும் இணைக்க ஒரு தரைப்பாலமும் கட்டித்தர வேண்டுமென்று பணிவோடு அம்மா அவர்களது அரசைக் கேட்டுக்கொள்கிறேன். பரமக்குடி தொகுதியில் வைகையாற்றின் குறுக்கே சூடியூர், செவ்வூர் மற்றும் எமனேஸ்வரம் ஆகிய கிராமங்களிலும், பரளையாற்றின் குறுக்கே பாளை மற்றும் கொத்தன்குளம் கிராமங்கள் அருகிலும் தடுப்பணைகள் கட்டித்தரும்படி பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசிடம் கோரிக்கையாக வைக்கிறேன். பரமக்குடி நகருக்கு பரந்து விரிந்த புதிய பேருந்து நிலையம், உள்விளையாட்டரங்கம், புதிய அரசு நூல் நிலையம் ஆகியவற்றைக் கட்டித் தருமாறு பணிவான என் வேண்டுகோளைச் சமர்ப்பிக்கிறேன். 150–க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் பணிபுரியும் பரமக்குடி சார்பு, கூடுதல் மற்றும் உரிமையியல் நீதிமன்றத்திற்கு Advocate Law Chamber கட்டடம் கட்டித் தரும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



பரமக்குடி பொன்னையாபுரம் பகுதியில் அமைந்துள்ள இரயில்வே மேம்பாலத்திற்கு அடியில் கட்டப்பட்டுவரும் சுரங்கப் பாதை பல வருடங்களாகக் கட்டி முடிக்கப்படாமல் இருக்கிறது. அதனை உடனே கட்டி முடிக்க ஆவன செய்யுமாறும், மேலும், மேம்பாலப் பணிக்காக இடிக்கப்பட்ட வீடுகளில் வாழ்ந்து வந்த ஏழையெளிய மக்களுக்குப் புதிய வீடுகள் கட்டித்தர வேண்டுமெனவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடி தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரியும், அபிராமம் பேரூராட்சியில் அரசு மேல்நிலைப் பள்ளியும் அமைத்துத் தர அம்மா அவர்களின் அரசைப் பணிவோடு வேண்டுகிறேன். பரமக்குடி தொகுதியில் ஆடு வளர்ப்பு மற்றும் கால்நடை ஆராய்ச்சி நிலையம் அமைத்துத் தந்தால் சிறப்பாக இருக்கும் என்று உங்களிடம் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். பரமக்குடி தொகுதி, நயினார்கோவில் நகரில் இருக்கும் பழமைவாய்ந்த நாகநாதர் திருக்கோயில் தெப்பக்குளத்தை தூர்வாரி, நடைமேடையும், படித்துறையும் அமைத்துத்தர வேண்டுமென்று அம்மா அவர்களின் அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நயினார்கோவில் ஒன்றியத்தில் புதிய பேருந்து நிலையமும், அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்குச் சுற்றுச்சுவரும், நயினார்கோவில் ஒன்றியம் கிளியூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி தேவையான புதிய வகுப்பறைக் கட்டடங்கள் கட்டித்தர வேண்டுமென்றும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். பரமக்குடி ஒன்றியம், பார்த்திபனூரில் நான்கு வழிச் சாலையையும், கமுதி சாலையையும் இணைக்க ஒரு புறவழி இணைப்புச் சாலையை அமைக்க வேண்டுமென்றும், வழிமரச்சான் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி, புதிய வகுப்பறை கட்டித் தர வேண்டுமென்றும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட போகலூர் ஒன்றியம், சத்திரக்குடி நகரத்தில் புதிய பேருந்து நிலையமும், வாரச் சந்தையும் அமைத்து, பழுதான சாலைகளைச் சீரமைத்து, அங்கு நிலவும் குடிநீர்த்

தட்டுப்பாட்டை தீர்த்துத் தரும்படி பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும், என் சார்பாகவும் என் தொகுதி சார்பாகவும் மீண்டும் நன்றியினைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன் அவர்கள்.

**திரு. ப. சத்திய நாராயணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பயிர்கள் வாடினால் இயற்கைக்கே கேடு. தன் உயிரினும் மேலாய் மதிக்கும் தன் மக்களின் மனம் வாடினால் இறையாண்மைக்கே கேடு என்று இறைவனின் இறையாட்சியை, நாங்கள் கண்ணில் கண்ட, கருணை உள்ளம் கொண்ட, கலியுகம் காக்கும் கடவுள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) மலர் தூவி வணங்குகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், தமிழக மக்களுக்கு நல்லாட்சி வழங்கிவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிசாமி அண்ணன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவருடன் உறுதுணையாய் உள்ளாட்சியில் தமிழக மக்களே வியப்படையும்வகையில் பல நலத் திட்டங்களை வழங்கிக்கொண்டிருக்கும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் என்னுடன் இந்தச் சட்டமன்றத்தில் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–10*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் 2015 ஆம் ஆண்டில் சென்னை மாநகரத்திலே ஏற்பட்ட பெருவெள்ளத்தின்போதும், 2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மழை மற்றும் வர்தா என்ற பெரும் புயலின்போதும் எனது தொகுதியில் விரைந்து நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் வர்தா புயலால் ஏற்பட்ட



பாதிப்புகளைச் சரி செய்ய, சென்னை மாநகர மக்கள் நீண்ட நாட்கள் பாதிக்கக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் மற்ற மாவட்டங்களிலிருந்து அனைத்து நகராட்சி மற்றும் ஊராட்சிகளிலுள்ள பணியாளர்களை சென்னைக்கு வரவழைத்து, மீட்புப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ள ஆணையிட்டார். இதனால் சென்னையில் பாதிப்புக்கான அடிச்சுவடே இல்லாமல் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் செய்தார். அதேசமயத்தில், பொது மக்களின் சுகாதாரத்தைக் கருத்தில்கொண்டு, சென்னையில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் நிலவேம்புக் குடிநீர் மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்தி, ஒருவருக்கும் காய்ச்சல்கூட வராமல் செய்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், எனது தியாகராய நகர் தொகுதியில் மட்டுமே 1,726 மரங்கள் சாய்ந்து, அனைத்து மின் கம்பங்களும் பாதிக்கப்பட்டன. இதன்பொருட்டு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் திரு. பி. தங்கமணி அவர்கள் எனது தொகுதியில் ஆய்வு மேற்கொண்டு, இரண்டு நாட்களில் தொகுதி முழுவதும் மின்சாரம் கிடைக்க நடவடிக்கை மேற்கொண்டார்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு சென்னை மாநகரத்தில் உலகத் தரத்தில் பிளாஸ்டிக் கலந்த பேருந்து தார்ச்சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் அமைத்ததால், கடந்த 2015–2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரு வெள்ளம் மற்றும் பெரும் புயலில் சாலைகள் சிறிதளவும் பழுதடையாமல், விமான ஓடுதளம் போல் காட்சியளித்தது. இதுபோன்ற சாலைகளை சென்னை மாநகர மக்கள் முதன்முதலில் கண்டு வியந்தனர்.

அதேபோல் அனைத்து மழைநீர்க் கால்வாய்களும் தூர்வாரியதால், கடந்த மழையில் எந்த இடத்திலும் தண்ணீர் தேங்கவில்லை. இவை அனைத்தையும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் மேற்பார்வையில் சிறப்பாகச் செய்திட்ட சென்னை மாநகராட்சி ஆணையாளர், அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான் மக்களுக்காகவே நான்' என்னும் மந்திரத்தை வழங்கிய மாண்புமிகு

அம்மா அவர்களின் வழியில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது இந்த அரசு. அதற்கு உதாரணமாக, எனது தியாகராய நகர் தொகுதியில் உள்ள ஜீவா பூங்கா, நடேசன் பூங்கா மற்றும் பனகல் பூங்காக்களை மக்கள் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். இப்பூங்காக்களை மக்களுக்கு மனநிறைவு தருகிற பூங்காவாக மாற்ற பூங்கா வடிவமைப்பு வல்லுநர்களுடன் கலந்து ஆலோசித்து, புதிய வடிவமைப்பு வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் பரிசீலித்து, தக்க ஆணை பிறப்பித்து, இந்தப் பூங்கா வடிவமைப்பினை வரும் பிப்ரவரி மாதத்திற்குள் செயல்படுத்தி, தங்கள் முன்னிலையில் இப்பூங்காக்களை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாள் விழாவாகக் கொண்டாடி, மக்களுக்கு அர்ப்பணிக்க வேண்டுமென்று தங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனது தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மொத்த தெரு விளக்குகளின் எண்ணிக்கை 9,910. அதில் 6,839 தெரு விளக்குகள் எல்.இ.டி. விளக்குகளாக மாற்றியது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி. மீதியுள்ள 3,071 விளக்குகளை எல்.இ.டி. விளக்குகளாக மாற்றிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் ஆணையிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனது தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதி சென்னை மாநகரத்தின் மையப் பகுதியாகவும், மேலும் வியாபார ஸ்தலமாகவும் இருப்பதால், அங்கு மக்கள் வந்து செல்லும் இடமாக இருக்கின்றது. எனவே போத்திஸ் ஜவுளிக் கடை எதிரில், உஸ்மான் சாலையை பொது மக்களால் எளிதாகக் கடக்க இயலவில்லை. இதனால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதால், வாகனத்தில் செல்பவர்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். ஆகையால், பொது மக்கள் சாலையைக் கடக்க போத்திஸ் ஜவுளிக் கடை எதிரில் ஒரு எஸ்கலேட்டர் அமைத்துத் தர வேண்டும். மேலும், உஸ்மான் சாலை மேம்பாலம் இறங்கும் இடத்தில் ரங்கநாதன் தெரு சந்திப்பு இருப்பதால், அங்கு பொது மக்கள் சாலையைக் கடக்கும்போது மேம்பாலம் முழுவதும் வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன.



ஆகையால், ரங்கநாதன் தெரு, உஸ்மான் சாலை சந்திப்பில் ஒரு எஸ்கலேட்டர் அமைத்துக் கொடுத்தால் மக்கள் எளிதாக சாலையைக் கடக்க முடியும்; விபத்துகள் நேரிடாமல் தவிர்க்கப்படும். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் மேற்கூறிய இரண்டு இடங்களில் எஸ்கலேட்டர் அமைத்துத் தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–15*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் தமிழக மக்களுக்கு நல்லாட்சி வழங்கிவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், வரும் 23–6–2017 வெள்ளிக்கிழமையன்று எனது தொகுதிக்குட்பட்ட வார்டுகளில் ரூ.198.81 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்ட 9 நலத் திட்டப் பணிகளைத் திறந்துவைத்தும், ரூ.223 இலட்சம் செலவில் 5 நலத் திட்டப் பணிகளையும் தொடங்கிவைத்து மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திறப்பு விழா: 135–வது வார்டில் ரூ.115 இலட்சம் செலவில் அம்மா உள் விளையாட்டு அரங்கக் கட்டடம்; 135–வது வார்டில் ரூ.9.9 இலட்சம் செலவில் அம்மா குடிநீர் மையம்; 132–வது வார்டில், அசோக் நகர் 90–வது தெருவில் ரூ.9.9 இலட்சம் செலவில் அம்மா குடிநீர் மையம்; 132–வது வார்டு, 77–வது தெருவில் ரூ.15 இலட்சம் செலவில் புதிய பல்நோக்குக் கட்டடம்; 133–வது வார்டு, காசிகுளத்தில் ரூ.8.6 இலட்சம் செலவில் புதிய பல்நோக்குக் கட்டடம்; 113–வது வார்டு, ஆண்டியப்பன் தெருவில் ரூ.7.5 இலட்சம் செலவில் குடிநீர் குழாய்மூலம் குடிநீர் வழங்கும் திட்டம்; 134–வது வார்டு, கார்ப்பரேஷன் காலனியில் ரூ.9.9 இலட்சம் செலவில் அம்மா குடிநீர் மையம்; 135–வது வார்டில் ரூ.13 இலட்சம் செலவில் புதிய பல்நோக்குக் கட்டடம்; 141–வது வார்டு கண்ணம்மாப்பேட்டையில் உள்ள New Boag Road–ல் ரூ.9.9 இலட்சம் செலவில் அம்மா குடிநீர் மையம் ஆகியவற்றை திறக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள்.

அதேபோல், துவக்க விழா: ரூ.40 இலட்சம் செலவில் உலகத் தரம் வாய்ந்த உடற்பயிற்சிக் கூடம், ரூ.20 இலட்சம் செலவில்

யோகா மையம், ரூ.40 இலட்சம் செலவில் மூலிகைப் பூங்கா, ரூ.9 இலட்சம் செலவில் 1,700 மரங்கள் நடும் விழாவிற்கு முன்னோடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 5 மரக் கன்றுகள் நடுதல், 136–வது வார்டில் வெங்கட்நாராயணா சாலையில் உள்ள விளையாட்டுத் திடலை ரூ.114 இலட்சம் செலவில் நவீனப்படுத்துதல்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனது தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதியில் மக்கள் நலன் கருதி ரூ.677 இலட்சம் செலவில் 22 பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் நிதி ஒதுக்கீடு செய்துதருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

130–வது வார்டு அழகிரி நகர், முதல் தெருவில் ரூ.28 இலட்சம் செலவில் பல்நோக்கு மையக் கட்டடம் கட்டும் பணி; 130–வது வார்டில் நெற்குன்றம் பாதை கிழக்கில் ரூ.22.5 இலட்சம் செலவில் பல்நோக்கு மையக் கட்டடம் கட்டும் பணி; 130–வது வார்டு அழகிரி நகர், முதல் தெருவில் ரூ.10 இலட்சம் செலவில் அம்மா குடிநீர் மையம் அமைத்தல்; 130–வது வார்டு என்.ஜி.ஓ. காலனி, மெயின் ரோடில் ரூ.10 இலட்சம் செலவில் அம்மா குடிநீர் மையம் அமைத்தல்; 132–வது வார்டு, சோமசுந்தரபாரதி நகரில் ரூ.10 இலட்சம் செலவில் அம்மா குடிநீர் மையம் அமைத்தல்; 132–வது வார்டு, ஒட்டகபாளையத்தில் ரூ.10 இலட்சம் செலவில் அம்மா குடிநீர் மையம் அமைத்தல்; 132–வது வார்டில் ரூ.50 இலட்சம் செலவில் பல்நோக்கு மையம் அமைத்தல்; 133–வது வார்டு, 17–வது தெருவில் உள்ள விளையாட்டுத் திடலுக்குள் ரூ.20 இலட்சம் செலவில் அம்மா குடிநீர் மையம் அமைத்தல்; 133–வது வார்டு, 60–வது தெருவில் உள்ள நல்லாங்குப்பத்தில் ரூ.20 இலட்சம் செலவில் அம்மா குடிநீர் மையம் அமைத்தல்; 133–வது வார்டு, அசோக் நகர், 17–வது தெருவில் உள்ள உடற்பயிற்சிக் கட்டடத்தை ரூ.15 இலட்சம் செலவில் மேம்படுத்துதல்; 133–வது வார்டு, புலியூர் சென்னை மேல்நிலைப் பள்ளியை ரூ.20 இலட்சம் செலவில் மேம்படுத்துதல்; 133–வது வார்டு, புலியூர் சென்னை மேல்நிலைப் பள்ளியில் ரூ.12.7 இலட்சம் செலவில் புதிய கழிப்பறைக் கட்டடம் கட்டுதல்; 133–வது வார்டு, புலியூர் சென்னை தொடக்கப் பள்ளியில் ரூ.12.7 இலட்சம் செலவில் புதிய கழிப்பறைக் கட்டடம் கட்டுதல்; 134–வது வார்டு, காமராஜ் காலனியில் ரூ.50 இலட்சம்



செலவில் பல்நோக்கு மையக் கட்டடம் கட்டுதல்; 134–வது வார்டு, இரயில்வே பார்டர் ரோட்டில் ரூ.30 இலட்சம் செலவில் பல்நோக்கு மையக் கட்டடம் கட்டுதல்; 136–வது வார்டில் மாம்பலம் நெடுஞ்சாலையில் ரூ.18.3 இலட்சம் செலவில் பல்நோக்கு மையக் கட்டடம் கட்டுதல்; வார்டு 136, கோட்ஸ் சாலையில் உள்ள நடைபாதையை ரூ.13.26 இலட்சம் செலவில் அபிவிருத்தி செய்யும் பணி; வார்டு 136, பிரகாசம் சாலை, மாசிலாமணி தெரு மற்றும் ராஜா தெரு சந்திப்பில் ரூ.1.25 இலட்சம் செலவில் உயர் கோபுர மின்விளக்கு அமைக்கும் பணி; வார்டு 136, வெங்கட்நாராயணா சாலையில் உள்ள விளையாட்டு மைதானத்தை ரூ.116 இலட்சம் செலவில் நவீனமுறையில் சீரமைத்து புதுப்பிக்கும் பணி; வார்டு 141, சி.ஐ.டி. நகர் நான்காவது பிரதான சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான வணிக வளாகத்தில் ரூ.25.99 இலட்சம் செலவில் முதல் தளம் கட்டும் பணி; வார்டு 141, மதுரை வீரர் கோயில் தெருவில் உள்ள சென்னை பெருநகர மாநகராட்சிக்குச் சொந்தமான காலியிடத்தில் ரூ.19 இலட்சத்தில் பல்நோக்கு மையம் கட்டும் பணி; வார்டு 132–ல் உள்ள 7 இடுகாடு மற்றும் சுடுகாட்டில் ரூ.160 இலட்சம் செலவில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னை குடிநீர் வாரியத்தைப் பொறுத்தவரையில், எனது தொகுதியில், மேற்கு மாம்பலத்தில் நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறை தீர்க்க, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அமைக்கும்படி கடந்த 35 ஆண்டுகளாக மக்கள் கோரி வருகின்றனர். ஆனால், கீழ்நிலைத் தொட்டி மற்றும் மேல்நிலைத் தொட்டி அமைக்க போதிய இடம் இல்லாததால், தற்போது அசோக் நகரில் ஏற்கெனவே உள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து வரும் பிரதானக் குழாயில் ஆரியகௌடா சாலையில் உள்ள பிரதானக் குழாயுடன் இணைக்கும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இதற்கான திட்ட மதிப்பீடு ரூ.79.54 இலட்சமாகும். இப்பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. இப்பணியின்மூலம் தற்போது குறைந்த அழுத்தம் காரணமாக குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள பாலகிருஷ்ண முதலி தெரு, விவேகானந்தாபுரம் 1–வது தெரு, கே.பி. காலனி 1–வது முதல் 6–வது தெரு, போஸ்டல் காலனி முதல் தெரு, 2–வது தெரு, இராமகிருஷ்ணபுரம் 2–வது தெரு, 3–வது தெரு, கணபதி தெரு,

வீராசாமி தெரு, கோகுலம் காலனி மற்றும் ஜெயச்சந்திரன் தெரு இவைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** கடைசி பக்கத்திற்குச் செல்லுங்கள்.

**திரு. ப. சத்திய நாராயணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் என் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மக்களின் குறையை கேட்கச் சென்றபோது 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் கேட்டது ஒன்றே ஒன்று. ஐயா நாங்கள் வயதானவர்கள். தற்போது நானும், என் மனைவி மட்டுமே இருக்கின்றோம். எங்களுக்கு எந்த வருமானமும் கிடையாது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்து வந்த முதியோர் உதவித் தொகை ரூ.1,000, எங்கள் மருத்துவச் செலவிற்கும், நாங்கள் உணவு உண்பதற்கும் மிகவும் உபயோகமாக இருந்தது என்று சொன்னார்கள். ஆகையால், மாண்புமிகு அம்மா அவர்கள் நல்லாட்சியில் 60 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் எந்தவித நிபந்தனையும் இல்லாமல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கவும், அதேபோல், விதவைகள் அனைவருக்கும் விதவை உதவித் தொகை வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மிகவும் சிரம் தாழ்ந்து வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனது தியாகராய நகர் தொகுதியில் வருவாய்த் துறைமூலம் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, மக்கள் குறைகளைத் தீர்த்து வருகின்றோம். தற்போது ஆதார் அட்டை வழங்க போதிய மையம் இல்லாததால், பொது மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருவாய்த் துறையைப்போல, ஆதார் அட்டை வழங்க சிறப்பு முகாம் நடத்திட பரிந்துரை செய்யுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் புதூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி உள்ளது. இந்தப் பள்ளி சுமார் 3 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இந்தப் பள்ளியில் சுமார் 400 மாணவர்கள் படிக்கின்றார்கள். இந்த இடத்தை அரசு கலைக் கல்லூரியாக மாற்றி அமைத்தால், இப்பகுதியில் சுற்றியுள்ள கே.கே. நகர், அசோக் நகர், வடபழனி, கோடம்பாக்கம், மேற்கு மாம்பலம், சைதாப்பேட்டை, இராமாபுரம் மற்றும் போரூர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதனைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர்



அண்ணன் அவர்கள், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் அழைத்து கலந்தாலோசித்து, 2018–2019 ஆம் ஆண்டில் மாணவர்கள் சேர்க்கை ஆரம்பிக்க வேண்டி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். வேறோர் உறுப்பினர் பேச வேண்டும்.

**திரு. ப. சத்திய நாராயணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கையாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மேலான பார்வைக்கு இதை சமர்ப்பிக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களின் ஊதியத்தை உயர்த்தித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) அருகிலுள்ள ஆந்திர மாநிலம் மற்றும் பிற மாநிலங்களை விட, நம் தமிழ்நாட்டிலுள்ள எம்.எல்.ஏ.–க்களின் மாதச் சம்பளம் குறைவாக உள்ளதால், இக்கோரிக்கையை எடுத்துச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

பிற்பகல் 1–25

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதேபோல் திருப்பதி கோயிலுக்குச் செல்லும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு list–I–ன்மூலம் தரிசனத்திற்கு ஏற்பாடு செய்து தருமாறு மாண்புமிகு ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களுக்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் வாயிலாகத் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றக் கூட்டத்தை வேடிக்கை பார்க்கக்கூட முடியாத நிலையிலிருந்த என்னை தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளராக அறிவித்து, எனக்காக 2 முறை பிரச்சாரம் செய்து, என்னை வெற்றி பெறச் செய்த கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, எனது குடும்பத்தார் சார்பாகவும், தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்கள் சார்பாகவும் எனது கோடானுகோடி நன்றியினைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள்.

***திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஈரோட்டுப் பகலவன், வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார் பாசறையில் பயின்று, இந்நாட்டு இங்கர்சால் தென்னாட்டு காந்தி, காஞ்சி தந்த கரிபால்டி, அறிவுலக மாமேதை பேரறிஞர் அண்ணாவின் அறவழியில் தமிழ்நாடு, தமிழ் மொழி, தமிழ் இனம் காக்கப்பட, முன்னேற அயராது பாடுபட்டு வருவதால் ஏற்போர், எதிர்ப்போர் இதயங்களில் இடம் பெற்றுள்ள கழக குடும்பத் தலைவர் மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வீற்றிருக்கும் கோபாலபுரம் நோக்கி வணங்கி, என் உரையைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு'

என்ற அய்யன் திருவள்ளுவர் குறளுக்கேற்ப, அதாவது அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை இந்த நான்கு பண்புகளும் இருத்தலே அரசனுக்கு இயல்பு என்ற வள்ளுவனின் வாக்கிற்குப் பொருத்தமாக விளங்கும், பழமைக்கும், புதுமைக்குமான பாலமாக விளங்குபவர்; அனைவரிடமும் எளிமையாகப் பழகிடும் பண்பாளர்; எதிரிகளுக்குப் புதிர், எங்களுக்குப் புதுக் கவிதை; கழகத்தின் செயல் தலைவர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) அதுமாத்திரமல்ல; தமிழக மக்கள் எதிர்நோக்கும் தலைவர் மாண்புக்குரிய தளபதியார் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இம்மாமன்றத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசிட வாய்ப்பளித்தமைக்கு நன்றியை உரித்தாக்குகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதியில், கழகத்தின் வேட்பாளராக மூன்றாவது முறையாகப் போட்டியிட வாய்ப்பளித்த மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், என்னை வழிநடத்தும் என் உயிரினும் மேலான கழக செயல் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை இம்மாமன்றத்தின் வாயிலாக நன்றியை உரித்தாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மேலும், இத்தேர்தலில் எனது வெற்றிக்கான வியூகத்தை வகுத்தளித்து, ஒட்டுமொத்த கழக உடன்பிறப்புகளையும், நிருவாகிகளையும், தோழமைக் கட்சியினரையும் ஒருங்கிணைத்து வழிநடத்திய மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கும், என்னைப் பார்த்து எள்ளி நகையாடியவர்களையும், எளிதில் வென்றுவிடலாம் என்று நினைத்தவர்களையும், 'மாற்றம்—முன்னேற்றம்' என சொல்லி ஏமாற்ற முனைந்தவர்களையெல்லாம் ஓரம் கட்டிவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) "இவர் எங்கள் வீட்டுப் பிள்ளை" என என்னை அரவணைத்து, ஆதரித்து வெற்றி பெறச் செய்த பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு இம்மாமன்றத்தின்மூலம் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை கொள்கை விளக்கக் குறிப்பேட்டில், உள்ளாட்சி நிருவாகம் என்ற தலைப்பின்கீழ், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் *1994*—ன்படி, "உள்ளாட்சி அமைப்புகளுக்கு *5* ஆண்டுகளுக்கு ஒரு முறை அவற்றின் பதவிக் காலம் முடிவதற்கு முன்பாக கட்டாயத் தேர்தல் அல்லது அவை கலைக்கப்பட்ட தேதியிலிருந்து *6* மாத காலம் முன் தேர்தல் நடத்தப்பட வேண்டும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, ஊராட்சி மன்றங்கள் மற்றும் பிற உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரங்கள், பணிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆனால், தமிழ்நாட்டில் சட்டப்படி உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படவில்லை. இதனால் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையில் என்ன நடக்கின்றது என்று யாருக்கும் விளங்கவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட முறையான தகவல்கள் இல்லை. மக்கள் தங்களுக்கான தேவைகளை அவர்களே முடிவு செய்து, செயல்படுத்த முடியாத நிலை உள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் அனைத்தையும் அலுவலர்களே செய்கின்றனர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், "தம்பி, கிராமங்களை நோக்கிச் செல்; மக்களோடு மக்களாகப் பழகு; அவர்களின் தேவை என்ன என்பதை அவர்களில் ஒருவனாக இருந்து அறிந்துகொள்; அவைகளை நிறைவேற்ற அவர்களிடமிருந்தே பணியினைத் தொடங்கு" என்றார். இப்படிப்பட்ட ஜனநாயக மாண்பாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் கட்சி நடத்துகின்ற ஆட்சியில், உள்ளாட்சித் தேர்தலே நடத்தப்படாமல் நாட்கள் கடத்தப்படுவது முறையல்ல.

உள்ளாட்சி என்றால் எங்கள் தலைவர் கலைஞர் அவர்களும், உள்ளாட்சியில் நல்லாட்சி வழங்கிய எங்கள் செயல் தலைவர் தளபதியார் அவர்களும்தான் இன்றளவும் நினைவுகூரப்படுகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகின்றேன்.

தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில்தான் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது. தலைவர் கலைஞர் அவர்கள், தன்னை ஆளாக்கிய அறிஞர் அண்ணா அவர்களைப் பெருமைப்படுத்தும்விதமாக அவரது பெயரில் இத்திட்டத்தைக் கொண்டு வந்தார். ஆனால் அண்ணாவின் பெயரில் கட்சியை வைத்துக்கொண்டு, அந்தத் திட்டத்தின் பெயரை தாய் திட்டம் என்று மாற்றி ** பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம், திருமண உதவித் தொகை வழங்கும் திட்டம். . .

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) சரி, உறுப்பினர் பேசுங்கள்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** நமக்கு நாமே திட்டம், பாதுகாக்கப்பட்ட மேல்நிலை குடிநீர்த் தொட்டிகள் அமைக்கும் திட்டம், கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் திட்டம், கிராமங்களில் சிமெண்ட் தெருக்கள் அமைக்கும் திட்டம், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் என எண்ணிலடங்கா, மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்தினார்கள். கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை எடுத்துக்கொண்டால், எங்கள் மாவட்டத்தில் பஞ்சப்பள்ளி அணையிலிருந்து தருமபுரி நகராட்சிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம். இத்திட்டம் பின்னர் பாலக்கோடு மற்றும் பாப்பாரப்பட்டி பேரூராட்சிக்கு விரிவுபடுத்தப்பட்டது. தென்பெண்ணையாற்று குடிநீரை தருமபுரி ஒன்றியத்தில் உள்ள கிராமங்களுக்கு வழங்கிட எ.நடுப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம்; சின்னாற்று நீரை பெண்ணாகரம் பேரூராட்சிக்கு வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம்; ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். இதில் முன் இரண்டு திட்டங்களும் தலைவர் கலைஞரால் நேரடியாக

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நிறைவேற்றப்பட்டன. பின் இரண்டு திட்டங்களும் எங்கள் செயல் தலைவரின் சீரிய முயற்சியால் நிறைவேற்றப்பட்டன.

Fluoride அதிகம் கலந்த நீரைப் பருகுவதால் ஏற்படும் fluorosis நோயால் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பாலான மக்களின் பற்களில் கறை படிந்தும், எலும்புகள் வலுவிழந்தும், வளைந்தும் பெரும் அவதிப்பட்டு இருந்தார்கள். எங்கள் மாவட்ட மக்களை பிற மாவட்ட மக்கள் பார்த்தாலே, 'தருமபுரியா'? என்று அடையாளம் காணும் அவலநிலை இருந்தது.

பல்வேறு தரப்பினர் கோரிக்கை வைத்தும், போராடியும் வந்த நிலையில், 2006 சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்கு வருகை தந்தபோது, கருணையே வடிவான கலைஞர் அவர்கள், தருமபுரி நான்குவழி சந்திப்பில் பேசும்போது, 'கழக ஆட்சி மலர்ந்தால் தருமபுரி–கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் நலன் காக்க ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உறுதியாக நிறைவேற்றப்படும்' என்று அறிவித்தார். கழகம் வென்று ஆட்சி அமைத்தது. இத்திட்டத்திற்கான திட்ட வரைவு மற்றும் அறிக்கை தயாரிக்கப்பட்டுக்கொண்டிருந்த நிலையில் பலர், இத்திட்டத்தை நிறைவேற்ற முடியாது; அதற்கு நிதி கிடையாது, நிதி கிடைக்காது என்று ஆரூடம் பேசிக்கொண்டிருந்தனர். இப்படிப் பரவும் புரளிகளை அன்றைய மாவட்டக் கழகச் செயலாளரும், பெண்ணாகரம் சட்டமன்ற உறுப்பினருமான மறைந்த எனது தந்தையார் திரு. பி.என். பெரியண்ணன் அவர்களும் மற்றும் கழக சட்டமன்ற உறுப்பினர்களும், அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு தளபதியார் அவர்கள்மூலம் தமிழக முதல்வராக இருந்த மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களின் சீரிய கவனத்திற்குக் கொண்டு சென்றார்கள். பிறகு நடந்ததை நாடு அறியும். (குறுக்கீடு)

'கலைஞர்' என்றால் தமிழ் அகராதியில் அல்ல; தமிழக அரசியல் அகராதியில், 'கொள்கை மறவர்' என்று பொருள். அதனால்தான் இதே மாமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் பெருத்த ஆரவாரத்துக்கு மத்தியில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னிப் பேச்செல்லாம் இல்லை. அவர் ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார். அவர் பழைய எம்.எல்.ஏ. (குறுக்கீடுகள்) அவர் நிறைய பேசியிருக்கிறார். நான் கொஞ்சம் நேரம் அவரைப் பேச விட்டுவிட்டுத்தானே பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, ** என்று ஒரு வார்த்தையைச் சொன்னார். அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கோரிக்கை, அவர் சொன்னது உட்பட ஏற்றுக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர், ** என்று பேசினார். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு பேரியக்கத்தை உருவாக்கி, புரட்சித் தலைவர் அவர்களும், புரட்சித் தலைவி அம்மா அவர்களும் இதுவரையிலும் அண்ணா அவர்களுக்குப் பிறந்த நாள் மட்டுமல்ல; தொடர்ந்து அண்ணா அவர்களை நினைத்து, அவர்களின் புகழ் பாடி, அண்ணா அவர்கள் நினைத்த திட்டங்களைச் செயல்படுத்தினார்கள். அண்ணா என்னென்ன திட்டங்களை நினைத்தாரோ, அந்தத் திட்டங்களைச் செயல்படுத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (குறுக்கீடுகள்) அவர் சொன்னதற்காகச் சொல்கிறேன்.

அதேபோல், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றிச் சொன்னார். அது தாய் திட்டம். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கும், தாய் திட்டத்திற்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் பார்த்தீர்களென்றால், கிராமங்களை மட்டும்தான் எடுத்தார்கள். ஆனால், தாய் திட்டம் குக்கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு, அலகாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் 12,524 ஊராட்சிகள் உள்ளன. அதில் 79,394 குக்கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் குக்கிராமங்களை அலகாகக் கொண்டு எடுக்கப்பட்டிருக்கக்கூடிய

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



திட்டம்தான் தாய் திட்டம். அது பொதுவான திட்டம். அது எல்லாப் பக்கமும், 5 ஆண்டுக் காலத்தில் எல்லாப் பணிகளையும் முழுமையாக முடித்திருக்கிறோம்.

உள்ளாட்சித் தேர்தல் பற்றி நிறைய பேசியாகிவிட்டது. அதை மீண்டும் பேச விரும்பவில்லை. அதற்கு நான் திரும்பவும் பதில் சொன்னதாகப் பதிவுசெய்துகொள்ளுங்கள். எனவே, அதைப்பற்றிப் பேசவில்லை. அதேபோல் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றி அவர் தொடர்ந்து நிறைய பேசினார். அதற்குப் பதில் சொல்ல வேண்டியது எனது கடமை. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தளவிற்கு, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்குக் குடிநீர் வசதியை வழங்குவதுடன். அந்தப் பகுதியில் நிலவும் fluoride பாதிப்பைக் குறைத்திடவும், தமிழக முதல்வராக இருந்த மாண்புமிகு அம்மா அவர்கள் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் fluoride பாதிப்பைக் குறைத்திடும் திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்றினார்கள்.

பிற்பகல் 1–35

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முதன்முறையாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் 1986 ஆம் ஆண்டு ரூ.120 கோடி மதிப்பீட்டில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான முன்வடிவு தயாரிக்கப்பட்டது. அதற்குப் பின்னால், இவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு எதுவும் செய்யவில்லை. 1991 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக முதல்வராக முதன்முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றபோது, இத்திட்டத்தை ஆய்வு செய்து, 1994 ஆம் ஆண்டு, ரூ.350 கோடி மதிப்பில் இத்திட்டத்தினைத் திருத்திச் செயல்படுத்த நடவடிக்கையை மேற்கொண்டார்கள். அதற்குப் பின்னாலும், மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்ததற்குப்பிறகு, டிசம்பர் 2001–ல் இதற்கான பன்னாட்டு நிதி ஆதாரம் பெறுவதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்குப்பிறகு, மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்துப் பணிகளையும் செய்து வைத்ததற்குப் பிறகு, இவர்கள் 2006–ல் திரும்ப ஆட்சிக்கு வந்தார்கள். அதற்குப்பிறகு, இந்தத் திட்டத்தை துவங்கி, வெறும் 18 சதவிகிதம்தான் இவர்கள் முடித்தார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தி.மு.க. அரசால் 18

சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்ட நிலையில், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் மற்றும் ஃப்புளோரைடு பாதிப்புத் திட்டத்தை விரைந்து செயல்படுத்தி, வெற்றிகரமாக நிறைவேற்றி, 29–5–2013 அன்று இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தில் மூன்று நகராட்சிகள், 17 பேரூராட்சிகள், 18 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 7,716 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 33.87 இலட்சம் மக்கள் பயனடைய திட்டமிடப்பட்டது. தற்போது, இத்திட்டத்தின்மூலம் 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள், 884 புதிய ஊரகக் குடியிருப்புகளையும் சேர்த்து, 7,639 ஊரகக் குடியிருப்புகளைச் சேர்ந்த 33 இலட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு சராசரியாக 120 மில்லியன் லிட்டர் குடிநீர் 20–5–2017 வரை வழங்கப்பட்டு வந்தது. இத்திட்டத்தின்கீழ் பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த பெண்ணாகரம் பேரூராட்சி மற்றும் பாப்பாரப்பட்டி பேரூராட்சி மற்றும் 45 ஊராட்சிகளிலுள்ள 598 ஊரகக் குடியிருப்புகளைச் சேர்ந்த 2.82 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், நாளொன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது ஏற்பட்ட வறட்சியின் காரணமாக, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் நாளொன்றுக்கு 120 மில்லியன் லிட்டருக்குப் பதிலாக 90 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்படாத இதர 77 குடியிருப்புகளுக்கு,–விடுபட்ட 77 குக்கிராமங்களுக்கு மட்டும்– தனி மின் விசைத் திட்டங்கள்மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை முழுமையாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் செயல்படுத்தினார்கள். இத்திட்டம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதாவது அண்ணாவை நினைத்திருக்கிறீர்கள், அதற்கு மிகவும் நன்றி. மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தங்களுடைய ஆட்சியில்தான் அறிவிக்கப்பட்டது என்று சொன்னார்கள். அறிவித்தார்கள்; பேப்பரில் மட்டும்தான் இருந்தது. ஆனால், செயல்படுத்தினார்களா என்றால், கிடையாது.



அதற்குப் பிறகு, இதே மாமன்றத்தில், சட்டமன்ற உறுப்பினர்களின் பெருத்த ஆரவாரத்திற்கு மத்தியில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்து, அதனை நிறைவேற்றும் பொறுப்பினை எங்கள் தளபதியார் அவர்களிடம் ஒப்படைத்தார். இப்பொறுப்பினை ஏற்றுக்கொண்ட தளபதி அவர்கள், அதற்கான நிதியாதாரத்தினை ஜப்பான் சென்று, அங்குள்ள பன்னாட்டு உறவுக்கான கூட்டுறவு வங்கியிடம் பெற்று வந்தார். இத்திட்டத்தின் அடிக்கல் நாட்டு விழா 26–2–2008 அன்று தருமபுரி அரசு கலைக் கல்லூரி மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ‘நாங்கள்தான் இத்திட்டத்தினைச் செயல்படுத்தினோம், செயல்படுத்தினோம்’ என்று நீங்கள் சொல்லலாம். ஆனால், தருமபுரிக்கு வந்து அந்த மக்களிடம் கேட்டீர்களென்றால், அந்தத் திட்டத்தை யார் செயல்படுத்தியது என்று சொல்வார்கள். நீங்கள் அங்கு வந்தால் பரவாயில்லை. அதனால்தான், எங்களுடைய பெண்ணாகரம் தொகுதியில் உங்களுக்கு ஒரு முறை டெபாசிட் போய்விட்டது. இந்த முறையும் உங்களுக்கு மூன்றாவது இடத்தைத்தான் கொடுத்தார்கள். இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா 26–2–2008 அன்று தருமபுரி அரசுக் கலைக் கல்லூரி மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. இரு மாவட்ட மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் பங்கேற்ற விழாவிற்கு சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிப் பாகுபாடின்றி அழைக்கப்பட்டார்கள்; அலைக்கழிக்கப்படவில்லை; கைது செய்து தடை செய்யப்படவில்லை; முறையாக அழைக்கப்பட்டார்கள். அவர்களும் பங்கேற்று சுதந்திரமாக தத்தம் கருத்துகளை முன்வைத்து உரையாற்றினார்கள். முத்தாய்ப்பாக தலைவர் கலைஞர் அவர்கள் தனது பொற்கரங்களினால் இத்திட்டத்தினை அடிக்கல் நாட்டித் தொடங்கிவைத்தார். இத்திட்டம் விரைவாக நிறைவேற்றப்படவேண்டும் என்று முனைப்போடு மாண்புமிகு தளபதியார் அவர்கள் பலமுறை இரண்டு மாவட்டங்களுக்கும்–Video conferencing வாயிலாக அல்ல; நேரடியாக வந்து தொடர்புடைய அதிகாரிகளோடு கலந்தாலோசித்து, கள ஆய்வு செய்து, விரைவுபடுத்தியதால், முயல் வேகத்தில் நடைபெற்ற பணிகள் நிறைவடையும் நிலையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன், ஆமை வேகத்திற்குச் சென்றுவிட்டது. இதனைக் கண்டித்து பொது மக்களும், பல்வேறு அமைப்புகளும் போராடின. திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் போராட்டங்கள் நடைபெற்றன. இதனால் இத்திட்டம் நிறைவேறாத நிலையில் தொடங்கிவைக்கப்பட்டது. இவ்வாறு அள்ளித்தெளித்தாற்போல் அவசரகதியில் இத்திட்டம் மக்கள்

பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டதன் விளைவாகத்தான், இப்போது இத்திட்டத்தின்மூலம் தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரு மாவட்டங்களின் மக்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டும், முறையாக குடிநீர் கிடைக்காமல் தவிக்கின்றனர்.

*பிற்பகல் 1–40*

உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், பெண்ணாகரம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய இரு பேரூராட்சிகளுக்கும் வாரத்திற்கு ஓரிரு முறை மட்டுமே குடிநீர் வழங்கப்படுகிறது. மாவட்டம் முழுவதும் இதே நிலைமைதான் இருக்கிறது. ஊராட்சி அமைப்புகளால் ஏற்கெனவே வழங்கப்படும் குடிநீரோடு ஒகேனக்கல் குடிநீரும் கலந்து வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படுவதால், புளோரைடு அல்லாத பாதுகாக்கப்பட்ட குடிநீர் என்ற இத்திட்டத்தின் நோக்கமே அடிபட்டுப் போய்விட்டது. மேலும், ஏமனூர், பிக்கிலி, வத்தல்மலை, சித்தேரி உள்ளிட்ட 70–க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்களுக்கு இத்திட்டத்தின்கீழ் குடிநீர் இணைப்பு இல்லை.

பெண்ணாகரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் பிற திட்டங்களின்கீழ் புதிதாகக் கட்டப்பட்ட மேல்நிலை குடிநீர்த் தொட்டிகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படாமல் உள்ளன. சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி மற்றும் பிற நிதியிலிருந்து சுமார் 600 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் புதிதாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கு இதுவரைக்கும் குடிநீர் இணைப்பே கொடுக்கவில்லை. அவற்றிற்கெல்லாம் இணைப்பினைக் கொடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒகேனக்கல் ஆற்றுப் படுகையில், sump–க்குப் பக்கத்தில், 100 மீட்டர் தொலைவில் இருக்கின்ற overhead tank–க்கே இதுவரை ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்ட இணைப்பு கொடுக்கப்படவில்லை. ஒரு கிலோ மீட்டருக்குப் பக்கத்தில் உள்ள ஊட்டமலையில் பாதி ஊருக்குத் தண்ணீர் வருகின்றது; பாதி ஊருக்குத் தண்ணீர் வருவதில்லை. மேலும், பிக்கிலி ஊராட்சியில் உள்ள கொல்லப்பட்டி, பூதிநத்தம், பெரியூர், சக்கில்நத்தம், வத்தல்பள்ளம், நாயக்கனூர் ஆகிய ஊர்களிலுள்ள மக்கள் இதுவரை ஒகேனக்கல் தண்ணீரைப் பார்த்ததே கிடையாது. பாப்பாரப்பட்டியில் மொத்தம் 15 வார்டுகள் இருக்கின்றன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு முன்பும் சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கின்றார்கள். அவர் தெரிந்து பேசுகின்றாரா; தெரியாமல் பேசுகின்றாரா என்று தெரியவில்லை. ஒரு திட்டம் வடிவமைக்கின்றபோது ஒவ்வொரு பகுதியாக–முதலில் ஒரு பகுதியில் ஒரு திட்டம் இருக்கும். விடுபட்ட பகுதிகளை நாம் பிறகு எடுத்துக்கொள்வோம். 120 மில்லியன் லிட்டர் அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. இதிலே பார்த்தீர்களென்றால், இருப்பதை வேறொரு scheme–ல் கொடுத்துக் கொண்டிருப்போம். இருக்கின்ற tank அனைத்துமே புதிதாக வருகின்ற குடிநீர்த் திட்டத்தில் தண்ணீர் வழங்க வேண்டுமென்றால், எதற்கெல்லாம் கொடுக்க வேண்டுமென்று வரையறுத்திருக்கின்றோமோ, அதற்கு மட்டும்தான் கொடுக்க முடியும். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக அந்த scheme–ல் கட்டப்பட்ட தொட்டிகளுக்குக் கொடுக்கப்படவில்லையா என்பதைத்தான் நீங்கள் பார்க்க வேண்டும். அதே ஊர் வழியாக கொண்டு செல்கின்றபோது, அந்தக் கிராமங்களுக்கு வேறு scheme–ல் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கும். இருப்பினும், புதிதாக ஒரு scheme வரும்போது, அதன்மூலமாக வேண்டுமென்று நிறையபேர் கேட்பார்கள். தற்போது தொண்டாமுத்தூர் scheme கூட நடந்துகொண்டிருக்கின்றது. அதிலே முதலில் சிறுவாணி மற்றும் பில்லூர் குடிநீர்த் திட்டங்கள் இருக்கின்றன. அந்த கிராமங்கள் வழியாக கொண்டு செல்கின்றபோது, அதிலிருந்தும் எங்களுக்கு இணைப்பு கொடுங்கள் என்று கேட்பார்கள். ஆனால், 7, 9, 10 ஊராட்சிகள் என்றுதான் நாம் வரையறுத்திருப்போம். அதிலேயும் பார்த்தீர்கள் என்று சொன்னால், ஒரு பகுதிக்கு ஏற்கெனவே நாம் வேறு இணைப்பு கொடுத்துவிட்டிருப்போம். முதலிலே அங்கே tank இருக்கும். இந்தத் திட்டத்தின்மூலம் குடிநீர் வேண்டுமென்று கேட்பார்கள். இருப்பதை நாம் வடிவமைத்து, design செய்கிறோம். அந்த pipe–ல் குறிப்பிட்ட அளவுக்குத்தான் எடுக்க முடியும். அதிலேயே இன்னொரு இடத்திற்கு எப்படி தண்ணீர் எடுக்க முடியும்? அதற்கு வேறு scheme போட வேண்டும். தண்ணீர் குறையும்.

அடுத்து, குடிநீர்ப் பிரச்சினையைப்பற்றிப் பேசினீர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 142 வருடங்களாக இல்லாத வறட்சி இப்போது உள்ளது. இந்தமாதிரியான வறட்சியை நாமெல்லாம்கூட பார்த்தது கிடையாது. நம் முன்னோர்கள்தான் இந்த வறட்சியைப் பார்த்திருக்கிறார்கள். 62 சதவிகிதம் மழைப்பொழிவு குறைந்துள்ளது. இரண்டு monsoon failure ஆகியிருக்கிறது. இந்தமாதிரியான சூழ்நிலையில், நாம் அனைவரும் சேர்ந்து இந்தப் பிரச்சினைகளை face பண்ணியாக வேண்டும். இயற்கையான சூழ்நிலை வருகின்றபோது, அதை நாம் எப்படி எதிர்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் திட்டமிட்டு, சிறப்பான முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் எதிர்கொண்டிருக்கிறது. இதற்கு முன்பு இதுபோன்ற பிரச்சினைகள் வந்த நேரத்திலும், சுனாமி, வறட்சி போன்ற சூழ்நிலைகள் வந்தபோதும் நாம் எதிர்கொண்டிருக்கிறோம். கடுமையான வறட்சி, கடுமையான சூழ்நிலை இருக்கும். அதனை அரசு எப்படி எதிர்கொண்டுள்ளது என்பதை நாம் பார்க்க வேண்டும். என்னென்ன தேவை? எங்கெங்கு borewell அமைக்க வேண்டும்? எங்கெங்கு pipeline அமைக்க வேண்டும்? எங்கு flush பண்ண வேண்டும்? எங்கு குடிநீர்க் குழாய்களை மாற்ற வேண்டும் என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். அதனடிப்படையில்தான் borewell அமைப்பதற்காக instructions கொடுத்திருக்கிறோம். எல்லாப் பக்கத்திலும் Borewell அமைத்தால், Bore போட்ட ஒருவாரத்திலே தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. அந்தளவுக்குக் கடுமையான வறட்சி உள்ளது. ஆகவே, வாய்க்கால்கள், ஆறுகள், குளங்கள் எங்கு இருக்கின்றதோ, அதற்குப் பக்கத்தில், source இருக்கின்ற இடங்களில்தான் bore போடச் சொல்லியிருக்கிறோம். தற்போது இந்த மாதிரியான சூழ்நிலைகள்தான் இருக்கின்றன. இது இயற்கையாக வந்ததுதான். அதை அரசு சிறப்பாக எதிர்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்காத tank–ஐ ஆய்வு செய்து, குடிநீர் இணைப்புக் கொடுக்க வேண்டும். அல்லது வேறு ஏதாவது திட்டத்தைக் கொண்டுவாருங்கள் என்றுதான் நான் சொல்கிறேன். அதாவது, இணைப்பு கொடுத்திருக்கின்ற



மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகூட இதுவரை ஒகேனக்கல் தண்ணீரையே பார்க்கவில்லை என்றுதான் நான் சொல்கிறேன். என்னுடைய குற்றச்சாட்டே அதுதான்; விடுபட்டிருக்கின்றது. அதாவது, தற்போது மழை வந்ததற்கு பின்பு, நேற்றும், நேற்றைக்கு முந்தையதினமும் 350 கன அடி தண்ணீர் இருந்தது. இன்றைக்குப் பார்த்தீர்களென்றால், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ஒருநாளும், தருமபுரி மாவட்டத்திற்கு ஒருநாளும் குடிநீர் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், தண்ணீர் அதிகமாக வரும்போது, தினந்தோறும் நீங்கள் pump செய்யலாம். ஆனால், விட்டுவிட்டுத்தான் நீங்கள் pump செய்கிறீர்கள். உதாரணத்திற்கு, பாப்பாரப்பட்டி பேரூராட்சியை எடுத்துக்கொண்டால், 15 ஊராட்சிகளும், 15 வார்டுகளும் இருக்கின்றன. 7 வார்டுகளுக்கு ஒருமுறையும், மீதமுள்ள 8 வார்டுகளுக்கு இன்னொரு முறையும் தண்ணீர் கொடுக்கின்றீர்கள். இரண்டு நாட்களுக்கு ஒருமுறை கொடுக்கின்றபோது, வாரத்திற்கு ஒருநாள்தான் அங்கு தண்ணீரே கிடைக்கின்றது. அந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, லாரிகள் மூலமாகவும் தண்ணீர் சப்ளை செய்யப்படுகின்றது என்று கடந்த முறையே சொன்னீர்கள். இப்போது கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது. அந்தப் பகுதி மக்கள் 10 ரூபாய்க்கும், 20 ரூபாய்க்கும் தண்ணீரை விலை கொடுத்து வாங்கித்தான் குடிக்கின்றார்கள். தொகுதிக்குள் சென்றாலே, இதே பிரச்சினைதான். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதியான பாலக்கோடு பகுதியிலும் தண்ணீர் பற்றாக்குறையால் எவ்வளவு பிரச்சினை ஏற்படுகின்றது என்பதையெல்லாம் நீங்கள் செய்தித்தாள்களிலே பார்த்திருப்பீர்கள். பல இடங்களுக்கு காவேரி தண்ணீரே செல்லவில்லை. கடந்த ஆட்சியில் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த எங்களுடைய தளபதி அவர்கள்கூட, “நேரடியாகச் சென்று ஆய்வு செய்யலாம்; நாங்கள் நிரூபிக்கின்றோம்” என்று உங்களிடத்திலே சொன்னார்கள். ஆனால், அதற்கு நீங்கள் எந்தவிதமான பதிலும் சொல்லவில்லை. அதனால், தண்ணீர் இணைப்பு எங்கெல்லாம் கொடுக்கப்படவில்லையோ, அந்தப் பகுதிகளையெல்லாம் ஆய்வு செய்து, இணைப்பு கொடுக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இன்பசேகரன், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) 1–26 மணிக்கு

ஆரம்பித்தார். (குறுக்கீடு) இப்போது மணி 1–45 ஆகிவிட்டது. உரையை முடிக்கச் சொல்லுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை அளிக்க வேண்டும்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு பாயிண்ட்தான் பேசியிருக்கிறேன். ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் மாவட்டம் முழுவதும் கட்டி முடிக்கப்பட்ட பல்வேறு கட்டடங்கள் பரவலாக திறக்கப்படாமலும், பயன்பாட்டிற்குச் கொண்டுவரப்படாமலும் உள்ளன. அவற்றைப் பட்டியலிட நேரம் போதாது என்பதால், ஆதாரமாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இது அவருடைய கன்னிப் பேச்சு இல்லை. அவர் ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின், அவர் இரண்டாவது முறை சட்டமன்ற உறுப்பினர், கன்னிப் பேச்சு என்கிறீர்களே? உண்மையை மறைக்காதீர்கள். அவர் எத்தனையாவது முறை சட்டமன்ற உறுப்பினர்? மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பாரப்பட்டி பேரூராட்சியிலே ஒரு நாள் விட்டு ஒரு நாள் 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டுவருகிறது. அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் போய்ப் பார்க்கலாம் என்று கூறினார்கள். அன்றைக்கே நான் அதற்கு தெளிவாக பதில் சொல்லிவிட்டேன். அந்தத் திட்டம் முழுமையாக முடிந்துவிட்டது. இனிமேல், நீங்கள் சொல்கின்ற அந்த வழியோர கிராமங்களை வேறு திட்டத்தில்தான் எடுத்து செய்ய முடியும். அந்த scheme முடிந்துவிட்டது. அதைத்தான் அன்றைக்கு நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் தலைமையில் எவ்வளவு வேகமாகச் செயல்படுகிறது என்பதற்கு ஒரு சின்ன உதாரணம்; சென்னையில் கடுமையான



வறட்சி ஏற்பட்டு, எல்லா ஏரிகளும் வறண்டுபோயிருக்கின்றன. குன்றத்தூருக்கு அருகில் இருக்கக்கூடிய சிக்கராயபுரத்தில், உபயோகப்படுத்தாத மழைநீர் தேங்கியுள்ள 22 குவாரிகளிலிருந்து சுமார் 3,000 மில்லியன் லிட்டர் தண்ணீரைச் சுத்திகரித்து, 30 மில்லியன் லிட்டர் அளவிற்கு செம்பரம்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டுவருவதற்கு 13.6 கோடி ரூபாயில் குழாய் பதிக்கும் பணிகள் மற்றும் பம்ப் அமைக்கும் பணிகள் 20 நாட்களில் முடிக்கப்பட்டுள்ளன. குவாரியிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு அமெரிக்காவிலிருந்து 1.20 கோடி ரூபாய் செலவில் பம்புசெட் வாங்கி, ராட்சத குழாய்மூலம் நாள் ஒன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் தண்ணீர் சென்னைக்குக் கொண்டுவருகிறோம். இன்னும் 20 நாட்களில் அந்தப் பணி முடிந்துவிடும். அரசு குடிநீர்ப் பிரச்சினைகளை எதிர்கொண்டுதான் வருகிறது. எந்தெந்த வகையில் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டுமோ, அந்த வகையில் அரசாங்கம் பிரச்சினைகளை எதிர்கொண்டுதான் இருக்கின்றது. மழைபெய்தபோது குவாரிகளில் தேங்கிய தண்ணீரை எடுத்து, 3 பரிசோதனைக் கூடங்களில் பரிசோதனை செய்து சென்னைக்குக் கொண்டுவந்திருக்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது மாவட்டத்திலுள்ள ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றிதான் நான் கேட்டேன்; சென்னையைப் பற்றிக் கேட்கவில்லை. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்படி சீரான முறையில் குடிநீர் வழங்கப்படாத நிலையில், ஆங்காங்கே நெடுஞ்சாலைத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் சாலை அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளை மேற்கொள்ளும்போது, குடிநீர்க் குழாய்கள் சேதமடைவதால் நிலைமை இன்னும் மோசமாகிறது. குடிநீர்க் குழாய்கள் பதிக்கப்பட்ட சாலைகளில் பணிகளை மேற்கொள்ளும்போது, இவ்வாறு சேதப்படுத்தப்படும் குடிநீர்க் குழாய்களுக்கு இழப்பீடு மற்றும் சீரமைப்புப் பணிக்கான தொகையினை, இத்திட்டப் பிரிவுக்கு உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் கட்டிமுடிக்கப்பட்ட பல்வேறு கட்டடங்கள் மாவட்டம் முழுவதும் பரவலாகத் திறக்கப்படாமல், பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படாமல் இருக்கின்றன. அவற்றைப் பட்டியலிட நேரம் போதாது என்பதால், ஆதாரமாக 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதுபோல ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், பருவதனஹள்ளி ஊராட்சி, பருவதனஹள்ளியில் தன்னிறைவுத் திட்டம் 2014–2015–ன்கீழ் கட்டிமுடிக்கப்பட்ட ரூபாய் 18 இலட்சம் மதிப்பிலான சமுதாயக் கூடம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் 2014–2015–ன்கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ள கிராம ஊராட்சி சேவை மையம், SEDP 2014–2015–ன்கீழ் கட்டி முடிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார துணை நிலையம், செங்கனூர் ஊராட்சியில் 2004–ல் கட்டப்பட்ட 6 இலட்சம் ரூபாய் மதிப்பிலான சமுதாய நலக் கூடம் ஆகியவை திறக்கப்படவில்லை. இதுபோன்றவற்றை எல்லாம் நாங்கள் சுட்டிக்காட்டியும், நாளிதழ்களில் புகைப்படங்களுடன் செய்திகள் வெளியான பின்னரும் பயனில்லை. ஒரு திட்டம் நிறைவுபெற்றதும், உடனே அதனை மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவந்தால்தான், அந்தத் திட்டத்தின் நோக்கம் நிறைவேறும். ஆனால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு பகுதிக்கும் நேரடியாகச் சென்று திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்கள். கோயம்புத்தூருக்குக்கூட வந்திருந்தார்கள். அந்தப் பகுதியிலிருக்கக்கூடிய 4 மாவட்டங்களின் அனைத்துத் திட்டங்களையும் துவக்கி வைத்துள்ளார்கள்; பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியுள்ளார்கள். தமிழ்நாடு முழுவதும் முழுமையாக அனைத்துத் திட்டங்களும் துவக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு காலக்கட்டத்தில் ஒவ்வொரு திட்டங்கள் முடிவடையும். அதேபோல, ஒரு சில திட்டங்களை அந்தந்த மாவட்ட அமைச்சர்கள் துவக்கிவைப்பார்கள். ஏதாவது சிறு சிறு வேலைகள் இருக்கும். Plastering work, pipeline அமைத்தல் போன்ற சிறு சிறு வேலைகள் இருக்கும். அவர் சொல்கிற பகுதிகளில் பணிகள் முழுவதும் முடிவடைந்திருந்தால், கண்டிப்பாக, உடனடியாகத் திறந்துவைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 1–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுகின்ற இந்த திட்டப் பணிகளெல்லாம் என்னுடைய வீட்டிற்கு பக்கத்தில், 100 அடி தொலைவில்தான் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, இரண்டு வருடங்கள் ஆகின்றன. நானும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பலமுறை இதுகுறித்துச் சொல்லிவிட்டேன். ஆனால், இன்றுவரை அந்தக் கட்டடம் திறக்கப்படவில்லை. 2004 ஆம் ஆண்டு, கட்டி முடிக்கப்பட்ட அந்தக் கட்டடத்தையே இன்னும் திறக்காமல் இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) செங்கனூர் ஊராட்சி, நாகனூரில் 2004 ஆம் ஆண்டு கட்டப்பட்ட சமுதாயக் கூடம். (குறுக்கீடுகள்)

மேலும், பெண்ணாகரம் ஒன்றியம், கூத்தப்பாடி ஊராட்சியில் மாநில நிதிக் குழு திட்டத்தின்கீழ், 18–1–2016 அன்று ரூ.19.95 இலட்சம் மதிப்பீட்டில் நிருவாக அனுமதி அளிக்கப்பட்ட 1,330 மீட்டர் நீளமுள்ள அளேபுரம், பொச்சாரம்பட்டி, மந்தைமேடு, டீ கடை வழியாக ஏரியூர் சாலையுடன் இணையும் சாலை அமைக்கும் பணிக்கு டெண்டர் விடப்பட்டு ஓர் ஆண்டு கடந்தும், இந்நாள் வரை குறைந்தபட்ச பணிகூட தொடங்கப்படவில்லை. இதனால் இச்சாலை வழியாக இயக்கப்பட்ட பேருந்து எண்கள் 8 மற்றும் 10 நிறுத்தப்பட்டதால், மக்கள் படும் இன்னல்களை மாவட்ட நிருவாகத்திற்கு எடுத்துரைத்தும், நாளிதழ்கள் வாயிலாக எனது கண்டனத்தை தெரியப்படுத்தியும், கிட்டத்தட்ட ஒரு மாதமான நிலையிலும்கூட தொடங்கப்படவில்லை. இந்த ஆட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகம் எந்த அளவுக்கு ** என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட இந்த ஆட்சி ** என்ற வார்த்தைகளை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து ஏற்கெனவே பேசி, அவைக்குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. மீண்டும் அதை record செய்கிறீர்களே! மாண்புமிகு உறுப்பினர், உள்ளாட்சித் துறை குறித்து குறிப்பிட்ட அந்த வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004–ல் கட்டப்பட்ட கட்டடம் குறித்துப் பேசினார். 2006–ல் நீங்கள்தான் ஆட்சிக்கு வந்தீர்கள். அதன்பிறகு ஐந்து வருடம் நீங்கள்தான் ஆட்சியில் இருந்தீர்கள். அப்போது நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? எனவே, அங்கு ஏதாவது பிரச்சினை இருக்கும். 2004–ல் கட்டடம் கட்டப்பட்டு, இன்னும் திறக்கப்படவில்லை என்று சொல்கிறீர்கள். 2006–ல் நீங்கள்தானே ஆட்சிக்கு வந்தீர்கள்? (குறுக்கீடுகள்) உங்கள் தொகுதியில் இடைத் தேர்தலின்போதுகூட நாங்கள் வேலை பார்த்திருக்கிறோம். அப்போது நீங்கள்தான் M.L.A. ஆனீர்கள். அப்போது அதைச் செய்திருக்கலாமே?

(உறுப்பினர் துண்டுப் பிரசுரம் ஒன்றை அவையில் காட்டினார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என்.பி. இன்பசேகரன், அனுமதியின்றி இதுபோன்று கொண்டுவந்து காட்டக் கூடாது. நீங்கள் என்னுடைய அறையில் அதைக் கொண்டுவந்து காண்பித்து பேசியிருக்கவேண்டும். அனுமதியில்லாமல் இப்படி அவையில் கொண்டுவந்து காட்டக் கூடாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒரு நிமிடம் உட்காருங்கள். ஏற்கெனவே அரசாங்கத்தைப் பற்றிக் கூறிய வார்த்தைகளெல்லாம் தேவையற்றது என்று சொல்லி நீக்கியிருக்கிறேன். அவ்வாறு நீக்கியதையெல்லாம் நீங்கள் திரும்பவும் record செய்ய முயற்சி செய்கிறீர்கள். அது தவறு. அரசாங்கத்தைக் குறித்து நீங்கள் கூறிய அந்த வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்ளாட்சி மற்றும் ஊராட்சித் துறையைப்பற்றிப் பேசினார்கள். உங்களது ஐந்து ஆண்டுக்கால ஆட்சியிலும், எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலும், ஒவ்வொரு துறையாக நீங்கள் ஆய்வு செய்யலாம். எங்கே வேண்டுமானாலும்



பதில் சொல்ல நான் தயார். குடிநீர்த் திட்டங்களுக்காக, உங்கள் ஆட்சியில் செலவு செய்தது வெறும் 9,000 கோடி ரூபாய். நாங்கள் செலவு செய்தது 21,000 கோடி ரூபாய். சாலைகள் என்று பார்த்தால், நீங்கள் செலவு செய்தது, வெறும் 7,000 கோடி ரூபாய்தான். நாங்கள் செலவு செய்தது 17,000 கோடி ரூபாய். அதேபோல, சுயநிதிக் குழுக்களுக்கு வங்கிக் கடன்; உங்கள் ஆட்சியில் 9,838 கோடி ரூபாய்தான் கொடுத்திருக்கிறீர்கள். எங்கள் ஐந்து ஆண்டுக் கால ஆட்சியில் 26,470 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம். எந்த திட்டத்தை வேண்டுமானாலும் நீங்கள் எடுத்துப் பார்க்கலாம்; ஊரக வளர்ச்சித் துறை அப்படி இருக்கிறது; இப்படியிருக்கிறது என்று பொத்தாம் பொதுவாக, தவறாகச் சொல்லக்கூடாது. புள்ளிவிவரத்தோடு பேச நான் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) திரு. பி.என்.பி. இன்பசேகரன், நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒன்றரை வருடத்திற்கு முன்பு டெண்டர் விட்டும், பணி இன்னும் முடியவில்லை என்று சொன்னேன். (குறுக்கீடுகள்)

அடுத்து புது வாழ்வுத் திட்டம்; கழக ஆட்சியிலே, மாண்புமிகு தளபதியார் அவர்களின் சீரிய முயற்சியால் 15 மாவட்டங்களில் "சிறப்பாக வாழ்ந்து காட்டுவோம்" என்ற திட்டம். 2010 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டம் உள்ளிட்ட 10 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. 2011–ல் "புதுவாழ்வுத் திட்டம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு, பெண்ணாகரம், நல்லம்பள்ளி, பாப்பிரெட்டிபட்டி, அரூர், மொரப்பூர் ஆகிய ஆறு ஒன்றியங்களில் செயல்பட்டு வருகிறது. தருமபுரி, காரிமங்கலம் ஆகிய இரு ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. கல்வி, தொழில், வேலைவாய்ப்பு போன்றவற்றில் பின்தங்கியுள்ள எங்கள் மாவட்ட வளர்ச்சிக்கு இதுபோன்ற திட்டங்களின் தேவை தொடர்கிறது. இந்நிலையில் இத்திட்டம் 30–6–2017 உடன் நிறைவு செய்யப்படுவதாக கொள்கை விளக்கக் குறிப்பேட்டில்

குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு மாற்றாகக் கொண்டுவரப்படவுள்ள "ஊரகப் புத்தாக்கத் திட்டம்" (புதுவாழ்வுத் திட்டம்–II) செயல்படுத்தப்படாத 120 புதிய வட்டாரங்களில் செயல்படுத்தப்பட உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் குறிப்பிட்டவாறு, புது வாழ்வுத் திட்டம் நிறைவு பெறும் வட்டாரங்களில் இத்திட்டத்தில் சுமார் 10 ஆண்டுகள் பணியாற்றிய பணியாளர்களின் நிலை குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. அவர்களின் நலனையும் கருத்தில்கொள்ள வேண்டுகிறேன். இத்திட்டத்தின் சேவை எங்கள் மாவட்டத்திற்கு மிகவும் தேவை என்பதால், ஏற்கெனவே புதுவாழ்வுத் திட்டம் செயலாக்கப்படாத தருமபுரி, காரிமங்கலம் ஒன்றியங்களில் ஊரக புத்தாக்கத் திட்டத்தைச் செயல்படுத்திடவும், ஏற்கெனவே செயலாக்கப்பட்டுவரும் பெண்ணாகரம், நல்லம்பள்ளி, பாப்பிரெட்டிபட்டி, அரூர், மொரப்பூர் ஆகிய ஒன்றியங்களில் தொடர்ந்திடவும் வேண்டுகிறேன்.

அடுத்து, ஏரியூர், கடத்தூர் ஒன்றியங்களைத் தொடங்கிட வேண்டுகிறேன். தமிழக அரசால் தருமபுரி மாவட்டத்தில் நிருவாக வசதி கருதி, புதியதாக அறிவிக்கப்பட்ட ஏரியூர், கடத்தூர் ஒன்றிய அலுவலகங்களைத் தொடங்கி, அதற்கான கட்டடங்களைக் கட்ட இந்நிதிநிலை அறிக்கையிலேயே நிதியொதுக்க வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தினை பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் பிற மாநிலங்களைவிட குறைவான கூலியாக ரூ.205 மட்டும் வழங்கப்படுகின்றது. ஆனால், கேரளாவில் ரூ.258–ம், கர்நாடகாவில் ரூ.236–ம், ஹரியானாவில் ரூ.277–ம், கோவாவில் ரூ.240–ம், சண்டிகரில் ரூ.265–ம் வழங்கப்படுகின்றது. இதனை மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகம் பட்டியலிட்டுள்ளது. ஏன் தமிழகத்தில் மட்டும் குறைவாகக் கூலி வழங்கப்படுகின்றது?

*பிற்பகல் 1–55*

ஏற்கெனவே அண்டை மாநிலங்களோடு தொடரும் தண்ணீர் தாவா பிரச்சினை, மழையின்மையால் தமிழகம் கடும் வறட்சி, வறுமையைச் சந்தித்து வருகின்றது. மக்கள் மிகவும் துன்ப, துயரங்களுக்கு உள்ளாகி வருகின்றார்கள். இதுபோன்ற



உண்மையான காரணங்களை மத்திய அரசிடம் சுட்டிக்காட்டி, இத்திட்டத்திற்கு கூடுதல் நிதியினைப் பெற்று கூலியை உயர்த்தித் தரவும், கூடுதலானவர்களுக்கு வேலை தரவும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்துகின்றேன்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அலுவலர்களுக்கு பெரும் பணிச் சுமையாக இருப்பதால், தமிழக அரசின் பொதுப் பணித் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போன்ற துறைகளிலுள்ள பொறியாளர்களை இத்திட்டத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த விவாதத்தில் நான் முன்வைத்துள்ள கோரிக்கைகளை மக்கள் நலன் கருதி நிறைவேற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. இன்பசேகரன், இறுதியாக பேசி முடியுங்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் மற்றும் பாலக்கோடு வட்டங்களிலும் உள்ள 815 ஏக்கர் பரப்பளவுள்ள வறண்ட நிலங்கள் பாசன வசதி பெற, ஜர்த்தலாவு கால்வாயின் 5,890–வது மீட்டரிலிருந்து தொட்லாம்பட்டு ஏரி, பாப்பாரப்பட்டி பெரிய ஏரி உள்ளிட்ட 17 ஏரிகளுக்கு சின்னாற்று உபரி நீரை வழங்கும் கால்வாய் அமைக்கும் பணிக்காக சரித்திர நாயகர் எங்கள் தலைவர் ஆட்சியில் 15–9–2006 நாளிட்ட அரசாணை எண் 167, பொதுப் பணித் துறைமூலம் 629 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது. 2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, முயல் வேகத்தில் நடைபெற்ற இப்பணி, 2011–ல் ஆட்சி மாறியவுடன் ஆமை வேகத்தில் நகர்ந்து 2015–ல் நிறைவுற்றதாக அறிவிக்கப்பட்டது. பின்னர் 7–2–2015 அன்று சின்னாற்று உபரி நீரை இக்கால்வாயில் திறந்துவிட்டனர். இரண்டு ஏரிகளுக்குத் தண்ணீர் வந்ததாகச் சொன்னார்கள். நாங்களும் சென்று பார்த்தோம். இரண்டு ஏரிகளுக்கும் கொஞ்சம் கொஞ்சமாக நீர் வந்திருந்தது. தொடர்ந்து நீர் வந்திருந்தால், இத்திட்டப் பணிகளில் உள்ள நிறை குறைகளை அறிந்திருக்க முடியும். அதிலும், அரசியல் தலையீட்டின் காரணமாக கால்வாயின் கதவுகள் அடைக்கப்பட்டன. இதனால் தண்ணீர் வரவில்லை.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், ஜர்த்தலாவு கால்வாயிலிருந்து 5,000 மீட்டருக்கு இணைப்புக் கால்வாய் அமைத்து, 4,789 ஏக்கர் பரப்பளவு பாசன வசதி பெற்றிட எர்ரனள்ளி ஏரி, மேகலாம்பட்டி ஏரி, காட்டம்பட்டி ஏரி, அழகம்பட்டி ஏரி, புலிதுரை ஏரி உள்ளிட்ட 16 ஏரிகளுக்கு நீர் வழங்கும் கால்வாய்கள் அமைப்பதற்கான திட்ட அறிக்கை 2015–ல் அரசுக்கு முன்மொழியப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. இன்பசேகரன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்; நேரம் இல்லை, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சீக்கிரம் முடித்துவிடுகின்றேன். இதனை ஏற்று, இந்த நிதியாண்டில் இந்தத் திட்டத்தினை நிறைவேற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2008 ஆம் ஆண்டு கழக ஆட்சியில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயிர் காக்கும் உயர் சிகிச்சை அளிக்கும்வகையில் இருதய நோய் மருத்துவத் துறை, மூளை நரம்பு மருத்துவத் துறை ஆகிய இரு துறைகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். மூளை நரம்பு அறுவை சிகிச்சைப் பிரிவு, சிறுநீரக அறுவை சிகிச்சைப் பிரிவு, தோல் அறுவை சிகிச்சைப் பிரிவு, புற்றுநோய் கதிர்வீச்சுப் பிரிவு ஆகியவற்றிற்குத் தேவையான உபகரணங்கள், வசதிகள் மற்றும் நவீனக் கருவிகளை வழங்கிட வேண்டும். இருக்கின்ற இரண்டு அறுவை சிகிச்சைக் கூடங்கள் போதுமானதாக இல்லை. ஆகவே, மேலும் இரண்டு அறுவை சிகிச்சைக் கூடங்களை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மருந்தியல் துறைமூலம் 20 சதவிகிதம் மருந்துக்கான துறைரீதியிலான ஒதுக்கீடு மட்டுமே கிடைத்துள்ளது. இதனால் ஏற்படும் மருந்து தட்டுப்பாட்டால் ஏழைகள் பாதிக்கப்படுவதற்கு தீர்வு காண வேண்டும். தருமபுரி மாவட்டத்தில், பெண்ணாகரம் மருத்துவமனை 2009 ஆம் ஆண்டு முதல் அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு, இயங்கி வருகின்றது. ஒகேனக்கல் பிரதான சாலையில் சுற்றுலாத் தலத்திற்கு மிகவும் அருகில் அமைந்துள்ளது. ஆற்று வெள்ளத்தில் சிக்கிக் கொள்வதாலும், சுற்றுலா



வாகனங்களாலும் விபத்துகள் அதிக அளவில் ஏற்படுகின்றன. இந்தச் சூழ்நிலையில், இம்மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் மற்ற பணியாளர்கள் போதுமானதாக இல்லை. பெண்ணாகரத்தைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான மலைக் கிராமங்களிலிருந்து சிகிச்சைப் பெறுவதற்காக நோயாளிகள் வருகை புரிகின்றனர்.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர், தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுத்துவிடுங்கள்; பதிவு செய்துகொள்கிறேன்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** தொகுதிக் கோரிக்கைகள் இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** நீங்கள் பேச ஆரம்பித்து அரை மணி நேரத்திற்கும் மேலாகிறது.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** ஒரே ஒரு நிமிடம். மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை 2010–ல் எங்கள் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் ஏற்படுத்தினார்கள். ஆனால், அந்த மாவட்ட மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவர்களோ, மருத்துவ உபகரணங்களோ இல்லை. அந்த மருத்துவமனையில் M.D. மருத்துவர் இதுவரை கிடையாது. இரண்டு மயக்கவியல் மருத்துவர் பணியிடத்தில் ஒருவர்தான் இருக்கிறார். மகப்பேறு மருத்துவர்கள் இரண்டு பேர்தான் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** C.T. Scan, Echo இயந்திரங்களுக்கான கட்டட வசதி இல்லை; மேலும், அதற்கான பணியாளர்களும் இல்லை. நிரந்தரமான operation Theatre இல்லை; Digital x–ray இல்லை, ventilator, heavy duty washing machine, mammogram, arthroscopy unit for keyhole surgery, Arthroplasty instrument , C.T. scan எதுவுமே கிடையாது. paediatric Doctor இல்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். நேரம் இல்லை. நீங்கள் 30 நிமிடங்களுக்கு மேல் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** அந்த மருத்துவமனைக்கு கடந்த 18 ஆம் தேதி மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் வந்தார்கள். Dialysis Unit –ஐ open செய்தார்கள். ஆனால், அதற்கு மருத்துவர் கிடையாது; Neurologist கிடையாது; Nephrologist கிடையாது. யாருமே கிடையாது. ஆனால், instruments மட்டும் கொடுத்துவிட்டார்கள். இந்த மாதிரி ** அந்த மருத்துவமனையில் நீடிக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மகிழ்ச்சியாக நன்றி சொல்லி முடியுங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்கின்ற பிரச்சினை குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். Dialysis–க்கு Neurologist, Nephrologist–தான் இருக்க வேண்டுமென்பது கிடையாது. Dialysis–யைப் பொறுத்தவரையில், trained technician or even M.D. Physician Doctor கூட அதை manage செய்யலாம். அதனால் Specialist இல்லாத ** என்ற வார்த்தையை தயவுசெய்து நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற நிலை குறித்து அரசு நிச்சயமாக உரிய நடவடிக்கையை உடனே எடுக்கும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். Conclude your speech.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு 17 மருத்துவர்கள் இருக்க வேண்டும். ஆனால், 10 பேர்தான் இருக்கிறார்கள். மேலும், அங்கு செவிலியர்கள் இல்லை. உதவி செவிலியர்கள் போதிய அளவில் இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மருத்துவமனையை ஆய்வுசெய்து,

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தேவையான உபகரணங்களை வழங்கி, போதிய மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** நேரமாகிவிட்டது, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நேரமாகிவிட்டது. சீக்கிரம் முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) நன்றி மட்டும் சொல்லுங்கள்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தொகுதிக் கோரிக்கைகளை நான் படித்ததாகக் கருதி, பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** உங்கள் கோரிக்கைகள் எல்லாம் பதிவு செய்யப்படும்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** சரி; என்னுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். **

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** அதுவெல்லாம் அவைக் குறிப்பில் வராது.

**தொகுதிக் கோரிக்கைகள்**

தருமபுரி மாவட்டத்தில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் இந்த அரசால் அறிவிக்கப்பட்ட தருமபுரி சிப்காட் தொழிற்பேட்டை இதுவரை தொடங்கப்படவில்லை. இது தொடர்பாக நிலம் கையகப்படுத்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டும், இப்பணிகளில் எந்த முன்னேற்றமும் இல்லை. ஆகவே, தருமபுரியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைத்திட அரசு முன்வரவேண்டும்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின்போது, பெண்ணாகரம் அருகேயுள்ள நெக்குந்தி கிராமத்தை மையமாகக் கொண்ட இராணுவ தளவாட ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி மையம் அமைக்க அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தினைச் செயலாக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த வேண்டும்.

கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு இந்த அரசால் அறிவிக்கப்பட்ட வத்தல் மலையை சுற்றுலாத் தலமாக்கும் திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. தருமபுரி நகருக்கு குறைந்த

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தொலைவில் அமைந்துள்ள வத்தல் மலையை சுற்றுலாத் தலமாக அறிவித்து, அங்கொரு தாவரவியல் பூங்காவை நிறுவிட அரசு முன்வரவேண்டும்.

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், கெண்டையன அள்ளி, கிராமம் புல எண் 258–ல் போடம்பட்டி அருகே 2013 ஆம் ஆண்டு நிலவரப்படி, 82.20 இலட்சம் மதிப்பீட்டில் நாகாவதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணிக்கான திட்ட அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு 4 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் பணிகள் தொடங்கப்படவில்லை. இத்திட்டத்தால் வறட்சியான இப்பகுதி வளம் பெறும் என்பதால் நிருவாக அனுமதியும், நிதியுதவியும் அளித்திட வேண்டும். எனவே, போடம்பட்டி அருகே ஒரு தடுப்பணை கட்ட வேண்டும்.

விவசாயிகள் அழுகின்ற ஆட்சி விரைவில் வீழும் என்பார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் தானும் ஒரு விவசாயி என்கிறார். நானும் ஒரு விவசாயி என்ற உணர்வோடு மேற்கண்ட நீர்வளத் திட்டங்களை விவசாயிகள் நலன் கருதி நிறைவேற்றிட வேண்டுகிறேன்.

இரவு நேரங்களில் உள்நோயாளிகளுக்கு தரமான சிகிச்சைகள் அளிக்க போதிய செவிலியர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு நியமனம் செய்யப்பட வேண்டும்.

அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனை சுற்றுலாத் தலத்திற்கு மிக அருகில் உள்ள ஒரே மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் 15–க்கும் குறைவான மருத்துவர்களே உள்ளனர். பல மருத்துவப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. வெளிநோயாளி மற்றும் உள்நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே உள்ளது. ஆனால் தேவையான புதிய மருத்துவப் பணியிடங்கள் உருவாக்கப்படவில்லை. உடனடியாக மேலும் 15–க்கும் மேற்பட்ட மருத்துவர்களைப் புதிதாக நியமனம் செய்ய வேண்டும்.

கண் சிகிச்சைப் பிரிவுக்காக தனியாக 20 படுக்கை வசதிகளுடன்கூடிய கட்டடம்; நோயாளிகளின் உடன் வந்தவர்கள் தங்க தனிக் கட்டடம் கட்டித் தர வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள 10 மருத்துவர் பணியிடங்களையும், 14 செவிலியர் பணியிடங்களையும், 4 மருந்தாளுநர் பணியிடங்களையும், துணை சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள 11 கிராம செவிலியர்கள் (VHN) பணியிடங்களையும் நிரப்பிட வேண்டும்.



மேலும், கட்டட வசதியில்லாத நானூர், காவக்காடு, சின்ன வத்லாபுரம், பாப்பாரப்பட்டி ஆகிய 4 துணை சுகாதார நிலையங்களுக்கு கட்டடங்கள் கட்டப்படவேண்டும்.

ஒகேனக்கல் சுற்றுலாத் தலத்திற்கு வரும் பயணிகள் எதிர்பாராத விதமாக விபத்தில் சிக்கிக் கொள்வதும், தண்ணீரால் அடித்துச் செல்லப்படுவதும் தொடர் நிகழ்வுகளாக உள்ளதால், ஒகேனக்கல்லுக்கு என்றே தனியாக ஒரு 108 அவசர மருத்துவ ஊர்தியை ஒதுக்கீடு செய்யவேண்டும்.

கல்வியறிவால்தான் ஒரு தேசம் முன்னேற முடியும். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரை, அரசு கல்லூரிகளானாலும் சரி, அரசு தொடக்கப் பள்ளிகளானாலும் சரி; போதிய பேராசிரியர்களோ, ஆசிரியர்களோ நியமிக்கப்படுவது இல்லை. இதுபோன்ற காரணங்களால் கல்வியறிவு பெற்றவர்களின் பட்டியலில் மாநில சராசரியளவு 80.33 சதவிகிதத்தைவிட குறைவாக 64.71 சதவிகிதம் பெற்று, மாநிலத்தில் கடைசி இடத்தில் உள்ளதை நினைக்கும்போது மிகவும் வேதனையாக உள்ளது.

கடந்த 6 ஆண்டுகளாக எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே உயர் கல்வி அமைச்சர்களாக கோலோச்சிய நிலையில்தான், எங்கள் மாவட்டம் கடைசி இடத்தைப் பெற்றுள்ளது. கல்வியில் பின்தங்கிய வட்டாரங்களில் தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த பெண்ணாகரம், காரிமங்கலம், பாலக்கோடு ஆகிய மூன்று வட்டாரங்களில் தொடக்கப் பள்ளிகள் தொடங்கிட வேண்டியோ, தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டியோ மற்றும் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டியோ, அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கும் முன்மொழிவுகளை ஏற்று அப்பள்ளிகளைத் தொடங்கிட அரசாணை பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பெண்ணாகரம் பேரூராட்சியில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க தலைவர் கலைஞர் ஆட்சியில், மாண்புமிகு தளபதியார் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, சின்னாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டுவந்தார். இத்திட்டத்தின்மூலமும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலமும் 7.00 இலட்சம் லிட்டர் குடிநீர் தற்போது விநியோகிக்கப்படுகிறது. ஆனால், தேவைப்படும் குடிநீரின் அளவு 8.64 இலட்சம் லிட்டர். இருக்கின்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் மொத்த கொள்ளவோ 7.00 இலட்சம் லிட்டர் மட்டும்தான். 1.64 இலட்சம் லிட்டர் குடிநீர் பற்றாக்குறை. மேலும், சீரான விநியோகம் இல்லாததால் மிகவும்

குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. ஆகவே, இத்தட்டுப்பாட்டினைப் போக்கவும், எதிர்கால குடிநீர் கூடுதல் தேவையினைக் கருத்தில்கொண்டும் பெண்ணாகரம் பேரூராட்சியில் 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்க குடிநீர்த் தொட்டியினை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெண்ணாகரம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.373.47 இலட்சம் ஆகும் எனவும், ஆண்டுப் பராமரிப்புத் தொகை ரூ.21.18 இலட்சம் ஆகும் எனவும் திட்ட முன்மொழிவுகள் அனுப்பப்பட்டும், செயலாக்கப்படவில்லை. இதனால் கழிவுநீர் முள்ளுவாடி ஏரியிலும் அதன் தொடர்ச்சியாக மழைக் காலங்களில் சுமார் 10 ஏரிகளிலும் நிரம்புகிறது. இதனால் பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் வாழும் பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்பட்டு வருகிறது. நிலத்தடி நீரின் தரமும் பாதிக்கப்படுவதால், பொது மக்கள் அடிக்கடி போராட்டம் நடத்த வேண்டிய நிலைக்கே தள்ளப்பட்டுவிட்டார்கள். ஆகவே, பெண்ணாகரம் பேரூராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.

தலைவர் கலைஞர் அவர்களால் பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட 1999–ல் பஞ்சப்பள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 2013 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் குடிநீர் வழங்கப்படவில்லை. இதனால் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு நிலவி வந்தது. தளபதியார் அவர்களின் சீரிய முயற்சியினால் நிறைவேற்றப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பாப்பாரப்பட்டி வாழ் பொது மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது. இருப்பினும், இப்பேரூராட்சிக்குத் தேவையான குடிநீரின் தேவை 7.7 இலட்சம் லிட்டர். ஆனால், தற்போது வழங்கப்படுவதோ 6 இலட்சம் லிட்டர். வாரத்திற்கு ஓரிரு நாட்களுக்கு மட்டும்தான் வழங்கப்படுகிறது. அதனால் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் அவதிப்படுகிறார்கள். குடிநீரை சீராக, முறையாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பேரூராட்சியின் வாரச் சந்தையில் 3 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆசிரியர் காலனி, அப்பு முதலி காலனி, வள்ளுவர் மற்றும் ஏ.பர்பாரப்பட்டி ஆகிய நான்கு இடங்களில் சுகாதார வளாகங்கள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



மாமரத்துப்பள்ளத்தில் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு செயல்பட்டுவரும் பெண்ணாகரம் அரசு கலைக் கல்லூரியில், இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடப்பிரிவுகளை புதியதாக இளங்கலை பட்டப்படிப்பில் இக்கல்வியாண்டில் அறிமுகப்படுத்திட வேண்டும். மிகவும் பின்தங்கிய ஏரியூர் பகுதியில் அரசு கலைக் கல்லூரி அல்லது அரசு பாலிடெக்னிக் கல்லூரி தொடங்க வேண்டும்.

தொழில்–கல்வி–வணிகரீதியாக தருமபுரி, சேலம் மாவட்ட மக்களுக்கு பயனளிக்கக்கூடிய பண்ணவாடி–கோட்டையூர் இடையே காவிரியாற்றின் குறுக்கே உயர்மட்ட மேம்பாலம் கட்ட வேண்டும்.

பெண்ணாகரம் ஒன்றியம், கலப்பம்பாடி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும்.

பெண்ணாகரம் வட்டம், வட்டுவன அள்ளி ஊராட்சி பவளந்தூர், பாலக்கோடு வட்டம், போகர அள்ளி ஊராட்சி–பேகார அள்ளி ஆகிய இடங்களில் புதிய கால்நடை மருந்தக நிலையங்களைத் தொடங்க வேண்டும்.

பெண்ணாகரம் ஒன்றியம் பருவதனஹள்ளி, பாலக்கோடு ஒன்றியம்–பாடி ஆகிய ஊராட்சிகளில் ஒதுக்கப்பட்ட சிட்கோ தொழிற்பேட்டைகளில் தொழில் தொடங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாப்பாரப்பட்டியில் நலிவடைந்துள்ள சென்னகேசவன், பாரத மாதா, அவ்வை மகளிர் ஆகிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும்.

பாப்பாரப்பட்டிக்கு பத்திரப் பதிவுத் துறையின்கீழ் சார்–பதிவாளர் அலுவலகம் அமைத்திட வேண்டும்.

ஒகேனக்கல் வனப் பகுதியில் வாழும் யானைகள் இறப்பதைத் தடுக்கவும், யானைகளை அழிவிலிருந்து காக்கவும், ஒகேனக்கல் காப்புக் காடு, பேவனூர் காப்புக் காடு, பதனவாடி காப்புக் காடு, அய்யூர் காப்புக் காடு மற்றும் ஓசூர் வனச் சரகம் உட்பட்ட பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கி யானைகள் சரணாலயம் அமைக்க வேண்டும்.

பெண்ணாகரத்திலிருந்து கர்நாடகா மாநிலம் கனகபுராவிற்கு போடூர்–அஞ்செட்டி வழியாகச் செல்ல ஏதுவாக வனத் துறை மூலம் அமைக்கப்பட்ட சாலை மற்றும் மேம்பாலம் சின்னாற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. மீண்டும் அப்பாலத்தினைக் கட்டி சாலையினை சீரமைக்க வேண்டும்.

பெண்ணாகரம் தொகுதியில் பளிஞ்சிர அள்ளி ஊராட்சியில் பளிஞ்சிர அள்ளி, ரங்காபுரம், சின்ன பெரமனூர், தருமதோப்பு, கெட்டூர், பி. அக்ரஹாரம், பிக்கிலி ஊராட்சியில்–குறவன் தின்னை, கிட்டம்பட்டி ஊராட்சியில் மாரியம்மன் கோயில், ஓ.ஜி. அள்ளி ஊராட்சியில்–மாக்கனூர், மாங்காப்பட்டி, விளயனூர் ஊராட்சியில் மாரியம்மன் கோயில் பள்ளம், ஏரிக்கரை எல்லம்மன் கோயில் கொட்டாய், பிக்கம்பட்டி கவுண்டர் கொட்டாய், கூத்தப்படி ஊராட்சியில் ஒகேனக்கல் ஏரிக்காடு, எலுமன் மந்தை பழங்குடியினர் குடியிருப்பு, மலையனூர்-நாகனம்பட்டி, தாசம்பட்டி–வடக்கத்தான் கொட்டாய், மாணிக்கம் கொட்டாய், கூக்குட்ட மருதஅள்ளி ஊராட்சி, கொல்லன் கொட்டாய், பருவதனஅள்ளி ஊராட்சியில் எரங்காடு, சாமியார் கொட்டாய், லாடக்கார தெரு ஆகிய இடங்களில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பிற திட்டங்களின்கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ள மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகளுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் இணைப்பு வழங்க வேண்டும்.

மூங்கில்மடுவு–சிடுமன அள்ளி ஆதி திராவிடர் குடியிருப்பு சாலை, சின்னப்பநல்லூர்–பொன்னேரி காடு–சின்னவத்தலாபுரம் சாலை, சின்னப்பநல்லூர்–ஆக்லத்தான அள்ளி சாலை, சிகரல அள்ளி, மெட்டுக்கல் முனியப்பன் கோயில், மாமரத்து திட்டுக்காடு சாலை, தென்னகுட்ல அள்ளி–சாமத்தாள் முனியப்பன் கோயில் சாலை, மஞ்சநாயக்கன் அள்ளி–ஈச்சம் பள்ளம்–தாசர் குந்தி சாலை, மூங்கில்மடுவு பேருந்து நிறுத்தம்–குடிநீர்க் கிணறு சாலை, சிகரல அள்ளி கோடு பள்ளம்–பழனி கவுண்டன் கொட்டாய் சாலை, ஒரப்பாச்சியூர் BSNL டவர் முதல் ஒரப்பாச்சியூர் ஆதி திராவிடர் குடியிருப்பு சாலை, காமராஜர் நகர், ஜீவா நகர், குப்பண்ணன் கொட்டாய் சாலை, மூங்கில் மடுவு–ஜெகந்நாதன் கொட்டாய் சாலை, அரல்குந்தி, சின்னவள்ளி மேடு–சோளப்பொறியான் காடு



சாலை, காட்டு மோட்டூர் முனியப்பன் கோயில் சாலை, பூச்சூர்–மட்டக்கல் சாலை ஆகிய மண் மற்றும் கப்பிச் சாலைகளை தார்ச் சாலைகளாக அமைத்திட வேண்டும்.

பெண்ணாகரம் வட்டம், நெருப்பூர் கிராமத்தில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அருள்மிகு முத்தித்தராய சுவாமி மற்றும் திம்மராய சுவாமி கோயில் அமைந்துள்ள தீர்வை ஏற்படாத தரிசு நிலத்தை இக்கோயிலின் பெயரில் பட்டா வழங்கிட வேண்டும்.

ஒகேனக்கல்லில் ஈமச்சடங்கு உள்ளிட்ட சம்பிரதாய சடங்குகளைச் செய்யும் இடங்களில் ஆற்றங்கரையோரம் படித்துறையும், கம்பி வளைப் பாதுகாப்பு அமைப்பும் ஏற்படுத்திட வேண்டும்.

பெண்ணாகரம் தொகுதியில் பரவலாக வாழும் குருமன்ஸ், குறிச்சான் இன பழங்குடியின மக்களுக்கு பழங்குடியினர் சான்றிதழ் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெண்ணாகரம் அரகாசன அள்ளி ஊராட்சி அரகாசன அள்ளியிலிருந்து பள்ளிமுத்தானூர் செல்லும் சாலையில் மழைக்காலத்தில் நாகவதி ஆற்றில் ஏற்படும் வெள்ளப் பெருக்கால், பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் பொது மக்கள் ஆற்றைக் கடக்க முடியாத நிலையைப் போக்க, இவ்வாற்றின் குறுக்கே உயர் மட்ட மேம்பாலம் அமைத்திட வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பேசும்பொழுது தொடர்ந்து குற்றச்சாட்டுகளை சொல்லிவருகிறார். பெண்ணாகரம் தொகுதிக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்னென்ன செய்திருக்கிறது என்ற விவரங்கள் அடங்கிய இரண்டு பட்டியல்கள் என்னிடம் இருக்கின்றன. Existing vacancy–யை நிரப்புவது மட்டுமல்ல; அந்த மருத்துவமனைக்கு புதிய பணியிடங்கள் (creation of new posts) என்ற அடிப்படையில், அரசாணை எண் 32–ன்படி, மருந்தாளுநர் பணியிடம், தலைமை மருந்தாளுநர் பணியிடம், 9 செவிலியர் பணியிடங்களை

உருவாக்கியிருக்கிறோம். We have created new posts. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, பொத்தாம் பொதுவாக டாக்டர்கள் இல்லை, செவிலியர்கள் இல்லை என்ற கருத்தை தயவுசெய்து சொல்ல வேண்டாம் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். என்னிடத்தில் பட்டியல் இருக்கின்றது. அதை வேண்டுமானாலும் உறுப்பினரிடம் கொடுக்கிறேன். தற்போது கலந்தாய்வு நடக்கக்கூடிய நேரம். ஏற்கெனவே பணிபுரியக்கூடிய மருத்துவர்கள் 1,000 பேர் மேற்படிப்பிற்காகச் சென்றிருக்கிறார்கள். புதிய மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தலை நடத்துவது குறித்து இங்கே விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு “இது வாழைப் பழ கதைபோல இருக்கிறது” என்று சொன்னார். வாழைப் பழக் கதையில், வாழைப் பழத்தை வாங்குவதற்குப் பணம் கொடுத்தவர்கள் நாங்கள்; வாங்கி வந்தவர்கள் அவர்கள் (குறுக்கீடு) என்பதை பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

பிற்பகல் 2–05

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் இரண்டு கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன். ஒன்று, என்னுடைய தொகுதிக்குட்பட்ட தாமரைக்குளம் மழையினால் முழுவதும் இடிந்து விட்டது. அதை சீர் செய்ய 2.75 கோடி ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.



அதை நிறைவேற்றித்தர மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்ற வினாவினை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அடுத்து, நகராட்சிப் பொறியாளர்கள் பதவி உயர்வு சம்பந்தமாக எழுத்துப் பூர்வமாக கோரிக்கை ஒன்று தந்திருக்கிறேன். அதற்கும் பதில் அளிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உயிருக்குள் உயிராகி; உணர்வுக்குள் நிறைவாகி; மனதுக்கு மகிழ்வாகி; மாசற்ற பொருளாகி; கண்ணுக்கு ஒளியாகி; கருத்துக்குச் சுடராகி; விண்ணுக்கும் மண்ணுக்கும் விரவி நிற்கும் உயர்வாகி; காட்சிக்கு மாட்சி தந்து கலங்கியோருக்கு மீட்சி தந்து, கடைகோடி மனிதருக்கும் காவல் அரணாகி; (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றரை கோடி தொண்டர்களும் கண்கண்ட தெய்வம் என மனம் வணங்கும், தினம் வணங்கும் உன்னதத் தலைவி; உத்தமத் தலைவி எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழரை கோடி தமிழ் மக்களும் தங்கள் இதயத்தில் ஏந்தி நிற்கும் இணையில்லா முதல்வர், ஏனைய முதல்வருக்கெல்லாம் முதல்வராகத் திகழ்ந்த முத்தமிழ் அன்னை எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) வளர்ந்திட்ட நாளில் மட்டுமல்ல; வாழ்ந்திட்ட நாளெல்லாம் வாகை சூடிய வெற்றியின் விலாசம் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) மண் ஆண்டது போதும்; இனி விண் ஆள வாருங்கள் அம்மா எனும் கால தேவனின் கட்டளைக்குத் தலைவணங்கி, அலை வந்து தாலாட்டும் வங்கக் கடலோரம் நிலை கொண்ட தன் அரசியல் ஆசான் புரட்சித் தலைவருக்கு அருகிலேயே மீளாத் துயில் கொண்டு கண் உறங்கும் எங்கள் அம்மா. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களிலே கசிந்துருகும் எனது கண்ணீரின் மலர்களை முதற்கண் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் புரட்சித் திட்டங்களை முன்னெடுத்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தமிழக மக்களின்

நலன் காக்கும் திட்டங்கள்; அரசு கொள்கை முடிவுகள் மற்றும் நிருவாக நடவடிக்கையால் 100 நாட்களில் 1,969 கோப்புகளில் கையொப்பமிட்டு, அனுமதியளித்து பொது மக்களுக்குப் போதுமான அளவில் நியாய விலையில் மணல் கிடைக்க அரசே நேரடி விற்பனை; ஏரிக் கால்வாய் அணைகளிலுள்ள வண்டல் மண்ணை விவசாயிகள் விலையின்றி எடுத்து தங்கள் நிலங்களில் பயன்படுத்திக்கொள்ள அனுமதி; 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 30 மாவட்டங்களில் குடிமராமத்துப் பணிகள், கூடுதல் நிதியாக 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு; நீண்ட நெடுங்காலத்திற்குப் பின்னர் மேட்டூர் அணையைத் தூர்வாரும் பணி; அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு டிஜிட்டல் உரிமம்; தென்னையிலிருந்து நீரா பானம் தயாரிக்க ஆணை; அத்திக்கடவு–அவினாசித் திட்டத்தைச் செயல்படுத்த 250 கோடி ரூபாய் ஒதுக்கீடு என பல புதுமைத் திட்டங்களை வார்த்தெடுத்து, “நிலையான ஆட்சி; நிரந்தர வளர்ச்சி” என்ற இலக்குடன் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை தலைமையேற்று வழிநடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 32 ஆண்டுக்கால தமிழக அரசியல் வரலாற்றைப் புரட்டிப்போட்டு, தொடர்ச்சியாக இரண்டாவது முறையும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களில் ஆட்சியைத் தந்த தமிழக மக்களின் நம்பிக்கையை காத்திட வேண்டும்; மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு ஒரு பங்கமும் வராமல் பாதுகாத்திட வேண்டுமென்று துடிதுடிக்கும் நல் இதயங்களே! அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கண்டெடுத்த இயக்கம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வளர்த்தெடுத்த இயக்கம். இந்த இயக்கத்தை உடல், பொருள், ஆவி அனைத்தும் தந்து காப்பேன் என்று வாளெடுத்து சூளுரைத்து களம் காண காத்திருக்கும் தொண்டர் கூட்டமே, உங்கள் திருப்பாதங்களில் தலை வைத்து வணக்கம் செய்கின்றேன்.

அம்மா என்னும் திருநாமத்தை வேதமந்திரமாக உச்சரிக்கும் கடைக்கோடி தொண்டனாகிய என்மீது பாசம் கொண்டு, கோயம்புத்தூர் மாவட்டம், குனியமுத்தூரில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த சாமானியனான என்மீது பரிவு கொண்டு வார்டு மேலவை பிரதிநிதி, நகர இளைஞரணி தலைவர், மாவட்ட இளைஞரணி செயலாளர், ஒன்றியக் கழக செயலாளர், மாவட்டச் செயலாளர் மற்றும் கழக அமைப்புச் செயலாளர் என கழக பொறுப்புகளையும், பேரூராட்சித் தலைவர், நகராட்சித் தலைவர் 2006 ஆம் ஆண்டு பேரூர் சட்டமன்ற உறுப்பினர், 2011 ஆம் ஆண்டு தொண்டாமுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சர் என பல்வேறு அரசு பதவிகளை வழங்கி, 2016 ஆம் ஆண்டு தொண்டாமுத்தூர் தொகுதியில் மீண்டும் போட்டியிட வாய்ப்பளித்து, என்னை வெற்றி பெறச் செய்து, அமைச்சர் பணியாற்ற மீண்டும் நல் வாய்ப்பளித்து, தினம் தினம் நலம் சூழ எங்களைக் காத்தருளும் தெய்வத் தாய், எங்கள் குலதெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புகழ் பாடி (மேசையைத் தட்டும் ஒலி) நானும், எனது சந்ததியினரும் உயிருள்ளவரை கழகத்திற்கு விசுவாசமாக இருப்போம் என உறுதியிட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவை என் நெஞ்சில் ஏந்துகிறேன்.



பிற்பகல் 2–10

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து புரட்சித் தலைவர் அவர்கள் கழகத்தை ஆரம்பித்தபோது, 1972 ஆம் ஆண்டு முதல் கழக முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் பாடுபட்டு, கிளைக் கழகம், ஒன்றியம் மற்றும் மாவட்டப் பொறுப்புகள் என பல்வேறு பொறுப்புகளை ஏற்று, மாண்புமிகு புரட்சித் தலைவர் மற்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் தலைமையை ஏற்று கழகப் பணியாற்றிய எனது தந்தையாரை வணங்குகிறேன். என்மீது அளவில்லா அன்பும், பாசமும் கொண்டு தொடர்ச்சியாக மூன்றாவது முறையும் என்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்து 2016 ஆம் ஆண்டில் 64,041 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றிபெறச் செய்து இந்தப் பேரவைக்கு என்னை அனுப்பி வைத்து, எந்தச் சூழ்நிலையிலும் மாறாத பாசம் என்மீது காட்டி, தாயாக அரவணைக்கின்ற தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என்னை தங்கள் குடும்பத்தில் ஒருவனாக ஏற்று என்மீது பேரன்பு காட்டிவரும் கோவை மாவட்ட மக்களுக்கும், எனது நன்றி கலந்த வணக்கங்களை சமர்ப்பித்து, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை மீதான விவாதங்களுக்கு எனது பதிலுரையைத் தொடங்குகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நாளை உலகை ஆள வேண்டும் உழைக்கும் கரங்களே, நாடு முழுவதும் மலர வேண்டும் புரட்சி மலர்களே" என்று பாடினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். மலர்கள் மலர்வது என்றால், அது தானாக மலர்ந்துவிடுவது இல்லை. அதற்கு பண்பட்ட நிலம் வேண்டும். பகுத்தறிந்து விதைக்க வேண்டும். நீர் பாய்ச்சி நிறைக்க வேண்டும். தேவைக்கு உரம் இட்டு, தேவையில்லா களை பறித்து, ஓய்வுக்கு விடை கொடுத்து, உளமார உழைத்தால் மட்டுமே இது சாத்தியமாகும். அப்படி ஆயிரம் மலர்கள் மலர்கின்ற அற்புதத் தோட்டமாக தமிழகத்தை மாற்றிடவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓய்வறியாது உழைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அயராது தன்னுடைய உழைக்கும் கரங்களால் தமிழகத்தைப் பண்படுத்தி, நலத் திட்டங்கள் எனும் விதை விதைத்து, செயல்திறன் என்னும் நீர் பாய்ச்சி, நிதி ஒதுக்கீடு எனும் உரமிட்டு, எதிர்ப்பு எனும் களை பறித்து, தன்னலம் கருதாது, தன் சுகம் கருதாது, தனது உடல்நலத்தை ஒரு பொருட்டாகவே எண்ணாது, தவ வாழ்வு வாழ்ந்து, தன் உயிரையே தரணிக்குத் ஈந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் புண்ணியத் தாயின் வழியில், 'புகழ் தலைவி காட்டிய பாதையில், எண்ணுகின்ற எண்ணம் யாவும் மக்கள் நலம், செய்கின்ற செயல்கள் யாவும் மக்கள் நலம்' என்ற இலக்கு வைத்து, மக்கள் நலப் பணியில் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வெற்றிநடை போட்டுக்கொண்டிருக்கின்றது என்பதை இப்பேரவைக்கு எடுத்துக்கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. "நீரின்றி அமையாது உலகு" என்று கூறினார் திருவள்ளுவர். "குடிநீரின்றி அமையாது மானுட வாழ்க்கை" என்பது இதன் இன்னொரு பொருள் ஆகும். குடிநீர் என்பது, மனிதன் உயிர்வாழ ஆண்டவனால் அருளப்பட்ட அருட்கொடை ஆகும். தமிழகத்தில் தொலைதூரத்தில் இருக்கும் குக்கிராமத்திற்கும், தடையின்றி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்று, தனி அக்கறை கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்பட்டார்கள். இதுவரை எந்த அரசும் ஒதுக்கிடாத அளவு நிதி ஒதுக்கீடு செய்து, ஊரகக் குடிநீர்த் திட்டங்கள், நகர்ப்புற குடிநீர்



மேம்பாட்டுத் திட்டங்கள், சிறிய மற்றும் பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், ஒகேனக்கல் போன்ற சிறப்புக் குடிநீர்த் திட்டங்கள், கடல்நீரை குடிநீராக்கும் திட்டங்கள், சென்னை மாநகர குடிநீர்த் திட்டங்கள் என, ஏராளமான குடிநீர்த் திட்டங்களை வகுத்து, வெற்றிகரமாக அவற்றைச் செயல்படுத்தி, தமிழக மக்களின் தாகம் தீர்த்து, தான் எண்ணியதை எண்ணியாங்கு செய்து காட்டினார் மாண்புமிகு அம்மா அவர்கள்.

குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், *2011* முதல் *2016* வரையிலான *5* ஆண்டுக் காலத்தில், குடிநீர் திட்டப் பணிகளுக்காக, *21,988* கோடியே *21* இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, மகத்தான சாதனை படைக்கப்பட்டது என்பதை பெருமையுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியின், *5* ஆண்டுக் காலத்தில், குடிநீர் திட்டப் பணிகளுக்காக, செலவழிக்கப்பட்ட தொகை *7,280* கோடியே *12* இலட்சம் ரூபாய் மட்டுமே ஆகும். அதாவது, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், தி.மு.க. ஆட்சியில் செலவழிக்கப்பட்ட தொகையைவிட, *14,708* கோடியே *9* இலட்சம் ரூபாய் அதிகமாக வழங்கப்பட்டு, குடிநீர்த் திட்டப் பணிகள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதை இப்பேரவைக்குப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

*2016–2017* ஆம் ஆண்டில், *3,428* கோடியே *20* இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், *25,499* குடிநீர்த் திட்டப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. *2017–2018* ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடுகளில், தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு *300* கோடி ரூபாயும், குறைந்தபட்ச தேவைகள் திட்டத்திற்கு *186* கோடி ரூபாயும், நபார்டு வங்கி நிதியுதவி திட்டங்களுக்கு *600* கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த சீரிய நடவடிக்கைகளின் காரணமாக, தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில், தற்போது *99.07* விழுக்காடு மக்களுக்கு, குழாய்மூலம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. *27,372* ஊரகக் குடியிருப்புகள், *20,691* அரசுப் பள்ளிகள், விடுதிகள், அங்கன்வாடி மையங்கள், ஆரம்ப சுகாதார மையங்கள், ஆகியவற்றிற்கு, குடிநீர்த் திட்டப் பணிகளும், *2,26,309* குடிநீர் விநியோகப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

*பிற்பகல் 2–15*

தமிழகத்தின் நகரப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க, இதுவரை நகரக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்மூலம் 110 பணிகள், 862 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. 39 பணிகள் 1,591 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை, வேலூர் ஆகிய 5 மாநகராட்சிகள் மற்றும் ஆம்பூர், ஓசூர், இராஜபாளையம் மற்றும் நாகர்கோவில் ஆகிய 4 நகராட்சிகளில், 43 இலட்சத்து 99 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில், 2,244 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டப் பணிகளை மேற்கொள்ள அரசின் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் 4 திட்டப் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

கடந்த தி.மு.க. ஆட்சியின் முடிவில், தமிழகத்தில் நாளொன்றுக்கு 4,945 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு எடுத்த விரைவான மற்றும் சிறப்பான நடவடிக்கைகளின் காரணமாக, இந்த அளவானது 1,946 மில்லியன் லிட்டர் அதிகரிக்கப்பட்டு, சராசரியாக நாளொன்றுக்கு 6,891 மில்லியன் லிட்டராகக் குடிநீர் வழங்கப்பட்டது. 142 ஆண்டுகளில் இல்லாத வகையில், வரலாறு காணாத கடும் வறட்சியிலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, தமிழகத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 5,891 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை இப்பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன். கோடைக் காலத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்கும் வகையில் 121 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 2,282 குடிநீர்ப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, 123 மில்லியன் லிட்டர் அளவுக்கு குடிநீர் ஆதார மேம்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்களின் குடிநீர்த் தேவையை ஈடுசெய்ய, புதிய குடிநீர் ஆதாரங்களை உருவாக்குவதிலும், தொலைநோக்குப் பார்வையுடன் குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்துவதிலும், மாண்புமிகு அம்மா



அவர்களுக்கு நிகர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்! மாண்புமிகு அம்மா அவர்கள், தனது முந்தைய ஆட்சிக் காலத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றிய புதிய வீராணம் திட்டமே இதனை உள்ளங்கை நெல்லிக்கனியென எடுத்துக்காட்டும். சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்க, சென்னையைச் சுற்றியுள்ள பல ஏரிகள் மற்றும் வீராணம் திட்டம், தெலுங்கு கங்கைத் திட்டம் என நீராதாரங்கள் இருந்தபோதிலும், சென்னை மாநகரின் விரைவான விரிவாக்கத்தையும், பெருகிவரும் அதன் மக்கள் தொகையையும் கணக்கிட்டுப் பார்த்து, சென்னைப் பெருநகரின் குடிநீர்த் தேவைக்கு இது காணாது என்று எண்ணி, தொலைநோக்குப் பார்வையுடன் சிந்தித்து, பல புதிய குடிநீர் ஆதாரங்களை உருவாக்கினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் மீஞ்சூரில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு 2004 ஆம் ஆண்டிலேயே அடித்தளம் அமைத்துத் தந்தார்கள். நெம்மேலியில் நாளொன்றுக்கு, 100 மில்லியன் லிட்டர் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை துரிதமாகச் செயல்படுத்தி, 2013 ஆம் ஆண்டில் தமது பொற்கரங்களால் தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றத்தில் விதி 110–ன்கீழ் அறிவித்தபடி, நெம்மேலியில் தற்போதுள்ள கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்கு அருகில் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்க ஆணையிட்டார்கள். நெம்மேலி திட்டத்தில், திருத்திய விரிவான திட்ட அறிக்கை 1,259 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, குழாய் பதிக்கும் பணி மற்றும் நிலைய கட்டுமானப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்துடன், சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கிடும்பொருட்டு, புதுமைத் திட்டமாக, கும்மிடிப்பூண்டி அருகே தேர்வாய்கண்டிகையில், 1,000 மில்லியன் கனஅடி கொள்ளளவுடைய ஒரு புதிய நீர்த்தேக்கத்தை உருவாக்க ஆணையிட்டார்கள். தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கம் அமைக்கும் பணிகளைப் பொறுத்தமட்டில், கிருஷ்ணா கால்வாய்வரை, 17 கி.மீ. நீளத்திற்கு, 900 மி.மீ. விட்டமுள்ள பிரதான விசைக் குழாய் பதிக்கும் பணிகள், 93 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், விரைவாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை நவம்பர் 2017–க்குள் முடிக்கும் வகையில், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 2011 முதல் 2016 வரையிலான 5 ஆண்டு காலத்தில், சென்னை மாநகராட்சிப் பகுதிகளில், 3,212 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1,025 கோடியே 93 இலட்சம் ரூபாய் அளவிலான குடிநீர்த் திட்டப் பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன என்பதை இந்தப் பேரவைக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். கடந்த தி.மு.க. ஆட்சியில், 5 வருட காலத்தில், சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நாளொன்றுக்கு 597 மில்லியன் லிட்டர் குடிநீர் மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நாள்தோறும் 830 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது என்பதை இத்தருணத்தில் சுட்டிக்காட்டுவது எனது கடமை ஆகும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இவ்வாறு நலம் பயக்கும் திட்டங்கள் பல வகுத்து, எவ்விதமான குடிநீர்ப் பிரச்சினையும் வராமல் எப்படிப் பாதுகாத்தார்களோ, அதே வழியில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, இன்றைக்கு இயற்கை ஏற்படுத்தியுள்ள இடரைத் திறமையுடன் எதிர்கொண்டு, மக்களுக்குச் சிரமங்கள் ஏதும் ஏற்படாத வகையில், செயல் திட்டங்களை வகுத்து, சென்னை மாநகருக்கு எவ்வித குடிநீர்ப் பிரச்சினையும் ஏற்படாத வகையில் வெற்றிகரமாக சமாளித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைப்படி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 21 நகராட்சிகள் மற்றும் 5 பேரூராட்சிகளில், 2,949 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாமல்லபுரம், ஒரத்தநாடு மற்றும் திருச்செந்தூர் பேரூராட்சிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. திருச்சிராப்பள்ளி, வேலூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி மாநகராட்சிகள் மற்றும் கும்பகோணம், இராமேஸ்வரம் ஆகிய நகராட்சிகளில் 1,491 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மத்திய மாநில அரசுகளின் நிதியுதவிடன் அம்ரூத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. வேளாங்கண்ணி



பேரூராட்சியில் 'அம்ருத்' திட்டத்தின்கீழ், 33 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கருங்குழி பேரூராட்சியில் 4 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய கசடு கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகள் முடிவடைந்து, சோதனை ஓட்டத்தில் உள்ளது. இந்த முன்னோடித் திட்டத்தின் முடிவுகளின் அடிப்படையில், ஏனைய பேரூராட்சிகளுக்கும் இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும். பொன்னேரி, திருப்போரூர், மண்ணச்சநல்லூர், வல்லம் ஆகிய பேரூராட்சிகளிலும் மற்றும் மேட்டுப்பாளையம் நகராட்சியிலும் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்க நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

பிற்பகல் 2—20

சென்னை மாநகராட்சியின் விரிவாக்கம் செய்யப்பட்ட 42 பகுதிகளில், வளசரவாக்கம், ஆலந்தூர், மாதவரம், மீனம்பாக்கம் ஆகிய 4 பகுதிகளில் 93 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மதுரவாயல் உள்ளிட்ட 15 பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் 787 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. முகலிவாக்கம் மற்றும் நெற்குன்றம் பகுதிகளில் 181 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும் நிலையில் உள்ளன. மணப்பாக்கம் உள்ளிட்ட 8 பகுதிகளில் 534 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. மீதமுள்ள 13 பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கொள்கை, அனைத்து நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் எல்லாம் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவர வேண்டும் என்பதுதான். பாதாள சாக்கடைத் திட்டம் வேண்டுமென மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் கேட்டிருக்கின்றார்கள். நிறைய பணிகளை நாங்கள் எடுத்திருக்கின்றோம். சுமார் இரண்டு இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், சீர்காழி நகராட்சியில் புதிய பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்க வேண்டுமென்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்

திரு. பி.வி. பாரதி அவர்கள் கேட்டிருந்தார்கள். அதுவும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. யார் கோரிக்கை வைத்தாலும், எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளில், விடுப்பட்ட பணிகள் பூராவும் கண்டிப்பாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், பேரூராட்சிப் பகுதிகளில், ஏழையெளிய மக்களுக்கு வீட்டு வசதித் திட்டத்தை ஏற்படுத்தும் நோக்கில், 2015–2016 ஆம் ஆண்டு முதல், பசுமை வீடுகள் திட்டம் மற்றும் அனைவருக்கும் வீடுகள் வழங்கும் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தினார்கள். அதன்படி, 2015–2016 ஆம் ஆண்டில், பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் 10,000 வீடுகளும், அனைவருக்கும் வீடுகள் திட்டத்தின்கீழ் 10,000 வீடுகளும் என, மொத்தம் 20,000 கான்கிரீட் வீடுகளைக் கட்டுவதற்கு, 420 கோடி ரூபாய் மானிய ஒதுக்கீடு செய்யப்பட்டு, 4,541 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன; எஞ்சிய பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. 2016–2017 ஆம் ஆண்டில், அனைவருக்கும் வீடுகள் திட்டத்தின்கீழ், 1,13,338 வீடுகள் கட்ட 2,380 கோடியே 9 இலட்சம் ரூபாய் மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 5 ஆண்டுக் காலத்தில், 355 கி.மீ. நீளத்திற்கு 640 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியில், வெறும் 204 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மட்டுமே, மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் 4,034 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் அமைக்கப்படும் என அறிவிப்பு வெளியிட்டார்கள். முதற்கட்டமாக, 1,101 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 326 கி.மீ. நீளத்திற்கு அடையாறு மற்றும் கூவம் ஆறுகளின் வடிநிலத்தில், மழைநீர் வடிகால் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் யாவும், பிப்ரவரி 2018–க்குள் முடிக்கப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணிகள்மூலம் அம்பத்தூர், வளசரவாக்கம் மற்றும்



ஆலந்தூர் மண்டலங்களில் வசிக்கும் 12 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் பயன்பெறுவர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை மாநகரில் உள்ள கூவம், அடையாறு மற்றும் பக்கிங்காம் கால்வாய் போன்ற நீர்வழிப் பாதைகளில், கழிவுநீர் கலப்பதைத் தடுக்கும்வகையில், சிறப்பான திட்டத்தை மேற்கொள்ள ஆணையிட்டார்கள். இதற்கான பணிகளுக்கு முதற்கட்டமாக 150 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், இரண்டாவது கட்டமாக 163 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளையும், 2018 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 5 ஆண்டுக் காலத்தில், தமிழகத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில், திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேம்படுத்த, 1,807 கோடியே 91 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. கடந்த தி.மு.க. ஆட்சியின் 5 ஆண்டுக் காலத்தில், வெறும் 303 கோடியே 51 இலட்சம் ரூபாய் மட்டுமே திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதை, இப்பேரவையில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நிதிநிலைமை நலிவுற்ற உள்ளாட்சி அமைப்புகளில், திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகளைச் செயல்படுத்த, 2013–2014 ஆம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளார்கள். 2016–2017 ஆம் ஆண்டில், பெருநகர சென்னை மாநகராட்சியில், 9 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 9 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 3 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சென்னை தவிர்த்த பிற மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் உள்ளிட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், 619 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பாண்டில், நகர்ப்புற தூய்மை இயக்க திட்டத்திற்காக 600 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில், 19,362 துப்புரவுப் பணியாளர்கள்மூலம்,

5,422 மூன்று சக்கர மிதிவண்டிகள், 369 பெரிய மற்றும் சிறிய காம்பேக்டர் வாகனங்கள் மற்றும் 11,089 காம்பேக்டர் வாகன குப்பைத் தொட்டிகளைக் கொண்டு, நாள்தோறும் 5,400 மெட்ரிக் டன் குப்பைகள் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 2–25

மாண்புமிகு அம்மா அவர்கள் சென்னை மாநகராட்சியின் உட்கட்டமைப்பை உலகத்தரத்திற்கு இணையாக மேம்படுத்த சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் என்ற சிறப்புத் திட்டத்தை செயல்படுத்தினார்கள். இத்திட்டத்தைச் செயல்படுத்த கடந்த 5 ஆண்டுக் காலத்தில் 1,488 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் முழு மானியமாக வழங்கினார்கள். இத்திட்டத்தின்கீழ் இதுவரை சுமார் 1,146 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளும், 171 கிலோ மீட்டர் நீளமுள்ள மழைநீர் வடிகால்களும், 239 கிலோ மீட்டர் நீளமுள்ள நடைபாதைப் பணிகளும், 12,952 எண்ணிக்கையிலான தெரு விளக்குகள் அமைக்கும் பணிகள் சுமார் 1,451 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம். சென்னை தவிர்த்து 11 மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் கட்டமைப்புகளை மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி, வருடத்திற்கு 750 கோடி ரூபாயும், 2016–2017–ல் நிறைவேற்றும் பணிகள் உட்பட 886 கோடி ரூபாயை இத்திட்டத்திற்கு வழங்கியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, "வளைவுகள் திருப்பங்கள் வழியை மாற்றலாம், வழி சொல்வோர் வேறொரு திசையைக் காட்டலாம்" என்று சாலைவழி செல்லும்போது மட்டும் அல்ல; கொள்கைகளில் செல்லும் பாதைகளிலும் நாம் சந்திக்கும் இடையூறுகள் பற்றி கழக நிறுவனர் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இடையூறுகள் எத்தனை வந்தாலும், எப்படி வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு புறந்தள்ளும் ஆற்றலை, பயிற்சியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுக்குத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் கொள்கை வழியில், தாய்வழி வந்த தங்கங்கள் எல்லாம், ஓர்வழி நின்று நேர்வழி செல்வோம், (மேசையைத்



தட்டும் ஒலி) உரிய இலக்கை சரியாக அடைவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழகத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் 5 ஆண்டுகளில் 65,302 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள், 17,972 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டுக் காலத்தில் 6,823 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மட்டுமே சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 5 ஆண்டுக் காலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில், 928 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 550 பாலங்கள் கட்டும் பணிகள், பல்வேறு திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில், 433 பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியின் 5 ஆண்டுக் காலத்தில், 162 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 58 பாலப் பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், 2016–2017 ஆம் ஆண்டில், டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதியில், எண்ணூர் நெடுஞ்சாலை இரயில்வே சந்திக்கடவையும், மணலி சாலை இரயில்வே சந்திக்கடவையும் ஒருங்கிணைக்கும் வகையில், 117 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பாலப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கத்திவாக்கம் நெடுஞ்சாலை–காக்ரேன் பேசின் சாலையில், 16 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், இரயில்வே மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் 28–2–2016 அன்று திறந்து வைக்கப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சியில், 1 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை–கொடுங்கையூர் கால்வாயின் குறுக்கே, பெட்டக வடிவ பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், 30 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 2 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

அம்மா குடிநீர்த் திட்டம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், ஏழை

எளிய மக்களுக்கு, சுத்திகரிக்கப்பட்ட தரமான குடிநீர் வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் "அம்மா குடிநீர்த் திட்டம்" என்ற திட்டத்தை, கடந்த 13–2–2016 அன்று தொடங்கி வைத்தார்கள். இதன்படி முதற்கட்டமாக, ஏழை எளிய மக்கள் அதிகம் வசிக்கும் 50 இடங்களில், எதிர்மறை சவ்வூடு பரவுதல்மூலம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள், 5 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்மூலம், தினமும் 13,000 குடும்பங்களுக்கு, நாளொன்றுக்கு 20 லிட்டர் குடிநீர், ஸ்மார்ட் கார்டுமூலம் வழங்கப்பட்டு வருகிறது.

சீர்மிகு நகரம் (Smart City): மாண்புமிகு அம்மா அவர்களின் பரிந்துரையை ஏற்று, மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம், தமிழகத்தில் 12 நகரங்களை சீர்மிகு நகரமாக மேம்படுத்த தேர்வு செய்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த, 2015–2016 ஆம் ஆண்டில், முதலாவதாக சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக இரண்டாம் வருடத்தில், மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. சீர்மிகு நகர திட்டத்தை 5 ஆண்டு காலங்களில் 2015–2020–க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு, மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்கீடாக, முறையே 500 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. சென்னை தி.நகர் "பகுதி சார்ந்த வளர்ச்சி" திட்டம், மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி முழுவதும் மேம்படுத்தும் திட்டம் ஆகியன, 1,366 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ளன. இதற்கான ஆய்வு, மற்றும் திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அம்ரூத் திட்டம் (AMRUT) தமிழ்நாட்டில், ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகையுள்ள, 12 மாநகராட்சிகள், 20 நகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சி ஆகியவற்றில், மத்திய மாநில அரசு நிதியுதவியுடன்கூடிய, அம்ரூத் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 2015–2016 மற்றும் 2016–2017 ஆம் ஆண்டில், 14 குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், 6 பாதாளச் சாக்கடை திட்டங்கள் மற்றும் 223 பூங்காக்கள் அமைத்தல் போன்ற பணிகள், 4,941 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், சென்னை மாநகராட்சியில் 2015–2016 ஆம் நிதியாண்டில், 8 புதிய பூங்காக்கள் அமைப்பதற்கு 7 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்,



பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் விரைவில் நிறைவேற உள்ளன. மேலும் 2016–2017 ஆம் நிதியாண்டில், சென்னை மாநகராட்சியில் 24 பூங்காக்கள் ரூ.12 கோடியே 92 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க திட்டமிடப்பட்டு, 20 பூங்காக்கள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சிய 4 பூங்காக்கள் அமைப்பதற்கான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவுள்ளன.

பிற்பகல் 2–30

மெரினா கடற்கரை சீரமைப்பு. மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ், ஒரு பகுதியாக காமராஜர் சாலையின் மேற்குப் பகுதியிலுள்ள வெவ்வேறு கட்டடங்களின் மதில் சுவர்கள் மற்றும் நடைபாதைகளை ஒரேமாதிரியாக சீரமைக்கும் பணிகள் ரூ.33 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைவில் நிறைவேற்றப்படும். மெரினா கடற்கரை பகுதியில் வசித்துவரும் மீனவ சமுதாய மக்கள், சுகாதாரமான சூழ்நிலையில் வாழும் வகையில், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. மயிலாப்பூர் கோயில் மற்றும் குளத்தைச் சுற்றிலும் நடைபாதை அமைக்கும் பணிகள் ரூ.5 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழக வரலாற்றில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலம் பொற்காலம் ஆகும். இதுவரையிலும், எந்த ஆட்சிக் காலத்திலும் செய்யாத சாதனையாக, நிதி ஒதுக்கீடு செய்து, இணை சொல்ல முடியாத திட்டங்களின்மூலம் எண்ணற்ற பணிகளை மேற்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திர சாதனைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் படைத்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலான இந்த அரசு மக்கள் நலப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு, நல்லாட்சி வழங்கி வருகின்றது என்பதை இப்பேரவையில் மகிழ்ச்சியோடும், பெருமையோடும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் கிராமப்புறங்களில் வசிக்கும் மக்கள், நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு இணையான அனைத்து வசதிகளுடன், நலம் பெற்று வாழ வேண்டும் என்பதை இலட்சிய நோக்கமாகக் கொண்டு, இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் மேற்கொள்ளாத முன்னோடித் திட்டங்களை, பிற மாநிலங்களும் பின்பற்றும் வகையிலான புதுமைத் திட்டங்களைச் செயல்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்கு எண்ணத்தை ஈடேற்றும் வகையில், அவரது வழியில் அயராது செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, ஊரக வளர்ச்சிக்கென பல்வேறு சிறப்புத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

"தாய் திட்டம்." மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 2011 ஆம் ஆண்டில் குக்கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு, அவற்றிற்குத் தேவையான குடிநீர் வசதி, தெரு விளக்குகள் அமைத்தல், சாலைகள் அமைத்தல், அங்கன்வாடி மையம் அமைத்தல், பொது விநியோகக் கடை அமைத்தல் போன்ற அடிப்படைப் பணிகளை மேற்கொள்ள, இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் இதுவரை மேற்கொள்ளாத முன்னோடித் திட்டமான தாய் திட்டத்தை, அதாவது, தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம் என்கின்ற புதிய திட்டத்தைத் தொடங்கினார்கள். இத்திட்டத்தின்கீழ், ஆண்டிற்கு 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2011–2016 ஆம் ஆண்டுகளில், 3,680 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் 2 இலட்சத்து 31 ஆயிரத்து 807 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை இப்பேரவைக்குத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். 2016–2017 ஆம் ஆண்டில், பல்வேறு சிறப்பம்சங்களுடன் தாய்–2 திட்டத்தின் வாயிலாக 300 கோடி ரூபாய் செலவில் 1,200 சிறு பாசன ஏரிகளைப் புனரமைத்தல், 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7,282 புதிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,369 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இளைஞர் சக்தி இணையில்லா சக்தி, மலைகளில் ஏறி சிகரங்களைத் தாண்டி, வானத்தைத் தொடுகின்ற ஆற்றலைப் பெற்றவர்கள் நம் இளைஞர்கள். பூமியைக் குடைந்து பாதாளத்தைத் தோண்டி



அறிவுப் புதையலை எடுக்க வல்ல உறுதிகொண்டவர்கள் நம் இளைஞர்கள். நாட்டின் எதிர்காலமே இளைஞர்கள் கையில்தான் இருக்கிறது. அதனால்தான், மகாகவி பாரதியாரும்

"ஒளிபடைத்த கண்ணினாய் வா, வா, வா;
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா, வா, வா"

என்று இளைய சமுதாயத்தை அறைகூவி அழைத்தார்கள். வலிமை கொண்ட தோளினராய், உறுதி கொண்ட புஜத்தினராய், ஏறு கொண்ட நடையினராய் இளைஞர்கள் இருந்திட வேண்டுமென்ற மகாகவி பாரதியாரின் கனவை நனவாக்க பாடுபட்டவர் நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் விருப்பப்படி, தமிழகத்தின் ஊரகப் பகுதிகள் ஒவ்வொன்றிலும் 1,161 சதுர அடி பரப்பளவு கொண்ட 500 அம்மா உடற்பயிற்சிக் கூடங்கள் 2016–2017 ஆம் ஆண்டு 50 கோடி ரூபாய் செலவில் அமைக்கும் பணியினை மாண்புமிகு அம்மா அவர்களின் வழிநடக்கும் இந்த அரசு மேற்கொண்டுள்ளது. மேலும், இளைஞர்கள் மட்டுமின்றி, ஊரகப் பகுதிகளில் வாழும் குழந்தைகள், பெண்கள், பெரியோர்கள், மாலை நேரங்களில் இனிமையாகப் பொழுதுபோக்கிடவும், உடல் ஆரோக்கியம் பெற்றிடவும், விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் உடற்பயிற்சி சாதனங்களுடன், மொத்தம் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 15,000 முதல் 20,000 சதுர அடி பரப்புள்ள 500 அம்மா பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்பதையும், இந்த 500 அம்மா பூங்காக்களிலும் அம்மா உடற்பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்பதையும் இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திடக் கழிவு மேலாண்மைத் திட்டம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளையும், சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பராமரித்திட, இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக, மாபெரும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அதன்படி 2014–2015 ஆம் ஆண்டில், தேசிய அளவில் முதல் முறையாக, கிராம ஊராட்சிகளில் கழிவுப்பொருட்களை சேகரித்தல், மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை எனப் பிரித்து, பாதுகாப்பாக வெளியேற்றுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள, மாநில அரசின்

நிதி ஒதுக்கீட்டுடன், முதற்கட்டமாக 2,000 கிராம ஊராட்சிகளில், 'தூய்மை காவலர்களை' கொண்டு, திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் என்ற மாபெரும் திட்டத்தை, வெற்றிகரமாகத் தொடங்கினார்கள். 'தூய்மை காவலர்கள்' வீடு வீடாகச் சென்று, குப்பைகளை சேகரித்து, அவற்றை மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாகப் பிரித்து, முறையாக அப்புறப்படுத்துவதன்மூலம், கிராமங்கள் தூய்மையாகப் பராமரிக்கப்படுவதால், இத்திட்டம் பொது மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

*பிற்பகல் 2–35*

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், செயல்படுத்தப்படும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தை முன்மாதிரியாகக்கொண்டு, கங்கை ஆறு தூய்மைப்படுத்தும் திட்டத்தின்கீழ் பயன்பெறும், 11 மாநிலங்களில் உள்ள, 50 ஆயிரம் கிராம ஊராட்சிகள்–மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது முக்கியமானது. ஏன் என்றால் அம்மா அவர்களுடைய திட்டத்தைப் பார்த்துத்தான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் அதையே follow செய்யச் சொல்லியிருக்கின்றார். 11 மாநிலங்களில் உள்ள, 50 ஆயிரம் கிராம ஊராட்சிகள் – மற்றும் பிற மாநிலங்களிலும், இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என அறிவுரை வழங்கியதை, இங்கு பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய அரசு மற்றும் ராஜஸ்தான், தெலுங்கானா, கேரளா, பஞ்சாப், ஹரியானா, உத்திரகண்ட், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநில அரசுகளின் உயர் அலுவலர்கள், இத்திட்டத்தை நேரில் பார்வையிட்டு பாராட்டியதுடன், தங்கள் மாநிலங்களிலும் செயல்படுத்திட, நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மாபெரும் திட்டத்தின் பயன், மற்ற கிராம ஊராட்சிகளுக்கும் சென்றடைய வேண்டும் என்கிற உன்னத நோக்கத்துடன், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேலும் 7,000 கிராம ஊராட்சிகளுக்கு, தூய்மைக் காவலர்களைக் கொண்டு இத்திட்டத்தை விரிவுபடுத்தினார்கள். 2016–2017 ஆம் ஆண்டில், இத்திட்டத்தை மேலும் 3,524 ஊராட்சிகளுக்கு



விரிவுபடுத்தி, சிறப்புடன் செயல்படுத்த, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். இதன் பயனாக, தமிழகத்தில் உள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சிகளிலும், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்பதை பெருமையுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின்கீழ், 65,990 தூய்மைக் காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், 32,245 மூன்று சக்கர மிதிவண்டிகள் மற்றும் தள்ளுவண்டிகள், 92,437 குப்பை சேகரிக்கும் தொட்டிகள் போன்ற கட்டமைப்பு வசதிகளுடன், தூய்மைக் காவலர்கள் தங்களது பணியை எளிதாக செய்யும் வகையில், தூய்மைபடுத்தும் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற கிராம ஊராட்சிகள். திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிட வேண்டும் என்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணத்திற்கேற்ப, 2013 முதல் 2016 வரையிலான ஆண்டுகளில், 27 இலட்சத்து 48 ஆயிரம் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. தமிழகத்தில் இதுவரை 5,738 கிராம ஊராட்சிகள் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகளாக கிராம சபை கூட்டத்தில் சம்மந்தப்பட்ட ஊராட்சிகளால் அறிவிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் அனைத்து கிராம ஊராட்சிகளையும், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற கிராம ஊராட்சிகளாக மாற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், கடந்த 6 ஆண்டுகளில், 5,223 கோடி ரூபாய் செலவில், 24,282 கி.மீ. நீளமுள்ள கிராமப்புறச் சாலைகள், தார்ச் சாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டு, வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 ஆம் ஆண்டில், 1 இலட்சத்து 3 ஆயிரம் கி.மீ. நீளமாக இருந்த ஊரகச் சாலைகள், தற்போது 1 இலட்சத்து 48 ஆயிரம் கி.மீ. நீளமாக அதிகரித்துள்ளது. அதாவது, 45,000 கி.மீ. நீளமுள்ள சாலைகள், புதியதாக சாலைகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. ஒரு மாநிலத்தில், ஆறு வருட காலத்தில், 45,000 கி.மீ. நீளத்திற்கு புதிய சாலைகள் அமைக்கப்படுவது, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் நடந்திராத வரலாற்றுச் சாதனையாகும்.

ஊரகச் சாலைகள் மேம்பாட்டிற்காக, "தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" என்ற திட்டத்தை, 2015–2016 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்து, அதற்காக 800 கோடி ரூபாய் நிதியை வழங்கினார்கள். இத்திட்டத்தின்மூலம், இதுவரை 1,600 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 8,875 கி.மீ. நீளமுள்ள சாலைகள், மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. நபார்டு வங்கி உதவியுடன், கடந்த 6 ஆண்டுகளில், 6,042 கி.மீ. நீளமுள்ள சாலைகள், 1,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம். நான்கு ஆண்டுகளாக எந்த நிதியும் வாங்கவில்லை என்று உறுப்பினர்கள் பேசும்போதே நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். 2016–2017 ஆம் ஆண்டில் பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்திலும் விரைவாகச் செயல்படுத்தியதற்காக தமிழக அரசை மத்திய அரசு பாராட்டி 54 கோடி ரூபாயை ஊக்கத்தொகையாக வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக ஊக்கத்தொகை வழங்கியுள்ளது.

கடந்த 6 ஆண்டுக் காலத்தில், தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில் 56,404 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்படுத்த, 11,036 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது, இதற்கு முன்பு எப்போதும் நிகழ்த்தப்படாத வரலாற்று சாதனையாகும். இவ்வளவு சாலைகள் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் அமைக்கப்பட்டுள்ளன. இது வரலாற்று சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 6 ஆண்டுக் காலத்தில், பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி, 10,191 கி.மீ. நீளமுள்ள சாலைகள், தார்ச் சாலைகளாக மாற்றப்பட்டுள்ளன. இந்தியாவில், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், ஊரகச் சாலைகளை ஆய்வு செய்வதற்காக, 5 மாவட்டங்களில் நடமாடும் தரக்கட்டுப்பாடு ஆய்வகங்கள் (mobile labs) 2 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 2011–2016 ஆண்டுகளில், 461 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 327 பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 80 பாலங்கள் அமைத்திட, 139 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.



மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் 205 ரூபாய் ஊதியம் என்பது குறைவு என்று சொன்னார்கள். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்புத் திட்டத்தில், 2017–2018 ஆம் ஆண்டிற்கான ஊதியம் தமிழ்நாட்டில் 2005 நுகர்வோர் தேசிய குறியீட்டின்கீழ் மத்திய அரசாங்கம்தான் அதை நிர்ணயம் செய்ய வேண்டும். குழு அளவிற்குத்தான் அது வழங்கப்படுகிறது. 205 ரூபாய் என்றால், 205 ரூபாய் இல்லை. 205 ரூபாய் என்று இருந்தாலும், குழு அளவு நிர்ணயிக்கப்பட்டு, வேலை செய்கின்ற அளவிற்குத்தான் பணம் வாங்குவார்கள். இதற்கு முன்னர் வேறு மாதிரி இருந்தது. தனி நபர் ஆக இருக்கும்போது ஊதியம் குறைவாக இருந்தது. அம்மா அவர்கள்தான் குழு அளவைக் கொண்டுவந்தார்கள். அதேபோலவே, 8 மணி நேர வேலை என்றிருந்ததை, 7 மணி நேர வேலையாகக் குறைத்தவர் அம்மா அவர்கள்தான். 205 ரூபாய் என்று இருந்ததை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இவ்வளவு உயர்த்தி இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பேசினார்கள்; அதுகுறித்தும் கண்டிப்பாக மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.

பிற்பகல் 2–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைச் செயல்படுத்துவதில், தமிழகம் அகில இந்திய அளவில் முதலிடம் பெற்று விளங்குகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒரு ஊராட்சியில் ஒரு பணி மட்டுமே செய்வது என்றிருந்த நிலையை மாற்றி, ஒரு ஊராட்சியில் ஒன்றுக்கும் மேற்பட்ட பணிகளை எடுத்துச் செய்திட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிவகை செய்தார்கள்.

தொழிலாளர்களின் நலனில் அதிக அக்கறை கொண்ட, மாண்புமிகு அம்மா அவர்கள்தான், 57 கன அடி என்றிருந்த வேலையை, 37 கன அடியாகக் குறைத்தார்கள். அதற்கான முழு ஊதியமான 205 ரூபாயைப் பெற்றிட வழிவகுக்கப்பட்டது. மேலும், 8 மணி நேர வேலை என்றிருந்தது, 7 மணி நேர வேலையாகக் குறைக்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள், மாற்றுத் திறனாளிகளையும் இத்திட்டத்தில் பங்கேற்றிடச் செய்து,

அவர்களுக்கென சிறப்புப் பணிகள் ஒதுக்கித் தந்தும், ஏனைய தொழிலாளர்கள் செய்யும் பணிகளில், 50 விழுக்காடு பணிகள் மட்டுமே செய்தால் போதுமானது என சலுகைகளைத் தந்தார்கள். இந்தவகையில், இதுவரை 1 கோடியே 78 இலட்சத்து 83 ஆயிரம் மனித சக்தி நாட்கள் மாற்றுத் திறனாளிகளுக்காக மட்டும் உருவாக்கியிருக்கிறார்கள். இதற்கு 300 கோடியே 8 இலட்சம் ரூபாய் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் பயன்பெறும் வகையில், டெல்டா மாவட்டங்களில் 15,000 பண்ணைக் குட்டைகளும், டெல்டா அல்லாத பிற மாவட்டங்களில் 40,454 பண்ணைக் குட்டைகளும் அமைக்கப்பட்டுள்ளன. ஊரகப் பகுதிகளைப் பசுமையாக்கும் வகையில், சாலைகளின் இரு மருங்கிலும், மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 2016–2017 ஆம் ஆண்டில், 10,000 கி.மீ. நீளமுள்ள சாலைகளின் இரு மருங்கிலும், மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முந்தைய திமுக ஆட்சியில், 5 ஆண்டுகளில், 71 கோடியே 7 இலட்சம் மனித சக்தி நாட்கள் மட்டுமே உருவாக்கப்பட்டு, ஊதியமாக வழங்கப்பட்டது. அதாவது, 5,760 கோடி ரூபாய் மட்டும்தான் வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 5 ஆண்டுகளில், 173 கோடியே 81 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு, தொழிலாளர்களுக்கு ஊதியமாக, 21,770 கோடி ரூபாய் வழங்கி, இத்திட்டத்தில் தமிழகம்தான் இந்தியாவிலேயே முதலிடத்தை வகிக்கிறது. 2016–2017 ஆம் ஆண்டிற்கான இலக்கு 31 கோடியே 55 இலட்சம் மனித சக்தி நாட்களாகும். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக, இலக்கை விட அதிகமாக, 39 கோடியே 99 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு, ஊதியமாக 6,519 கோடியே 9 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் இத்திட்டத்தின்மூலம், 62 இலட்சத்து 16 ஆயிரம் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. 2017–2018 ஆம் ஆண்டில், மே மாதம் வரை, 27 இலட்சத்து 36 ஆயிரம் குடும்பங்களுக்கு, வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகப் பகுதிகளில் தற்போது, 27 இலட்சத்து 35 ஆயிரத்து 515 தெரு விளக்குகள், கிராம ஊராட்சிகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றிற்கான மின்சாரத் தேவை மற்றும் பராமரிப்புச் செலவினம்



அதிகமாக உள்ளதைக் கருத்தில்கொண்டும், நீடித்த செயல்திறனை உறுதிப்படுத்திடும் நோக்கிலும், பசுமைத் தொழில்நுட்பப் பயன்பாட்டினை ஊக்குவித்திடவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விதி 110–ன்கீழ் அறிவிப்பின்படி, 2015–2016 ஆம் ஆண்டு மற்றும் 2016–2017 ஆம் ஆண்டுகளில் ஊரகப் பகுதிகளில், 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சுமார் 17 இலட்சத்து 6 ஆயிரம் LED விளக்குகள் பொருத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் பயனாக, ஊரகப் பகுதிகளில் மின்சாரக் கட்டணம் 30 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை குறைந்துள்ளது என்பதை இப்பேரவையில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசின் முக்கிய நோக்கமாகும். அதற்கிணங்க, தரமான குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை உறுதிப்படுத்த, அம்மாவின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலே பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கடந்த 142 வருடங்களாக இல்லாத வறட்சி தமிழகத்தைத் தாக்கிய போதிலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, பல்வேறு போர்க்கால நடவடிக்கைகளை எடுத்து, வறட்சியை எதிர்கொண்ட விதத்திலிருந்து, குடிநீர் விநியோகத்திற்கு இந்த அரசு அளிக்கும் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 2011–2016 ஆம் ஆண்டு காலத்தில், 4,008 கோடி ரூபாய் செலவில் ஆழ்குழாய்க் கிணறு, திறந்தவெளிக் கிணறு, கைப்பம்பு, சிறு மின்விசைப் பம்பு, குடிநீர்க் குழாய் நீட்டிப்பு என 2,48,618 குடிநீர்ப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

2016–2017 ஆம் ஆண்டில் ஏற்பட்டுள்ள வறட்சியைச் சமாளித்திட, அனைத்து ஊரக வளர்ச்சித் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொண்டு, சீரான குடிநீர் விநியோகம் செய்வதற்காக, ஜனவரி 2017 முதல் இதுவரை 186 கோடி ரூபாய் செலவில், 17,664 குடிநீர்ப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி ஆகிய மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள், திறம்படச் செயல்பட வேண்டும் என்ற நோக்கில், கூடுதல் நிதி ஆதாரங்களைத் தொடர்ந்து வழங்கி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் செயல்திறனை மேம்படுத்த, மாநில நிதி ஆணைய மானியமாக, கடந்த 5 ஆண்டுகளில், 22,277 கோடி ரூபாய் விடுவித்து வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், 2016–2017 ஆம் ஆண்டிற்கு 4,995 கோடியே 66 இலட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறைந்தபட்ச மானியமாக கிராம ஊராட்சிகளுக்கு 5 இலட்சம் ரூபாயிலிருந்து 7 இலட்சம் ரூபாயாகவும், வட்டார ஊராட்சிக்கு 30 இலட்சம் ரூபாயிலிருந்து 40 இலட்சம் ரூபாயாகவும் அதிகரித்து வழங்க, 5–வது மாநில நிதி ஆணைய பரிந்துரையை ஏற்று, 2017–2018 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், நிதிப் பற்றாக்குறை உள்ள ஊராட்சிகளின் நிலைமையை மேம்படுத்தும் வகையில், ஒரு சிறப்பு நிகழ்வாக, 10 சதவிகித மாநில நிதி ஆணைய மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14–வது மத்திய நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி, தமிழ்நாட்டிற்கு 2016–2017 ஆம் ஆண்டுக்கு அடிப்படை மானியமாக 1,312 கோடியே 19 இலட்சம் ரூபாயும், செயலாக்க மானியமாக 172 கோடியே 12 இலட்சம் ரூபாயும் மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிதி கிராம ஊராட்சிகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படுகிறது.

பிற்பகல் 2–45

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

“பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே”

என்று பாடினார் பாவேந்தர் பாரதிதாசன்.



தமிழ் பேசும் திருநாட்டில், பெண்ணடிமை தீர்க்கவென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தை மக்கள் இயக்கமாக உருவாக்கினார். (மேசையைத் தட்டும் ஒலி) ‘அடுத்தவரை அண்டியிருப்பதே தங்கள் தலையெழுத்து’ என்றிருந்த மகளிரை, “இனி எங்கள் சொந்தக் காலில் நிற்போம்” என நிமிர்ந்து எழச் செய்தவர் அம்மா அவர்கள். “அடுப்பூதும் ஊது குழலை தூரத் தூக்கி எறி; எழுதுகோலை எடு கையில்; கணக்கெழுது; கூடவே கவிதையும் எழுது; கலங்காதிரு; சிந்தனை செய்; சிறகடித்துப் பற; காவியம் படைத்திடு” என்று புதுமைப் பெண்களுக்கு புதிய வழிகாட்டியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அரிவாள் கொண்டு களை எடுத்து கதிர் அறுக்கும் கைகளுக்கு, அறிவால் வெல்லும் ஆற்றலைக் கொடுத்து, புதிய பாதை வகுத்துத் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா. மாண்புமிகு அம்மா அவர்களின் பெருமுயற்சியால், மகளிர் சுய உதவிக் குழு இயக்கம், ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேரூன்றி, தமிழ்நாட்டில் தற்போது 6 இலட்சத்து 30 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்கள், 95 இலட்சத்து 2 ஆயிரம் மகளிர் உறுப்பினர்களைக் கொண்டு மிகச் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன.

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு, வங்கிகள்மூலம் 2011–2012 முதல் 2015–2016 வரையிலான ஐந்து ஆண்டுகளில் மட்டும் 26,460 கோடியே 73 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மகளிரின் வாழ்வாதாரம் பெருமளவில் உயரும்வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சாதனை படைத்துள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், 2016–2017 ஆம் ஆண்டில் 6,378 கோடியே 52 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது.

வறுமை ஒழிப்பு, வாழ்வாதார மேம்பாடு மற்றும் மகளிரை அதிகாரப்படுத்துதல் ஆகியவற்றிற்காக ஏற்படுத்தப்பட்ட சுய உதவிக் குழு இயக்கம், மேலும் முனைப்போடு செயல்பட ஏதுவாக, தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு நடப்பாண்டில் சமுதாய முதலீட்டு நிதி அதிக அளவில் வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிதி, தலா 15,000 ரூபாய் வீதம், 63,330 சுய உதவிக் குழுக்களுக்கு, வாழ்வாதார மேம்பாட்டு ஆதார நிதியாக நடப்பாண்டில் வழங்க மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் படிப்படியாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016–2017 ஆம் ஆண்டில், கல்லூரிச் சந்தைகள் மற்றும் மாநில கண்காட்சிகள்மூலம், 1 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை, மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் விற்பனை செய்துள்ளனர். இதுவரை பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்து, தூளாக்கி, அதனை தார்ச் சாலை அமைத்திட விற்பனை செய்ததன்மூலம் ஏழை மகளிர் 2 கோடியே 24 இலட்சம் ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளனர் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, 2013–2014 ஆம் ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலிருந்து, 3,844 மகளிர் பல்வேறு வங்கிகளில் வங்கி முகவர்களாக நியமிக்கப்பட்டு, சிறப்புடன் பணியாற்றி வருகின்றனர்.

கடந்த 6 ஆண்டுகளில், மகளிர் திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ், 65,266 இளைஞர்களுக்கு 100 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொழிற் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, இதில் 51,681 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 610 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 6,80,469 நபர்கள் பங்கு பெற்று, அதில் 1,28,737 நபர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், 21,091 பெண்களுக்கு, அவர்கள் சிறு தொழில் அதிபர்களாக உயர வேண்டும் என்ற அடிப்படையில், தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி 10 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்மா கைபேசித் திட்டம்: ஊராட்சிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின்கீழ் இயங்கிவரும், சுய உதவிக் குழுக்களை மேற்பார்வையிட 20,000 சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் தங்கள் பணிகளை மேற்கொள்ள, தமிழில் சிறப்பு மென்பொருள் ஒன்றை உருவாக்கி, கணினிமயமாக்கப்பட்ட கைபேசிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கினார்கள். ‘அம்மா கைபேசித் திட்டம்’ என்னும் இத்திட்டத்தின்கீழ், மாநிலம் முழுவதும் உள்ள மகளிர் சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கு 20,000 விலையில்லா அம்மா கைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை இப்பேரவைக்குத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.



அம்மா இரு சக்கர வாகனத் திட்டம்: மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும்விதமாக, சரியான போக்குவரத்து வசதியின்றி தொலைதூரம் சென்று பணிபுரியும் 1 இலட்சம் ஏழை மகளிர் பயன்பெறும்விதமாக, இரு சக்கர வாகனம் வழங்கும் திட்டம், 200 கோடி ரூபாய் மானிய உதவியுடன், (மேசையைத் தட்டும் ஒலி) “அம்மா இருசக்கர வாகனத் திட்டம்” என்ற பெயரில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு ஆணையிட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களை, மக்களின் பங்கேற்புடன் கண்டறிந்து, அவர்களின் வறுமையை அகற்றுவதையும், வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்ட புது வாழ்வுத் திட்டம், மாண்புமிகு அம்மா அவர்களால் 2005 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் நாள் தொடங்கப்பட்டது. இத்திட்டம், தமிழ்நாட்டில் உள்ள 26 மாவட்டங்களில், 120 மிகவும் பின்தங்கிய வட்டாரங்களில் உள்ள 4,174 கிராம ஊராட்சிகளில், 1,871 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 4,465 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, 711 கோடியே 67 இலட்சம் ரூபாய் ஏழை எளியோர், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், 4,463 கிராம அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு 519 கோடியே 40 இலட்சம் ரூபாய் மகளிர் வாழ்வாதார மேம்பாட்டிற்கும், வறுமையொழிப்பிற்கும் விடுவிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 2–50

புதுவாழ்வுத் திட்டத்தின்கீழ், ஊரகப் பகுதிகளில் உள்ள மகளிரின் மேம்பாட்டிற்காக, ஒவ்வோர் ஆண்டும் வங்கிக் கடன் இணைப்பு வழங்க, மாண்புமிகு அம்மாவின் அரசால் நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2016–2017 ஆம் ஆண்டில், 1,211 கோடியே 61 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு, 1,376 கோடியே 36 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கி சாதனை படைக்கப்பட்டுள்ளது. இது இலக்கைவிட 22 சதவிகிதம் அதிகமாகும்.

மகளிருக்கு ஆட்டோ வழங்கும் திட்டம்: மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், '100 மகளிருக்கு ஆட்டோ ஓட்டுனர் பயிற்சி வழங்கி, ஆட்டோக்கள் வழங்கப்படும்' என அறிவித்ததற்கிணங்க, இதுவரை 90 ஆட்டோக்கள், 2 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய ஆட்டோக்களையும் விரைவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் நலனில் அக்கறைகொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் புதுவாழ்வுத் திட்டத்தின்கீழ் 3 இலட்சத்து 59 ஆயிரத்து 179 மாற்றுத் திறனாளிகளுக்கும், நலிவுற்றோர்க்கும், 216 கோடியே 89 இலட்சம் ரூபாய் அளவில் நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவக்கப்பட்டு, 12 ஆண்டுக் காலமாக ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு நன்மைகளையும், உதவிகளையும் வழங்கி வரும், புது வாழ்வுத் திட்டம், 30–6–2017 அன்று நிறைவடைய உள்ளது. எனினும் இத்திட்டத்தின் தொடர் செயல்பாடுகளுக்காக, இது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திடம் ஒப்படைக்கப்படும் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்: மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய முயற்சியின் விளைவாக, உலக வங்கி நிதியுதவியுடன், சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்–புது வாழ்வுத் திட்டம்–2 என்ற புதிய திட்டம், நமது மாநிலத்தில் விரைவில் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரகத் தொழில்களை மேம்படுத்தி, வேலைவாய்ப்புகளை உருவாக்கும் இத்திட்டம், புதுவாழ்வுத் திட்டம் 1–ல் இடம் பெறாத, 120 புதிய வட்டாரங்களில் செயல்படுத்தப்படும் என்பதையும் இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர்கூட அந்தக் கேள்வியைக் கேட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தளவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை சிறப்பாக வழிநடத்தி வருகிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் சொன்னதற்கு இதுதான் பதில்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், புதுவாழ்வுத் திட்டப் பணியாளர்கள் அனைவரையும், புதுவாழ்வுத் திட்டம்–2 என அழைக்கப்படும், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தில் தொடர்ந்து பணியாற்ற, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இது அம்மா அவர்களுடைய தேர்தல் வாக்குறுதி. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் கண்டிப்பாக இதை நிறைவேற்றுவார். இது அம்மா அவர்களின் வாக்குறுதி; இது நிறைவேற்றப்படும் என்பதை இப்பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்கிறது திருக்குறள். செயற்கரிய செயலைச் செய்து, மக்களுக்குச் சிறப்பை செய்பவர்களையே பெரியோர் என்று வள்ளுவர் உரைக்கும் இந்த இலக்கணத்திற்கு, எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களே முற்றிலும் பொருத்தமானவர். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், செயற்கரிய செயலைச் செய்து, சிறப்பானத் திட்டங்களை மட்டுமல்ல; ஏனைய மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாய், பல சிறப்புத் திட்டங்களையும் செயல்படுத்தினார்கள். அதிலும் சிறப்பாக, சிறப்புத் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துவதற்கு என்றே, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை என்னும், புதிய துறையை வடிவமைத்து, புதுமை படைத்தவர் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாணவச் செல்வங்களின் மதிப்பு உயர, அவர்கள் கற்கின்ற கல்வியின் மாண்பு உயர, விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம், கிராமப்புற ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம் உயர கறவைப் பசு, வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம், ஏழைப் பெண்களின் திருமண வாழ்வில் ஒளியேற்றிட, 8 கிராமில் தாலிக்குத் தங்கம் மற்றும் 50,000 ரூபாய் வரை திருமண உதவித் தொகை வழங்கும் திட்டம், கருவுற்ற பெண்களின் நலனையும் மற்றும் அவர்தம் கருவில் இருக்கும் சிசுக்களின் நலனையும் காத்து, ஆரோக்கியமான தலைமுறையை உருவாக்க, முதலில் 8,000 ரூபாய், பின்னர் 12,000 ரூபாய் தற்போது அதனையும் உயர்த்தி 18,000 ரூபாய் வழங்கும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம். ஏழை எளிய மக்களின் நல்வாழ்வைப் பாதுகாத்திட முழுமையான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், வீடு இல்லாத கிராமப்புற ஏழை மக்களுக்கு சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டம் என பல புதுமைத் திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கித் தந்தார்கள்.

இந்தச் சிறப்புத் திட்டங்களின் பயன்கள் தகுதி வாய்ந்தவர்களுக்கு தாமதமில்லாமல் சென்றடைகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் பணியை, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறைக்கு வழங்கினார்கள். சிறப்புத் திட்டங்களுக்கு முன்னோடியாக, மாண்புமிகு அம்மா அவர்களின் சிந்தனையில் விளைந்த, விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் மற்றும் விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்த தேவையான நிதியை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைக்கு ஒதுக்கீடு செய்து, இந்த நலத் திட்ட உதவிகளை, மக்களுக்கு இத்துறையின் மூலமாகவே கொண்டு சேர்க்கின்ற பணியை மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தந்த இந்தச் சிறப்புப் பணிகளை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 2011 முதல் 2016 வரையிலான, 5 ஆண்டுக் காலத்தில், இல்லத்தரசிகளுக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர் வழங்கும் திட்டத்தின்கீழ், 7,622 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1 கோடியே 75 இலட்சம் உபகரணத் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.



நீலகிரி மாவட்டத்திலும், திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் மலைப் பகுதிகளிலும் வாழும் மக்களுக்கு, மின்விசிறிகளுக்கு மாற்றாக, மின்காந்த அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல, மாணவ, மாணவியரின் கல்வித்தரம் மேம்பட, 4,842 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில், 31 இலட்சத்து 78 ஆயிரம் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து 2016–2017 ஆம் ஆண்டில், 5 இலட்சத்து 35 ஆயிரம் விலையில்லா மடிக்கணினிகள் வழங்க, 867 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல, 2017–2018 ஆம் ஆண்டில் 5,65,000 விலையில்லா மடிக்கணினிகள் வழங்க ரூ.758 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இப்பேரவைக்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–55

பெண்ணாகரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு ஒரு தகவல். பருவதனஹள்ளி ஊராட்சியில் VPRC கட்டடம், அந்த ஊராட்சியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. அந்தக் கட்டடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது என்று பதில் கொடுத்திருக்கிறார்கள். இதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பயன்பாட்டுக்குக் கொண்டு வராமல் உள்ள மற்ற கட்டடங்களும், மாண்புமிகு மாவட்ட அமைச்சர் அவர்கள்மூலம் வரிசையாகக் திறக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மனிதனின் வாழ்க்கை நிலை பெறவேண்டுமென்றால், அவர் தனது வாழ்க்கை நிலையை எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டுமென்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் வாழ்க்கை நெறியை வகுத்துத் தந்திருக்கிறார்.

'ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்'

என்கிறார் திருவள்ளுவர். வள்ளுவப் பெருமான் வகுத்துத் தந்துள்ள இந்த வாழ்க்கை நெறி தனி மனித வாழ்க்கைக்கு மட்டுமல்ல; ஒரு நாட்டை ஆளுகின்ற ஆட்சிக்கும், அந்த ஆட்சியை வழி நடத்தும் கட்சிக்கும் பொருத்தமானதாகும். தமிழக மக்கள் தங்களுக்கு ஏற்றது எது என்று உணர்ந்திருந்த காரணத்தால்தான், இரட்டை இலைச்

சின்னத்திற்கே மீண்டும் வாக்களித்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தொடர்ச்சியாக இரண்டாம் முறையாக முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்தார்கள். இதன் உட்கருத்தை உணர்ந்து, நமக்கு ஏற்றது எது, நமக்கு ஏற்றவர் யார் என்று தெரிந்து செயல்படுதல் வேண்டும். அவ்வாறு சிந்தித்து செயல்படாதார் மக்களால் புறக்கணிக்கப்படுவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து மேலும் ஐந்து ஆண்டுக் காலம் ஆட்சி புரியவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 2016 ஆம் ஆண்டில் தமிழக மக்கள் தந்த தீர்ப்பு, எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தந்த தீர்ப்பு. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிதான் எங்களுக்கு வேண்டுமென்றுதான் தமிழக மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் இதே அவையில், 'எனக்குப் பின்னும், இந்த இயக்கம் இன்னும் 100 ஆண்டுக் காலம் வாழும், வளரும்.' (மேசையைத் தட்டும் ஒலி) 'தமிழக மக்களுக்குத் தொடர்ந்து தொண்டு செய்யும், நன்மை செய்யும்' என்று வீர முழக்கமிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வார்த்தையே எங்களுக்கு சட்டம்; மாண்புமிகு அம்மா அவர்களின் கட்டளையே எங்களுக்கு வேதம்; (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா! தாங்கள் வளர்த்த நந்தவனப் பூக்கள் நாங்கள்; தாங்கள் வடித்துத் தந்த இசைப்பாக்கள் நாங்கள்; தாங்கள் வளர்த்த புரட்சித் தீப்பொறிகள் நாங்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள் வரைந்த வரலாற்று வரிகள் நாங்கள்; தாங்கள் வளர்த்த நன்றியுள்ள மனிதர்கள் நாங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா! உங்கள் வார்த்தைகளை உயிர்கொடுத்தும் நிறைவேற்றுவோம் என்று அறுதியிட்டு, உறுதியோடு கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2016 ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது நம்பிக்கை வைத்து மக்கள் தந்த இந்த ஆட்சி, மாண்புமிகு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையிலே சிறப்புடன் நடக்கும் அம்மா அவர்களின் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றிகரமாக 5 ஆண்டுகளை நிறைவு செய்வோம். (மேசையைத் தட்டும் ஒலி) நிறைகளின் நிலைகளமாய் விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் 2021 ஆம் ஆண்டிலும் ஆட்சி



சிம்மாசனத்தில் அமரும். (மேசையைத் தட்டும் ஒலி) இது நிச்சயம், இது சத்தியம் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் இதயக் கனியாகத் திகழ்ந்து, ஏழைப் பங்காளனாக வாழ்ந்து, ஊழலுக்கு எதிராக இயக்கம் கண்டு, மக்கள் நலம் காக்க அந்த இயக்கத்தை வளர்த்து, ஆயிரம் காலத்துப் பயிராய் இயக்கம் செழிக்க, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களில் இயக்கத்தைத் தந்து, தமிழக மக்களின் இதயங்களில், ஏழையெளியோர் உள்ளங்களில் இன்றும் இதய சிம்மாசனமிட்டு வாழ்ந்துகொண்டிருக்கும் பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவினை 30–6–2017 முதல் 30–12–2017 முடிய தமிழகம் எங்கும் அனைத்து மாவட்டங்களில், 31 இடங்களில் மாபெரும் விழாக்கள் நடத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) அதன் நிறைவாக 2018 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் சென்னை மாநகரில் புரட்சித் தலைவரின் புகழுக்குப் புகழ் சேர்க்கும், பெருமைக்குப் பெருமை சேர்க்கும் மாபெரும் விழாவாக நடத்திட ஆணையிட்ட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–00

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் ஆணைப்படி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் 66 புதிய அறிவிப்புகளை தற்போது வெளியிடுகிறேன்.

## நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

### 1. உள்ளாட்சிப் பகுதிகளில் கட்டட அனுமதி வழங்கும் நடைமுறைகள் எளிமைப்படுத்தப்படும்.

திட்டம் மற்றும் கட்டட அனுமதி பெறுவதில் நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சிகளில் குறிப்பிட்ட அளவிற்குமேல் கட்டடம் கட்ட அனுமதி பெறுவதற்கு இருவேறு துறைகளில், அதாவது வீட்டு வசதித் துறையிடம் திட்ட அனுமதியும், உள்ளாட்சித் துறையிடம் கட்டட அனுமதியும் பெறுவதில் பொது மக்களுக்கு பல்வேறு இன்னல்கள் ஏற்படுவதோடு, வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் அரசிடம் கடனுதவி பெற்று, கட்டடம் கட்டுவதில் காலதாமதம்

ஏற்படுகின்றது. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சரான என்னிடமும், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரிடமும் மற்றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடனும் கலந்தாலோசித்தார். அதன் அடிப்படையில், பொது மக்களின் இன்னல்களைக் களைந்து, எளியவகையில், உரிய காலக்கெடுவிற்குள் திட்டம் மற்றும் கட்டட அனுமதி பெற வேண்டும் என்ற உயரிய நோக்குடன், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், உரிய சட்டத் திருத்தங்கள் மேற்கொண்டு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு திட்ட அனுமதி மற்றும் கட்டட அனுமதி வழங்கும் அதிகாரம் மாற்றி கூடுதலாக அளிக்கப்படும்.

உள்ளாட்சி அமைப்புகளால் குடியிருப்புக் கட்டடங்களுக்கு 4,000 சதுர அடி வரையில் திட்ட அனுமதி (Planning Permission) வழங்கும் தற்போதுள்ள அதிகாரப் பகிர்வினை கூடுதலாக உயர்த்தி கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்க உள்ளாட்சிகளுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்படும்.

மேலும், வணிகக் கட்டடங்களுக்கு 2,000 சதுர அடி வரையில் திட்ட அனுமதி (Planning Permission) வழங்கும் தற்போதுள்ள அதிகாரப் பகிர்வினை கூடுதலாக உயர்த்தி, வணிகக் கட்டடங்கள், பொது கட்டடங்கள் மற்றும் சிறப்புக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்க உள்ளாட்சிகளுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்படும்.

8 மனைகள் வரை, மனை உட்பிரிவு அனுமதி (Sub–Division) வழங்க சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் உள்ளதைப்போல, மற்ற நகரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அதிகாரம் வழங்கப்படும்.

கட்டட வரைபட அனுமதி கோரும் மனுக்கள் இணையதளம் மூலமாக மட்டுமே விண்ணப்பிக்கப்பட வேண்டும் (Online Registration only).

கட்டட வரைபட அனுமதி கோரும் மனுக்கள் அளிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் உள்ளாட்சி அமைப்புகளால் அனுமதி வழங்கப்படாமல் இருந்தால், அனுமதி வழங்கப்பட்டதாகக் கருதி, விதிகளுக்குட்பட்டு நில உரிமையாளர் மற்றும் கட்டுநர்கள் பணி துவங்க அனுமதிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



இதன் காரணமாக, கட்டட அனுமதி பெறுவதில் பொதுமக்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள் முற்றிலும் களையப்படுவதோடு, ஒளிவுமறைவற்ற வெளிப்படையான தன்மையுடன்கூடிய எளிமையான முறையில், விரைவாக அனுமதி பெற வழிவகை செய்யப்படும். இதனால் அனைத்துப் பகுதிகளுக்கும் உடனடியாக Planning Permission கிடைக்கும். இந்த அறிவிப்பை மட்டும்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முழுமையாகப் படிக்கச் சொன்னார்கள். மற்ற அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் இப்போது நான் படிக்கிறேன். முதல் அறிவிப்பு இரண்டு துறைகளுக்கும் சேர்ந்த முக்கியமான அறிவிப்பாக முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய துறையின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**2. ரூ.20 கோடி திட்ட மதிப்பீட்டில் தியாகராய நகரில் பாண்டி பஜார்– தியாகராய சாலையில் பாதசாரிகள் வளாகம் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், சென்னை தியாகராய சாலையிலுள்ள பாண்டி பஜார் பகுதியில் அகலமான நடைபாதை, மையத்தடுப்பான், பேருந்து மற்றும் இருசக்கர வாகனங்களுக்கு தனிப்பட்ட தடங்கள், பேட்டரி கார் வாகனப்பாதை, பொதுமக்கள் இளைப்பாறுவதற்கான இருக்கைகள், நவீன கழிப்பறைகள், சுத்தமான குடிநீர் மற்றும் முதலுதவி மையங்களுடன் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்புடன் சீர்மிகு நகர நிதிமூலம் ரூ.20 கோடி மதிப்பீட்டில் பாதசாரிகள் வளாகம் அமைக்கப்படும்.

**3. சென்னை தியாகராய நகரில் உள்ள தியாகராய சாலை மற்றும் தணிகாசலம் சாலை சந்திப்பில் ரூ.36.50 கோடி திட்ட மதிப்பீட்டில் பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், சென்னை தியாகராய நகரில் உள்ள தியாகராய சாலை மற்றும் தணிகாசலம் சாலை சந்திப்பில் 1,488 சதுர மீட்டர் பரப்பளவில், 2 கீழ்தளம், தரைதளம் மற்றும் 5 மேல்தளம கொண்ட பல அடுக்கு வாகன நிறுத்த கட்டடம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்புடன் சீர்மிகு நகர நிதிமூலம் ரூ.36.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதில் சுமார் 500 இரு சக்கர வாகனங்களும், 200 நான்கு சக்கர வாகனங்களும் நிறுத்தலாம்.

**4. பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டடங்களின் மேற்கூரையில் ரூ.39 கோடி திட்ட மதிப்பீட்டில் சூரிய மின் உற்பத்தி தகடுகள் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டடங்களில் சூரிய மின் உற்பத்தி தகடுகள் அமைப்பதன்மூலம், நாள் ஒன்றிற்கு 5.5 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என கணக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் சூரிய சக்தியால் உற்பத்தியாகும் மின்சாரம் ஆண்டிற்கு 88 இலட்சம் யூனிட்டுகள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம், ரூ.39 கோடி மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி நிதியின்மூலம் செயல்படுத்தப்படும்.

**5. பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது மற்றும் தனியார் பங்களிப்பின்மூலம் (Public Private Partnership–PPP) வாகன நிறுத்த மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், பெருநகர சென்னை மாநகராட்சியில், வாகனம் நிறுத்தும் இடங்களை, வாகன நிறுத்த மேலாண்மை திட்டத்தின்கீழ், பொது மற்றும் தனியார் பங்களிப்பின்மூலம் (Public Private Partnership–PPP) ஒருங்கிணைந்த நிருவாக அமைப்பு உருவாக்கி செயல்படுத்தப்படும்.

**6. பெருநகர சென்னை மாநகராட்சிப் பூங்காக்களில் மக்கள் மற்றும் மாநகராட்சியின் பங்களிப்புடன் கழிவுநீரை நவீன முறையில் சுத்தப்படுத்தி பூங்காக்களில் பயன்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 2 பூங்காக்களில், நவீன முறையில் கழிவுநீர் சுத்திகரிப்பு செய்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. மக்களின் பங்களிப்புடன் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தி பல பூங்காக்களில் செயல்படுத்தப்படும்.

**7. பெருநகர சென்னை மாநகராட்சி நிதியின்மூலம் பொது மக்கள் பயன்பாட்டிற்கான ஸ்மார்ட் கார்டு (Smart Card) அறிமுகப்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்



ஆணைப்படியும், சென்னையில் வசிக்கும் மக்கள் பெரிதும் பயன்பெறும் வகையில், மாநகர பேருந்து போக்குவரத்துக் கட்டணம், மின் கட்டணம், சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி, தொழில் வரி ஆகியவற்றை சிரமமின்றி விரைவாக செலுத்தும் வகையில் பொது மக்கள் பயன்பாட்டிற்கான ஸ்மார்ட் கார்டு (Smart Card) அறிமுகப்படுத்தப்படும்.

**8. சென்னை மாநகரப் பகுதிகளில் புதிய குடிநீர்/கழிவுநீர் இணைப்புகளை இணையதளம்மூலம் பதிவு செய்தல், கட்டணம் செலுத்துதல் மற்றும் கண்காணித்தல் முறை கொண்டுவரப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில், நுகர்வோரின் வசதிக்காக அவர்களது ஆற்றலையும், நேரத்தையும் சேமிக்கும் விதமாக புதிய குடிநீர்/ கழிவுநீர் இணைப்புகளை பெறுவதற்கான விண்ணப்பத்தினை எளிதாக இணையதளம்மூலம் பதிவு செய்தல், கட்டணம் செலுத்துதல் மற்றும் கண்காணித்தல் முறை கொண்டுவரப்படும்.

**9. சென்னை மாநகர விரிவாக்கப்பட்ட பகுதிகளில், வீடுகளில் உள்ள கழிவுநீர் சேகரிப்பு தொட்டிகளிலிருந்து (Septic tank) கழிவுநீரை அகற்ற சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின்மூலம் குறைந்த கட்டணத்தில் வாடகை கழிவுநீர் ஊர்திகள் ஏற்பாடு செய்யப்படும்.**

விரிவாக்கப் பகுதிகளில் உள்ள வீடுகளின்மூலம் வெளியேற்றப்படும் கழிவு நீரானது, சேகரிப்புத் தொட்டிகளில் (Septic tank) சேகரிக்கப்பட்டு, தனியார் கழிவுநீர் ஊர்திகளின்மூலம், அதிக கட்டணத்தில் பல இடங்களில் அகற்றப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும் தற்போது பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விரிவாக்கப் பகுதிகளில், வீடுகளில் சேகரிக்கப்படும் கழிவு நீரை அகற்றி, அருகில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கொண்டு செல்ல சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் குறைந்த கட்டணத்தில் வாடகை கழிவுநீர் ஊர்திகள் ஏற்பாடு செய்யப்படும்.

**10. சென்னையிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ரூ.226 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.**

தற்போது கொடுங்கையூர், கோயம்பேடு, நெசப்பாக்கம் மற்றும் பெருங்குடி ஆகிய இடங்களிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சேகரிக்கப்படும் கழிவுநீரானது சுத்திகரிக்கப்பட்டு, அருகிலுள்ள நீர் வழித் தடங்களில் விடப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் புதிய விதிமுறைகளின்படி, கழிவுநீரை சுத்திகரிக்க ஏதுவாக, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ.226 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (TNIPP) புனரமைக்கப்படும்.

**11. கும்பகோணம் நகராட்சியில் அம்ரூத் திட்டத்தின்கீழ் ரூ.40.25 கோடி திட்ட மதிப்பீட்டில் குடிநீர்க் குழாய்கள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.**

கும்பகோணம் நகராட்சியில் தற்போது 16 எம்.எல்.டி. குடிநீர் பெறப்பட்டு வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், நகரின் வருங்காலத் தேவையினைக் கருத்தில்கொண்டு 23.34 எம்.எல்.டி. குடிநீர் பெறுவதற்கும், நகரின் விடுபட்ட பகுதிகளில் பகிர்மான குழாய்கள் அமைத்திடவும் மற்றும் நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான அழுத்தத்துடன் குடிநீர் விநியோகம் செய்திடவும் மத்திய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன், அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான (AMRUT) திட்டத்தின்கீழ் ரூ.40.25 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதன்மூலம் 1,44,835 நபர்கள் பயன்பெறுவர்.

**12. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்துவரும் துப்புரவுப் பணியாளர்களுக்கு நகராட்சி நிதியின்கீழ் "சிறப்பு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்" செயல்படுத்தப்படும்.**

நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் பணிபுரிந்து வரும், துப்புரவுப் பணியாளர்கள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளிலுள்ள தெருக்களில் சேரும் குப்பைக் கழிவுகள், தூசி, மணல்கள், சந்தை மற்றும் பேருந்து நிலையங்களில் சேரும்



திடக்கழிவுகளை அகற்றுதல், மழைநீர் வடிகால்களில் தேங்கும் அடைப்புகளை நீக்குதல் போன்ற அத்தியாவசிய அடிப்படைப் பணிகளை சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு பொது மக்களின் சுகாதாரத்திற்காக செய்து வருகின்றனர். இதுபோன்ற துப்புரவுப் பணிகளால் துப்புரவுப் பணியாளர்களுக்கு அடிக்கடி உடல்நலக் குறைவு ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், மேற்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வரும் துப்புரவுப் பணியாளர்களுக்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் "சிறப்பு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்" செயல்படுத்தப்படும்.

**13. எடப்பாடி, நாகர்கோவில், திருமங்கலம் மற்றும் கும்பகோணம் ஆகிய 4 நகராட்சிகளில் ரூ.17 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடங்களும், கரூர் நகராட்சியில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் கூடுதல் அலுவலகக் கட்டடமும் கட்டப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள சில நகராட்சி அலுவலகங்கள் தற்போது பழைய கட்டடங்களில் போதுமான வசதியின்றி இயங்கி வருகின்றன. எனவே, மூலதன மானியத் தொகையின் (CGF) மூலம் எடப்பாடி, நாகர்கோவில், திருமங்கலம் மற்றும் கும்பகோணம் ஆகிய 4 நகராட்சிகளில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், ரூ.17 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகளும் மற்றும் கரூர் நகராட்சியில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் கூடுதல் அலுவலகக் கட்டடமும் கட்டப்படும்.

**14. கொடைக்கானல், பரமக்குடி, சின்னமனூர், சாத்தூர், திருவண்ணாமலை, தேனி, புதுக்கோட்டை மற்றும் வேதாரண்யம் ஆகிய 8 நகராட்சிகள் மற்றும் மதுரை மாநகராட்சியில் துப்புரவுப் பணியாளர்களுக்காக ரூ.26.50 கோடி திட்ட மதிப்பீட்டில் துப்புரவுப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், துப்புரவுப் பணியாளர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையில், நடப்பாண்டில் கொடைக்கானல், பரமக்குடி, சின்னமனூர், சாத்தூர், திருவண்ணாமலை, தேனி, புதுக்கோட்டை மற்றும் வேதாரண்யம் ஆகிய 8 நகராட்சிகள்

மற்றும் மதுரை மாநகராட்சியில் துப்புரவுப் பணியாளர்களுக்காக ரூ.26.50 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 400 குடியிருப்புகள் மூலதன மானியத் தொகையின் (CGF) மூலம் கட்டப்படும்.

பிற்பகல் 3–05

**15. தேவக்கோட்டை, கொடைக்கானல் ஆகிய 2 நகராட்சிகளில் ரூ.1.50 கோடி திட்ட மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்படும்.**

இறந்தவர்களின் உடல்களை திறந்தவெளி மயானத்தில் எரியூட்டுவதால் கரியமில வாயு, கார்பன் மோனாக்சைடு மற்றும் டையாக்சின் போன்ற அசுத்த வாயுக்கள் வெளியேறி சுற்றுச்சூழல் மாசு அடைவதைத் தவிர்க்கும்பொருட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், தேவக்கோட்டை, கொடைக்கானல் ஆகிய 2 நகராட்சிகளில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில், நவீன எரிவாயு தகன மேடைகள் மூலதன மானியத் தொகையின் (CGF) மூலம் அமைக்கப்படும்.

**16. ரூ.75.51 கோடி திட்ட மதிப்பீட்டில் 25 நகரங்களில் 153 பசுமை பூங்காக்கள் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், தமிழ்நாட்டில் 25 நகரங்களில் 153 பசுமை பூங்காக்கள் ரூ.75.51 கோடி மதிப்பீட்டில், மத்திய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான (AMRUT) திட்டத்தின்கீழ் அமைக்கப்படும்.

**17. கும்பகோணம் நகராட்சியில் அம்ரூத் திட்டத்தின்கீழ் விடுபட்ட பகுதிகளில் ரூ.55.10 கோடி திட்ட மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும்.**

கும்பகோணம் நகராட்சியின் மொத்தப் பரப்பளவான 12.58 சதுர கிலோ மீட்டரில், 9.44 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், தற்போது புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும்



நகராட்சியில் விடுபட்டுள்ள தெருக்களில் மத்திய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான (AMRUT) திட்டத்தின்கீழ் ரூ.55.10 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் 1,66,562 நபர்கள் பயன்பெறுவர்.

**18. இராஜபாளையம் நகராட்சியில் ரூ.258.25 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் அன்றைக்கு இதுகுறித்துப் பேசினார். அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், இராஜபாளையம் நகராட்சியில் மத்திய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான (AMRUT) திட்டத்தின்கீழ் ரூ.258.25 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும. இதன்மூலம், 1,55,000 நபர்கள் பயன்பெறுவர்.

**19. போடிநாயக்கனூர் நகராட்சியில் ரூ.70.10 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படும்.**

போடிநாயக்கனூர் நகராட்சியில் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW), தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP) மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் ரூ.70.10 கோடி மதிப்பீட்டில், குடிநீர் அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் 79,000 நபர்கள் பயன்பெறுவர்.

**20. ஆம்பூர் நகராட்சியில் ரூ.205 கோடி திட்ட மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், ஆம்பூர் நகராட்சியில் மத்திய, மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான (AMRUT) திட்டத்தின்கீழ் ரூ.205 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் சுமார் 1,29,000 நபர்கள் பயன்பெறுவர்.

**21. பத்து மாவட்டங்களில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நகர்ப்புற வீடற்றோருக்கு ரூ.15 கோடி திட்ட மதிப்பீட்டில் 36 உறைவிடங்கள் கட்டப்படும்.**

*மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், 10 மாவட்டங்களில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியுடன், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்கீழ் நகர்ப்புற வீடற்றோருக்கு ரூ.15 கோடி மதிப்பீட்டில் 36 உறைவிடங்கள் கட்டப்படும்.*

**22. திருச்செங்கோடு நகராட்சியில் ரூ.64.06 கோடி திட்ட மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படும்.**

*மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், 95,335 நபர்கள் பயன்பெறும் வகையில் திருச்செங்கோடு நகராட்சியில் காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, குடிநீர் வழங்குவதற்கும், மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளவும், ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW), தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP) மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் ரூ.64.06 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.*

**23. உசிலம்பட்டி நகராட்சியில் ரூ.47 கோடி திட்ட மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்படும்.**

*உசிலம்பட்டி நகராட்சியில் வைகை ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்குவதற்கு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள, ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW), தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP) மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், ரூ.47 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் நிறைவடையும்போது உசிலம்பட்டி நகராட்சியில் வசிக்கும் 35,218 நபர்கள் பயன்பெறுவர்.*



**24. திண்டிவனம் நகராட்சியில் ரூ.230 கோடி திட்ட மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும்.**

*மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், திண்டிவனம் நகராட்சியில் ரூ.230 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஆசிய மேம்பாட்டு வங்கி நிதி (ADB) மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படும். இதன்மூலம் 77,802 நபர்கள் பயன்பெறுவர்.*

**25. செங்கல்பட்டு நகராட்சியில் ரூ.124.98 கோடி திட்ட மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும்.**

*மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், செங்கல்பட்டு நகராட்சியில் ரூ.124.98 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஆசிய மேம்பாட்டு வங்கி நிதி (ADB) மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படும். இதன்மூலம் 72,000 நபர்கள் பயன்பெறுவர்.*

**26. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்குச் சொந்தமான கட்டடங்களின் மேற்கூரைகளில் சூரிய மின்சக்தி அமைப்புகள் நிறுவப்படும்.**

*மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்குச் சொந்தமான சாத்தியக்கூறுகள் உள்ள கட்டடங்களின் மேற்கூரைகளில் சூரிய மின்சக்தி அமைப்புகளை ஏற்படுத்தி அதன்மூலம் கிடைக்கும் 11 மெகா வாட் அளவிலான மின்சக்தியை அந்தந்த கட்டடத்தில் பயன்படுத்தும் வகையில் சூரிய மேற்கூரை மின்சக்தி அமைப்புகள் உள்ளாட்சி பொது நிதியின்மூலம் ஏற்படுத்தப்படும்.*

**27. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அலுவலர்களுக்கு கைப்பேசிகளுக்கான வரையறுக்கப்பட்ட பயன்படுத்துவோர் குழு இணைப்பு (Closed User Group–CUG) வழங்கப்படும்.**

*மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்*

ஆணைப்படியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்கள் மற்றும் பொறியாளர்கள், மண்டல இயக்குநர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் ஆகியோருடன் நகராட்சி நிருவாக ஆணையர் உடனுக்குடன் கைப்பேசியின்மூலம் தொடர்புகொண்டு துரித நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு வரையறுக்கப்பட்ட பயன்படுத்துவோர் குழு இணைப்பு (Closed User Group–CUG) உள்ளாட்சி பொது நிதியின்மூலம் வழங்கப்படும்.

**28. கோயம்புத்தூர் மாநகராட்சியில் வெள்ளலூர் உரக்களத்தில் திடக் கழிவு மேலாண்மை செயலாக்கப்படும்.**

பெருகி வரும் மக்கள்தொகைக்கிணங்க, கோயம்புத்தூர் மாநகராட்சியில் தற்போது சுமார் 1,000 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உருவாகிறது. ஏற்கெனவே, வெள்ளலூர் உரக்களத்தில் 400 மெட்ரிக் டன் திறனுக்கு திடக் கழிவுகளைக் கையாளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், நடப்பு நிதியாண்டில் மீதமுள்ள 600 மெட்ரிக் டன் திடக் கழிவுகளை மேலாண்மை செய்யும் வகையில் உட்கட்டமைப்பு வசதி மற்றும் இயந்திரங்கள் நிறுவுதல் போன்ற பணிகள் தனியார் பங்களிப்பு மற்றும் திடக் கழிவு மேலாண்மை நிதியின்மூலம் மேற்கொள்ளப்படும்.

**29. பேரூராட்சிகளில் உள்ள சாலைகள் மற்றும் பாலங்கள் ரூ.100 கோடி திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், பேரூராட்சிப் பகுதிகளில் ரூ.100 கோடி மதிப்பீட்டில், புதிய சாலைகள் மற்றும் பாலங்கள் அமைக்கப்படுவதுடன், சேதமடைந்துள்ள ஊரக இணைப்பு சாலைகள் மற்றும் பாலங்கள் நபார்டு வங்கி நிதியின் (NABARD) மூலம் மேம்படுத்தப்படும்.

**30. மூன்று பேரூராட்சிகளில் உள்ள பேருந்து நிலையங்கள் ரூ.3.50 கோடி திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்



ஆணைப்படியும், தகுதி மற்றும் தேவைகளின் அடிப்படையில் 3 பேரூராட்சிகளில் உள்ள பேருந்து நிலையங்களில் பேருந்து நிறுத்துமிடம், நடைமேடை, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி மற்றும் தாய்மார்கள் பாலூட்டும் அறை ஆகிய அனைத்து வசதிகளுடன்கூடிய பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணிகள் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் (O & MGFF) மூலம் மேற்கொள்ளப்படும்.

**31. ஆறு பேரூராட்சிகளில் ரூ.4.75 கோடி திட்ட மதிப்பீட்டில் சந்தை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், தகுதி மற்றும் தேவைகளின் அடிப்படையில் 6 பேரூராட்சிகளில் ரூ.4.75 கோடி மதிப்பீட்டில், சந்தை மேம்பாட்டுப் பணிகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் (O & MGFF) மூலம் மேற்கொள்ளப்படும்.

**32. ஆறு பேரூராட்சிகளில் ரூ.2.60 கோடி திட்ட மதிப்பீட்டில் ஊரணி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், தகுதி மற்றும் தேவைகளின் அடிப்படையில் 6 பேரூராட்சிகளில் ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் ஊரணி மேம்பாட்டுப் பணிகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் (O & MGFF) மூலம் மேற்கொள்ளப்படும்.

**33. தகுதியான ஊராட்சிகளைப் பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துதல், மேலும் தகுதியான பேரூராட்சிகளை இரண்டாம் நிலை நகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படை வசதிகளை உயர்த்துதலின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, தொடர்புடைய நடைமுறைகளைப் பின்பற்றி, 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, நகரங்கள் என வரையறை செய்யப்பட்ட ஊராட்சிகளில் (Census Town) தகுதியுடைய ஊராட்சிகள் பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்தப்படும். இரண்டாம்

நிலை நகராட்சிகளாகத் தரம் உயர்த்த தகுதியுடைய பேரூராட்சிகள் இரண்டாம் நிலை நகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்படும்.

**34. கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் மற்றும் திருப்பூர் மாவட்டம், அவினாசி ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும் கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் மற்றும் திருப்பூர் மாவட்டம், அவினாசி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 500 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் 1,40,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்பாடு குறித்து ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**35. திருச்சி மாவட்டம், தொட்டியம் ஊராட்சியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், திருச்சி மாவட்டம், தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 138 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் 55,928 நபர்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**36. அருப்புக்கோட்டை, சாத்தூர் மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, சாத்தூர் மற்றும் விருதுநகர் நகராட்சிகளிலுள்ள 2,04,575 நபர்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்பாடு குறித்து ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**37. புதுக்கோட்டை நகராட்சிக்கான தனி குடிநீர்த் திட்டத்திற்கான ஆய்வு மேற்கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்



ஆணைப்படியும், புதுக்கோட்டை நகராட்சியில் சீரான குடிநீர் விநியோகம் செய்யும்பொருட்டு, கொள்ளிடம் ஆற்றில் பூதலூர் அருகில் நீராதாரம் தேர்வு செய்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் தனி குடிநீர்த் திட்டம் செயல்படுத்த ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

**1. நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின்கீழ் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 750 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஊரகச் சாலைகள் மேம்படுத்தப்படும்.**

நபார்டு வங்கியின் நிதி அளிப்புடன், மிகவும் பழுதடைந்த ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்யும் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2017–2018 ஆம் ஆண்டில் நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின்கீழ் 750 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைகள் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**2. ஊரகப் பகுதிகளில் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2500 கிலோ மீட்டர் நீளத்திற்கு இணைப்புச் சாலைகள் மேம்படுத்தப்படும்.**

ஊரகப் பகுதிகளில், இணைப்புச் சாலை இல்லாத குக்கிராமங்களுக்கும், மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள குக்கிராமங்களுக்கும் சாலை வசதி ஏற்படுத்திடும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மண் சாலைகளை கற்சாலைகளாக (Metal Road) மாற்றி அமைத்திட 2017–2018 ஆம் நிதியாண்டில், 2,500 கிலோ மீட்டர் நீளத்திற்கு கற்சாலைகள் அமைக்கும் பணி 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**3. 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி, ஊரகப் பகுதிகளில் உள்ள ஆரம்பப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிக் கட்டடங்களுக்கு சுற்றுச் சுவர் மற்றும் வெள்ளத் தடுப்புச் சுவர் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**4. ஊரகப் பகுதிகளில் 144 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 இலட்சம் உறிஞ்சு குழிகள் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஊரகப் பகுதிகளில், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரத்தினை மேம்படுத்திடவும், குடியிருப்புப் பகுதிகளின் சாலைகள் மற்றும் தெருக்களில் திரவக் கழிவுகள் தேங்கி நோய் தொற்று ஏற்படாமல் பாதுகாத்திடவும், ஒவ்வொரு வீட்டிலும் தலா 7,000 ரூபாய் மதிப்பீட்டில், 1 இலட்சத்து 75 ஆயிரம் உறிஞ்சு குழிகள் மொத்தம் 122 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

மேலும், ஆழ்துளைக் கிணறு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி போன்ற குடிநீர் அமைப்புகளைச் சுற்றி கழிவுநீர் தேங்காவண்ணம் தடுத்திட, தலா 8,600 ரூபாய் மதிப்பீட்டில் 25,000 சமுதாய உறிஞ்சு குழிகள் மொத்தம் 21 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். ஆகமொத்தம், 2 இலட்சம் உறிஞ்சு குழிகள் 144 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**5. 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50,000 விவசாயிகளின் நிலங்களில் உரக்குழிகள் அமைத்துத் தரப்படும்.**

தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மற்றும் சிறு, குறு விவசாயிகள் தங்களது விவசாய நிலங்களில் வீட்டுக் கழிவு மற்றும் விவசாய கழிவுகளை மக்கச் செய்து, உயிரி உரமாக மாற்றி, விவசாய நிலங்களில் பயன்படுத்திடும்விதமாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2017–2018 ஆம் ஆண்டில் தலா 15,000 ரூபாய் மதிப்பீட்டில் 50,000 விவசாயிகளுக்கு, மொத்தம் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உரக்குழிகள் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்படும்.



**6. விவசாய நிலங்களை காக்கும் வகையில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கல் வரப்புகள் அமைக்கப்படும்.**

மலைப்பாங்கான மற்றும் சாய்வான நிலப் பகுதிகளில் உள்ள தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் சிறு, குறு விவசாயிகளுடைய நிலங்களில் மண் அரிப்பை தடுப்பதற்காகவும், நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்கவும், மண் வளப் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 250 கிலோ மீட்டர் நீளத்திற்கு கல் வரப்புகள் 2017–2018 ஆம் ஆண்டில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**7. ஊரகப் பகுதிகளில் நான்கு ஆண்டுகளில் 2 இலட்சம் தடுப்பணைகள் கட்டப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கிராமப்புறங்களில் தண்ணீரை சேமித்து பாசனத்திற்குப் பயன்படுத்திடவும், நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்திடவும், தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளிலுள்ள வாய்க்கால், ஓடைகள் மற்றும் கால்வாய்களின் குறுக்கே, வரும் 4 ஆண்டுகளில் 2 இலட்சம் தடுப்பணைகள் கட்டப்படும்.

நடப்பாண்டில், 20,000 தடுப்பணைகள், 40 ஆயிரம் ரூபாய் முதல் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரை செலவில், மொத்தம் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**8. 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 500 ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.**

மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்களுக்குப் பதிலாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஒவ்வொன்றும் 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 500 புதிய ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**9. 85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1000 அங்கன்வாடி மையங்கள் கட்டப்படும்.**

ஊரகப் பகுதிகளில் சமூக நலத் துறையுடன் இணைந்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 1000 அங்கன்வாடி மையங்கள் ஒவ்வொன்றும் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மொத்தம் 85 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

**10. ஊரகப் பகுதிகளில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதரச ஆவி, சோடியம் ஆவி மற்றும் குழல் தெரு விளக்குகள் எல்.இ.டி. விளக்குகளாக மாற்றப்படும்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் சட்டமன்றப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில், ஊரகப் பகுதிகளில் உள்ள 17.06 இலட்சம் குழல் தெரு விளக்குகளை ரூபாய் 600 கோடி மதிப்பீட்டில் எல்.இ.டி. தெரு விளக்குகளாக மாற்றி அமைத்திடும் பணி நடைபெற்று வருகிறது. இதனால், ஊராட்சிகள் செலுத்தும் தெரு விளக்குகளுக்கான மின் கட்டணம் ஆண்டுக்கு சுமார் 30 சதவிகிதம் வரை குறைந்துள்ளது.

கிராம ஊராட்சிகளின் மின் கட்டணம் மற்றும் பராமரிப்பு செலவினத்தைக் குறைக்கும் வகையில், அதிக மின் நுகர்வு விளக்குகளான பாதரச ஆவி விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் மீதமுள்ள குழல் தெரு விளக்குகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2017–2018 ஆம் ஆண்டில், 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எல்.இ.டி. தெரு விளக்குகளாக மாற்றி அமைக்கப்படும்.

**11. 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 மாவட்டங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த அலுவலக வளாகங்கள் கட்டப்படும்.**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்கீழ் செயல்படும் மாவட்ட அளவிலான பல்வேறு அலுவலகங்களுக்காக ஒருங்கிணைந்த அலுவலக வளாகக் கட்டடம் ஒன்றினைக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகம் சுமார் 25,000 சதுர அடி பரப்பில் தலா 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

2017–2018 ஆம் ஆண்டில் விழுப்புரம், வேலூர், விருதுநகர், தேனி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகம் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**12. ஊரகப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே சுகாதாரம் மற்றும் தன்சுத்தம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.**

ஊரக மக்களிடையே பாதுகாப்பான சுகாதார பழக்க வழக்கத்தினை ஊக்குவிக்கும் வகையில், நேரடி தகவல் பரிமாற்ற (Inter–Personal Communication) நடவடிக்கைகள்மூலம் மனமாற்றம் ஏற்படுத்திட சுயஉதவிக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இளைய சமுதாயத்தினரிடையே, அவர்களது நடத்தை, மனநிலை மற்றும் பழக்க வழக்கத்தினை சீர்படுத்தும் அமைப்புகளாக பள்ளிகள் திகழ்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஊரகப் பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய மற்றும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே சுகாதாரம் மற்றும் தன்சுத்தம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்விதமாக, சுகாதாரம் குறித்த படம் வரைதல், வண்ணம் தீட்டுதல், கட்டுரை எழுதுதல் மற்றும் பேச்சுப் போட்டிகள், பள்ளிகள் அளவிலும், மாவட்ட அளவிலும் நடத்தப்படும். மேற்படி போட்டிகள், தேசிய மற்றும் உலகளவில் முக்கியத்துவம் வாய்ந்த நாட்களில், கல்வி ஆண்டில் இரண்டுமுறை நடத்தப்படும்.

**13. ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் சமுதாய அமைப்புக் கட்டடங்கள் மற்றும் வளாகங்களை, குறிப்பிட்ட கால இடைவெளியில் தூய்மையாகப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஊரகப் பகுதிகளிலுள்ள அரசுப் பள்ளிகள்,

அங்கன்வாடி மையங்கள், பொது சுகாதார மையங்கள், சமுதாயநலக் கூடங்கள், கிராம ஊராட்சி சேவை மையங்கள், சுய உதவிக் குழுக் கட்டடங்கள் போன்ற சமுதாய உட்கட்டமைப்புகள் மற்றும் அரசு அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வளாகங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பணிகளில், ஊராட்சி அமைப்புகள், அரசு / ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், மருத்துவமனைகள் ஆகிய அரசு அமைப்புகளில் பணிபுரியும் சுகாதாரப் பணியாளர்கள், தூய்மைக் காவலர்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்கள் மற்றும் மஸ்தூர்கள் ஈடுபடுத்தப்படுவர்.

**14. ஊராட்சி செயலர் காலிப் பணியிடங்களில் கூடுதல் பொறுப்பு வகிக்கும் ஊராட்சி செயலர்களுக்கு மாதம் 500 ரூபாய் கூடுதல் பொறுப்புப் படி வழங்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கிராம ஊராட்சிகளில் வெவ்வேறு காரணங்களால் காலியாகவுள்ள ஊராட்சி செயலர் பணியிடங்களில், கூடுதல் பொறுப்பு வகிக்கும் ஊராட்சி செயலர்களுக்கு மாதம் 500 ரூபாய் கூடுதல் பொறுப்புப் படியாக வழங்கப்படும்.

**15. கிராம ஊராட்சிகளில் குறைந்த ஊதியத்தில் பணிபுரிந்துவரும் 9,350 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களின் மாதாந்திரத் தொகுப்பூதியம் 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளால், தற்காலிகமாக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 9,350 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களது மாதாந்திரத் தொகுப்பூதியம் மிகக் குறைந்த அளவில் உள்ளது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று, தற்காலிகமாக பணியில் ஈடுபடுத்தப்பட்ட 9,350 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களது மாதாந்திரத் தொகுப்பூதியம் 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.



**16. 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறு பாசன ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகள் தூர்வாரி கரைகளைப் பலப்படுத்தி மேம்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2017–2018 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்திடும் வகையில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ள சிறு பாசன ஏரிகள், குளங்கள், குட்டைகள் ஆகிய நீர்வள ஆதாரங்களில் உள்ள முட்புதர்களை அகற்றி, இயந்திரங்களின்மூலம் தூர்வாரி, கரைகளை பலப்படுத்தி, விரிவான முறையில் புனரமைக்கப்படும்.

**17. 40 இலட்சம் கிராமப்புற குடும்பங்களுக்கு இலவசமாக நொச்சிச் செடி வழங்கப்படும்.**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 2015–2016 மற்றும் 2016–2017 ஆம் ஆண்டுகளில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டு, பல்வேறு வகையான மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு, மாபெரும் மரம் நடவுத் திட்டம் மற்றும் சாலையோர மரக்கன்றுகள் நடும் திட்டங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

நொச்சி எனும் மூலிகைச் செடி சிறந்த கொசு விரட்டியாக செயல்பட்டு, மலேரியா மற்றும் டெங்கு போன்ற தொற்று நோய்களை தடுக்க உதவுவதுடன், வலி நிவாரணியாகவும் பயன்படுகிறது. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழகத்தில் 385 ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்கப்பட்டுள்ள நாற்றங்கால்களில் நொச்சிச் செடிகள் 4 முதல் 6 மாத காலத்திற்குள் வளர்க்கப்பட்டு, கிராமப்புறங்களில் வசிக்கும் 40 இலட்சம் குடும்பங்களுக்கு, தலா 2 செடிகள்வீதம் இலவசமாக வழங்கப்படும்.

**18. 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களை வலுப்படுத்தி சீர்மிகு மையங்களாக உருவாக்கப்படும்.**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் திட்டங்களைச் செம்மையாகவும், திறம்படவும் செயல்படுத்தும் வகையில், இத்துறையின் அலுவலர்கள் மற்றும் ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி

நிறுவனம் (SIRD) மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் (RIRD) மூலம் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தரமான பயிற்சிகள் வழங்கும் விதத்தில் ஊரக வளர்ச்சி பயிற்சி இயக்குநரகம், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் (SIRD) மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் (RIRD) 2017–2018 ஆம் ஆண்டில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு, சீர்மிகு மையங்களாக உருவாக்கப்படும்.

**19. மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொழில்நுட்ப பயிற்சி மையம் உருவாக்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்கீழ் பணிபுரியும் பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு, நவீன தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்படும் வகையில் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொழில்நுட்பப் பயிற்சி பிரிவு துவங்கப்படும்.

பிற்பகல் 3–10

**20. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் செயல்படும் 5,000 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 100 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்.**

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலுள்ள சுய உதவிக் குழுக்கள் சுயசார்புத் தன்மை அடையவும், சுய தொழில்கள்மூலம் பொருளாதார முன்னேற்றம் அடைவதற்காகவும், சமுதாய முதலீட்டு நிதி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் செயல்படும் 5,000 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் வீதம் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்.



சுயதொழில் செய்ய விரும்புகிற சுய உதவிக் குழுக்களுக்கு, வறுமை ஒழிப்புச் சங்கங்களின்மூலம் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படும். இதற்கென 100 கோடி ரூபாய் 2017–2018 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்ட நிதியிலிருந்து வழங்கப்படும்.

**21. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டத்தில் மூன்றாம் கட்டமாக 95 வட்டாரங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக 6 கோடி ரூபாய் வழங்கப்படும்.**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ், ஒவ்வொரு ஆண்டும் விடுபட்ட ஏழை மக்களைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அத்தகைய குழுக்களின் பொது நிதியை மேம்படுத்தவும், உயரிய அளவிலான கடன், வங்கியின்மூலம் கிடைக்கப்பெறவும் ஆதார நிதி வழங்கப்படுகிறது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் மூன்றாம் கட்ட, 95 வட்டாரங்களில் உள்ள 4,000 சுய உதவிக் குழுக்களுக்கு, தலா 15,000 ரூபாய்வீதம் 6 கோடி ரூபாய் ஆதார நிதியாக இந்த ஆண்டு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டத்திலிருந்து வழங்கப்படும்.

**22. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், ஈஷா அவுட்ரீச் நிறுவனத்துடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் பெண்களுக்கு விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சாராத பல்வேறு தொழிற்பயிற்சிகள் வழங்கப்படும்.**

ஊரக ஏழை மக்களுக்காக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சாராத பல்வேறு தொழில்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படுகிறது. ஈஷா அவுட்ரீச் நிறுவனமும் (ISHA OUTREACH) விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சாராத பல்வேறு தொழில்களுக்கான பயிற்சிகளை இளைஞர்களுக்கு வெற்றிகரமாக வழங்கி சுய வேலைவாய்ப்பு மற்றும் ஊதியத்துடன்கூடிய வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி, இந்த அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில், பெண்களுக்கு பல்வேறு தொழிற்பயிற்சிகள் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சிகள் வழங்கப்படும்.

**23. 1000 நகர்ப்புற இளம்பெண்களுக்கு சமையலறை மற்றும் வீட்டு உபயோக மின் சாதனங்கள் பழுதுபார்த்தல் பயிற்சியளித்து, மேற்படி சாதனங்கள் பழுதுபார்க்க மகளிர் சேவை மையங்கள் அமைக்கப்படும்.**

வீட்டு உபயோக மின் சாதனங்கள், சமையலறை சாதனங்கள் பழுதினை நன்முறையில் விரைவாக செய்து முடிக்க சேவையாளர்களை உருவாக்கும் நோக்கோடு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 1000 நகர்ப்புற இளம்பெண்களுக்கு வீட்டு உபயோக சாதனங்கள் மற்றும் மின்சாதனங்கள் பழுதுபார்த்தல் பயிற்சி வழங்கப்படும். மேற்கண்ட சாதனங்களுக்கான பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் சேவைகளுக்கென பயிற்சி பெற்ற பெண்களை உள்ளடக்கிய ஒரு கூட்டமைப்பை உருவாக்கி, பிரத்யேகமாக உள்ள கணினி செயலி (Computer APP) அல்லது தொலைபேசி அழைப்பு மையம் (Call Center) மூலம் எவரும் எளிதில் கேட்டுப் பயன்பெறும் சேவை மையங்கள் உருவாக்கப்படும்.

இத்தகைய சேவை மையங்கள் பரீட்சார்த்த முறையில் நடப்பு ஆண்டில் பெருநகரங்களில் அமைக்கப்படும். இதன்மூலம் மக்களுக்குத் தரமான சேவையும், பெண்களுக்குத் திறன் வளர்ப்பும், வருமான ஈட்டுதலும் உறுதி செய்யப்படும்.

**24. 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50,000–க்குக் குறையாத மகளிர் உட்பட 1,00,000 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த 18 வயது முதல் 45 வயதுக்குட்பட்ட 50,000–க்குக் குறையாத மகளிர் உட்பட 1,00,000 இளைஞர்கள் பயனடையும் வகையில் இவ்வாண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் திறன் பயிற்சி மற்றும் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். திறன் மேம்பாட்டுப் பயிற்சி, தொழிற்திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு முகாம்கள்மூலம் சுய வேலைவாய்ப்பு மற்றும் ஊதியத்துடன்கூடிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். இதில் குறைந்தபட்சம் 50,000 மகளிருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.



மேற்கண்ட வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு தேவையான நிதி தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும்.

**25. 180 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு தலா ரூ.2.5 இலட்சம்வீதம் குறுந்தொழில் தொடங்க 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் கடன் உதவி வழங்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 180 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு தொழில் தொடங்க, தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் கடனுதவி வழங்கப்படும்.

**26. 3,000 விவசாயிகள் பயன்பெறும் வகையில் 7 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாம்பழக் கூழ் தயாரிப்பு நிறுவனம் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் 3,000 விவசாயிகளை உள்ளடக்கிய 190 உற்பத்தியாளர் குழுக்கள் இணைந்து பயன்பெறும்வகையில், நாகப்பட்டினம் மாவட்டத்தில், திருப்பூண்டி (கிழக்கு) ஊராட்சியில் 7 கோடியே 53 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் மாம்பழக் கூழ் தயாரிப்பு நிறுவனம் அமைக்கப்படும்.

**27. 15 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக் கட்டடம் மற்றும் 20 மீன் வலை பின்னும் தளம் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள கடலோர சமுதாய மக்களின் பயன்பாட்டிற்கென 15 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 20 மீன் வலை பின்னும் கூடங்கள் ஆகிய உள்கட்டமைப்பு வசதிகள் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**28. 2,000 மீனவர்களுக்கு கடன் மீட்பு நிதியாக 6 கோடியே 40 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டப் பகுதிகளான தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள மீனவர்களைப் பெருங்கடன் சுமையிலிருந்து மீட்கவும், இடைத் தரகர்கள் மற்றும் பெரும் வியாபாரிகள்மூலம் அதிக வட்டியிலான கடன் பெறுவதைக் குறைக்கும் வகையிலும், கடன் மீட்பு நிதி வழங்கப்படும். இந்த ஆண்டு 2,000 மீனவர்களுக்குக் கடன் மீட்பு நிதியாக 6 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

**29. 129 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு துயர் குறைப்பு (PLFs) துயர் குறைப்பு நிதியாக 2 கோடியே 58 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டப் பகுதிகளான தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள 129 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு துயர் குறைப்பு நிதியாக 2 கோடியே 58 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். இந்நிதி, இயற்கை இடர்பாடுகள் காரணமாக ஏற்படும் பொருளாதார இழப்பின் துயரிலிருந்து மீள, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்மூலம் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகள்மீது உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களில் உள்ள பொருள்கள் குறித்து நான் இங்கே என்னுடைய விளக்கங்களை அளித்துள்ளேன். என்னுடைய பதிலுரை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் திருப்தியாக இருக்கும் என நம்புகிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானத்தில் தெரிவித்துள்ள கோரிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய இந்தப் பதிலுரையை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி, என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாததால், மாவட்ட திட்டக் குழு தற்போது இயங்காமல் இருக்கிறது. அதேபோல, உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாத வரை, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதி மக்களின் குறைகளைச் சொல்வதற்கு ஏதுவாக, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தை ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல் மாவட்டத்தில், பழநி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 24 ஊராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும், தொப்பம்பட்டி ஊராட்சியில் உள்ள ஊராட்சிகளுக்கும், திருமூர்த்தி அணையிலிருந்து குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

***திரு. எஸ். ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் நான் நேற்று பேசியபோது, தாம்பரம் பேருந்து நிலையத்திலிருக்கும் encroachment–ஐ எல்லாம் எடுத்துவிட்டு,புதிய பேருந்து நிலையம் அமைத்துத்தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தேன். ஆனால், அங்கு 22 கோடி ரூபாய்க்கு parking வசதி செய்ய G.O. வெளியிடப்பட்டுள்ளதாக இன்றைக்கு எனக்குத் தகவல் வந்திருக்கின்றது. அப்படியொரு நிலையை அரசு எடுப்பதற்கு முன்பாக, அந்தப் பகுதியிலுள்ள பொது மக்களிடம் கலந்துபேசி, அந்த இடம் பேருந்து நிலையத்திற்குத் தேவையா அல்லது வாகன நிறுத்தத்திற்குத் தேவையா என்பதை ஆய்வு செய்து, முடிவு எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே அரசினைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, நேற்று மானியக் கோரிக்கையின்போது ஒரு விஷயத்தைப் பேச மறந்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். இராஜா, அதெல்லாம் இப்போது சொல்லக்கூடாது. மாண்புமிகு அமைச்சரின் பதிலுரையில்தான் நீங்கள் விளக்கம் கேட்கவேண்டும்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** நான் சுருக்கமாகப் பேசிவிடுவேன். பொது மக்களின் நலன் கருதி, அரசு அதிகாரிகளைச் சந்திக்கும்வகையில், மக்கள் குறை தீர்க்கும் நாள் என்று உள்ளாட்சித் துறையிலே வைத்து, 40 வார்டுகளை இரண்டு பகுதி, மூன்று பகுதி என்று பிரித்து அதை நடத்தினால், நன்றாக இருக்கும். நான் நகர மன்றத் தலைவராக இருந்தபோது, 'Light எரியவில்லை, இந்த ரோடு நேற்றுதான் போட்டது, சரியாக இல்லை' என்றெல்லாம் மக்கள் சொல்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். இராஜா, விவாதம் வேண்டாம். அமைச்சரின் பதிலுரையிலே ஏதாவது ஒரு கேள்வி கேட்டு உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** எனவே, 'மக்கள் குறை தீர்க்கும் நாள்' என்று வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காலையில் வருகின்றபோது, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் 1100 என்ற மக்கள் சாசனம் குறித்துச் சொன்னேன். அந்த மக்கள் சாசனம் தாம்பரம் நகரத்திற்கு மட்டும் தருவதாகச் சொன்னார். தமிழகம் முழுவதும் இருக்கின்ற மக்களுக்குத் தெரிகின்ற வகையில் அந்த மக்கள் சாசனம் வேண்டும். நான் 1100 என்று சொன்னது, ஆந்திர மாநிலத்திலே இருக்கின்ற அந்தச் சட்டத்தை



நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டத்தைப் பற்றிச் சொன்னார். ஆந்திர மாநிலத்தில் உள்ள அந்தச் சட்டம் என்னவென்றால், அரசு அதிகாரிகள் யாராவது இலஞ்சம் வாங்கினால், பொது மக்கள் அந்த தொலைபேசி எண்ணுக்குத் தொடர்புகொண்டு பேசினால், உடனடியாக அந்தப் பணம் பொது மக்களுக்கு திரும்பப் போய்ச் சேரும். அப்படியில்லையென்று சொன்னால், அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று ஒரு சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். ஒரே ஒரு அதிகாரி மட்டும் . . .

*பிற்பகல் 3–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா, நீங்கள் விவாதம் செய்கின்றீர்களே. நீங்கள் ஏற்கெனவே பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) இருங்கள். நீங்கள் பேசியதில், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் ஏதாவது விளக்கம் கேட்டால் அதில் நியாயம் இருக்கின்றது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சாத்தூர், விருதுநகர், அருப்புக்கோட்டை நகராட்சிக்கு தாமிரபரணியிலோ அல்லது வேறு திட்டத்திலோ புதியதாக ஆய்வு செய்வதாக அறிவித்துள்ளார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதனை விரைவாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசாமல், இப்போது கேள்வி கேட்க வாய்ப்பு கேட்கிறீர்களே ? பேசியவர்கள் கேள்வி கேட்டால்தான் அது நியாயம். (குறுக்கீடு) உங்கள் சார்பாக நான் நன்றி சொல்லிவிடுகின்றேன், நீங்கள் உட்காருங்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூரில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான அறிவிப்பு வரும் என்று மிகுந்த எதிர்பார்ப்புடன்

இருந்தேன். 13 மாதங்கள் ஆகின்றன, இதுவரை தொகுதியைப் பற்றி ஏதாவது ஒரு அறிவிப்பு வரும் என்று மிகுந்த ஆவலாக இருந்தேன். நேற்றுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் அதனை ஆய்வுக்கு எடுத்து அதனை விரைவாகச் செயல்படுத்துவோம் என்று சொன்னார்கள். அங்கே மர்ம காய்ச்சல், டெங்கு காய்ச்சல் போன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. அங்கு தண்ணீரெல்லாம் தேங்கி நின்று பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. எனவே, தயவுகூர்ந்து கடையநல்லூரில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உண்டான ஒரு நல்ல அறிவிப்பை நீங்கள் செய்ய வேண்டும்.

அதேபோன்று, மக்கள் பிரதிநிதிகள் நகராட்சி மற்றும் பேரூராட்சி மன்ற ஆய்வுக் கூட்டங்களில் பங்கேற்பதற்கு ஏதுவாக, ஒரு அறிவிப்பை நீங்கள் செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், நான் அதிகாரிகளைச் சந்திப்பதற்காக அங்கே செல்லும்போது, அந்தக் கூட்டத்தை அங்கே நடத்தக் கூடாது என்று தடுத்துவிட்டார்கள். எனவே, ஒரு பரஸ்பரமான உணர்வோடு இருந்து மக்கள் பணி ஆற்றுவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும்.

அதேபோல், உள்ளாட்சித் தேர்தலையும் விரைவாக நடத்தி நல்ல முறையிலே பணிகளை ஆற்றுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், அதைப் பற்றியெல்லாம் நிறைய பேசியாகிவிட்டது, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் இரண்டு கேள்விகளை நான் எழுப்பி இருந்தேன். அதற்கு அவர்கள் பதில் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள். (குறுக்கீடு) திரு. செங்குட்டுவன், மானியக் கோரிக்கையில் நீங்கள் பேசவில்லை, உட்காருங்கள். எல்லோருக்கும் அப்படி வாய்ப்புத் தர முடியாது. (குறுக்கீடு) எல்லோருக்கும் நான் எப்படி வாய்ப்புத் தர முடியும்? இதெல்லாம் சரியில்லை. நீங்கள் உட்காருங்கள். உட்காருங்கள்.



(குறுக்கீடு) உட்காருங்கள், வேறொரு சந்தர்ப்பத்தில் வாய்ப்பு தருகின்றேன். உட்காருங்கள்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற எங்களது முன்னிலையில், அனைத்துத் துறை அதிகாரிகளையும் அவசியம் அழைத்து, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், பெண்ணாகரம் தொகுதியில், குறிப்பாக பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் வாரத்திற்கு ஒரு நாள்தான் தண்ணீர் கொடுக்கின்றார்கள். மேலும், பிக்கிலி போன்ற பகுதிகளில் எல்லாம் ஒரு நாள்தான் தண்ணீர் கொடுக்கின்றார்கள். மக்களுடைய நலனைக் கருத்தில்கொண்டு, தினந்தோறும் அல்லது ஒரு நாள் விட்டு ஒரு நாளாவது தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன், என்ன இப்படி வற்புறுத்துகின்றீர்களே? நீங்கள் பேசியிருந்தால் உங்களைச் பேச அனுமதிப்பதற்கு நியாயம் இருக்கின்றது. நீங்கள் பேசாமல் புது கோரிக்கை வைப்பதற்கு வாய்ப்புக் கேட்டால் எப்படி? (குறுக்கீடுகள்) எல்லா உறுப்பினர்களும் அதே முறையைப் பின்பற்றினால் நான் எப்படி சபையை நடத்துவது? அங்கே பாருங்கள், எல்லோரும் கையைத் தூக்குகின்றார்கள். எப்படி நான் உங்களுக்குப் பேச அனுமதி தருவது? திரு. செங்குட்டுவன், நீங்கள் உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கிய பின்பு, பேசிய உறுப்பினர்களுக்கு வாய்ப்புக் கொடுப்பதுதான் முறை. அந்த அளவில் பேசிய உறுப்பினர்கள் கையைத் தூக்கினார்கள்; அவர்களை நான் அனுமதித்தேன். நான் clarification முறையில் அவர்களைப் பேச அனுமதித்தேன்.

அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்றைக்கு மணிமணியாக 66 அறிவிப்புகளைச் சொல்லியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக, நீங்கள் எல்லோரும் பாராட்டுவீர்கள் என்று நினைத்தேன். ஆனால், நீங்கள் பாராட்டவில்லை. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகின்றேன். ஏனென்று கேட்டீர்களென்றால், 34—வது அறிவிப்பாக, கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் மற்றும்

திருப்பூர் மாவட்டம், அவினாசி ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீர் மேம்பாட்டிற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அந்தப் பணியை நிறைவேற்ற வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தேன். அதை ஏற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு அறிவிப்பு செய்திருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களுடைய சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இதனை விரைவாக முடித்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் பாராட்டவில்லை; நான் பாராட்டிவிட்டேன். (குறுக்கீடு) எல்லா அறிவிப்புகளும் நடைமுறைக்கு வரும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதற்கு பதில் சொல்கின்றீர்களா? சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன? திரு. செங்குட்டுவன். மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) திரு. செங்குட்டுவன், நீங்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறீர்கள் என்பதற்காக இப்படியெல்லாம் வாய்ப்புக் கோரி என்னை வற்புறுத்தக் கூடாது. (குறுக்கீடு) சரி, நீங்கள் பேசுங்கள்.

பிற்பகல் 3–20

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 140 ஆண்டுகளில் ஏற்படாத வறட்சி தமிழகம் முழுவதும் தற்போது ஏற்பட்டுள்ளது என்பதை அரசே ஒப்புக்கொண்டுள்ளது. அதனடிப்படையில், கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கிருஷ்ணகிரி ஒன்றியத்திலுள்ள சுமார் 12 ஊராட்சிகளில், ஒகேனக்கல் தண்ணீர் கிடைக்காத காரணத்தால், குடிநீர்ப் பிரச்சினை மிகவும் தலைவிரித்தாடுகிறது. அதுசம்பந்தமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அரசுக்கு உரிய கருத்துருவை அனுப்பியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குடிநீர்ப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து, அப்பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத்



தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த அனைத்துக் கோரிக்கைகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் பேசியபோது, அந்தக் கோரிக்கையை நிறைவேற்றியதற்கு நன்றி சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் விரைவாக இயங்குவதற்கு இது ஓர் உதாரணம் என்று சொல்லிக்கொள்கிறேன். அந்த மாவட்ட அமைச்சர் திரு. இராஜேந்திர பாலாஜி அவர்களும் அந்தக் கோரிக்கையை முன்பே வைத்தார்கள்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி அவர்களும், சுற்றுச்சுவர் கட்ட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார்கள். அவருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களும், இந்தக் கோரிக்கையை நிதி ஒதுக்கீடு செய்து, நிறைவேற்ற வேண்டும் என்று முன்பே வலியுறுத்தியிருக்கிறார்கள். அதுவும் நிறைவேற்றப்படும். சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த அனைத்துக் கோரிக்கைகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. 20–6–2017 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.7,918,98,31,000/–, மூலதனக் கணக்கில் ரூ.5,803,05,23,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.274,32,82,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. 20–6–2017 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.15,236,98,50,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,428,44,06,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை. 20–6–2017 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.760,85,11,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (22–6–2017) வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 3–25 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*20.* 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் முப்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

ஏதுமில்லை.

-------